2990

# T.N.L.A Debates

## Official Report

VOL 44 NO 1[illegible]

9, 10th November 1987

D
211,31 N.7
N87.. 1.19
1365

வெளியீடு 25-5-1988 Issued 25-5-1988

2490

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 10, 1987-தொகுதி 44-எண் 2

Tuesday, the 10th November 1987 Volume 44-No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

**உள்ளடக்கம்.**

*10—11—1987.*


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள் விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 37—80 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 81—174 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 174—175 |
| (ஆ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல் | 175—176 |
| 3. தகவல் கோரல்— | |
| இலங்கைப் பிரச்சினை குறித்து | 175 |
| | 180—181 |
| 4. தீர்மானம்— | |
| திரு. உ. சுப்பிரமணியன் அவைக்கு வாராமைக்கு அனுமதி | 176—177 |
| 5. விதி 111 இன் கீழ் அமைச்சரின் அறிக்கை | 177—180 |
| 6. அரசினர் சட்ட முன்வடிவு— | |
| தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 | 180 |
| 7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் | 181—258 |
| மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் | 181—185 |
| | 251 |
| திரு. ஆர். செங்கசாமி | 185—193 |
| *திரு. எப். எம். இராசரத்தினம் | 193—198 |
| *திரு. எ. தெய்வநாயகம் | 198—202 |
| *திரு. செ. செம்மலை | 202—216 |

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் 216 221
*திரு. நி. அன்பழகன் 221—231
*திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் 231—239
திரு. த. பழனி 203—249
திரு. ந. சிவஞானம் 250—257

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 258—259

வெளியீடு 3-5-1988 Issued 3 5 1988

2990

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

529 | AC | 88

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, நவம்பர் 9, 1987-தொகுதி 44-எண் 1

Monday, the 9th November 1987-Volume 44-No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3 00 paise

136535
சென்னை-600 008.

**உள்ளடக்கம்.**

*9—11—1987*

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | i—iv |
| Personnel of the Government of Tamil Nadu. | v—viii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | ix—x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்கள் பட்டியல். | xi—xx |
| 1. இரங்கற் குறிப்புகள்— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1—4 |
| 2. **இரங்கல் தீர்மானம்—** | |
| முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் மறைவு குறித்து | 4—18 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 4—8 |
| திருமதி டி. யசோதா | 8—9 |
| திரு. கி. மனோகரன் | 9—11 |
| திரு. கு. ரமணி | 12—13 |
| *திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 14 |
| திரு. பொ. உத்திராபதி | 14—15 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் | 15—17 |
| திரு. கே. முத்துவேல் | 17—18 |
| 3. பேரவையின்முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 18—36 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்
## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

ஆளுநர்—திரு. சுந்தர்லால் குரானா

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்திய பணியாளர்கள், உள்துறை மற்றும் இலஞ்ச ஒழிப்பு). |
| 2. நிதி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி, பொது நிர்வாகம், வருவாய், கூட்டுறவு, சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்). |
| 3. உணவு அமைச்சர் | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு). |
| 4. உள்ளாட்சித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, |

அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்).

5. தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. க. இராசாராம் (பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியங்கள்).

6. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (மக்கள் நல்வாழ்வுத்துறை, சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளம்).

7. கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு, சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், மாவட்ட துணை ஆட்சியாளர், எடை அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட), கம்பெனிகள் பதிவு மற்றும் சர்க்கரைப் பாகு கழிவு).



8. போக்குவரத்துத் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்).

9. வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் நெசவாலைகள், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு).

10. சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (மதுவிலக்கு ஆயத் துறை, கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம், செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, திட்டம், தொல்பொருள் இயல், பயண இசைவுச் சீட்டு மற்றும் மின்சாரம்).

11. மதிய உணவு, சமூக நலன் மற்றும் கதர்த்துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் (சத்துணவு, மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலன், பிச்

| | |
|---|---|
| | சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர் திருத்த நிர்வாகம், கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்). |
| 12. வணிக வரித்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. த. இராம சாமி (வணிக வரிகள்). |
| 13. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எ. அருணா சலம் (ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழி லாளர்). |
| 14. பொதுப் பணித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (பொதுப்பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்). |



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Thiru SUNDAR LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | ... | The Hon. Dr. M. G. RAMACHANDRAN (Indian Administrative Service, Indian Police Service and other All India Services, Home and Prevention of Corruption) |
| 2. Minister for Finance | ... | The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Finance, General Administration, Revenue, Co-operation, Legislature Elections, Statistics, Youth Services Corps and Ex-Servicemen |
| 3. Minister for Food | ... | The Hon. Thiru S. RAMACHANDRAN (Food and Price Control) |
| 4. Minister for Local Administration | ... | The Hon. Thiru R. M. VEERAPPAN (Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, News Print Control, Stationery and Printing and Government Press) |
| 5. Minister for Industries and Agriculture | ... | The Hon. Thiru K. RAJARAM (Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology, Agriculture, |

Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Boards)

| | | |
|---|---|---|
| 6. Minister for Health | ... | The Hon. Thiru P. U. SHANMUGAM (Health, Environmental Pollution Control, Backward Classes and Fisheries) |
| 7. Minister for Education and Law | ... | The Hon. Thiru C. PONNAIYAN (Education, Official Language, Tamil Development and Culture, Law, Courts, Prisons, Deputy Collectors, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies and Molasses) |
| 8. Minister for Transport | ... | The Hon. Thiru S. MUTHUSAMY (Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways, Public, District Revenue Officers, Rural Industries including Village, Cottage and Small Industries) |
| 9. Minister for Housing and Handlooms | ... | The Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Handlooms and Textiles, Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control) |



2990

| | | |
|---|---|---|
| 10. Minister for Tourism, Prohibition and Electricity | ... | The Hon. Thiru V. V. SWAMINATHAN (Prohibition and Excise, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act, Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona, Planning, Archaelogy, Passports and Electricity. |
| 11. Minister for Noon Meal, Social Welfare and Khadi. | ... | The Hon. Thiru R. SOUNDARARAJAN (Nutritious Meals, Social Welfare including Women and Children's Welfare, Beggars' Home, Orphanages, Correctional Administration, Khadi, Bhoodan and Gramdhan) |
| 12. Minister for Commercial Taxes | ... | The Hon. Thiru T. RAMASAMY (Commercial Taxes) |
| 13. Minitser for Adi Dravidar Welfare | ... | The Hon. Thiru A. ARUNACHALAM (Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour) |
| 14. Minister for Public Works | ... | The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN (Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.

### *மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
திரு. ப. த. இராமச்சந்திரன்.
திரு கே. குப்புசாமி.
திரு. செ. செம்மலை.
திரு. ப.ா. சுந்தரதாஸ்.

### செயலாளர்

திரு. சி. ரு. இராமசாமி.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 10—11—1987 அன்று அறிவிக்கப்பெற்றது.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி.)

| | |
|---|---|
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி. எல். | கூடுதல் செயலாளர் |
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி. | முதுநிலை குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ. | குழு அலுவலர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு. எஸ்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பாலகிருஷ்ணன், திரு. பா., பி.காம். | சார்புச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்—தொடர்ச்சி.

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| ஜான், திரு. வ. சா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சாமிநாதன், திரு. பொ. க. | விவாதப் பதிவாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | தலைமை நிருபர் (பேரவை) |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | தலைமை நிருபர் (குழுக்கள்) |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்களின் பட்டியல் (அகரவரிசைப்படி.)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **அ.** | |
| 1. அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர். |
| 2. அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி. |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி. |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர். |
| 5. அரிக்குமார், திரு. இரா. | பொனமல்லூர். |
| 6. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.). |
| 7. அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.). |
| 8. அன்பழகன், திரு. கே. | ஓமலூர். |
| 9. அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி. |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி. |
| **ஆ.** | |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | ஆண்டிமடம். |
| 13. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி. |
| 14. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம். |
| 15. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 16. ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர். |
| 17. ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2. |
| 18. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி. |
| 19. ஆனந்தன், திரு. மூ. | உளுந்தூர்பேட்டை. |
| **இ.** | |
| 20. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி. |
| 21. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி. |
| 22. இரத்தினவேலு, திரு. செ. | முசிறி. |
| 23. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| **இ—தொடர்ச்சி.** | |
| 24. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம். |
| 25. இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல். |
| 26. இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம். |
| 27. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர். |
| 28. இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ.வ.) |
| 29. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 30. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 31. இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |
| 32. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி. |
| 33. இராமச்சந்திரன், திரு. கே. எஸ்.எம். | போடிநாயக்கனூர். |
| 34. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 35. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி. |
| 36. இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணா நகர். |
| 37. இராமச்சந்திரன், திரு. ப.ந. | பட்டுக்கோட்டை. |
| 38. இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம். |
| 39. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம். |
| 40. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | ராசிபுரம். |
| 41. இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச. | சத்தியமங்கலம். |
| **ஈ.** | |
| 42. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| **உ.** | |
| 43. உச்சி, திரு. கே. | கூடலூர். |
| 44. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| **எ.** | |
| 45. எத்திராசன், திரு. ஒ. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| **க.** | |
| 46. கணபதி, திரு. கே.ஆர். | சிதம்பரம். |
| 47. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை. |
| 48. கந்தசாமி, திரு. கா.வே. | கிணத்துக்கடவு. |
| 49. கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர். |
| 50. கல்லன், திரு. கே. | உதகமண்டலம். |
| 51. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம். |
| 52. காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை கிழக்கு. |
| 53. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 54. கிருஷ்ணசாமி, திரு. வி.இரா. | அணைக்கட்டு. |
| 55. கிருஷ்ணமூர்த்தி, திரு. ஓ. | கும்பகோணம். |
| 56. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1. |
| 57. குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம். |
| 58. குப்புசாமி, திரு. வே. | செய்யாறு. |
| 59. குமரகுருபர ராமநாதன், திரு. ச. | ஸ்ரீரங்கம். |
| 60. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர். |
| 62. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.). |
| 63. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம். |
| 64. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி. |
| 65. கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி. |
| **ச.** | |
| 66. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 67. சண்முகம், திரு. இரா. | திருத்தணி. |
| 68. சண்முகம், திரு. என். | சோளிங்கர். |
| 69. சண்முகம், திரு. ப.உ. | மேல்மலையனூர். |
| 70. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம். |
| 71. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான். |
| 72. சந்திரசேகர், திரு. மு. | முகையூர். |
| 73. சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை. |
| 74. சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம். |
| 75. சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.). |
| 76. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.). |
| 77. சித்தன், திரு. என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 78. சிவக்குமார், திரு. ஆர். | சமயநல்லூர் (செ.வ.). |
| 79. சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ.வ.). |
| 80. சிவஞானம், திரு. ந. | திருவோணம். |
| 81. சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 82. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம். |
| 83. சிவராஜ், திரு. சு. | ரிஷிவந்தியம். |
| 84. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி. |
| 85. சின்னசாமி, திரு. வே.கு. | பவானிசாகர். |
| 86. சின்னராசு, திரு. க.இரா. | கிருஷ்ணகிரி. |
| 87. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம். |
| 88. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 89. சுப்பராயன், திரு. கு. | திருப்பூர். |
| 90. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ்.ஆர். | திருச்செந்தூர். |
| 91. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை. |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 92. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 93. சுப்புராயர், திரு. சி. | கம்பம். |
| 94. சுவாமிநாதன், திரு. வி.வி. | புவனகிரி. |
| 95. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர். |
| 96. செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டிபாளையம் |
| 97. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை. |
| 98. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம். |
| 99. செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.). |
| 100. செல்லப்பா, திரு. வி.கோ. | கடலூர். |
| 101. சேகர், திரு. கே.பி.கே. | பொன்னேரி (செ.வ.). |
| 102. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடானை. |
| 103. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி. |
| 104. சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 105. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர். |
| **ஞ.** | |
| 106. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி. |
| **ட.** | |
| 107. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| **த.** | |
| 108. தங்கமணி, திரு. மு. | மாயூரம். |
| 109. தங்கமணி, திரு. கே.எம். | திண்டிவனம். |
| 110. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி. |
| 111. தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ.வ.). |
| 112. தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 113. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.). |
| 114. தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.). |

ந—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 115. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 116. தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ). |
| 117. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 118. தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம். |
| 119. திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.). |
| 120. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 121. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை. |
| 122. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர். |
| 123. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு. |
| 124. துரை அன்பரசன், திரு. | நெல்லிக்குப்பம் |
| 125. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர். |
| 126. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு. |
| 127. துரைசாமி, திரு. சைதை சா. | சைதாப்பேட்டை. |
| 128. துரைராசு, திரு. எஸ்.பி. | காரைக்குடி. |
| 129. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 130. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல். |
| 131. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |

ந.

| | |
|---|---|
| 132. நடராசன், திரு. ஆ. | பேளூர். |
| 133. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர். |
| 134. நரசிம்மன், திரு. பு. மு. | பள்ளிப்பட்டு. |
| 135. நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ |
| 136. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 137. நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| ந—தொடர்ச்சி. | |
| 138. நாராயணன், திரு. பு.கோ. | பவானி. |
| 139. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | புத்தூர். |
| ப. | |
| 140. பஞ்சவர்ணம், திரு. வி. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 141. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 142. பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம். |
| 143. பழனி, திரு. த. | ஆற்காடு. |
| 144. பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம். |
| 145. பழனிமுத்து, திரு. பி. | ஆத்தூர். |
| 146. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 147. பாண்டுரங்கன், திரு. மு. | கலசப்பாக்கம். |
| 148. பாப்பா சுப்பிரமணியன். திரு. | குத்தாலம். |
| 149. பாரதி, திரு. ஜி.கே.ஜெ. | திருவொற்றியூர். |
| 150. பாலமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 151. பாலகிருஷ்ணன், திரு. ச. | பொட்டக்குறிச்சி. |
| 152. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி. |
| 153. பாலசந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம். |
| 154. பாலசுப்பிரமணியன், திரு. கு. | சீர்காழி (செ.வ.). |

ப—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 155. பாலசுப்பிரமணியன், திரு. என். | அம்பாசமுத்திரம். |
| 156. பாலசுப்பிரமணியன், திரு. வை. சந்தார். வி.பி. | வேடசந்தூர். |
| 157. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம். |
| 158. பாலுச்சாமி, திரு எ. | பரமக்குடி (செ.வ.) |

டி 2 எ 193—3

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ப—தொடர்ச்சி.** | |
| 159 பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 160. பிரணவநாதன், திரு. அ. | கடலாடி. |
| 161. பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல். |
| 162. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர். |
| 163. புஷ்பராசு, திரு. த. | திருமயம். |
| 164. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.). |
| 165. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம். |
| 166. பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர். |
| 167. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி. |
| 168. பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு). |
| 169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | பழனி (செ.வ.). |
| 170. பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 171. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| **ம.** | |
| 172. மணவாளன், திரு. எஸ்.பி. | திருப்பத்தூர். |
| 173. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.). |
| 174. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 175. மனோகரன், திரு. கி. | புரசைவாக்கம் |
| 176. மனோகரன், திரு. கி.நா. கோ.அ. | திருநாவலூர். |
| 177. மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான். |
| 178. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர். |
| 179. மாதையன், திரு. யு.பி. | அந்தியூர் (செ.வ.). |
| 180. மாரிமுத்து, திரு. த. | [illegible] (செ.வ.). |
| 181. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம். |
| 182. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 183. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை. |
| 184. முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ம—தொடர்ச்சி.** | |
| 185. முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை. |
| 186. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு. |
| 187. முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். | உசிலம்பட்டி. |
| 188. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 189. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 190. முருகானந்தம், திரு. டி.என். | செஞ்சி. |
| 191. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி. |
| **ய.** | |
| 192. யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| **ர.** | |
| 193. ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம். |
| 194. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 195. ரவீந்திரன், திரு. ஏ.எஸ். | திருவண்ணாமலை. |
| 196. ராமஜெயம், திரு. ம.நா. | வானூர் (செ.வ.). |
| 197. ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 198. ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர். |
| 199. ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி. |
| 200. ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில். |
| **ல.** | |
| 201. லட்சுமி, திருமதி. பி. | அவினாசி (செ.வ.). |
| **வ.** | |
| 202. வடிவேல், திரு. கு. | கரூர். |
| 203. வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர். |
| 204. விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 205. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி. |
| 206. வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **வ—தொடர்ச்சி.** | |
| 207. வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம். |
| 208. வீரப்பன், திரு. ஆர். எஸ். | திருநெல்வேலி. |
| 209. வீராசாமி, திரு. நா. | ஒரத்தநாடு. |
| 210. வெங்கடசெட்டி, திரு. டி. | ஓசூர். |
| 211. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி. |
| 212. வெங்கடாசலம், திரு. கி. | [illegible]குடி. |
| 213. வெங்கடாசலம், திரு. டி. எம். | பரகூர். |
| 214. வெங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி. |
| 215. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 216. வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி. |
| 217. வேலு, திரு. கூடலூர் இ. வி. | தண்டராம்பட்டு. |
| **ஜ.** | |
| 218. ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு. |
| 219. ஜான் வின்சென்ட், திரு. ம. | நாங்குநேரி. |
| 220. ஜெகதீசன், திரு. க. | அரவக்குறிச்சி. |
| 221. ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.). |
| 222. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| **ஹ.** | |
| 223. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 224. பிரான்சிஸ், திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.**

| | |
|---|---|
| திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் 9, திங்கட்கிழமை

**ஐப்பசி 23, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. அ. வெள்ளைத்துரை 11—5—1987 ஆம் தேதியன்றும், திரு. து. அரிவேலன் 14—5—1987 ஆம் தேதியன்றும், திரு. ச. அங்குச்சாமி 22—5—1987 ஆம் தேதியன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களான திரு. ஆர். வெங்கடசெட்டி 11—8—1987 ஆம் தேதியன்றும் திரு. எஸ். கே. சாமிக்கவுண்டர் 3—10—1987 ஆம் தேதியன்றும், பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அரசுத் தலைமைக் கொறடாவுமான திரு. அ. ப. அழகமுத்து 5—10—1987 ஆம் தேதியன்றும், திரு. எஸ். கணேசன் 10—10—1987 ஆம் தேதியன்றும், திரு. க. சீனிவாசன் 23—10—1987 ஆம் தேதியன்றும், திரு. மு. சுந்தரம் 29—10—1987 ஆம் தேதியன்றும் மற்றும் திரு. அ. பொ. அரசு 7—11—1987 ஆம் தேதியன்றும் மறைந்ததைக் குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. வெள்ளைத்துரை அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. து. ஐசரிவேலன் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை சென்னை நகரம் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் பேரவைச் செயலராகவும் (Parliamentary Secretary) சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. [illegible] அங்குச்சாமி அவர்கள் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர். வெங்கட ரெட்டி அவர்கள் 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை [illegible] பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. [illegible] அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை [illegible] பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. [illegible] அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் [illegible] தொகுதியிலிருந்தும், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு





வரையிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியிலிருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை அரசுத் தலைமைக் கொறடாவாகவும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. என். [illegible] அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் [illegible] தொகுதியிலிருந்தும், 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் [illegible] தொகுதியிலிருந்தும், 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் [illegible] தொகுதியிலிருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. க. சீனிவாசன் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் [illegible] தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மு. சுந்தரம் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையிலும் தென்னார்க்காடு மாவட்டம் [illegible] தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. [illegible] அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை செங்கற்பட்டு மாவட்டம் திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் 1959 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் மேயராகவும் பதவி வகித்தார்.

[பேரவைத் தலைவர்] [1987 நவம்பர் 9

அன்னார்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறந்த உறுப்பினர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் மறைவு குறித்து.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்திய சுதந்திரப் போரில் பங்கு கொண்ட அந்த மூதுபெரும் தலைவர்களில் ஒருவரும், விவசாயி மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவரும், இந்தியாவின் முன்னாள் பிரதம அமைச்சருமான திரு. சரண் சிங் அவர்கள் 29—5—1987 ஆம் நாளன்று மறைந்த செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது.

அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவிக்கிறது."

இந்தியாவினுடைய முன்னாள் பிரதமர், லோக் தளக் கட்சியினுடைய தலைவர், இந்தியாவினுடைய மூதுபெரும் தலைவர்களிலே ஒருவராகத் திகழ்ந்தவருமாகிய திரு. சரண்சிங் அவர்கள் தமது 84 வது வயதில் டெல்லியில் இரவில் இயற்கை எய்தினார்கள் என்ற துக்கச் செய்தி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம்.

அவர் மிகமிக சாதாரணமான ஒரு விவசாயக் குடும்பத்திலே தோன்றி படிப்படியாக உழைப்பால் உயர்ந்து எல்லோருடைய நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்று, இந்தியாவிலேயே மிகச் சிறந்த தலைவர்களிலே ஒருவராகப் பெற்றவர் அவர் என்பதை நாம் நன்கு



1987 நவம்பர் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அறிவோம். கல்வி பெற வசதிகள் அதிகம் இல்லாதிருந்த அந்தக் காலத்தில், அதுவும் 1910 வது ஆண்டுக் கணக்குப்படி இந்தியாவிலே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்கு 5 பேர்கள்தான் என்று சொல்லத்தக்க அந்தக் காலத்தில், அதுவும் கிராமப்புறத்திலே இருக்கிறவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதிலே ஈடுபடாத காலத்திலே, அக்கறையற்றிருந்த அந்தக் காலத்திலே, உத்தரப்பிரதேசத்தினுடைய ஒரு சிற்றூரிலே, சாதாரண விவசாயக் குடும்பத்திலே தோன்றிய திரு. சரண்சிங் படிப்பிலே மிக ஆர்வம் கொண்டு இருந்தார். அவர்கள் ஆக்ரா பல்கலைக் கழகத்திலே எம்.ஏ. வரையிலும் படித்து, எம்.ஏ. வரையிலும் படித்ததோடு மட்டுமல்லாமல், வழக்கறிஞர் ஆவதற்காகச் சட்டப் படிப்பையும் படித்து, பிறகு வழக்கறிஞர் தொழிலிலும் சிறப்பாக ஈடுபடத்தக்க அளவுக்கு தம்முடைய அறிவுத் திறனையும் ஆற்றல் திறனையும் உயர்த்தி, அதன்மூலமாக சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள்.

அவர்கள் 1929-வது ஆண்டு அரசியலிலே தீவிரமாக ஈடுபடத் தொடங்கி, அந்த ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அப்பொழுது நடைபெற்ற பல்வேறு போராட்டங்களிலே கலந்து கொண்டு சிறை செல்கின்ற அத்தகைய தியாகத்தையும் செய்தார்கள்.

1935-வது ஆண்டில் உத்தரப்பிரதேசத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். அப்போது கோவிந்த வல்லப பந்த் அவர்கள் உத்தரப்பிரதேசத்தினுடைய முதல்வராக ஆன அந்த அமைச்சரவையில், அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, 1946-லிருந்து 1951-வது ஆண்டுவரையில் பாராளுமன்ற செயலாளர் பதவியினை வகிக்கின்ற பெருமையையும் பெற்று விளங்கினார்கள்.

(முற்பகல் 10-10)

திரு. சரண்சிங் அவர்கள் அரசியலில் தீவிரமாகப் பங்கு கொண்டு, அந்தப் பகுதிகளில் வாழுகின்ற மக்களுடைய நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தார்கள் என்பது மட்டுமல்லாமல் உத்தரப்பிரதேசத்தில் வாழுகின்ற வேளாண் பெருங்குடி மக்களுடைய நல்வாழ்வு கருதி, அவர்களுடைய மேம்பாடு கருதி, பல்வேறு வகையான பிரச்சினைகளில்

ஈடுபட்டு அந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார்கள். அவர்கள் விவசாயிகள் சம்பந்தப்பட்ட பல போராட்டங்களில் எல்லாம் ஈடுபட்டு, அவர்களுக்கு வாழ்வளிக்கின்ற பல்வேறு முயற்சிகளிலேயும் வெற்றிபெற்று, சிறப்பாகத் திகழ்ந்தார்கள்.

பிறகு, 1967-வது ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் திரு. சி. பி. குப்தா முதலமைச்சராகி, அவர்கள் தலைமையின்கீழ் அமைச்சரவை அமைக்கப்பட்டபோது அதை எதிர்த்து, காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு ஒரு தனிக் கட்சியை அமைத்து, 2, 3 மாதங்களிலேயே முதலமைச்சர் ஆகின்ற சூழ்நிலையை அவர்கள் பெற்றார்கள். அதுவும், சிலபல மாதங்கள்தான் முதலமைச்சராக இருக்கின்ற தன்மையில் அமைந்திருந்தது. ஆக, மறுபடியும் குடியரசுத் தலைவர் ஆட்சி நிலவவேண்டிய நெருக்கடி வந்தது. அதற்குப் பிறகு அவர்கள் அப்போது ஜன காங்கிரஸ் என்கின்ற ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தி, அந்த அமைப்பின் மூலம் முதலமைச்சராக ஆகி, சிலபல மாதங்கள் ஆட்சி நடத்தி வந்தார்கள். அதன் பிறகு பெரும்பான்மை வலிவு இல்லாத காரணத்தால் விட்டுவிட வேண்டிய அவசியம் வந்தது.

அதற்குப் பிறகு ஓராண்டு காலம் கழித்து, குடியரசுத் தலைவர் ஆட்சி முடிந்து, பாரதிய கிராந்த் தள் என்கின்ற ஒரு கட்சியை அவர்கள் தொடங்கினார்கள். அதன் மூலம், 1970 பிப்ரவரி முதல் திரு. சரண் சிங் அவர்கள் மீண்டும் உத்தரப் பிரதேசத்தினுடைய முதல்வர் ஆனார்கள். ஆனால் சிலபல மாதங்கள்தான் முதலமைச்சராக இருக்க முடிந்தது. அதன் பிறகு மறுபடியும் குடியரசுத் தலைவர் ஆட்சி வரவேண்டிய நிலைமை ஏற்பட்டு, அவர்கள் மறுபடியும் பதவியிலிருந்து இறங்கி, குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு இடம் கொடுக்க வேண்டிய ஒரு தன்மை ஏற்பட்டது.

அதன் பிறகு 1974-ல் பாரதீய லோக் தள் கட்சியைத் தனியாகத் தொடங்கி, அதனுடைய தலைவரானார். 1977-ல் நடைபெற்ற தேர்தலில் வென்றார். பிறகு பல கட்சிகள் ஒன்றாக இணைந்து 'ஜனதா' உருவானபோது ஜனதா அமைச்சரவையிலே





அவர் துணைப் பிரதமர் பதவி ஏற்றார் என்பதை இங்குள்ள பலரும் நன்கு அறிவார்கள். 1979 வரையிலும் துணைப் பிரதமராக இருந்து, அப்போதிருந்த அரசியல் நெருக்கடி சூழ்நிலையைப் பயன்படுத்தி, 1979-லே இந்தியாவினுடைய பிரதமராக ஆகின்ற ஒரு சூழ்நிலையைப் பெற்று, பிரதமராகவும் ஆனார். 1979 ஆகஸ்டில் பிரதமராகி ஜனவரி வரை பிரதமராக இருக்கக்கூடிய தன்மை ஏற்பட்டாலும் கூட, ஒரு காபந்து சர்க்காரில் இந்தியாவினுடைய பிரதமராக இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தாலும் கூட, அரசியலில் விடாப்பிடியாக இருந்து, தான் பிடித்த பிடிவாதத்தினுடைய அடிப்படையிலே காரியங்களைச் சாதிக்கின்ற தன்மையில் அவர்களுடைய அரசியல் வாழ்க்கை அமைந்திருந்த தன்மையினை நாம் காண்கிறோம். ஆகவே, அவர்களிடத்திலே மிக எளிமையான வாழ்வு இருந்ததை யாவரும் காண முடிந்தது. ஒரு படாடோப மற்ற ஆடம்பரமற்ற நிலைமையில் எந்த ஒரு பணியை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய உண்மையான நோக்கத்தின் அடிப் படையில், தனக்கு எது சரி என்று படுகிறதோ அதை நிறைவேற்று வதிலே கண்ணுங்கருத்துமாக இருந்து, முனைப்பு உள்ளத்தோடு இருந்து பாடுபட்டு வந்தார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

அது மட்டுமல்ல. அவர் பொருளாதாரத் துறை பற்றியும், பல்வேறு பிரச்சினைகள் பற்றியும், விவசாயத் துறை பற்றியும், தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் பற்றியும் பல புத்தகங் களை எழுதி நாட்டுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

அப்படிப் பல்வேறு வகைகளிலேயும் நாட்டுக் தொண் டாற்றிய ஒரு மாபெரும் தலைவர் அவர். எல்லோராலும் மதிக்கத்தக்க அளவுக்கும் எல்லோராலும் பாராட்டத்தக்க அளவுக்கும் இருந்தவர் அவர் பல்வேறு சமயங்களிலே அவர் மாறுபடாத கட்சிகளே இல்லை என்ற அளவுக்கு இருந்தாலும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களிடத்திலே இருந்து அவர் வேறுபட்டு, மாறுபட்டு விளங்கினார் என்றாலும் கூட எல்லோருடைய மதிப்பும், எல்லோருடைய பாராட்டுதலும் அவருக்குக் கிடைக்கத்தக்க அளவுக்கு அவருடைய கொள்கையைத் தனிப்பிடித்து தனி முறையைப்பிடித்ததிலே ஒரு

சிறந்த எடுத்துக்காட்டாக அவர்கள் விளங்கினார்கள். ஆகவே அந்த வகையில் அவர் இந்தியாவில் விளங்கிய முதுபெரும் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார் என்ற முறையில் அவருடைய மறைவால், இந்தியாவுக்கு அணி செய்து வந்த பல்வேறு சிறந்த தலைவர்களில் ஒருவர் மறைந்தார் என்ற முறையில்தான் அனைவரும் துக்கத்தையும், துயரத்தையும் தாங்கவேண்டிய தன்மை ஏற்பட்டது. அந்த வகையிலேதான் இந்த அவையும் இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டத்துக்கு வந்திருக்கிறது. அந்த முறையில் ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பாகவும் இந்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

* **திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் உயர்திரு சரண்சிங் அவர்களின் மறைவு குறித்து அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை வழிமொழிந்து நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். உத்தரப்பிரதேசத்தில் மீரட் மாவட்டத்தில் நூர்பூர் என்ற கிராமத்தில் 1902 ஆம் ஆண்டு டிசம்பர் 23-ல் திரு. சரண்சிங் அவர்கள் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார்கள். 1925-ல் திருமதி காயத்திரிதேவி அவர்களை மணம் முடித்தார். அரசியலிலே அவருடைய நுழைவு காங்கிரஸ் இயக்கத்திலேதான் என்றாலும் அதிலே நீண்ட நெடிய காலம் அவரால் இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு பல கட்சிகளை அவர் காணவேண்டிய நோக்கில்கூட அவருடைய பெரிய கொள்கையாகிய விவசாயிகளுக்கு பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும், விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதிலே மிகவும் அக்கறையாக இருந்தார்.

சுதந்திரப் போராட்டத்திலே கடுமையாக்கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்தது. அவர் இரண்டு முறை உத்தரப் பிரதேசத்தினுடைய முதல்வராக இருக்கின்றபோது ஆட்சி பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலையாகத் தலைவராக இருக்கிறது. அதுமட்டுமல்ல. மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதுபோல், அவர் தன்னுடைய கொள்கையிலே [illegible].





தான் எண்ணுகிற எண்ணத்திலே கூட விடாப்பிடியாக இருந்தவர். இந்தியாவினுடைய பிரதமராக வேண்டும் என்ற நிலையிலே அவர் பிரதமராக ஆனது மட்டுமல்ல; அதிலே தொடர்ந்து இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது தேர்தல் நடைபெறுகிற வரையில் அதாவது 1980 ஆம் ஆண்டுத் தேர்தல் நடைபெறுகிற வரையில் இடைக்கால அரசின் பிரதமராக அவர் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது.

சரண்சிங் அவர்களைப் பொறுத்தமட்டிலும் பஞ்சாபிலே நடைபெற்ற பயங்கரவாதத்தை மிகக் கடுமையாக விமர்சனம் செய்தவர். அதனால்தான் தீவிரவாதிகளின் பட்டியலிலே அவருடைய பெயரும் இடம் பெற்றிருந்தது என்பதை நாம் அனைவரும் உணர்வோம். அதுமட்டுமல்ல; சரண்சிங் அவர்கள் புத்தகப் பிரியர். பொருளாதாரம், விவசாயம் பற்றிய பல புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார்.

கடைசியாகச் சொல்ல வேண்டுமென்றால் சரண்சிங் அவர்கள் ஆரிய சமாஜத்தினுடைய கொள்கைகளைக் கடைசி வரையில் மதிக்கக்கூடியவராக இருந்திருக்கிறார். அந்த மூத்த முதுபெரும் தலைவர், இந்திய அரசியலில் பங்காற்றிக்கொண்டு இருந்தவர் இன்றைக்கு நம்மிடையே இல்லை என்றாலும் கூட, அவருடைய குடும்பத்தாருக்கும் அவரை இழந்து தவிக்கிற அத்தனை பேருக்கும் எங்களுடைய கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து முடிக்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பணியாற்றி சிறப்பான முறையில் கடமைகளை செய்து, இறுதியில் இயற்கையினால் கவரப்பட்டு விட்ட 9 பேர்களின் குடும்பத்திற்கு நீங்கள் அனுதாபம் தெரிவித்தீர்கள். அவையும் அனுதாபம் தெரிவித்தது. மறைந்து விட்ட அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் என் சார்பிலும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1987 நவம்பர் 9

அவை முன்னவர் அவர்கள், காலம் சென்ற சரண்சிங் அவர்களின் மறைவு குறித்து இங்கே இரங்கல் தீர்மானம் ஒன்றை முன் மொழிந்திருக்கிறார்கள். சரண்சிங் அவர்களைப் பற்றிய விளக்கக் குறிப்புகளைத் தெளிவாக அவை முன்னவர் அவர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள். சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து, விவசாயிகளின் பிரச்சினைகளை தெளிவாகத் தெரிந்து, முறையாகக் கற்று, அவர்களது வாழ்க்கையில் விளக்கேற்றி வைக்க வேண்டும் என்ற நாய நோக்கத்தோடு பணியாற்றியவர் காலம் சென்ற சரண்சிங் என்பதைப் பற்றி அனைவரும் அறிவார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகவும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காகவும் சரண்சிங் அவர்கள் எந்த அளவிற்குப் பாடுபட்டார்கள் என்பதையும், எந்த அளவிற்கு அந்த மக்கள் அவரை தங்களது இதய தெய்வமாகப் பாராட்டினார்கள் என்பதையும் நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அது நாட்டிற்குத் தெரிந்த உண்மை.

அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல எளிமையான வாழ்க்கைக்கு சொந்தக்காரராகவும், வாழ்நாள் முழுவதும் நேர்மையாக இருந்து, அரசியலில் ஒரு புதுமையான மனிதராக பணியாற்றிய சரண்சிங் அவர்களின் மறைவு, தாள முடியாத மறைவு என்பதை எல்லோரும் உணர்வார்கள். உத்தரப் பிரதேசத்திலே முதலமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்றத்திலே நாடாளுமன்ற உறுப்பினராக, பிரதம அமைச்சராக அவர்கள் பணியாற்றிய அந்த நேரத்தில் 2, 3 முறை அவரை சந்திக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றவன். பார்த்தால் கடுமையாகத் தெரியும், ஆனால் இளகிய உள்ளத்தோடு, மிக அடக்கமான கருத்துக்களில் தன்னை ஆளாக்கிக் கொண்டு இருந்தவர் சரண்சிங் என்பதை நாட்டுமக்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். தலைசிறந்த ராஜதந்திரியாகவும் அவர் விளங்கியிருக்கிறார்.

அது மட்டும் அல்ல, அவரோடு பேசுகின்ற போது நகைச்சுவை ததும்ப கருத்துக்களை வெளியிடுவதை நான் கேட்டு சுவைத்திருக்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்தின் இரும்பு மனிதர் என்று கருதப்படுகிற இரண்டாவது வல்லபாய் பட்டேல் என்ற



1987 நவம்பர் 9] [திரு. கி. மனோகரன்]

பெயரையும் இந்த நாடு அவருக்கு வழங்கிற்று என்பதையும், அவை உறுப்பினர்கள் மிக நன்றாக உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழகத்திற்கு வாருங்கள் என்று நான் அவரை அழைத்த நேரத்தில்—அப்போது அவரை அழைக்கின்ற உரிமையில் இருந்த காரணத்தாலே நான் அழைத்த நேரத்தில்—அவர் சொன்னார், "நான் வருவதிலே ஒன்றும் இல்லை. ஆனால் சரளமான ஆங்கிலத்திலே என்னால் பேச வராது, தமிழிலே என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கவும் இயலாது" என்று. அப்போது நான் சொன்னேன், நீங்கள் பேசுகின்ற ஆங்கிலமே போதும், நீங்கள் ஒன்றும் பேச்சுப் போட்டிக்காக தமிழகத்திற்கு வரவில்லை, உங்களைப் பார்க்க வேண்டும் என்று தமிழக மக்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று. அந்த நேரத்தில் நான் நிச்சயமாக வருகிறேன் என்று சொன்னார். அப்போது நான், உங்களுக்குத் தெரிந்த மொழியிலேயே பேசுங்கள், அதை மொழி பெயர்த்து எங்களுடைய மாநில மக்களுக்குச் சொல்வதற்கு பெருந்தன்மை படைத்த ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள் என்றும் அவருக்குச் சொன்னேன்.

குறிப்பாக அவரிடம் நான் கண்டுகொண்ட ஒரு உண்மை, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் பாதுகாவலனாக திரு. சரண்சிங் விளங்கினார் என்பதும், அந்தக் கொள்கையில் கடைசி வரைக்கும் அழுத்தமாக இருந்தார் என்பதும், கட்சி மாறுபாடுகள் இருக்கக்கூடும் என்றாலும் அந்த மாறுபாடுகளுக்காக மற்றவர்களை அவர் காயப்படுத்தியதில்லை, கடுமையாக நடத்தவில்லை என்பதுமாகும். ஒரு பெருந்தன்மையான அரசியல் வாதியாக அவர் விளங்கி நமது உள்ளத்தைக் கவர்ந்தார் என்ற நிலைமையை நான் எண்ணிப் பார்க்கிறேன். 85 வயது அவருக்கு என்றாலும், இன்னும் அவர் இருக்கக்கூடாதா என்று விரும்புகிற அளவிற்கு, நீண்டகாலம் வாழக்கூடாதா என்று எண்ணுகிற அளவிற்கு திரு. சரண்சிங் அவர்கள் தமது வாழ்வில் உதாரணமாக விளங்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, அவரை இழந்து வாடுகின்ற உற்றாருக்கும், சுற்றத்தார்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், அதன் தலைவர் கலைஞர் அவர்களின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.

[1987 நவம்பர் 9

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய பிரதமராகவும், உத்தரப் பிரதேசத்தின் அரசாட்சியில் பங்கு வகித்தும், பெருமை மிக்க பல காரியங்களை செய்துமுள்ள திரு. சரண்சிங் அவர்களுடைய மறைவு இந்திய நாட்டினுடைய சரித்திரத்தில் ஒரு முக்கியமான இழப்பு என்பதில் சந்தேகமில்லை. திரு. சரண்சிங் அவர்கள் பிறப்பட்ட ஒரு சமுதாயத்தைச் சார்ந்த சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, தன்னுடைய சுயமுயற்சியால் அவர் எந்த அளவிற்கு உயர்ந்தாரோ அது அவராகவே பாடுபட்டு தன்னை உயர்த்திக்கொண்டது என்பது அவருடைய சரித்திரத்திலிருந்து புலனாகிறது. அவர் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு, இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்டவர். அதனால்தான் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஆரம்ப காலத்தில் அரசாங்கத்தில் பொறுப்பு வகித்து, செயல்படக் கூடிய அந்தஸ்திற்கு அவர் உயர்ந்தார். பிற்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளுக்கு ஆழமான முறையில் அவர் நம்பக்கூடிய கருத்துக்களுக்கு உடன்படாதவர்கள் யாராக இருந்தாலும் சரி, அதுபற்றி பொருட்படுத்தாமல், தனக்குப் பட்டது சரியென்பதை நிரூபிக்க வேண்டுமென்று, அவர் போராடினார். எந்த சமயசந்தர்ப்பவாதத்திற்கும், அநேகமாக வளைந்து கொடுக்காத, விட்டுக் கொடுக்காத ஒரு உறுதியான மனிதராக இருந்தார். அதேசமயத்தில் விவசாய மக்களுடைய சமுதாய வாழ்க்கை இந்திய நாட்டில் எந்த அளவிற்கு சீரழிவுற்றிருக்கிறது என்பதைப்பற்றி அவருக்கு இருந்த ஆழமான கருத்துக்களை நிரூபிக்கக்கூடிய முறையில் அவர் இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்ச்சியினை நடத்தி, இந்தியப் பொருளாதாரத்தினுடைய கட்டமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்பதையும், மிகப் பெரும்பான்மையான மக்களாக இருக்கக்கூடிய ஒரு வர்க்கத்தினுடைய, விவசாய சமூகத்தினுடைய முன்னேற்றம் இல்லாமல், அவர்களை ஏமாற்றக் கூடிய முறையிலே ஒரு பொருளாதார அமைப்பு இன்றைக்கு இந்தியாவில் செயல்பட்டுக்கொண்டு வருவதுதான் அந்த விவசாய சமுதாயத்தினுடைய பின்னடைவுக்கும், அவர்களுடைய பட்டினிக்கும், அவர்கள் துன்பப்படுவதற்கும் காரணம் என்பதையும் அவருடைய கருத்துக்குட்பட்டு ஆணித்தரமாக



1987 நவம்பர் 9] [திரு. கு. ரமணி]

எடுத்து விவாதிக்கக்கூடிய ஒரு பெரிய நூலை எழுதி இந்திய நாட்டு மக்களுக்கு சமர்ப்பித்துள்ளார். அப்படி நல் கொள்கை பற்றி ஆழமாகப் பரிசீலித்து, தனக்கு பட்டது சரியென்று உறுதியாக எடுத்துச்சொல்லி அதற்கு கிடைக்கிற ஆதாரங்களை எல்லாம் எடுத்து, அவற்றை நிரந்தரமாக மற்ற மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு பிடிவாதமான, ஒரு உத்தமமான உயர்ந்த தலைவர் என்று அவரைச் சொல்வது சரியாகும்.

(முற்பகல் 10-30)

அப்படிப்பட்டவர் நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார். இந்தியாவினுடைய நல்ல நல்ல புதல்வர்களில் பலர் நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரிவினை நம்மால் ஈடுகட்ட முடியாது. அந்தப் பள்ளத்தை நிரப்புவது அவ்வளவு சுலபம் அல்ல. ஆயினும் அவர்கள் இறுதியாகத் தோற்றுவித்த அவருடைய கட்சி, இன்றைக்கு விவசாய மக்களிடத்திலே பல மாநிலங்களிலே பரவி, அந்த இயக்கம் தொடர்ந்து வளர்ந்து முன்னுக்கு வந்து கொண்டிருப்பதை நாம் இன்று பார்க்கிறோம். ஆனால் அதைப் பார்க்கக் கூடிய நிலையில் அவர்கள் இன்றைக்கு இல்லை. அப்படிப்பட்ட ஒரு துரதிருஷ்டமான நிலையில் அவர்கள் நீண்டகாலமாக உயிர் வாழ்ந்திருந்தாலும், நெருக்கடியான ஒரு கட்டத்தில் இப்படிப்பட்ட பல வளர்ச்சிப் போக்குகள் ஏற்படுவதற்கு வித்திட்ட அவர், அதைப் பார்க்க முடியாத நிலையில் அவர்கள் காலமானது உண்மையிலேயே அவருடைய குடும்பத்திற்கும், அவரைப் பிரிந்து நிற்கின்ற உற்றார் உறவினர்களுக்கும் ஒரு பெரிய வேதனையான விஷயம். ஆகவே நமது அவை முன்னவர் அவர்கள் இந்த அவையில் முன்மொழிந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தன்னை ஒன்றிணைத்துக் கொண்டு, அன்னாருடைய பிரிவுக்காக வருந்தக்கூடிய அவருடைய குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எங்களது ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி, அமர்கிறேன்.

[1987 நவம்பர் 9

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் திரு. சரண்சிங் அவர்களுடைய மறைவுக்காக அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இரங்கல் தீர்மானத்தில் ஜனதா கட்சியும் தன்னை இணைத்துக்கொள்கிறது. முன்னாள் பிரதமர் சரண்சிங் அவர்கள் வாழ்க்கையில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர். படிப்படியாக முன்னேறி, உத்தரப் பிரதேச அரசியலிலே இரண்டு முறை முதலமைச்சராக வந்திருக்கிறார்கள். அதேபோல 1977-லே ஜனதா கட்சி மத்தியிலே ஆண்டபோது, அவர் உள்துறை அமைச்சராகவும், துணைப் பிரதம அமைச்சராகவும் மிக நல்ல முறையிலே பணியாற்றியவர். விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, கிராம மக்களுக்காக எப்போதும் வாதாடியவர் அவர். அனைத்து நல்ல காரியங்களும், அனைத்து நலத் திட்டங்களும் கிராமங்களுக்குத்தான் செல்ல வேண்டும் என்று முனைப்பாக செயல்பட்டவர். அவருடைய பதவிக் காலத்திலே பல்வேறு சாதனைகளை விவசாயிகளுக்காக செய்து காட்டினார். அப்படியெல்லாம் ஆட்சியிலே நல்ல காரியங்களைச் செய்து வந்த சரண்சிங் அவர்கள், அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி பிரதமராக வந்த காரணத்தாலே, அவரால் நீண்ட நாள் அந்தப் பதவியிலே இருக்க முடியவில்லை. ஆனாலும்கூட தமிழ்நாட்டினுடைய மாநிலக் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து, திருமதி சத்தியவாணிமுத்து, திரு. பாலபழனூர் ஆகியோர்களை கேபினட் அந்தஸ்து உள்ள அமைச்சராக ஆக்கிய பெருமையும் அவருக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே சொல்லி. அவர்கள் அரசியலிலே எளிமையானவர். நல்லவர், வல்லவர், நேர்மையானவர் என்று கூறி, அவருடைய மறைவுக்கு ஜனதா கட்சி சார்பாக அஞ்சலி செலுத்துவதுடன் அவருடைய குடும்பத்திற்கும் அவரைச் சார்ந்துள்ள கட்சியினருக்கும் ஜனதா கட்சி சார்பாக என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் சரண்சிங் அவர்கள் மறைவுக்காக அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்துள்ள இரங்கல் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வழிமொழிகிறேன். திரு. சரண்சிங் பிரதமராக சிறிது காலம் செயல்



1987 நவம்பர் 9] [திரு. பொ. உத்திராபதி]

பட்டார். அவர்கள் உத்தரப் பிரதேசத்திலே பிறந்து, இந்திய விடுதலைக்கான போரில் ஒரு முன்னணி வீரராக பணியாற்றியவர். காங்கிரஸ் கட்சியோடு நீண்டகாலமாக கருத்து வேறுபாடு கொண்டு, இடையிலே தனக்கே உரித்தான ஒரு கொள்கையை உருவாக்கி, அந்த மாநிலத்திலே இரண்டு முறை முதல்வராக வந்திருக்கிறார்கள். குறிப்பாக இந்த நாடு விவசாய நாடு. விவசாயிகளைக் கொண்ட இந்த நாட்டில், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கும், விவசாயிகளுடைய நல்வாழ்விற்கும் ஒரு திட்டமும் இல்லையே என்ற அந்தக் கருத்தைக் கொண்ட சரண்சிங் அவர்கள், அவருடைய ஆயுள் காலம் முழுவதிலும் கிராமப்புற விவசாயிகளுடைய முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர். அப்படிப்பட்ட திரு. சரண்சிங் அவர்கள் இந்தியாவில் எப்படியும் தன் காலத்திலே ஒரு மாற்றத்தைக் காண வேண்டும் என்று பல்வேறு இயக்கங்களோடு தொடர்பு கொண்டு, 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் இந்தியாவில் மாற்றத்தை உருவாக்கிய மாபெரும் தலைவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார். அது மட்டும் அல்ல, அந்த அமைச்சரவையிலே துணைப் பிரதமராகவும், இறுதியில் 5-வது பிரதமராகவும் அடுத்த தேர்தல் வரையிலும் அவர் செயல்பட்ட காலத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு நன்மைகளை அளித்தவர் திரு. சரண்சிங் அவர்கள். அப்படி செயல்பட்ட முதிர்ந்த அரசியல் தலைவர்களில் ஒருவரான திரு. சரண்சிங் அவர்களுடைய மறைவிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அவருக்கு அஞ்சலியையும், அவரை விட்டு பிரிந்து இருக்கக்கூடிய உறவினர்களுக்கும், குடும்பத்தாருக்கும் அனுதாபத்தையும் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்களாலே முன்மொழியப் பெற்று இருக்கக்கூடிய இந்த இரங்கல் தீர்மானத்திலே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக என்னுடைய உணர்வுகளை நான் இணைத்துக்கொள்கிறேன். மறைந்த திரு. சரண்சிங் அவர்கள், இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமாகிய உத்தரப் பிரதேசத்தில் ஒரு முறைக்கு மேல் முதலமைச்சராக இருந்தும், நடுவண் அரசிலே துணைப் பிரதமராகவும், பிரதமராகவும் செயல் ஆற்றியவர். ஒரு குறுகிய காலத்திலே அவர்கள்

செயலாற்றக்கூடிய நிலை ஏற்பட்டாலும் பல மாநிலங்களுக்கு வித்தூன்றிய ஒரு நல்ல நிர்வாகியாக அவர் பெயர் எடுத்து இருக்கிறார். எனக்கு முன்னால் பேசிய தலைவர்கள் சொல்லிக் காட்டியது போல் இந்த நாடு விவசாயத்தை நம்பிய நாடு. ஆனால் ஒரு விவசாயி இந்த நாட்டினுடைய பிரதமராக ஆனார் என்ற வரலாற்றை திரு. சரண்சிங் அவர்கள்தான் உண்டாக்கிக் காட்டினார்கள். இன்று தொழில் துறையில் நம்முடைய கவனம் எல்லாம் மேலோங்கி இருக்கிறது. பெரிய பெரிய தொழிற் சாலைகளை உண்டாக்க வேண்டும் என்ற ஆவல் எல்லோருக்கும் இருக்கிறது. ஆனாலும்கூட இந்த நாட்டினுடைய உண்மையான முன்னேற்றம் அவர் கனவு கண்டது போலவும், அவர் எழுதிக் காட்டியது போலவும், அவர் பேசிக் காட்டியது போலவும் விவசாயிகளை வாழ வைக்கக்கூடிய அடிப்படையிலே காணக் கூடிய மாற்றத்தின் மூலமாகவும்தான் ஒரு நிலை பெற்ற நல்ல முன்னேற்றமாக இருக்கமுடியும் என்ற நம்பிக்கை என்னைப் போன்றோருக்கு இருக்கிறது. அவரோடு பழகக்கூடிய வாய்ப்பு எனக்கும் கிடைத்திருக்கிறது. அவர் முதலமைச்சராக இருந்த போதும், பிறகு அவர் இந்திய நாடாளுமன்றத்தில் மக்கள் அவையில் இடம் பெற்று இருந்த அந்த 5 ஆண்டு காலத்திலும் அவரைப் பார்க்கவும், அவரோடு பழகவும், உரையாடவும் நான் வாய்ப்பைப் பெற்று இருந்தேன். எல்லாவற்றையும் விட, அவர்களிடத்திலே என்னை மிகவும் கவர்ந்தது அவருடைய எளிமைதான். இலட்சோப லட்ச மக்களுடைய பேரன்பை அவர் பெற்றவர். அவருக்கு 80-வது பிறந்த நாள் கொண்டாடப் பட்டபோது டெல்லியிலே கண்ட ஒரு பெரும் கூட்டத்தை நான் மற்ற நாட்களிலே கண்டது இல்லை. பல கூட்டங்கள் இருந்தது உண்டு. ஆனால் முழுக்க முழுக்க பாமர விவசாயிகள், கிட்டத்தட்ட 15 லட்ச மக்கள் வந்து அவர் பிறந்த நாளிலே வாழ்த்துக் கூறி பங்கேற்றது ஒரு காணற்கரிய காட்சியாக இருந்ததை நான் கண்டேன். அவரைப் பெற்றெடுத்த சமுதாயத் திற்கு, அவரைப் போல பாடுபட்டவர் இன்னொருவர் இல்லை என்ற வரலாற்றை உண்டாக்கியிருக்கிறார்.

அது மட்டும் அல்ல. இந்திய நடுவண் அரசியல் காங்கிரஸ் போன்ற ஒரு தேசிய பாரம்பரியம் இல்லாவிட்டாலும் அந்த அந்த வட்டாரத்திலே மக்களிடத்திலே பிடிப்புள்ள இயக்கங்களும் நடுவண் அரசிலே அமைச்சராக இடம் பெறமுடியும் என்ற ஒரு





தெளிவான வரலாற்றை, குறிப்பாக திராவிட பாரம்பரியத்தில் வாழ்ந்த ஒரு கட்சியும் நடுவண் அரசிலே தன்னுடைய கட்சி சார்பாக அமைச்சர்களை அனுப்ப முடியும் என்பதற்கு அவர் வழி கோலியிருக்கிறார் என்பதிலே நாம் இன்று அவரை நினைப் பதில் நிச்சயமாக பொருள் உண்டு. அவருடைய மறைவுக்கு நானும் இரங்குகிறேன். அவரது மறைவால் வாடும் அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய கழிவிரக்கத்தை தெரிவித்து அமர்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தியத் திருநாட்டினுடைய ஐந்தாவது பிரதமராகப் பணியாற்றிய உயர்திரு. சரண்சிங் அவர்களுடைய மறைவு குறித்து இந்த அவையினுடைய முன்னவர் டாக்டர் நாவலர் அவர்களால் முன்மொழியப் பெற்ற இரங்கல் தீர்மானத்தின் மீது, நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக அதை வழிமொழிந்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

திரு. சரண்சிங் அவர்கள் இந்தியாவிலேயே பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் ஒரு சிறிய கிராமத்தில், ஒரு ஏழை விவசாயியின் மகனாகப் பிறந்தவர். அவர் படிப்படியாக உயர்ந்து, பல கல்லூரிப் பட்டங்கள் பெற்றிருந்தாலும், இந்தியத் திருநாடு விவசாயிகள் நிறைந்த நாடு என்பதால் விவசாய மக்களுக்காக அல்லும் பகலுமாக பாடுபட்ட ஒரு உத்தமத் தலைவராக விளங்கினார். அதோடு மட்டுமல்லாமல், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களில் மூத்த, ஒரு முதுபெரும் தலைவராக விளங்கினார்கள் திரு. சரண்சிங் அவர்கள். அப்பேர்ப் பட்ட திரு. சரண்சிங் அவர்கள் இந்தியாவில் இருகின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக மண்டல் கமிஷனை அமைத்தவர். இந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரையின்படி பிற்படுத்தப் பட்ட மக்களுக்காக 22 சதவீதம் ஒதுக்க வேண்டுமென்ற ரிப்போர்ட்டை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அவையின் மூலம் மத்திய அரசை வலியுறுத்தி, இந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்த வேண்டுமாய் மத்திய அரசைக் கேட்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை இந்த அவையின் மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. கே. முத்துவேல்] [1987 நவம்பர் 9

ஆட்பட்டுப்பட்ட திரு. சரண்சிங் அவர்களை இழந்து துன்புறும் அவருடைய குடும்பத்தினருக்கும், அவருடைய கட்சியான லோக் தளத்தினருக்கும், நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு, என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், மறைந்த முன்னாள் பிரதம அமைச்சர் திரு. சரண்சிங் அவர்களின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

நாளை (10—11—1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை நண்பகல் 12.43 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 3. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

#### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான ஒன்பது பிரயாணிகள் பேருந்துகளுக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 7) துறையின் 7—1—1987 ஆம் நாளிட்ட 41 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1987 நவம்பர் 9]

2. எந்தத் தேதி முதல் ஒரு வண்டி திருடப்பட்டதோ அத் தேதியிலிருந்து அந்த வண்டி அதன் உரிமையாளரிடமே திரும்ப சேர்க்கப்படும் காலவரைக்கு விதிக்கக்கூடிய வரி மற்றும் தண்டத் தீர்வை ஆகியவற்றை நீக்குவது குறித்து உள் (போ. 1) துறையின் 24—2—1987 ஆம் நாளிட்ட 451 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

3. கர்நாடக மாநிலத்தின் மஹதேஸ்வரா மலையில் அமாவாசையை முன்னிட்டு கர்நாடக மாநில போக்குவரத்துக்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதி வழங்குவது குறித்து உள் (போ. 6) துறையின் 9—1—1987 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 28—1—1987 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

5. வட ஆற்காடு மாவட்டம், போளூரிலிருந்து ஆலங்காயம் இடையே ஓடும் எம்.எஸ்.எல். 8541 ஆம் எண்ணுள்ள பயணிகள் ஊர்திக்கு வசூலிக்கக்கூடிய வரி மற்றும் மேல்வரிக்கான விதிப்புகளினை நீக்குவது குறித்து உள் (போ. 1) துறையின் 13—1—1987 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1987 நவம்பர் 9

6. டிராக்டர் வண்டிகள் விற்பனையின் மீது விதிக்கக்கூடிய வரியினை 9 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30—1—1987 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

7. சென்னை, மனநல நிலையத்தின் உள் நோயாளிகளால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 2—2—1987 ஆம் நாளிட்ட 86 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

8. சென்னை, திருவாளர்கள் மார்ஷல் சன்ஸ் மற்றும் மேல் நல்லத்தூர், இந்துஸ்தான் மோட்டார் லிமிடெட் ஆகியோரால் விற்கப்படும் டீசல் ஊர்தி உபகரணங்களுக்கு விதிக்கக்கூடிய வரியினை 9 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 2—2—1987 ஆம் நாளிட்ட 87 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

9. கோயம்புத்தூர் ஊனமுற்ற குழந்தைகள் நலச் சங்கத்திற்கு விற்கக் கூடிய இயந்திரங்கள், மருத்துவமனை உபகரணங்களுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—2—1987 ஆம் நாளிட்ட 88 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



1987 நவம்பர் 9]

10. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 10—11—1986 ஆம் நாளிட்ட 1124 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

11. ஊராட்சிகளுக்கு சொந்தமான அல்லது பொறுப்பிலுள்ள நிலங்களில் விளம்பரப் பலகைகள் வைப்பதற்கு உரிமங்கள் தருவது குறித்த விதிகளை மீண்டும் வெளியிடுவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 24—10—1986 ஆம் நாளிட்ட 849 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

12. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 24—2—1987 ஆம் நாளிட்ட 450 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

13. வேலாண்டவலசு சுங்கச் சாவடியினை இடமாற்றம் செய்து பிச்சானூர் சுங்கச் சாவடியென பெயரிடுவது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 5—2—1987 ஆம் நாளிட்ட 107 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

14. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனையில் வழங்குதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 16—6—1986 ஆம் நாளிட்ட 698 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

15. வாடகை வண்டியாக உபயோகிக்கப்படும் மோட்டார் கார்களுக்கு ஆயத்தீர்வையினை தள்ளுபடிசெய்வது குறித்து உள் துறையின் 14—7—1986 ஆம் நாளிட்ட 1789 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

16. முன்பதிவின் போது செலுத்திய குளிர் வசதிக்கான தொகை சாதாரண தொகை ஆகியவற்றின் வித்தியாசத்தை திருப்பி அளிப்பது குறித்து உள் (சினிமா) துறையின் 26—3—1937 ஆம் நாளிட்ட 820 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப் படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

17. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 7—1—1987 ஆம் நாளிட்ட 40 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

18. மதுரை, சர்வோதயா வேளாண்மை தொழிற்சாலையினால் உற்பத்தி செய்யப்படும் கையினால் தயாரிக்கக்கூடிய சோப்பு துணைக் கருவிகள் விற்பனைக்காக செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12—2—1987 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

19. தங்க நகைகள் ஏற்றுமதி மேம்பாட்டு மற்றும் நிரப்புகைத் திட்டத்தின் கீழ் பாரத ஸ்டேட் வங்கியினால் விற்கக்கூடிய தங்கத் திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 22—1—1987 ஆம்



நாளிட்ட 47 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

20. தமிழ்நாடு கைவினை வளர்ச்சிக் கழகத்தினால் விற்கப் படும் கைவினைப் பொருட்களுக்கு செலுத்தக்கூடிய வரியி லிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 4—3—1987 ஆம் நாளிட்ட 211 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

21. கல்கத்தா, சணல் உற்பத்தியாளர்கள் மேம்பாட்டு அவை யினரால் சென்னையில் விற்கப்படும் சணல் வேலைப்பாடுகளுக் கான செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 11—2—1987-ஆம் நாளிட்ட 122 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

22. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிவிதி களில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 15—12—1986 ஆம் நாளிட்ட 1277-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

23. படுக்கைகள், தலையணைகள், மெத்தைகள் மற்றும் கச்சாப் பொருட்களின் விற்பனையின் மீது செலுத்தக்கூடிய வரி யிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 3—4—1987 ஆம் நாளிட்ட 334 ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

24. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 9—1—1987 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

25. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 25—3—1987 ஆம் நாளிட்ட 410 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 17—10—1986 ஆம் நாளிட்ட 681 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

27. தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு இந்துமத திருமண விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 27—2—1987 ஆம் நாளிட்ட 490 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு இந்துமத திருமணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1955) 8(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





28. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் (இரயிலில் இலவச பயணம்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (சட்டமன்றப் பிரிவு) துறையின் 4—2—1987 ஆம் நாளிட்ட 172 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

29. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் பேரவைத் தலைவர்கள் (தனி இல்லங்கள் மற்றும் வசதி செய்து கொடுத்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (சட்டமன்றப் பிரிவு) துறையின் 4—2—1987 ஆம் நாளிட்ட 171 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

30. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 5—2—1987 ஆம் நாளிட்ட 157 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

31. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ. 5) துறையின் 3—3—1987 ஆம் நாளிட்ட 531 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

32. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு இந்து சமய நிறுவனப் பணியாளர்கள் காப்புறுதித் திட்ட விதிகளை வகுப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12-3-1987 ஆம் நாளிட்ட 664 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

33. பன்னாரியிலுள்ள பன்னாரி மாரியம்மன் குண்டம் மற்றும் மறுபூஜை விழாவினை முன்னிட்டு கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பத்து பயணிகள் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதி அளிப்பது குறித்து உள் (போ. 6) துறையின் 12—3—1987 ஆம் நாளிட்ட 564 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

34. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 14—11—1986 ஆம் நாளிட்ட 3153 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

35. 15—3—1985 ஆம் நாளிட்ட எஸ்.ஆர்.ஓ.ஏ. 54/85 ஆம் எண் அறிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 26—2—1987 ஆம் நாளிட்ட 334 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண் வருவாய் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

36. ஊராட்சி ஒன்றியக் குழுக்களினால் ஏற்பாடு செய்யப்படும் விழாக்களுக்கு அழைப்பிதழ் அனுப்பவேண்டிய நபர்கள் பற்றிய விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் [illegible]1987 ஆம் நாளிட்ட 294 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

37. கிராம ஊராட்சிகள் ஏற்பாடு செய்யும் விழாக்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட வேண்டிய நபர்கள் பற்றிய விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 13—5—1987 ஆம் நாளிட்ட 371 ஆம் எண் அரசாணையில்





வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

38. பேரூராட்சிகள் ஏற்பாடு செய்யும் விழாக்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட வேண்டிய நபர்கள் பற்றிய விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 13—5—1987 ஆம் நாளிட்ட 372 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

39. எரியூட்டப்பெற்ற சுண்ணாம்பு, எரியூட்டப்பெறாத சுண்ணாம்பு, எரியூட்டப்பெறாத சுண்ணாம்புக் கல், எரியூட்டப் பெறாத சுண்ணாம்புப் பொடி அல்லது சிப்பி அல்லது சிப்பித் தூள்கள் ஆகியவற்றின் விற்பனையின் மீது விதிக்கக்கூடிய கூடுதல் வரி, தண்டத் தீர்வை உள்ளிட்ட மேல்வரி ஆகியவற்றை கைவிடுதல் குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 7—5—1987 ஆம் நாளிட்ட 439 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

40. பாரதியார் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களை அப்பல்கலைக் கழக வேந்தர் நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 27—1—1987 ஆம் நாளிட்ட 3297/ஆர். யு.2/87-1 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

41. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு ஒரு உறுப்பினரை அப்பல்கலைக் கழக வேந்தர் நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 12—5—1987 ஆம் நாளிட்ட 22650/

என்.ஆ. 2/87-3 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

42. வருவாய்த் துறையின் 15—12—1925 ஆம் நாளிட்ட 313 ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 2—7—1987 ஆம் நாளிட்ட 734 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

43. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (போ. 5) துறையின் 22—6—1987 ஆம் நாளிட்ட 1466 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

44. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 5—1—1987 ஆம் நாளிட்ட 19 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

45. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 1—4—1987 ஆம் நாளிட்ட 869 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]





45. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையைச் (திருத்த) சட்டத்தின் வழிவகைகள் நடைமுறைக்கு வரும் தேதியினை அறிவிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 22—6—1987 ஆம் நாளிட்ட 643 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

47. இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட்டினால் தயாரிக்கப்படுகின்ற செயற்கை பட்டுநார் இழைகளை விற்பனைச் செய்யும் விற்பனையாளர்கள் செலுத்தவேண்டிய வரியினை கைவிடுதல் குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 20—3—1987 ஆம் நாளிட்ட 286 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

48. ஏனைய பந்தைய மைதானங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்காக கிண்டி மற்றும் உதகமண்டலங்களில் கட்டப்படும் இடைப் பந்தயங்களுக்கு வரிவிதிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26—3—1987 ஆம் நாளிட்ட 311 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தைய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

49. பால் உற்பத்தி மற்றும் பால் வளர்ச்சி ஆணையர் அலுவலகத்தின் நிர்வாகப் பொறியாளரை (கட்டிடம்) எஸ்டேட் அதிகாரியாக நியமனம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6—4—1987 ஆம் நாளிட்ட 583 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1960) 8 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

[1987 நவம்பர் 9

50. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக-வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15—6—1987 ஆம் நாளிட்ட 601 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

51. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 6—3—1987 ஆம் நாளிட்ட 546 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 188(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

52. திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களுக்கான மாவட்ட வளர்ச்சிக் குழுக்களை அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 7—10—1986 ஆம் நாளிட்ட 790-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1958) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

53. திருச்சி, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களால் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—5—1987 ஆம் நாளிட்ட 314 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

54. பணி ஒப்பந்தத்தில் செயற்படுத்தும் போது உள்ளாகும் சொத்துரிமை மாற்றத்திற்காக செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 16—3—1987 ஆம் நாளிட்ட 262 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959), 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



1987 நவம்பர் 9]

55. திருவாளர்கள் மார்ஷல் சன்ஸ் மற்றும் கம்பெனியினரால் விற்கப்படும் நீராற்றலினால் இயங்கக்கூடிய பளுதூக்கிகளுக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து வணிக வரிகள் சமய-அறக்கட்டளைகள் துறையின் 2—3—1987 ஆம் நாளிட்ட 186 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

56. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் (ஆறாவது திருத்த) சட்டத்தின் வழிவகைகள் நடைமுறைக்கு வரும் தேதியினை அறிவிப்பது குறித்து 27—3—1987 ஆம் நாளிட்ட 316 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

57. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30—4—1987 ஆம் நாளிட்ட 424 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

58. சென்னை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அன்பளிப்பாக அளிப்பதற்கு ஜெர்மானிய கூட்டுக் குடியரசு தூதரகத்திற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு ஸ்டாண்டர்ட் 20 நோயாளர் ஊர்தி மற்றும் ஒரு ஸ்டாண்டர்ட் 20 சிறு பேருந்து ஆகியவற்றின் விற்பனைக்காக செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26—5—1987 ஆம் நாளிட்ட 517 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

59. டி.என்.எஸ். 5042, எம்.டி.கே. 1448, எம்.டி.ஓ 2665 மற்றும் எம்.டி.எஃப். 3809 ஆகிய மோட்டார் வண்டிகளுக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் தண்டத் தீர்வை நிலுவைகளை கைவிடுதல் குறித்து உள் (போ. 1) துறையின் 1273 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

60. சென்னை நுகர்பொருள் வாணிபத் துறையினருக்கு சொந்தமான எம்.எஸ்.எஸ். 9207 வண்டிக்கு செலுத்துவேண்டிய வரி, மேல் வரி மற்றும் தண்டத் தீர்வை நிலுவைகளை கைவிடுதல் குறித்து உள் துறையின் 22—6—1987 ஆம் நாளிட்ட 1476 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

61. தேசிய அனுமதி பெற்ற சரக்கு வண்டிகளில் ஏற்றப்படும் சரக்குகளில் எடை தவறாகக் குறிப்பிடப்பட்டதால் ஏற்பட்ட வருவாய் இழப்புகளை கைவிடுதல் குறித்து உள் (போ. 1) துறையின் 30—6—1987 ஆம் நாளிட்ட 1571 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

62. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைச் (திருத்த) சட்டத்தின் வழிவகைகள் நடைமுறைக்கு வரும் தேதியினை அறிவிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 5—3—1987 ஆம் நாளிட்ட 214 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]





63. இந்திய சுற்றுலாத் துறையின் அனுமதிபெற்று இயங்கும் உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் ஆகியவற்றின் விற்பனையின் மீது செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 10—6—1987 ஆம் நாளிட்ட 570 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

64. பழைய மற்றும் தேய்ந்துபோன அல்லது தாங்கு திறனற்ற நகைகள் மற்றும் தங்கம் அல்லது வெள்ளியிலான ஏனைய பொருட்களை வாங்கியமைக்காக எந்த ஒரு விற்பனை யாளரும் செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 20—3—1987 ஆம் நாளிட்ட 291 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

65. கோழித் தீவன சேர்ப்புகள் மற்றும் செறிவூட்டப்பெற்ற கோழித் தீவனங்களின் விற்பனையின் மீது சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26—5—1987 ஆம் நாளிட்ட 516 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

66. வருவாய்த் துறையின் 23—3—1959 ஆம் நாளிட்ட எஸ். ஆர். ஓ. ஏ-1968/1959 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறை யின் 19—5—1987 ஆம் நாளிட்ட 465 ஆம் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).]

[1987 நவம்பர் 9

67. வெண்ணெய் விற்பனையின் மீது விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 22—6—1987 ஆம் நாளிட்ட 654 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

68. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு அலுவலர்கள் மற்றும் தகவலளிப்போர்களுக்கு வெகுமதி வழங்க விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வனமீனளத் துறையின் 12—6—1987 ஆம் நாளிட்ட 462 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64 (எ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

69. 1984-85-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் பத்தாவது ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

70. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் ஆண்டறிக்கை. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 19 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

71. 1984-85-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் (தனியார்) நான்காவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).



1987 நவம்பர் 9]

72. 1983-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

73. 1982-83 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர் பொருள் வாணியக் கழகத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

74. 1987-88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையும், 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை துணை அறிக்கையும். [1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61 (1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

75. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1985-86-ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவுக் கூறின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

76. தமிழ்நாடு அரசின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவுக் கூறின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்).

77. தமிழ்நாடு அரசின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவுக் கூறின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

1. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணய) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1987).

2. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/1987).

3. 1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1987).

4. ஊராட்சி தேர்தல்களில் வெற்றி பெற்ற அனைத்து தலைவர்களின் பெயர்களையும் ஒருமுகப்படுத்தி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 12—1—1987 ஆம் நாளிட்ட 23 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

5. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 20—3—1987 ஆம் நாளிட்ட 291 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கைக்கான வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 28—3—1987 ஆம் நாளிட்ட 14/107/II (1)/87 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட பிழைதிருத்தம்.

6. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் இணைப்பு-உ ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியலில் நான்கு புதிய காரகர்களை சேர்ப்பது குறித்து 1—9—1987 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17



© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.


2990

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, நவம்பர் 10, செவ்வாய்க்கிழமை.

ஐப்பசி 24, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை"

அறத்தை அறிந்தவனாய், அறிவு நிறைந்து அமைந்த சொல்லை உடையவனாய், எக்காலத்திலும் செயல்செய்யும் திறன் அறிந்தவனாய் உள்ளவன் ஆராய்ந்து கூறும் துணையாவான்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மத்திய அரசில் பணி.

1—(* வினா எண் 7392) திரு. செ. செம்மலை : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கையில் குறிப்பிட்ட சதவிகிதம் பேர் மத்திய அரசு பணிகளில் இடம் பெற வேண்டும் என்ற விதிமுறை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தற்போது மத்திய அரசுப் பணிகளில் உள்ள தமிழக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது மத்திய அரசுப் பணிகளில் உள்ள தமிழக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை 39 ஆகும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தேர்வாணைக் குழு நடத்தி வருகிற ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறுகின்ற தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அந்த வகையிலே மத்திய அரசுப் பணிகளில் இடம் பெறும் நமது எண்ணிக்கை, அதாவது நம்முடைய காண்ட்ரிபியுஷன் குறையக் கூடிய அபாயம் இருந்து வருகிறது. அதோடு, நம்முடைய மாநிலத்திலே இருக்கிற ஐ.ஏ.எஸ். களினுடைய எண்ணிக்கை குறைந்து வருவதால், வெளி மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நம்முடைய மாநிலத்தில் திணிக்கப்படுகின்ற சூழ்நிலையும் இருக்கிறது. எனவே, நம்முடைய மாநிலத்திற்கென்று விகிதாச்சார முறையில், அதாவது Proportinate Allocation என்ற வகையில் குறிப்பிட்ட எண்ணிக்கை தமிழகத்திலேயிருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தை மைய அரசுக்கு நம்முடைய அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்திய ஆட்சிப் பணியில் தகுதியின் அடிப்படையில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் போட்டியிடுகிறார்கள். தமிழகத்திலே இருக்கின்றவர்களுடைய பங்கீடு குறைகிறது என்பது கவலை தரத்தக்க ஒன்று. ஆனாலும்; தமிழகத்திலே இருக்கின்ற பெரும்பாலான மாணவர்கள் இப்பொழுது இங்கிருந்து படித்து நியூ டெல்லிக்குச் செல்வதைவிட நியூயார்க்கிற்குச் செல்வது மேல் என்று போய்விடுவதும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனாலும்கூட, தகுதியை அதிகப்படுத்தி, நமக்குரிய பங்கைப் பெற வேண்டுமென்பதில் நாம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு கோட்டா சிஸ்டம் என்கிற வகையில் வருமேயானால் இந்திய ஆட்சிப் பணியில் தகுதி காப்பாற்றப்படாமல் போய் விடுவதற்கான வாய்ப்பு உண்டு. ஆகவே, இவற்றை யெல்லாம் பற்றிப் பரிசீலித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்து வருகின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடைய எண்ணிக்கையைக் கூடுதலாக்கவும், நிர்வாகத் திறமைக்குப் பெயர் பெற்ற நம் மாநிலத்திலேயிருந்து நல்ல நிர்வாகிகளை உருவாக்கவும், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களும் ஒருங்கிணைந்து திறமையான மாணவர்களைத் தேர்வு செய்து, ஐ.ஏ.எஸ். டிரெயினிங் சென்டர் என்ற ஒரு மையத்தை உருவாக்கி, அவர்களை ஐ.ஏ.எஸ். தேர்வுக்குத் தயார் செய்கின்ற வகையில் பல்கலைக் கழகங்களுக்கு நம்முடைய அரசு ஏதாவது ஆலோசனைகளை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்து கல்வித் துறையின் கவனத்தில் வைக்கப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இந்த மாநிலத்திலேயிருந்து இரண்டே இரண்டு பேர்தான் ஐ.ஏ.எஸ். தேர்விலே தேர்வு பெற்றார்கள் என்ற விவரங்களெல்லாம் வேதனையானது. வடக்கேயிருக்கின்ற மாநில மாணவர்கள் இந்த ஐ.ஏ.எஸ். தேர்வை இந்தியிலேயே எழுதி விடுகிறார்கள். தமிழிலே எழுதுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றாலும்கூட, இங்கே நம்முடைய அரசாங்கம் நடத்துகின்ற அந்தப் பயிற்சி நிறுவனத்திலிருந்து தேர்வு எழுதுகின்றவர்கள்கூட ஆங்கிலத்திலே எழுதுகிறார்கள். எனவே, அரசாங்கம் நடத்துகின்ற அந்தப் பயிற்சி நிறுவனத்தின் மூலம் எழுதுகின்றவர்கள் தமிழைப் போதனாமொழியாகக் கொண்டு தான் எழுத வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துமா? அப்படித் தமிழிலே எழுதுகின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, ஏற்கனவே தாழ்த்தப்பட்டவர்கள், மலைஜாதியினருக்கு இருக்கும்படியான ஒதுக்கீடு ஒன்று இருக்கிறது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குக் கோட்டா முறையில் வந்தால் பரவாயில்லை என்று சொல்லிவிட்டு நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு என்ன Criterion என்ன அளவுகோலை வைத்து அந்தக் கோட்டா நிர்ணயிக்கப்படலாம் என்பதுபற்றி ஏதாவது யோசித்து பதில்

சொல்கிறார்களா? எப்படி அந்த முறை? கோட்டா முறை என்றால் என்ன அர்த்தப்படுத்தும் என்று புரியவில்லை. அதைத் தெளிவுபடுத்தினால் நல்லது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, கோட்டா முறை வேண்டுமென்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை கேள்வியை எழுப்பியபோது, மாநில வாரியாக மாநிலங்களுக்கு உரிய பங்கு இந்திய ஆட்சிப் பணியில் குறைந்த வருகிற காரணத்தினால் இப்பொழுது எப்படி சில நாடுகளைக் கொண்ட பொதுவான அமைப்புகளில் ஒரு நாட்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்குகிறார்களோ, அதுபோல் மாநிலங்களுக்கு ஒதுக்கலாமா என்ற அத்தகைய ஒரு யோசனையைச் சொன்னார்கள்: அதனுடைய விளைவுகளைப் பற்றியெல்லாம் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால், அவற்றினால் தகுதி குறைந்துவிடக்கூடாது; ஆகையினாலே, அவற்றைப் பற்றியெல்லாம் விரிவாக பரிசீலித்துதான் அரசு முடிவெடுக்கும் என்று நான் குறிப்பிட்டேன்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சொத்துக்களை தங்களுடைய பிள்ளை பெயரிலோ அல்லது மனைவி பெயரிலோ வாங்குகின்ற நேரத்தில், அரசாங்கத்திடமிருந்து அதற்கு முன் அனுமதி பெற வேண்டுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, முன் அனுமதி பெற வேண்டும்.

**திரு. த. மாரிமுத்து:** தமிழக அரசு சார்பிலே 39 அதிகாரிகள் பணி புரிவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மத்திய அரசு பணிகளுக்காக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத் தேர்வு செய்யும்போது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகையான 18 சதவிகிதம் அமுல் செய்யப்படுகிறதா என்பதையும் இப்பொழுது பணி புரிபவர்களிலே எத்தனை பேர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அறிவிக்க இயலுமா?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். பணிக்கு நேரடி நியமனம் செய்யும்பொழுது மட்டுமே தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு நிறைவேற்றப்படுகிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களை மத்திய அரசில் பணிபுரிய அனுப்பப்படும்பொழுது தனியாக ஒதுக்கீடுமுறை கடைப்பிடிக்கப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த வினா எண் 2, திரு. கு. ரமணி, மாண்புமிகு உணவு அமைச்சர் . . . . . (குறுக்கீடுகள்) இன்றைக்கு 30 கேள்விகள் இருக்கின்றன; முதல் கேள்விக்கே 7 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தில் கட்சி அடிப்படையில் வாய்ப்பு அளிப்பது கிடையாது.

**• கோவில்களில் நடைபெறும் திருட்டுகளை கண்டுபிடிக்க தனி போலீஸ் பிரிவு.**

2—(*வினா எண். 1184?) **திரு. கு. ரமணி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்களில் நடைபெறும் திருட்டுகளை கண்டுபிடிக்க தனி போலீஸ் பிரிவை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோவில்களில் நடைபெறும் திருட்டுகளைக் கண்டுபிடிக்க தனி போலீஸ் பிரிவை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது இல்லை. இருப்பினும், கோவில் சிலைகள் திருட்டைப் பற்றி கண்காணித்து புலன் விசாரணை மேற்கொள்ள தனி காவல் பிரிவு ஒன்று குற்றப் புலனாய்வுத் துறையில் ஏற்கனவே இயங்கி வருகிறது. முக்கியமான சிலை திருட்டு வழக்குகளை புலன் விசாரித்தல், சிலை திருட்டு வழக்கு சம்பந்தப்பட்டுள்ள வேறு மாநிலத்து குற்றவாளிகளை புலன் விசாரித்தல், போன்ற பணிகளை இச் சிலை மீட்பு பிரிவு (புலனாய்வுப் பிரிவு) மேற்கொண்டு வருகின்றது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, கோவில் சிலைகள் திருட்டைப் பற்றி கண்காணித்து புலன் விசாரணை மேற்கொள்ள தனி காவல் பிரிவு ஒன்று குற்றப் புலனாய்வுத் துறையில் ஏற்

கனவே இயங்கி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், கோவில்களிலே நடக்கிற இந்தக் குற்றங்கள் வெறும் சிலைத் திருட்டு மட்டும் அல்ல: அங்கேயிருக்கக்கூடிய பல இலட்சக் கணக்கான விலை மதிப்புள்ள ஆபரணங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டு செல்கின்றார்கள். கோவில்களுடைய கதவுகளை எல்லாம் உடைத்து உள்ளே திருட்டு நடைபெறுகிறது. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கும்போது, சாதாரண காவல் நிலையங்களில் அந்த மாதிரி நடவடிக்கைகளில் உடனுக்குடனே தலையிட்டு செயல்படுத்துவது சிரமம் என்பது நடைமுறையில் தெரிகிறது. எனவே, மறுபடியும் பரிசீலனை செய்து இத்தகைய குற்றங்கள் நிகழும்போது நேரடியாகத் தலையிட்டு கைது செய்யவும், வழக்கு தொடரவும் அல்லது அவர்களைப் பிடிக்கவும் புலனாய்வுப் பிரிவு போல் இன்னொரு பிரிவு உண்டாக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இப்பொழுதே கிரைம் பிராஞ்ச் (சி.ஐ.டி.) சில் 'ஐடல் விங்' என்று ஒன்று வைத்து, எஸ்.பி. அளவில் வைத்து, அதற்கான அதிகாரிகள் எல்லாம் நியமித்து, இதுபோன்ற கோவில் சம்பந்தப் பட்ட வழக்குகள் வருகின்றபொழுது அவர்கள் அதைப்பற்றி ஆராயவும் வழக்கு தொடரவும் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. மேலும் ஒரு பிரிவு ஏற்படுத்துவது என்பதை அரசு அவசியமாகக் கருதவில்லை. அது வீண் செலவாகும்.

(முற்பகல் 10-10)

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களிலுள்ள விலையுயர்ந்த கலைப் பொக்கிஷங்களான சிலைகளையும், நகைகளையும் திருடுகிற சமுதாய விரோதிகளைக் கடுமையாகத் தண்டிக்கிற வகையில் புதிய சட்டத்தைக் கொண்டு வரவும், அப்படிப்பட்டவர்களை பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, குற்றத்திற்கேற்ற தண்டனை வழங்கப்படும்.



### கோபி வட்டத்தில் சேமிப்புக் கிடங்கு.

3—(*வினா எண்: 13484) திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி வட்டத்தில் விவசாயிகளின் பொருள்களை சேமித்து வைப்பதற்கு சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், கோபிச் செட்டி பாளையம் வட்டம், கோபிச் செட்டிபாளையத்தில் ஏற்கனவே தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமும், வேளாண்மை விற்பனை இயக்ககமும் விவசாயிகளின் பொருட்களை சேமித்து வைப்பதற்கு சேமிப்புக் கிடங்குகளை நடத்தி வருகின்றன.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்புக் கிடங்குகள் வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பவளமலை என்கின்ற பகுதியில் கோயில் நிலத்திலிருந்து புதிதாக அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து அரசிற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. மிக விரைவிலேயே அதைக் கட்டி முடிப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வாடகைக் கட்டிடத்திலே இருக்கின்ற காரணத்தால் குறைந்த அளவிற்குத் தான் விவசாயிகளுடைய சேமிப்புப் பொருட்களை வைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே மிக விரைவிலேயே அரசு அதைப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே அதைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அரசு முயற்சிக்கும்.

### வேடசந்தூர் பகுதியில் பீங்கான் தொழிலுக்கான மூலப்பொருட்கள்.

4—(*வினா எண். 1420) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் பகுதியில் பீங்கான் தொழில் செய்ய தேவைப்படும் மூலப்பொருட்கள் எடுக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மாநில புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அண்ணா மாவட்டம் வேடசந்தூர் பகுதிகளில் கனிவளங்கள் கிடைப்பது குறித்து முறையான சர்வே நடத்தியுள்ளது. அப்பகுதியில் தென்பட்ட பாறைகளிலிருந்து அங்கு பீங்கான் களிமண் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிய வந்துள்ளது.

### தமிழகத்தில் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற்சாலை.

5—(*வினா எண். 5348) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தில் அட்வெண்ட் கம்ப்யூட்டர் சர்வீசஸ் லிமிடெட் என்ற கூட்டு நிறுவனம் கம்ப்யூட்டர் இடுபொருள் தயாரிக்கிறது. மற்றும் இன்போடெக் லிமிடெட் என்னும் கூட்டு நிறுவனம் கம்ப்யூட்டர் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.



### பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவரும் பணி.

6—(*வினா எண். 8162) திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவரும் பணி எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இவ்வாய்க்கால் வெட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. விரைவில் முடித்துவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**திரு. டி. எம். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையிலேயிருந்து வாய்க்கால்கள் வெட்டுகின்ற பணி 99 சதவிகிதம் முடிந்து விட்டதாகச் சொல்கிறார்கள். இப்போது கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலே தண்ணீர் முழுமையாக இருக்கின்ற காரணத்தால் இந்தப் பருவத்திலே அந்த ஏரிக்கு தண்ணீர் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போலவே, வாய்க்கால்கள் வெட்டும் பணியில் 95 சதவிகிதம் வேலை முடிவடைந்திருக்கிறது. இன்னும் 5 சதவிகிதம் வேலைதான் இருக்கிறது. அது காலதாமதமானதற்கு பல்வேறு காரணங்கள் —அங்கே இருப்பவர்கள் நிலம் தராததினாலேயும், நிறைய பாறைகள் இருந்ததனாலேயும் காலதாமதம் ஆகிவிட்டது. அதை விரைவிலேயே முடித்து ஏரிக்குத் தண்ணீர் வரத்து செய்வதற்கான வேலைகளை இந்த இலாக்கா செய்யும்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்லக்கூடிய இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? இது எப்போது முடியும்?

தாமதத்திற்கு என்னென்ன காரணங்கள்? இதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1981-லே ரூ. 22.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1985-ல் அது முடிக்கப்பட்டாகியிருக்க வேண்டும். ஆனால் பணி ஆரம்ப காலத்திலே நிலப் பட்டாதாரர்கள் சம்மதம் தெரிவிக்க மறுத்தார்கள். முதல் பிரிவிலே 11 மீட்டர் ஆழம் வெட்ட வேண்டி இருந்தபோது, பெரிய கடின பாறைகள் அமைந்து விட்டன. கடின பாறைகளை உடைப்பதற்கு வெடி மருந்துகள் கிடைக்காமல் போய் அதிலே சங்கடப்பட்டோம். அவ்வப்போது மழைக் காலங்களிலே, 11 மீட்டர் வரையிலே வெட்டப்பட்ட கால்வாய்களில் தண்ணீர் முழுமையாக வெளியேற முடியாமல், வேலை செய்ய முடியாமல் சிரமங்கள் ஏற்பட்டன. மேற்கூறிய இடர்ப்பாடுகளின் காரணமாக ஒப்பந்தக்காரர்கள் வேலையை விட்டுவிட்டு ஓடி விட்டார்கள். தற்போது வேறு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டு 95 சதவீத வேலை முடிந்து இருக்கிறது.

**திரு. எச் ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1981-லே 22.50 இலட்சம் ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதாகச் சொன்னார்கள். அத் திட்டம், மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில், 1980-ல் புரட்சித் தலைவர் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. ஆனால் குத்தகைதாரர்கள் அந்தக் கால்வாய்களை வெட்டுகின்ற நேரத்தில், சொகுசாக இருந்த இடங்களிலெல்லாம் வேலைசெய்து விட்டு, மற்ற இடங்களில் பாறைகள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லி, கடினமான இடங்களை விட்டுவிட்டுச் சென்றார்கள். ஆகவே குத்தகைதாரர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி தெரியாது, அதுபற்றி கேட்டு, நடவடிக்கை எடுக்கக்கூடியதானால், நடவடிக்கை எடுக்கப்படும்.





**சீவலப்பேரி தண்ணீர் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சியிடம் ஒப்படைத்தல்.**

[illegible] வினா எண்: 9303) **திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீவலப்பேரி தண்ணீர்த் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சியிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சீவலப்பேரி தண்ணீர் திட்டம் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர் திட்டமாக இருப்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியவர்கள் அடங்கிய உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டத்தை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் கூடி முடிவு எடுத்த பின்பே இறுதியான முடிவு செய்து சீவலப்பேரி குடிநீர் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சியிடம் ஒப்படைக்க முடியும்.

**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீவலப்பேரியில், பைப்லைன் போகும் ரோடு ஓரங்களிலுள்ள கோபாலபுரம், மணியாச்சி, குப்பம்பட்டி, ராயல்காலனி ஆகிய இடங்களிலிருந்து குழாய் இணைப்பு கேட்டு மனுக்கள் வந்துள்ளனவா? அந்த ஊர்களுக்கு குழாய் இணைப்பு கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலிருந்து மனுக்கள் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வந்த வண்ணம் உள்ளன. தனிக் கேள்வி போட்டால் அதற்கான விடை தரப்படும்.

**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீவலப்பேரி தண்ணீர் எட்டையாபுரம், கழுகுமலை ஆகிய ஊர்களுக்கு [illegible] கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே

கோவில்பட்டி தொகுதியிலிருக்கும் பாக்கி கிராமங்களுக்கும் தனி பம்பு போட்டு தண்ணீர் கொடுக்க அரசு [illegible] செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் [illegible] அதிகாரி களையும் கலந்து செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே, வேலைப் பேரியிலே குடிநீர் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சி எடுத்துக் கொண்ட பிறகு மற்ற வேலைகள் தொடர்ந்து நடைபெறும்.

குறிச்சி பேரூராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.

8—(*வினா எண். 11990) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி மற்றும் அதனை சார்ந்த பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி பகுதிகளுக்கு, 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சிறுவாணி திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அதனை சார்ந்த புதிதாக ஏற்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க பேரூராட்சியிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதும் பரிசீலிக்கப் படும்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி பேரூராட்சி மன்றத்திற்கு 1982 ஆம் ஆண்டு சிறுவாணி திட்டத்தின்மூலம் திட்டமிடப்பட்டு தண்ணீர் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், ஏற்கெனவே அந்தப் பகுதியில் நீண்ட காலமாக விரிவுபடுத்தப் படாத, ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருந்த ஆத்துப்பாலம், சீனிவாசபுரம், அண்ணா நகர், அண்ணாபுரம், கார்மல் நகர் ஆகிய சீனிவாசபுரம், அண்ணா நகர், அண்ணாபுரம், கார்மல் நகர் ஆகிய பகுதிகளுக்கும் குறிச்சி அவுசிங் யூனிட்டிலே இருக்கக்கூடிய ஃபேஸ்-1, ஃபேஸ்-2 ஆகிய பகுதிகளில் பேரூராட்சி மூலம் பணம் செலுத்தியும் அதற்குத் தேவையான [illegible] அமைக்காமல்,



அந்தப் பகுதிகளுக்கு இன்னமும் குடிநீர் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புவதோடு, அதுபோல டி. என். எச். பி.யிடம் பணம் கட்டப்படும் ஆட்களுக்கும் இன்னமும் தண்ணீர் கொடுக்கப்படாமல், அங்கே [illegible] தண்ணீர் கிடைக்காமல் பொது மக்கள் மிகுந்த வேதனையோடு இருப்பதை அரசு அறியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் பல்வேறு கிராமங்களில் இருந்து வருகின்றன. ஆனால் வறட்சி வேலைகளிலே குடிநீர் வடிகால் வாரியம் வேகமாக கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்த காரணத்தினாலே, எல்லா வேலைகளையும் செய்து [illegible]. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற, குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட சில [illegible] தண்ணீர் தராமல் இருப்பதற்குக் காரணம், பேரூராட்சி [illegible] ஆரம்பத்திலே கிடைக்கப்பெறவில்லை. [illegible] அவர்கள் பணத்தைக் கட்டியிருக்கிறார் [illegible]. எனவே இப்போது பணத்தைக் கட்டியிருப்பதால் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று குடிநீர் வடிகால் வாரியம் அறிவித்துள்ளது.

(முற்பகல் 10-20)

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வாங்கப்பட வேண்டிய குழாய்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படாத காரணத்தால்தான் கடந்த 7 மாத காலமாக, பணம் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளில் பணிகள் நடைபெறவில்லை என்றும், கடந்த 15 நாட்களுக்கு முன்னால்தான் குழாய்களுக்கான விலை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது என்று தெரிகிறது. எனவே இப்படி குழாய் களுக்கான விலையை நிர்ணயிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான காரணங்கள் தற்போது என்னிடம் இல்லை. ஆனாலும், அப்படிப்பட்ட தாமதங்களைத் தவிர்ப்பதற்கு [illegible] நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**அம்பாசமுத்திரம் அரசு விதை பண்ணையை விரிவாக்கல்.**

9—(* வினா எண் 12465) **திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரத்திலுள்ள அரசு விதைப் பண்ணையை விரிவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் அரசு விதைப்பண்ணை இல்லை. வேளாண்மை பல்கலைக் கழகத்தின் நெல் ஆராய்ச்சி நிலையம் இங்கு உள்ளது. இதை விரிவுபடுத்தும் திட்டம் தற்பொழுது இல்லை.

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சி நிலையத்தில் உயர்ரக நெல் வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த விதைப் பண்ணையிலிருந்து நம் விவசாயிகள் நல்ல விதைகளைப் பெற்று அதிக மகசூலைப் பெறுகிற நெல்லைப் பயிரிட்டுள்ளார்கள். எனவே இந்த ஆண்டிலாவது அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்து, அந்த ஆராய்ச்சி நிலையத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் உள்ள பண்ணை ஆராய்ச்சிப் பண்ணையே தவிர, விதைப் பண்ணை அல்ல. ஆகவே இதை தற்போது விரிவுபடுத்தும் திட்டம் எதுமில்லை.

**கரும்பு, நெல் விலை நிர்ணயம் பற்றி மாநில விவசாய உயர்மட்டக் குழு செய்துள்ள பரிந்துரைகள்.**

10—(* வினா எண். 14212) **திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு, நெல் விலை நிர்ணயம் பற்றி மாநில விவசாய உயர்மட்டக் குழு செய்துள்ள பரிந்துரைகள் என்ன?

(ஆ) விவசாயிகள் சங்கங்களிடமிருந்து கரும்பு விலை நிர்ணயம் குறித்து கோரிக்கை வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, (அ) கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 250 என்றும், நெல் குவிண்டாலுக்கு ரூ. 202 என்றும் நிர்ணயம் செய்ய வேளாண்மை உயர்மட்டக் குழு பரிந்துரை செய்தது.

(ஆ) 1986—87 ஆம் ஆண்டுக்கு கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 300 வரை வழங்கக் கோரி விவசாயிகள் சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தன.

(இ) சர்க்கரை ஆலைகள், மற்றும் கரும்பு விவசாய சங்கங்களில் கோரிக்கைகளைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து, கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் குறைந்தபட்ச மாநில அரசு பரிந்துரை விலையாகவும், சர்க்கரை கட்டுமான அடிப்படையில் விலையைக் கூட்டவும் அரசு அறிவித்தது. அதன்படி ஆலைகள் கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச மாநில அரசின் பரிந்துரை விலை டன் ஒன்றுக்கு ரூ. 214.10 ஆகவும் உயர்ந்த பட்சம் ரூ. 258.80 ஆகவும் சர்க்கரை கட்டுமான அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 200 என்று கொடுப்பது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடியதாக இல்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குவிண்டாலுக்கு ரூ. 50 அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, நெல் கொடுக்கும் விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ. 35 கூப்பன் முறையில் கொடுக்கப்படுகிறது. இதையும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இவ்வாறு கூப்பன் முறையில் குவிண்டால் ஒன்றுக்கு விவசாயிகளுக்கு ரூ 35 கொடுப்பதால் உண்மையில் கடைக்காரர்கள்தான் ஆதாயம் பெறுகிறார்கள். விவசாயிகள் ஆதாயம் பெறத் தக்க வகையில் இது இல்லை. எனவே குவிண்டால் ஒன்றுக்கு கூப்பன் முறையில் கொடுக்கப் படும். ரூ. 35-ஐ ரூ. 50 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த ரூ. 50-யும் விவசாயிகளுக்கு ரொக்கமாகவே கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 10

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநில அரசு நெல் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 201 ஆக நிர்ணயிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 140 என்று மத்திய அரசு நிர்ணயம் செய்து இதைப் பின்பற்றும்படி அறிவித்திருக்கிறது. மாநில அரசு இந்த விலையை ஏற்றுக் கொண்டு விலையை நிர்ணயித்திருக்கிறது.

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 210 என்று கொடுத்தாலும் அது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகிற விலையாக இல்லை. கரும்பிலிருந்து மொலாசெஸ் என்னும் கரும்புச் சக்கை பேப்பர் மில்களுக்கு உதவுகிறது. டன் ஒன்றுக்கு ரூ. 500 முதல் 550 வரை கொடுத்தும் ஆலைகளுக்கு லாபம் கிடைக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு ரூ. 250 தான் கிடைக்கிறது. எனவே இந்தத் தொகையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, ஆண்டுதோறும் மழை இல்லாத காரணத்தால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து கரும்புக்கு டன்னுக்கு ரூ. 50 கூடுதலாக வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, விவசாயிகளின் கிணறுகளை ஆழப்படுத்த அதாவது அடிக் கேணியை வெட்டுவதற்கு வட்டியில்லாமல் கடன் கொடுக்கவும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பாதிக்கப்படுகிற தன்மையில் இந்த அரசு எந்தத் திட்டத்தையும் வெளியிடாது, வெளியிட முன்வராது. அந்த உறுதிப்பாட்டை உங்கள் மூலமாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆந்திர மாநிலத்திலே 205 ரூபாய் பெறுகிறார்கள். நாம் 210 ரூபாய் என்று நிர்ணயித்த விலையை அறிவித்திருக்கிறோம். இது கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள். இது சட்டுப்படியாகிறது என்பதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் மோகனூர் பகுதியில் கூட்டுறவுத் துறைக்குச்



1987 நவம்பர் 10]

சொந்தமான சர்க்கரை ஆலை இருக்கிறது. அங்கே 210 ரூபாய்
ன்று கொடுத்தவுடன், அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்
விவசாயிகளுடன் கலந்து பேசி, நல்ல விலை கிடைத்திருக்
கிறது. எனவே ஆலையில் உள்ள தொழிலாளர்களுக்கு ஏதாவது
செய்ய வேண்டுமென்று சொன்னதால், விவசாயிகள் 3 ரூபாய்
தர சம்மதித்திருக்கிறார்கள். அதனால் கிடைக்கப் போவது
15 இலட்சம் ரூபாய். இன்னும் ஒரு மாதம் கழித்து ஆலையில்
வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 750 ரூபாய் இனாமாக
அளிக்கப்பட இருக்கிறது. அந்த எண்ணத்தை மாண்புமிகு
உறுப்பினர்களும், மற்றவர்களும் வளர்த்துக் கொண்டு, ஆங்காங்கே
யுள்ள விவசாயிகளின் சங்கங்களில் சொல்லி 3 ரூபாய் கொடுத்தால்,
மற்ற ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்க
ஏதுவாகும். எனவே மனத்திருப்தி அடைய வேண்டுமென்பது
என்னுடைய வேண்டுகோளாகும்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குவிண்டா
லுக்கு 35 ரூபாய் விவசாயத் துறையின் மூலமாக ஊக்க போனஸ்
தொகையாக அளிக்கப்படுகிறதென்று சொன்னார்கள். கடந்த
ஆண்டு, அதை 20 ரூபாய்ப் பணமாகவும், மீதமுள்ள 15 ரூபாயை
உரமாகவும் கொடுப்பது பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்
களிடத்திலே சொல்லி, பரிசீலிப்பதாகச் சொன்னார்கள்.
ஆனால் இன்றைக்குள்ள சூழ்நிலையிலே, விவசாயிகள் வாங்கு
கிற கடன் தொகையிலேயே 60 சதவிகிதம் அளிற்கு உரத்தை
வாங்கிவிடுகிறார்கள். மேலும் உற்பத்தி செய்யும் பொருளுக்கு
35 ரூபாய் ஊக்கபோனஸ் தருகிற போதும் அதை உரமாகக்
கொடுக்கிறார்கள். எனவே ஏறத்தாழ 60 சதவிகிதம் உரமாக
வாங்கிவிடுவதால் அவற்றை விற்க முடியாமல் மூட்டைக்கு 20,
30 ரூபாய் தள்ளி விற்கும் சூழ்நிலை இருக்கின்றது. எனவே
இதைப் பரிசீலித்து 20 ரூபாய் பணமாகவும், மீதத்தை
உரமாகவும் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, ஏற்கெனவே பரிசீலனையில் இருப்பதாக
மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு
வறட்சியின் காரணமாக, நேரடியாக தஞ்சை விவசாயிகளுக்கு
மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள எல்லா விவசாயிகளுக்கும்

அரசு 200 ரூபாய் வரையிலும் மானியமாகத் தந்திருக்கிறது. அதை உரமாகவோ, பூச்சி மருந்தாகவோ பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக 2¼ கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெற்று மாநில அரசு மூலமாக எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெல்லுக்கு குவிண்டாலுக்கு 202 ரூபாய் தர வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்ததாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு கூப்பன் முறையில் 35 ரூபாய் உரமாக வழங்கப்படுகிறது. உரமாகக் கொடுப்பதைத் தவிர, ஒரு குவிண்டால் நெல்லுக்கு 142 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது இரண்டையும் சேர்த்தால் 177 ரூபாய் வருகிறது. இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்வதில் கடுமையான விலைவாசி ஏற்றம் இருப்பதால், மத்திய அரசை வற்புறுத்தி, மாநில அரசும் ஈடுகொடுத்து, குவிண்டாலுக்கு 250 ரூபாய் வழங்க அரசு முன்வருமா? வறட்சி காரணமாக 200 ரூபாய் மானியம் கொடுக்கும்படி அறிவித்துவிட்டார்கள், ஆனால் அங்கே போய் கேட்கும்போது 700 ரூபாய் பணம் கட்டினால், 900 ரூபாய்க்கு உரம் தருகிறோம், 200 ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்று கூட்டுறவுத் துறையில் சொல்லுகிறார்கள். இந்தக் குழப்பமான நிலைமையை விளக்கி, அந்த 200 ரூபாய்க்கு உரம் கொடுக்க இப்போதே அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது அறிவிக்கப்பட்டாகிவிட்டது. 600 ரூபாய் செலவு செய்தால், 200 ரூபாய் தரலாம் என்பது முன்னால் இருந்த திட்டம். ஆனால் இந்த வறட்சி நேரத்தில் 600 ரூபாய் செலவு ஆகிறதா இல்லையா என்று கணக்கு பார்த்தால் நாளாகும் என்பதால், உடனடியாக நேரடியாக 200 ரூபாய்க்கான உரத்தையோ, பூச்சி மருந்தையோ மானியமாகத் தரலாமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு அதற்கான தொகைகள் மாவட்டந்தோறும் ஒதுக்கப்பட்டு, செலவழிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலும் சிறப்பாகச் செலவழிக்கப்படுகிறது.





(முற்பகல் 10-30)

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆந்திராவிலே ரூ. 205 கொடுப்பதாகவும் நாம் ரூ. 210 கொடுப்பதாகவும் விளக்கம் சொன்னார்கள். ஆனால் இங்கேயுள்ள நிலை என்னவென்றால் ஆலைகளிலே பதிவு செய்து கடன் வாங்காதவர்கள் அச்சு வெல்லமாக தயார் செய்து தந்தால் ரூ. 400 கிடைப்பதாகச் சொல்கின்றார்கள். இந்த காரணத்தினாலே ஆலைகளில் பதிவு செய்து கடன் வாங்கியவர்கள்கூட வேளாண்மையை மறைத்து அச்சு வெல்லம் காய்ச்சுவதாக—ஒரு பகுதியை அச்சு வெல்லமாக காய்ச்சுவதாக—செய்தி வந்து கொண்டிருக்கின்றது. இதையெல்லாம் அனுசரித்து இந்த அரசு கரும்புக்கு அதிக விலை கொடுக்க முன் வருமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். எங்கள் ஜில்லாவிலே கரும்புக்கு ரூ. 210 கொடுத்து, அதில் தொழிலாளர்கள் ரூ. 3 திருப்பி தந்திருக்கின்றார்கள். அவ்வளவு நிம்மதியாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு எந்தக் குறைபாடும் இல்லை. அச்சு வெல்லம் தயாரிப்பது சில பேர்களுக்கு பழக்கமாகிவிட்டது. அச்சு வெல்லம் காய்ச்சுபவர்கள், கூழ்வெல்லம் காய்ச்சுபவர்கள் எதற்காக காய்ச்சுகின்றார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதை எல்லாம் வைத்து அதிலே இவ்வளவு பணம், இதிலே இவ்வளவு பணம் என்றால் அதை எல்லாம் சர்க்கார் கொடுக்க முடியாது. அத்தோடு அரசுத் துறையிலே 14 சர்க்கரை ஆலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகள் நஷ்டத்திலே போனால் அதற்கும் நாம் தான் பதில் சொல்லியாகவேண்டும். நீங்களும்தான் அதற்குப் பொறுப்பு. ஆகவே எவ்வளவு நியாயமோ அந்த நியாயத்தை இந்த அரசு தொடர்ந்து விவசாயிகளுக்கு செய்துகொண்டு வருகிறது.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு உற்பத்தியில் தலை சிறந்து விளங்கக்கூடிய பிரேசில் நாட்டில் கரும்புச் சாற்றிலிருந்து கார் ஓட்டக்கூடிய எரி பொருள்கள் தயாரித்து அதில் வெற்றி

கண்டிருக்கின்றார்கள். அவர்கள் கரும்புச் சாற்றிலிருந்து எரி பொருள்கள் தயாரிக்கக்கூடிய காரணத்தினாலே இந்த ஆண்டு சர்க்கரை இறக்குமதி செய்யக்கூடிய அளவில் அங்கு மாற்றம் ஏற்பட்டிருக்கின்ற செய்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே நம்முடைய நாட்டிலேயும் கரும்புச் சாற்றிலிருந்து எரி பொருள்கள் உற்பத்தி செய்ய ஆய்வு நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே மோலேசஸ்-லிருந்து இன்டஸ்ட்ரியல் ஆல்கஹால் தயாரித்து, அதன் மூலம் பெட்ரோலாக மாற்றி அதன் மூலமாக கார்களை ஓட்டுவது பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி நம்முடைய மாநிலத்திலே உள்ள தனியார் துறையில் ஆராய்ச்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். அது எக்கனாமிக்கலி-வையபிலாக இருக்குமா, பொருளாதார அடிப்படையிலே விலை சரியாக வருகிறதா என்று பார்த்தால் அதிக விலையாக வருகிறது. நல்லவேளையாக நரிமனத்திலே கோயில்களப் பால் பகுதியில் அற்புதமான அளவில் எண்ணெய் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. நானே போன வாரம் போய் பார்த்தேன். ஆகவே நமக்கு கரும்பு சர்க்கரை உற்பத்தியை நிறுத்தி எண்ணெய் வளம் தேட வேண்டியதில்லை. அரியலூரிலிருந்து இராமேஸ்வரம் வரையில் எண்ணெய் வளம் இருக்கிறது. இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் ஏற்றுமதிக்கும் எண்ணெய் கிடைக்கும்போல் இருக்கிறது.

### செய்துங்கநல்லூர் குடிநீர்த் திட்டம்.

11—(* வினா எண். 12692) **திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்துங்கநல்லூர் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது குடிநீர் கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிதம்பரனார் மாவட்டம் செய்துங்கநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு திட்ட அறிக்கை பரிசீலனையில் உள்ளது.





**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டம் விரைவில் நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் 1981-வது ஆண்டுமுதல் ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வேண்டும் என்று பலமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வறட்சி நேரத்திலேகூட அங்கு லாரிகள் மூலமாகத்தான் குடிநீர் கொடுக்கப்பட்டது. அதை மனதிலே வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பல்வேறு கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு இருப்பதால், திட்டப்பணி தொடங்கப்படும். அதில் ஏராளமான கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. நிறைய மக்கள் தொகை இருக்கின்றது. ஆகவே சற்று காலதாமதம் ஆகும். ஓராண்டுக் காலத்தில் முடியுமா என்பது சந்தேகம். சற்று காலதாமதம் ஆகலாம் என்பதை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் அவர்களே, அந்தப் பகுதியில் சுமார் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், தாமிரவருணி ஆற்றிலிருந்துதான் தண்ணீர் எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதன் காரணமாக நானும் அந்தப் பகுதி மக்கள் எல்லோரும் கூடி உண்ணாவிரதம் இருக்க நேரிட்ட நேரத்தில் எஸ்.சு. திரு. நாராயணன் அவர்கள் இதை ஓராண்டுக் காலத்தில் நிறைவு செய்வதாகச் சொல்லியிருந்தார்கள். ஆறு ஆண்டுகாலம் ஆகியும் அந்த மக்கள் குடிநீர் பெறமுடியாமல் மிகவும் அவதியுறுகின்றார்கள். அதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை முடித்துத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததாலே 6 ஆண்டுகள் ஆயிற்றோ என்னவோ எனக்குத்

தெரியாது. அது உள்ளபடியே பல கிராமங்கள் அடங்கிய திட்டம். அத்தோடு அந்த இடத்திலே, தாமிரவருணி ஆறு தவிர்த்து மற்ற இடங்களில் உப்பு நீர் தான் இருக்கின்றது. ஆகவேதான் தாமிரவருணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. திட்டம் போட்டு விரைவில் நிறைவேற்றப் படும். அதற்கான பணிகள் தொடங்கப்படும். ஆனால் ஓராண்டிலே முடிந்துவிடுமா என்பதைப் பற்றி தற்போது சொல்வதற்கில்லை.

### விருதுநகரில் பாதாள சாக்கடை அமைத்தல்.

12—(* வினா எண். 12868) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(ஆ) விருதுநகருக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கான ஆய்வுப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விருதுநகருக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கான ஆய்வுப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் எந்தவிதமான சர்வேயும் நடத்தப்படவில்லை. சென்ற ஆண்டு முதலே அந்த நகராட்சியில் வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதாக இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் எந்த வேலையும் அங்கே நடைபெறவில்லை. நீண்டகாலமாக ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத் தலைநகராக இருக்கிறது. அங்கே சுகாதாரக் கேடு அதிகமாக இருக்கிறது. ஆகவே இத்திட்டத்தினை சீக்கிரம் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா?



மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆய்வு 3½ இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகிறது. ஆய்வுப் பணிகள் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. விருதுநகருக்கு மொத்தமாக 71 கிலோமீட்டர் நீளத்தில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு அதற்கு ஒப்புதல் அளித்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. எ. எல். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விருதுநகருக்கு 48 ஆண்டுகளுக்கு முன்பே பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமாக் திட்டத்தினை நிறைவேற்ற ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 43 ஆண்டுகளுக்கு முன்பு யார் சொன்னார்களோ, தெரியாது. அப்போது அமைச்சராக நான் இல்லை. ஆனால் இப்போது இருக்கிற சூழ்நிலையில் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதுபோல பல இடங்களில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. சில இடங்களில் சாக்கடை கொண்டு போய் விடும் இடங்களிலுள்ள நிலத்தின் சொந்தக்காரர்கள் அதனைக் கொண்டுபோய் விட வழிவிட மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி பல இடங்களிலும் பாதாள சாக்கடை அமைப்பதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதுபோல விருதுநகரிலும் விரைவிலே திட்டப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு நகராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், சில இடங்களில் சீக்கிரம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதாகவும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் திருச்சி நகராட்சியில் 1971-ல் போடப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டம் இது வரை நிறைவேற்றப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[1987 நவம்பர் 10

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகுந்த பதில் தருகிறேன்.

### விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியருக்கு தீவிர பயிற்சி அளிக்கும் திட்டம்

13—(* வினா எண் 2683) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்து எடுத்து அவர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஆம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக விளையாட்டு வாரியம் மாணவர்களை ஊக்குவிக்க என்னென்ன திட்டங்களைத் தீட்டியிருக்கிறது என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மிக இளமையிலே சிறார்களைத் தேர்ந்தெடுத்தல் என்னும் திட்டத்தை ( catch them very young ) 5 வயதுக்கு உட்பட்ட நர்சரி சிறார்களுக்காக நடைமுறைப்படுத்தி வருகிறோம். அதுபோல இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் 14 வயதுக்கு உட்பட்ட சிறார் சிறுமியர்களுக்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஊரக விளையாட்டுப் போட்டி ( All India Rural Sports ) என்கிற முறையில் 14 வயதுக்கு உட்பட்ட சிறார் சிறுமியர்களுக்காக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கோடைக் கால பயிற்சி முகாம் என்கிற பெயரில் மாநில விளையாட்டுச் சங்கங்கள் 32-க்கு நிதியுதவி அளித்து அதன் மூலமாக சிறுவர் சிறுமியருக்கு தேசிய விளையாட்டு ஊக்கத் தொகை அளிக்கிறோம். பள்ளிகளுக்கு அதன்மூலம் ஊக்குவிப்பு அளிக்கிறோம். இப்படி நல்ல பல திட்டங்களை சிறுவர் சிறுமியருக்காக நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, விளையாட்டுகளில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு அரசுத் துறைகளில் எந்தெந்த வகைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று அறிய விரும்புவதோடு கிரிக்கெட், டென்னிஸ், ஹாக்கி போன்ற விளையாட்டு வீரர்களுக்கு வெளிநாடுகளிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களின் மூலமாக பயிற்சி கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறைகளில் முதல் நிலையில் வெற்றி பெறுகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசு ஆணை சென்ற ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பயிற்சியைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற சிறந்த வல்லுநர்களில் பலரைக்கொண்டு விளையாட்டு வாரியத்தால் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-40)

திரு. சைதை சா. துரைசாமி: தலைவரவர்களே, தமிழ்நாடு தேசிய அளவில் விளையாட்டுத் துறையில் எந்த எந்தப் பிரிவுகளில் முன்னணியில் இருக்கிறது? விளையாட்டு வாரியம் பயிற்சி அளிக்கும் பணியினை மேற்கொண்ட பிறகு எந்தெந்த விளையாட்டுகளில் முதல் இடத்தைத் தமிழ்நாடு பிடித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, 'ஃபுட் பால், செஸ், ஹாக்கி' போன்ற விளையாட்டுகளில் தமிழ்நாடு தற்போது தென் மாநிலங்களில் முன்னணியில் இருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டு விளையாட்டுக் கலைஞர்கள் அழிந்துவிடாமல் அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலேயும் அதனை அகிலத்திற்கு எடுத்துச் சொல்லுகின்ற வகையிலேயும் மாணவர்கள் மத்தியில் இந்த

விளையாட்டுப் போட்டிகளை மாநில அளவில் ஆண்டுதோறும் அரசாங்கமே நடத்துவதாக இருந்தால் சிறப்பாக இருக்கும். அந்த வகையில் நடவடிக்கை எடுத்து,

'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா'

என்ற பாரதியின் பாடலை செயல்படுத்தக்கூடிய வகையிலே ஒவ்வொருவரையும், போர்ப்படை தளபதியாக உருவாக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

**நசரத்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்**

14—(* வினா எண் 12648) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதி, நசரத்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இப்பள்ளிக்கு கட்டடம் கட்ட தேவையான நிலம் பெற நடவடிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தேவையான நிலம் கிடைத்த பின்னர் நிதிநிலைமைக்கேற்ப இப்பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** தலைவரவர்களே, இந்தப் பள்ளிக்குத் தேவையான 5 ஏக்கர் நிலம் பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு வந்திருக்கிறது. அதில் 2.5 ஏக்கர் அனாதீன புறம்போக்கு நிலம்; 2.5 ஏக்கர் குட்டை புறம்போக்கு நிலம். குட்டை புறம்போக்கு நிலத்தைக் கொடுக்க அரசு ஆணை கட்டுப்படுத்துகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த அரசு ஆணைக்கு விதிவிலக்கு அளித்து 5 ஏக்கர் நிலத்தையும் பெற்றுத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, வருவாய்த் துறையுடன் கலந்து, இதுகுறித்து ஆய்வு செய்யப் படும்

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** தலைவரவர்களே, இந்த நிலத்தை 'லீசு' க்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அரசு நிலத்தை அரசுப் பள்ளிக்கு லீஸ் விடுவது முறைதானா? அதை 'டிரான்ஸ்ஃபர்' செய்து, விரைவாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, பொதுவாக ஏரி, குளம் ஆகியவற்றிற்குரிய நிலத்தை பிற பணிகளுக்கு ஒதுக்கக்கூடாது என்று தடை இருக்கிறது. ஆகையால் இதுபற்றி ஆராய்ந்துதான் முடிவு செய்ய வேண்டும். அரசு நிலத்தை அரசுத் துறைக்கு லீசுக்கு விடுவது என்று இல்லை. இப்படிப்பட்ட குறிப்பு அரசுக்கு வரவில்லை. அந்த நிலத்தை பிற பணிகளுக்கும் கொடுப்பதாக இருந்தால், இந்தப் பள்ளிக்கே அதனைக் கொடுக்க அரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. கோவிந்தசாமி:** தலைவரவர்களே, நீண்ட நாட்களாக சொந்தக் கட்டடம் இல்லாத பள்ளிகளுக்கு கட்டடம் கட்டித்தர அரசு சிறப்புத் திட்டம் தீட்டி தகுந்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, தற்போது உயர்நிலைப் பள்ளிகள் என்று எடுத்துக்கொண்டால் 2520 பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் சுமார் 800 பள்ளிகளுக்கு மட்டும்தான் கட்டட வசதி இருக்கிறது; 1800 பள்ளிகளுக்கு கட்டட வசதி இல்லை என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. இந்த 1300 பள்ளிகளுக்கும் கட்டட வசதி ஏற்படுத்தித்தர குறைந்தபட்சம் 250 கோடி ரூபாய் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நமக்கு இருக்கின்ற நிதிநிலைப் பிரச்சினையை இந்த அவை அறியும். இதற்கு ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி, கூடிய விரைவில் பள்ளிக் கட்டட வசதியைப் பெருக்கி, மத்திய அரசு நிதியைப் பெற்றும் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்யும்.

[1987 நவம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 15 முதல் 20 வரையில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

### மின்விசைச் செக்கினால் தயாரிக்கப்படும் பொருட்கள்.

21—(* வினா எண். 3520) **திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் மின்விசைச் செக்கு உரிமையாளர்களால் தயாரிக்கப்படும் எண்ணெய் முதலான உற்பத்திப் பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனைக்கு ஏற்பாடு செய்யவும், விற்பனையை ஊக்குவிக்க மானியம் அளிக்கவும் திட்டம ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் மின்விசைச் செக்கு உரிமையாளர்களால் தயாரிக்கப்படும் எண்ணெய் முதலான பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்திட ஏற்கெனவே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய மாவட்ட உதவி இயக்குநரின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. மானியம் அளிக்கும் திட்டம் இல்லை.

**திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைச் செக்குகளின் மூலம் தயாரிக்கப்படுகிற எண்ணெய்களை எல்லாம் சரியான முறையில் விற்பனை செய்ய முடியாத நிலைமையின் காரணமாக அந்த விசைச் செக்குகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் அதனை நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமையிலே அவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரையில் எடுத்து விற்பனை செய்வதாகத் தெரியவில்லை. அதனை விரைவில் எடுத்து விற்பனை செய்வதற்கும் அந்த விசைச் செக்குகளை வைத்து இருப்பவர்கள் நஷ்டமடைந்து கொண்டிருப்பதால் அரசு மீண்டும் பரிசீலனை செய்து கடனாகவோ, மானியமாகவோ ஏதோ ஒரு வழியில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 10]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விசைச் செக்குகள் பெற்ற சங்கங்கள் மற்றும் தனி நபர்கள், எண்ணெய் விலை வெளி மார்க்கெட்டில் நன்கு உயர்வாக இருக்கிறபோது அவற்றை வெளி மார்க்கெட்டில் விற்பதற்குத்தான் முற்படுகிறார்கள். மாறுபட்ட நிலைமை இருந்தால்தான் கதர் வாரியத்தை அணுகி எண்ணெய் விற்பனை செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். ஆகவே அவ்வப்போது சூழ்நிலைக்கேற்ப கதர்த்துறை உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

### ஊமை, குருடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம்.

22—(*வினா எண் 6065) **திரு. க. சோலைராசு:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊமை, குருடர் போன்றவர்களை ஊக்குவிக்க துறையின் மூலம் வேலை வாய்ப்பு வழங்குகிற திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதற்கு முன்பு வேலை வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** (அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை.

உடல் ஊனமுற்றவர், ஊமை, குருடர் ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு சமூக நலத்துறையின் மூலம் அரசு கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது—

**சிறப்பு வேலை பழகும் திட்டம்:**

சிறப்பு வேலை பழகும் திட்டத்தின் கீழ் (Special Apprenticeship Programme) பயிற்சி பெற்ற வேலையில்லாத விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் தங்களுடைய பெயர்களை 17—4—1979 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்

களுக்கு, பல்வேறு தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுபவராக சேர்க்கப்பட்டு, பயிற்சி முடிந்த பின்பு அந்தந்த தொழில் நிறுவனங்களில் அவர்கள் நிரந்தர ஊழியராக எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**2. சுய வேலை வாய்ப்புத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் ஊனமுற்றோர் இவர்களுக்கு நகரத்தின் பல இடங்களிலும், வெளியூர்களிலும், பெட்டிக்கடை (விற்பனை நிலையங்கள்) நிறுவ வங்கிக் கடனுதவி மற்றும் அரசு மானியமாக ரூ. 250—500 வரை வழங்கப்படுகிறது. மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு சுய வேலை வாய்ப்பின் பொருட்டு தங்களது வீடுகளில் சொந்தத் தொழில் நடத்துவதற்கு அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளின் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி அளிக்கப்படுகிறது. அவ்வாறு பயனடைந்த நபர் ஒருவருக்கு கடனுதவிக்கு சமமாகவும், அதிகபட்சம் ரூ. 1,000 அரசு மானியம் வழங்கப்படுகிறது.

**3. வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு:**

விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்பில் மூன்று சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

4. சென்னை, கிண்டியில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி மையத்தில் பொறிப்பகுதி பொருத்துதல் **Fitter-*cum*-Basic Machine Operater** புத்தகம் கட்டுதல் **(Book-Binding)** மற்றும் மின் கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பார்வையற்றவர்களுக்கு போதுமான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பை அளிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் இப்பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர்.

5. சென்னை சாந்தோமில் அமைந்துள்ள உறைவிட வசதிகளுடன் கூடிய மறுவாழ்வு இல்லத்தில் ஆதரவற்ற வயதுக்கு வந்த பார்வையற்ற மகளிர்களுக்கு, நெய்தல், சக்கை கட்டு செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு





பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு இல்லத்திலேயே வேலை அளிக்கப்பட்டு, அவர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப ஊதியம் அளிக்கப்படுகிறது. இதுவரை 294 பார்வையற்ற மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர்.

6. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் மண்டல மறுவாழ்வு மையங்களில் **(Regional Rehabilitation Centres)** ஊனமுற்றவர்களை தொழில் நிறுவனங்களில் சேர்த்தல், சுய வேலை வாய்ப்பிற்கு கடனுதவி வாங்கித் தருதல் போன்ற சீரிய பணிகளை ஆற்றி வருகிறது. இதுவரை 24,922 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

7. உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி தந்து வேலை வாய்ப்பு வசதி பெறுவதற்காக, வட சென்னை தொழிற் கல்வி பயிற்சி மையத்தில், பிளம்பர் தொழிலுக்கும், அம்பத்தூர் தொழிற் கல்வி பயிற்சி மையத்தில் பெயிண்டர், பிட்டர், வரைவாளர் மற்றும் மெசினிஸ்ட் தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களில் தொலைபேசியை இயக்குகிற பணியைக் கண் பார்வையற்றவர்களுக்குக் கொடுக்கிற வகையிலும், காது கேளாதவர்களுக்கு அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு தருகிற வகையிலும் வயர் பின்னல் போன்ற பணிகள் தொடர்பாக நடைபெறக்கூடிய டெண்டர்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை அரசு ஆய்வுசெய்து பரிசீலிக்குமா என்பதையும், 3 சதவீதம் என்று அவர்களுக்காக ஒதுக்கி இருக்கிற வேலைவாய்ப்பு விழுக்காட்டை அதிகபட்சம் 5 சதவீதம் என்று ஒதுக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழி இழந்தவர்கள், காது கேளாதவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் 3 விழுக்காட்டை ஒதுக்கியிருக்கிறார்கள். மைய அரசு இதற்காகப் பாராட்டுகூடத் தெரிவித்திருக்கிறது. மேலும் இன்றைக்கு உடல் ஊனமுற்றவர்களை அவர்களுடைய நிலைமை

களுக்கேற்ப எங்கெங்கு பணிகளில் அமர்த்த முடியுமோ அதற்குரிய நடவடிக்கைகளை சமூக நல வாரியம் மேற்கொண்டு இருக்கிறது.

**அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டுதல்.**

23—*(வினா எண் 12946) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் உள்ள விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு, அரசின் சார்பாக உள்ள விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு, தனியார் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் சென்னை மாநகரத்தில் எத்தனை விடுதிகள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் மூலம், பணி புரியும் பெண்களுக்காகக் கட்டப்பட்டுள்ள விடுதிகள் மொத்தம் தமிழகத்தில் ஆறு. தனியார் துறையின் மூலமாக மொத்தம் 39 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் எவ்வளவு விடுதிகள் செயல்படுகின்றன என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகராக இருக்கின்ற சென்னை போன்ற மிகப் பெரிய நகரத்தில் பல அலுவலகங்களில் பணிபுரிகிற பெண்





களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் நடப்பு நிதியாண்டிலே புதிதாக விடுதிகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**பெருந்துறைத் தொகுதியில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள்.**

24—(*வினா எண் 14159) **டாக்டர் அ. பொன்னுசாமி மற்றும் திரு. யு. பி. மாதையன்:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறைத் தொகுதியில் எத்தனை இடங்களில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் நடைபெறுகின்றன?

(ஆ) எத்தனை இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, (அ) பெருந்துறை தொகுதியில் மொத்தம் 301 மையங்கள் நடைபெறுகின்றன.

(ஆ) இவற்றில் 122 இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**டாக்டர் அ. பொன்னுசாமி:** பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் பல கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை விரைவாகக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், உலகெலாம் போற்றுகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய சத்துணவுக் கூடங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஹெல்த் கார்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பதையும், டாக்டர்களோ அல்லது விசிட்டர்களோ அங்கே பீரியாடிக்கலாக செக் அப் செய்கிறார்களா என்பதையும் அந்தத் திட்டமானது கர்ப்பிணிப் பெண்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பதையும் அங்கே கல்வியின் தரம் உயர்ந்துள்ளதா என்பதை

யும் அறிவிப்பதோடு விறகுக்கான பணம் பற்றவில்லை என்ற குறையைப் போக்குவதற்கும் அரசு முன்வருமா என்பதையும் . . . (மணியடிக்கப்பெற்றது).

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைக்கு ஏற்ப அவ்வப்போது கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்போது நம்முடைய சத்துணவுக் கூடங்களில் ஹெல்த் கார்டுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஐ.சி.டி.எஸ். திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவை செயல்படுகின்ற இடங்களிலேயும், நம்முடைய முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களிலேயும் தற்போது இந்த ஹெல்த் கார்டுகள் சிஸ்டம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆங்காங்கு இருக்கிற மருத்துவர்கள் அந்தக் குழந்தைகளைப் போய்ப் பார்த்து, அங்கு இருக்கிற நம்முடைய நலப் பணியாளர்கள் மூலமாக அவர்களுடைய அன்றாட, அந்தந்த வாரங்களில் அந்தந்த மாதங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களை அந்த நல அட்டைகளிலே குறிப்பிடுகிறார்கள். உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது போலவே கல்விக் கூடங்களிலேயும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான வழி வகைகளை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

**டாக்டர் அ. பொன்னுசாமி:** பெருமை பெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்கள் சத்துணவுக் கூடங்களாக விளங்கி வருகின்ற காரணத்தாலே, சாதாரண மக்களுக்கும் சகல சத்துக்களையும் தருகின்ற முருங்கை மரங்களை இதுபோன்ற சத்துணவுக் கூடங்களிலே வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவிதமான மரங்களையும் வளர்க்க வேண்டும் என்றுதான் அரசு சொல்லி வருகிறது. சத்துணவுக் கூடங்களைச் சுற்றியும் இன்றைக்கு கீரைகளை வளர்ப்பதற்கும், காய்கறிகளை வளர்ப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## இராமநாதபுரம் மாவட்டத்தை கதர் வாரியம் தத்து எடுத்தல்.

25—(*வினா எண் 14541) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தை கதர் வாரியம் தத்து எடுத்துள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அம்மாவட்டத்தை தத்து எடுத்து பல்வேறு கதர் கிராமத் தொழில்களை துவங்கிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**திரு. எஸ். இராசாராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை தத்து எடுத்ததாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எந்த அடிப்படையில் கதர் வாரியம் தத்து எடுத்து உள்ளது? எவ்வளவு தொகை இதற்காக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது? இதனால் அந்தப் பகுதியில் எத்தனை கிராமங்களில் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2—10—1985-ல் நடைபெற்ற கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிகளில், மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்பு செய்து, கதர் கிராமத் தொழிலை அபிவிருத்தி செய்யும் என அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையில் 19 கூட்டுறவுச் சங்கங்களும், அதே போல கதர்த் துறையைச் சார்ந்த 2 அலகுகளும் அமைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கதர் நூற்பு மற்றும் நெசவுத்

தொழில் கூட்டுறவுச் சங்கம் 4, கதர் பட்டு பெருக்கு அலகு ஒன்று, கதர் பட்டு நெசவுத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று, சுண்ணாம்பு உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று, மண் பாண்ட தொழில் கூட்டுறவுச் சங்கம் 6, தச்சுப் பொருள் தொழில் கூட்டுறவுச் சங்கம் 2, மசாலா பொருள் அலகுகள் ஒன்று, பனை ஓலைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 4, பாய் முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று என்று மேற்படி திட்டங்களுக்கு 65.13 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்பீட்டில் கதர் ஆணைக் குழு நிதி உதவியுடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினுடைய நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டங்களின் கீழ் 17 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். இராசாராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதையும் தஞ்சை மாவட்டத்தை கதர் வாரியம் தத்து எடுக்க உள்ளதா என்பதையும் அறிந்து கொள்ள விரும்புவதோடு, தஞ்சை மாவட்டம் விவசாய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், அங்கே இருக்கிற தாய்மார்களுக்கு ஆண்டுக்கு 6 மாத காலத்திற்கு வேலை இல்லாது இருக்கிற நிலைமை இருப்பதால் தஞ்சை மாவட்டத்தைக் கதர் வாரியம் தத்து எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக இதுவரையில் 1,077 பேர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு திட்டத்தைக் கதர் வாரியம் மூலமாகத் தொடங்குகிறபோது வருடம் பூராவும் பணியாற்றுவதற்குப் பணியாளர்கள் கிடைப்பார்களா என்பதை யோசித்துத்தான் துவக்க முடியுமே தவிர, 6 மாத காலத்திற்கு மட்டும் பணியாளர்கள் கிடைப்பார்கள் என்று திட்டத்தைத் துவக்கினால், மீதி 6 மாத காலத்திற்கு மூடி வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே ஆங்காங்கு கிடைக்கின்ற பணியாளர்களின் எண்ணிக்கையை வைத்து தேவையை அறிந்து துவக்கப்படும்.





### மத்தாளபள்ளம் அணை கட்டும் திட்டம்.

26—(*வினா எண் 9628) **திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெருப்பூர் அருகே மத்தாளபள்ளம் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் வட்டத்தில் நெருப்பூர் அருகே மத்தாளபள்ளம் அணைக்கட்டும் திட்டம் பல அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இத்திட்டத்திற்கு அதிகாரிகளால் சர்வே நடத்தப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். சுமார் ஐந்து, ஆறு ஆண்டுகளாக அதிகாரிகளால் சர்வே நடத்தப்பட்டும் இன்னும் அந்தத் திட்டம் துவங்கப்படாமல் இருக்கிறது. பெண்ணாகரம் வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாகும். அந்தப் பகுதியிலே இந்த மத்தாளபள்ளம் அணை கட்டுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஆய்வு செய்யும் என்று சொல்கிற நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்குத் தண்ணீர் வரத்து எவ்வளவு வருகிறது என்பதையெல்லாம் சரிபார்த்துத்தான் அதற்கு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். விரைவாக ஆய்வுப் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### வைகை அணையின் கொள்ளளவை அதிகரித்தல்.

27—(*வினா எண் 11068) **திரு. கே. உச்சி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையின் தற்போதைய கொள்ளளவு எவ்வளவு?

(ஆ) அந்த அணையை அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் அதன் கொள்ளளவு அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, (அ) வைகை அணையின் கொள்ளளவு 6827 மில்லியன் கன அடிகளாகும்.

(ஆ) வைகை அணையின் நீர் வரத்தைக் கணக்கில் கொள்ளும்போது, அதன் கொள்ளளவை அதிகரிக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**திரு. கே. உச்சி :** தலைவர் அவர்களே, அதனுடைய கொள்ளளவிற்குத் தகுந்த ஆழம் இருக்கிறது. எனவே மேலும் ஆழப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பெரியோர்கள் சொல்வதைப் போல வைகை என்ற அளவிற்குத்தான் அதில் தண்ணீர் ஓடுகிறதா? அதனை அதிகரிக்கும் திட்டம் ஏதாவும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, வை கை இல்லை. இப்போது வைகையாகத்தான் தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. அதனுடைய கொள்ளளவை முதலில் பார்க்கிறபோது 6,878 மில்லியன் கன அடியாக இருக்க வேண்டுமென்று அப்போது கட்டியிருக்கிறார்கள். இப்போது அதனுடைய கொள்ளளவு 6,827 மில்லியன் கன அடி. ஏறத்தாழ 50 மில்லியன் கன அடி தான் அங்கே சில்ட் இருக்கிற காரணத்தால் அதை ஆழப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

**திரு. பொன். முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, பெரியாறு, வைகை ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்துவிடும் நிலையில் மேலூர் பகுதி மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலூர் பகுதி மக்கள் மகிழ்ச்சியடையத்தக்க அடிப்படையில் இன்றைக்கு அணைக்கட்டு நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும், ஆயக்கட்டுப் பகுதிகளிலும் மழை பெய்து கொண்டிருக்கிற காரணத்தால் மேலூர் பகுதிக்கும் விவசாயத்திற்கும் தண்ணீர் திறந்து விடுகிற முயற்சியை அரசு உடனே மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இருக்கிற நீரை வைத்துக்கொண்டு கள்ளந்திரி வரைக்கும், அந்த அணைக்கட்டுப் பகுதி வரைக்கும் தண்ணீரைத் திறந்து விடுவதற்கு—இப்போது நாங்கள் 5-11-1987 ஆம் தேதியன்று தண்ணீரைத் திறந்து விட்டிருக்கிறோம். இப்போது அங்கே பெய்கிற மழையை நாங்கள் சரி பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீரின் வரத்து கொஞ்சம் கூடியவுடனே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும் இதற்குக் கோரிக்கை விட்டிருக்கிறார்கள்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, வைகை ஆறு உற்பத்தியாகிற வரசநாட்டுப் பகுதிகளில் மழைக் காலங்களில் ஏற்படுகிற வெள்ளச் சேதங்கள் அதிகமாக இருக்கிறதால், கடந்த வெள்ள காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தொகுதியான ஆண்டிப்பட்டியில் மேலவைகை என்று ஒரு அணைக்கட்டுத் திட்டம் 40 கோடி ரூபாய் செலவில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வெள்ள நீரைத் தேக்குகிற இந்தத் திட்டத்திற்கு அரசு விரைவாக அனுமதியளிக்குமா என்று அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீலனைக்குப்பின் கைவிடப்பட்டது.

**வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் படுக்கை அணை கட்டுதல்.**

28—(*வினா எண். 12293) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், மங்கநல்லூர் அருகே வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் ஒரு பெட்டாம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1987 நவம்பர் 10

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், மங்கநல்லூர் அருகே வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் ஒரு பெட்டாம் கட்டுவதற்கு கருத்துரு ஆய்வில் உள்ளது.

## வெள்ளாற்றின் குறுக்கே அணை.

29—(*வினா எண் 12616) **திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா, அரிமளம் மரமடக்கி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அரிமளம் மரமடக்கி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ரூ. 36.30 இலட்சத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் நிறை வேற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. த. புஷ்பராசு :** தலைவர் அவர்களே, இந்த அணை கட்ட வேண்டுமென்று நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்சமயம் இந்த அணை கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக மாண்பு மிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், பெருமுயற்சி எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விரைவாக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, அந்த மக்களுக்குச் சேவை செய்கின்ற அளவிற்கு இந்த அணைக்கட்டு வேலைகள் துரிதப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 10]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-9-1987-ல் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 36.30 லட்சம் நிதியை இதற்கு ஒதுக்கீடு செய்து, டிசம்பர் 1988-க்குள் பணியை முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நாங்கள் உத்திரவிட்டு இருக்கிறோம். விரைவில் பணி முடிக்கப்படும்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. த. புஷ்பராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வர இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். அப்படி வருகின்றபோது இந்த அணைக்கட்டுத் திட்டம் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரோடு பேசி முடிவு எடுக்கப்படும்.

## திருமணஞ்சேரியில் அணை கட்டும் திட்டம்.

30—(*வினா எண் 13785) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமணஞ்சேரியில் அணை கட்டுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பு எவ்வளவு ?

(இ) இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் பலன் அடையும் ?

(ஈ) கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், வெள்ளாள விடுதி, புத்தாங்கரை விடுதி, துவார், மானிய வயல் ஆகிய இடங்களில் செக்டாம் அமைக்கப்படுமா ?

[1987 நவம்பர் 10

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூ. 301 இலட்சத்தில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது.

(இ) சுமார் 7559.35 ஏக்கர்.

(ஈ) இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக, புதுக்கோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி போன்ற தொகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயம் செய்கின்ற பெருங்குடி மக்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் இருக்கிற காரணத்தால் இந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவிலே ஆரம்பிக்க வேண்டும் என்று அரசும் கருதுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் இருசாரார் இருவிதமான உணர்வுகளைச் சொல்கிற காரணத்தால், ஏற்கனவே சட்ட மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மத்தியிலே பேசி, இதற்கு ஒரு வழி முறையை நாங்கள் செய்து வைத்திருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் மத்தியிலே அந்தக் கருத்தைக் கேட்டு இருக்கிறோம். விரைவிலே இந்தத் திட்டம் தொடங்கப்படும்.

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வ கோட்டை ஒன்றியத்தில், வெள்ளாள விடுதி, ஆத்தாங்கரை விடுதி, துவார், மானிய வயல் போன்ற பகுதிகளில் செக்டாம் அமைப்பதன் மூலமாகத் திருமணஞ்சேரியில் அணை கட்டுகின்ற திட்டத்திற்கு, அங்கேயிருக்கிற மக்கள் ஒத்துழைப்பு தருகிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதன் மூலமாக இந்தத் திட்டம் துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 10]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் அந்த ஸ்தலத்திற்குச் சென்று, ஆய்வு செய்து, பொது மக்களுடைய கருத்துக்களைக் கேட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அதன் அடிப்படையில் மிக வேகமாக இந்தத் திட்டத்திற்கு ஒப்புதலை அரசாங்கம் அளிக்கும்.

**திரு. அ. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணஞ்சேரியிலே அக்கரையாற்றின் குறுக்கே அணையைக் கட்டுகின்ற திட்டம் குறித்து தொடர்ந்து 40 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதியில் உள்ள மக்களால், அந்த மாவட்டத்தில் உள்ள மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை அரசிடமிருந்து ஆவலோடு அந்த மக்கள் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். பலமுறை அந்த அணையைக் கட்டுவதற்கான மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பியபோதும், அரசிடமிருந்து நிதி போதவில்லை என்ற அந்தப் பதிலை மட்டும் எதிர்பார்த்து, அந்த அணை கட்ட முடியாமல் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் இரண்டு பிரிவினராகச் சேர்ந்து, அங்கும் இங்கும் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதிகாரிப் பெரு மக்கள் அந்தப் பகுதிக்கு வந்து ஆய்வு செய்கின்றபோது மானிய வயலில் அணையைக் கட்டுவதற்குச் சாத்தியம் இல்லை என்றும், திருமணஞ்சேரியில் அணையைக் கட்டுவதற்கான சாத்தியக்கூறு இப்போது இருப்பதாகச் சொல்லி, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு தயாரித்து, அரசுக்கு அது வந்திருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே தொடர்ந்து இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டாவது இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்த அணையைக் கட்டக்கூடிய திட்டத்தை நிச்சயமாகச் செய்வார்களா, செய்வதற்கு உறுதி அளிப்பார்களா, என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி பொது மக்களிடத்திலே கேட்கிற நேரத்திலே, மேலே கட்ட வேண்டும்

[1987 நவம்பர் 10

என்ற கோரிக்கையைச் சொன்னார்கள். ஆகவே, கீழே கட்டுவதற்குத்தான் அரசினுடைய குறிப்பிலே, எங்களுடைய ஆய்விலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இரண்டு தரப்பு மக்களுடைய பிரச்சினைகளை முடிப்பதற்காக, காம்ப்ரோமைசாக அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து விட்டு, கீழே இருப்பவர்களுக்கு அணையைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று அந்த உணர்வைச் சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1.—

வழக்குரைஞர்களுக்கும் காவல்துறை பணியாளர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறு மீதான வழக்குகள்.

வினா 247—**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வக்கீல்களுக்கும் காவல்துறை பணியாளர்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டு பதிவான வழக்குகள் எத்தனை?

விடை—

தமிழகத்தில் 1980 முதல் 1985 வரை (31—3—1985 முடிய) காவல் துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையே எழுந்த தகராறு குறித்து மூன்று சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இது தொடர்பாக இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது சம்பவம் திருச்சி கோட்டாட்சித் தலைவரின் ஒரு நிலையான ஆணை எண். 145-ன்படி (P. S. O. 145) காவல் துறை விசாரணைக்கு தெரிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது.



1987 நவம்பர் 10]

2.—

இனக் கலவரம் பற்றி பதிவான வழக்குகள்.

வினா 253—**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை ஜாதிக் கலவரத்தின் காரணமாகப் பதிவான வழக்குகள், ஆண்டு வாரியாக எத்தனை ?

(ஆ) அவற்றில் தீ வைப்பு வழக்குகள் எத்தனை ?

(இ) தண்டனை பெற்ற வழக்குகள் எத்தனை ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழ் நாட்டில் 1975 முதல் 1985 வரை (1—1—1985 முதல் 31—10—1985 முடிய) இனக் கலவரங்கள் காரணமாகப் பதியப்பட்ட வழக்குகள் பற்றிய எண்ணிக்கை விபரம் கீழ்வருமாறு :—

| வருடம். | இனக்கலவரங்கள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை. | | இவற்றில் தீவைப்பு வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | பதிவான வ. | தண்டனையில் முடிந்தவை. | பதிவான வ. | தண்டனையில் முடிந்தவை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1975 .. .. | 21 | 1 | 1 | .. |
| 1976 .. .. | 18 | 3 | . | .. |
| 1977 .. .. | 4 | .. | . | .. |

| (1) | | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 1978 | .. .. | 78 | 2 | 7 | 1 |
| 1979 | .. .. | 283 | 1 | 88 | .. |
| 1980 | .. .. | 22 | 2 | 5 | .. |
| 1981 | .. .. | 97 | 9 | 13 | .. |
| 1982 | .. .. | 506 | 10 | 47 | .. |
| 1983 | .. .. | 119 | 12 | 31 | .. |
| 1984 | .. .. | 47 | 3 | 7 | 2 |
| 1985 | .. .. | 63 | 2 | 8 | .. |
| (31—10—1985 முடிய) | | | | | |

இனக் கலவரங்கள் அடிக்கடி நிகழும் இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவற்றிற்குக் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைக்கென வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இனக்கலவரங்களில் சம்பந்தப்பட்ட பிரிவினர், காவல் துறையினர், கிராம அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் அடங்கிய அமைதிக் குழுக்கள் நிறுவப்பட்டு, சர்பவ இடங்களில் அமைதி நிலவ வகை செய்யப்படுகின்றது. தகராறு மேலும் ஏற்படாவண்ணம் இருக்க காவல் ரோந்துப்பணி அதிகரிக்கப்படுகின்றது. வன்முறைச் செயலில் ஈடுபடுவோர், இனக் கலவரங்களைத் தூண்டுவோர் மீது அந்தந்த சட்டப் பிரிவின் கீழ் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வகை செய்யப்படுகின்றது.





3.—

**சாரண இயக்கத்தில் சேவை செய்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.**

வினா 714—**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாரண இயக்கத்தில் சேவை செய்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது, மாவட்ட வாரியாக?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

—

**கேர்பெட்டா கிராமத்திற்கு குடிநீர் வழங்கு திட்டம்.**

வினா 1046—**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி பேரூராட்சியை சேர்ந்த கேர்பெட்டா கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம், புதிதாக ஒரு தடை அணை கட்டியும் தரைமட்ட தொட்டி கட்டியும் 21 பொதுக் குழாய்கள் மூலம் கோத்தகிரி பேரூராட்டியை சேர்ந்த கேர்பெட்டா கிராமத்திற்கு குடிநீர் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1987 நவம்பர் 10

5.—

புன்னம்பட்டி கிராமத்தில் கை பம்பு அமைக்கும் திட்டம்.

வினா 1128—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், புன்னம்பட்டி கிராமத்தில் புதிய கை பம்பு போட அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், புன்னம்பட்டி, கிராமம் நல்ல குடிநீர் வசதியுள்ளதாகும். இங்கே புதிய கைபம்பு அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை. இக்கிராமம் வகை 6 என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. பிரச்சினைக்குரிய வகை 1 முதல் 5 வரையுள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்த பின்பு, வகை 6-க்கு மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பெறும்.

6.—

திருவிடைமருதூர் ஒன்றியத்தில் சாலைகள் பழுதுபார்க்கும் பணி.

வினா 1477—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களை இணைக்கும் சாலைகள் பழுதடைந்த நிலையில் உள்ளன என்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், சாலைகளை பழுது பார்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) பொதுவாக திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் சில சாலைகள் பழுதடைந்திருப்பது பொது மக்களால் தெரிவிக்கப்பட்டது.



1987 நவம்பர் 10]

(ஆ) சென்ற நிதி ஆண்டிலும் அதனை தொடர்ந்தும் தேசீய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் 7 கி. மீட்டர் நீளத்திற்கு ரூ. 69,793 செலவில் சிகப்பு கப்பி போடப்பட்டுள்ளது. தற்போது அனைத்து சாலைகளும் போக்குவரத்து பயன் உள்ளதாக உள்ளன.

7—

தர்மபுரி மாவட்டத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் திட்டம்.

வினா 1511—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் உள்ள பாப்பாரப்பட்டியில் குடிநீர் மேல்நிலை தொட்டி கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திட்ட மதிப்பீடு தயாரிப்பில் உள்ளது. தயாரித்த பின்னர் முறைப்படி ஒப்புதல் பெற்று செயலாக்கப்பெறும்.

8—

வினா 1512—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் பேரூராட்சிக்கு குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[1987 நவம்பர் 10

விடை—

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பேரூராட்சிக்கு குடிநீர் திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வுப்பணி மேற் கொண்டுள்ளது.

9.—

**திருநெல்வேலி மாவட்ட கிராமங்களுக்கு மயான பாதை வசதி.**

வினா 1545—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வெங்கடாம்பட்டி, நெல்லையப்பபுரம், தெற்கு மடத்தூர், கடையம் ஒன்றியம், ஆழ்வான் துலுக்கப்பட்டி, குத்தப்பாஞ்சான் கிராமம், பாப்பாக்குடி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களிடமிருந்து மயானத்திற்கு பாதை வசதி செய்யக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) கடையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்காடம்பட்டி நெல்லையப்பபுரம், தெற்கு மடத்தூர் கிராம மக்களிடமிருந்து மயானப் பாதை வசதி செய்து தரும்படி மனு எதுவும் வரவில்லை.

(ஆ) வெங்கடாம்பட்டி ஊராட்சியில் நிதி வசதியில்லை. மற்ற திட்டங்கள் மூலம் வேலைகள் ஆரம்பிக்கும்போது மயானப் பாதை வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். குத்தப்பாஞ்சான், ஆழ்வான்துலுக்கன்பட்டி. பகுதிகளுக்கு மயானப் பாதை வசதி செய்து கொடுக்கப் போதிய இட வசதி இல்லை. எனவே அப்பகுதி மக்கள் போதிய நிலம் வாங்கித் தருவதாக கூறியுள்ளார்கள். நிலம் வாங்கித் தந்த பின்பு, மயானப் பாதை வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1987 நவம்பர் 10]

10—

**திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.**

வினா 154—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் கடையம் ஒன்றியம், கோவிலூற்று, கோபாலசமுத்திரம், கீழகுத்தபாஞ்சான், ஐந்தாம் கட்டளை கிராமம், சிவகாமிபுரம், வெங்கடாம்பட்டி, நெல்லையப்பபுரம், முப்பிடாதியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர்கள் வீட்டுமனை பட்டா கோரி மனு தந்துள்ளனரா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கடையம் ஒன்றியத்தில் கீழகுத்தபாஞ்சான் கிராமத்தில் ஆதி திராவிடர்கள் வீட்டு மனை கோரியது நடவடிக்கையில் உள்ளது. கோபாலசமுத்திரம் கிராமத்தில் ஏற்கனவே பட்டா வழங்கப்பட்டுவிட்டது. ஏனைய கிராமங்களில் வீட்டு மனை கோரி மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

11—

**திருநெல்வேலி மாவட்ட பகுதிகளில் குடிதண்ணீர் வசதி.**

வினா 1552—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஐந்தாம் கட்டளை சிவஞானபுரம் அண்ணாநகர் கோவிலூற்று, கோபாலசமுத்திரம், கீழ்ப்பாறை 3-வது வார்டு, லட்சுமியூர், ஆறுமுகப்பட்டி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி, தெற்குமடத்தூர் கிராமம், மேலக்காலூர், வடக்கு மடத்தூர், அம்பை தாலுக்கா வடக்கு அரிய நாயகிபுரம், தாளார் குளம், கோபாலசமுத்திரம் 8-வது வார்டு,

[1987 நவம்பர் 10

மேல ஓமநல்லூர், குத்தபாஞ்சான் கிராமம், மைலாப்புரம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்து குடி தண்ணீர் பெற வேண்டி மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஐந்தாம் கட்டளை சிவ ஞானபுரம், அண்ணாநகர் கோவிலூற்று, கோபாலசமுத்திரம். கீழப்பாறை 3-வது வார்டு, லட்சுமியூர், ஆறுமுகப்பட்டி, கடையம் யூனியம், வெங்கடாம்பட்டி, தெற்குமடத்தூர் கிராமம், மேலக் காவூர், வடக்கு மடத்தூர், அம்பாசமுத்திரம் தாலுக்கா வடக்கு அரியநாயகிபுரம், நாளார்குளம், கோபாலசமுத்திரம் 8-வது வார்டு, மேல ஓமநல்லூர், குத்தப்பாஞ்சான் கிராமம், மைலாப்புரம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு குடி தண்ணீர் பெற வேண்டி 25-4-1985-ல் மனுக்கள் பெறப்பட்டன.

(ஆ) மேற்குறிப்பிட்ட கிராமங்களில் குடிநீருக்காக பொதுக் கிணறுகளும் ஆழ் குழாய் கிணறுகளும் உள்ளன. ஆழ் குழாய் கிணறுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யப்பட்டு குடிநீர் பிரச்சினைகள் தீர்க்கப் பட்டன.

12—

வினா 1553—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் (பேரவைத் துணைத் தலைவர்)**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா வெங்கடாம்பட்டி கிராமம், நெல்லையப்பபுரம், ராமநாடார்பட்டி, அஞ்சாங்கட்டளை, தென்காசி பெத்தநாடார்பட்டி, மேலக் கிருஷ்ணப்பேரி, சிவகாமிபுரம், வைகுண்டதூர், கடையம் ஒன்றியம், ஐந்தாங்கட்டளை ஊராட்சி, நாலாங்கட்டளை, தெற்கு மடத்தூர் கிராமம், காவூர், அனைந்த நாடார்பட்டி கிராமம், கீழகுத்தப்பாஞ்சான் ஆகிய பகுதிகளில் வாழும் பொது மக்களிட மிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக மேல்நிலை நீர்த் தொட்டி அமைத்துத் தர வேண்டி மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



1987 நவம்பர் 10]

விடை—

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டு உள்ளது.

அறிக்கை.

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா வெங்கடாம்பட்டி கிராமம், ராமநாடார்பட்டி, ஐந்தாங்கட்டளை, சிவகாமிபுரம், வைகுண்டதூர், கடையம் ஒன்றியம், ஐந்தாங் கட்டளை ஊராட்சி, நாலாங்கட்டளை தெற்குமடத்தூர் கிராமம், காவூர், கீழகுத்தபாஞ்சான் ஆகிய பகுதிகளில் வாழும் பொது மக்களிடமிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர வேண்டி மனு பெறப் பட்டுள்ளது.

(ஆ) மக்கள் தொகை சுமார் 500-க்கும் குறைவாக உள்ள கிராமங்களுக்கு தனித்தனியாக மேல்நிலைத்தொட்டி அமைப்பது என்பது சாத்தியமற்றது. அவ்வப்போது குடிநீர் வசதிக்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கிராமங்களில் உள்ள குடிநீர் வசதிகள் குறித்த விவரம் கீழே தரப்பட் டுள்ளது :—

(1) வெங்கடாம்பட்டி கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ள ளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தன்னிறைவு திட்டத் தின் கீழ் செய்து முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(2) நெல்லையப்பபுரம் கிராமத்தின் மக்கட்தொகை 500-க்கும் குறைவு. இக்கிராமத்தின் மூன்று பொது கிணறுகளும் ஒரு ஆழ்குழாய் கிணறும் உள்ளன.

(3) ராமநாடார்பட்டி மற்றும் ஐந்தாங்கட்டளை கிராமங் களில் குடிநீருக்காக ஒரு பொது கிணறும் ஒரு ஆழ்குழாய் கிணறும் உள்ளது.

(4) தென்காசி பெத்தநாடார்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

(5) மேலக்கிருஷ்ணப்பேரி கிராமத்தில் மக்கட்தொகை 500-க்கும் குறைவு. இங்கு குடிநீருக்காக ஒரு பொது கிணறும் ஒரு ஆழ்குழாய் கிணறும் உள்ளது. ஒருதரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(6) சிவகாமிபுரம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கட்டுமான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு விரைவில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

(7) வைகுண்டனூர் கிராமத்தில் குடிநீருக்காக ஒரு கையிறைப்பானும் ஒரு பொது கிணறும் உள்ளது. இக்கிராமத்தின் மக்கட்தொகை 265-க்கும் குறைவு.

(8) நாலாங்கட்டளை, காவூர் கிராமங்களில் குடிநீருக்காக ஒரு பொது கிணறும் இரண்டு ஆழ்குழாய் கிணறுகளும் உள்ளன.

(9) தெற்கு மடத்தூர் கிராமத்தில் 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தன்னிறைவுத் திட்டம் இரண்டாம் கட்டப்பணியில் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(10) கிழகுத்தபாஞ்சான் கிரமத்தில் குடிநீருக்காக இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன.

13—

எம். பண்ணைப்பட்டி—திண்டுக்கல் பேருந்துப் பணி.

வினா 1666—திரு. மெ. ஆண்டி அம்பலம் ; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன் எம். பண்ணைப் பட்டியிலிருந்து திண்டுக்கல் வரை பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



விடை—

இல்லை.

14—

நத்தம் தொகுதியில் புதிய பாதை அமைத்தல்.

வினா 1674—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், மருநூத்து கிராமம் சாமிநாதபுரத்திற்குக் கிழக்குப்புறம் உள்ள முருகன் கோயிலுக்குப் போகும் பாதை சரியில்லாமல் இருப்பதால் புதிய பாதை அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மருநூத்து கிராமம், சாமிநாதபுரத்துக்கு கிழக்குப்புறம் உள்ள முருகன் கோவிலுக்கு செல்ல 1.4 கி.மீ. தூரமுள்ளது. ஆனால், வண்டிப் பாதை சுமார் 1.00 கி.மீ. தூரம்தான் உள்ளது. அதன் பிறகு வயல் வெளி உள்ளது. அவ்விடங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, பட்டாதாரர்கள் சம்மதித்தால் தான் புதிய பாதையை அமைக்க முடியும்.

15—

விஜயநகர் காலனி மக்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா 1692—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், வி. குரும்பப் பட்டியில் விஜயநகர் காலனியில் வாழும் மக்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், வி. குரும்பப்பட்டி விஜயநகர் காலனியில் வாழும் மக்களிடமிருந்து வீடுகட்டித் தர கோரிக்கை ஏதும் வரப்பெறவில்லை.

[1987 நவம்பர் 10

16—

### ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு யோகாசனப்பயிற்சி.

வினா 1723—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு யோகாசனம் கற்றுத் தரும் யோசனை உண்டா?

விடை—

ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு யோகாசனம் கற்றுத்தரும் யோசனை ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

17—

### நத்தம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

வினா 1928—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், வேம்பார்பட்டி, தோப்பம்பட்டி, செங்குறிச்சி கிராமத்தில் கஸ்பா காலனி, இத்தாம்பட்டி—கல்லுப்பட்டி, காட்டுப்பட்டி காலனி, மெக்காலபுரம் ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசிடம் திட்டமுள்ளதா?

விடை—

இல்லை.

18—

### சம்பப்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானச்சாலை அமைத்தல்.

வினா 2242—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சமுத்திராப்பட்டி பஞ்சாயத்து சம்பப்பட்டியில் ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானச்சாலை போட அரசு முன்வருமா?



1987 நவம்பர் 10]

விடை—

நத்தம், சம்பப்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு மயானச் சாலை அமைக்க நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்யாமல் மாற்று ஏற்பாடாக சம்பப்பட்டிக்கு அருகில் உள்ள புல்லாங்குளம் கண்மாய் உள்கரையில் சுமார் 400 மீட்டர் தூரம் ரூ. 10,000 (ரூபாய் பத்தாயிரம்) மதிப்பீட்டில் சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் இம்மயானச் சாலை அமைக்கப்படும்.

19—

### தேர்வுபெற்ற திரைப்படங்களுக்கு அரசு நிதியுதவி.

வினா 2062—திரு. க. சோலைராசு: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் நிதியுதவி பெற திரைப்படங்கள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றன?

(ஆ) இது வரை எவ்வளவு தொகை உதவி செய்யப்பட்டுள்ளது?

விடை—

(அ) திரைப்படக் கதை நல்லவிதமாக, நல்ல கருத்துக்களை வலியுறுத்துவதாகவோ, அல்லது குடியினால் வரும் கேடு, தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்பற்று, உழைப்பின் மேன்மை, சமுதாய சீர்திருத்தம், பெருளாதார நிதி, தீண்டாமை ஒழிப்பு, சாதிக் கொடுமைகளை நீக்குதல், போன்ற அறிவு வளர்ச்சித் தத்துவங்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) இதுவரை 28 படங்களுக்கு தலா ரூ. 1 லட்சம் வீதம் ரூ. 28 லட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

[1987 நவம்பர் 10

20—

ஒடுக்கம்பட்டியில் மயானச் சாலை அமைத்தல்.

வினா 2251—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சிறுகுடி கிராமம் ஒடுக்கம்பட்டியில் மயானச் சாலை போட அரசு முன் வருமா?

விடை—

நத்தம் தொகுதி, நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் 1985-86 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதற்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. சிறுகுடி கிராமம் ஒடுக்கம்பட்டியில் மயானச் சாலை அமைக்கும் வேலை 1986—87 ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும்.

21—

திருப்பூர் நகரத்திற்கு நவீன கழிப்பறை வசதி.

வினா 2396—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரத்திற்கு நவீனக் கழிப்பறை வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உண்டா?

விடை—

திருப்பூர் நகராட்சியால் தற்போது நவீன கழிப்பறைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தண்ணீர் வசதி போதிய அளவிற்கு இல்லாத காரணத்தால் புதிதாக நவீன கழிப்பறைகள் கட்ட இயலாமல் உள்ளது.



1987 நவம்பர் 10]

22—

மின்வாரியத்தில் குடும்ப ஓய்வு ஊதியம் பெறுவோர்.

வினா 2427—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தில் குடும்ப ஓய்வு ஊதியம் பெற்று வருகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) குறைந்தபட்ச அதிக பட்ச குடும்ப ஓய்வூதியம் எவ்வளவு?

விடை—

(அ) மின்வாரியத்தில் 1,168 குடும்பங்கள் ஓய்வு ஊதியம் பெற்று வருகின்றன.

(ஆ) குடும்ப ஓய்வூதியம் குறைந்த அளவு ரூ. 60-ம் உயர் அளவு ரூ. 500-ம் அவரவர் பணித் தகுதி மற்றும் பணிக்காலத்தைப் பொறுத்து வழங்கப்பட்டு வருகிறது.

23—

சென்னை கலைவாணர் கலை அரங்கம்

வினா 2490—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கலைவாணர் கலை அரங்கத்தில் 1979 முதல் 1984 முடிய மொத்த வசூல் என்ன?

(ஆ) கலைவாணர் கலை அரங்கத்தில் மற்றொரு கலை அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

[1987 நவம்பர் 10

(ஈ) தஞ்சை மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள பொளப்பாடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் கசிவு ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. அங்குள்ள ஆழ்குழாய் கிணற்றில் நீர் உவர்ப்பு ஏற்பட்டு குடிப்பதற்கு தகுதி யற்றதாக உள்ளது. பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை நீக்கம் செய்து, புதிய மேல்நிலைத் தொட்டியை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்யு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

27—

திண்டுக்கல் தொகுதியில் தார்ச் சாலைகள் அமைத்தல்.

வினா 2839—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் தொகுதியில் நகரப் பேருந்துகள் செல்லும் பகுதிகளில் 'தார்ச் சாலைகள்' அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் தொகுதியில் நகரப் பேருந்துகள் நான்கு வழித் தடங்களில் செல்கின்றன. இந்த வழித் தடங்களில் அரசு சாலைகள் யாவும் தார்ச் சாலையாகவும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் கப்பி சாலை யாகவும் உள்ளன. 10 ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 6.6 கி.மீ. நீளமுள்ள 4 சாலைகள் பேருந்து வழித்தட ஏற்புத் திட்டத்தின் கீழ் தார்ச் சாலையாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மீதியுள்ள 9.2 கி.மீ. நீளமுள்ள 6 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் கப்பி சாலைகளாக உள்ளதை ஒரு படிவம் மெட்டல் பரத்தி தார்ச் சாலையாக்க சுமார் ரூ. 10 லட்சம் செலவாகும். இவை இனிவரும் ஆண்டுகளில் பேருந்து வழித் தட ஏற்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய பரிசீலனை செய்யப் படும்.



1987 நவம்பர் 10]

28—

மதுக்கரை ஒன்றியத்தில் உள்ளூர் வரி கட்ட மறுத்து வழக்கு மன்றத்திற்குச் சென்றவர்கள்.

வினா 2874—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளூர் வரி கட்ட மறுத்து வழக்கு மன்றத்திற்குச் சென்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஒவ்வொருவரும் கட்டவேண்டிய தொகை எவ்வளவு?

விடை—

(அ) அசோசியேடட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட், மதுக் கரை மட்டும்

(ஆ) அந்நிறுவனம் உள்ளூர் வரியாகவும், உள்ளூர் மேல் வரியாகவும் கட்ட வேண்டிய தொகை ரூ. 2,08,23,513.55.

29—

பைத்தூரில் ஏரி கட்டும் திட்டம்.

வினா 2893—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் பைத்தூரில் ஏரி கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

விடை—

(அ) ஆம். ஆரம்ப ஆய்வில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ): பைத்தூர் நதி வெள்ளாற்றின் கிளை நதி யாகும். ஏற்கனவே முழு ஆயக்கட்டும் பாசன வசதி பெறாத நிலையிலுள்ள வெலிங்டன் நீர்த்தேக்கத்தின் பாசன வசதி பெறும்

ஆயக்கட்டுகள், தொழுதூர் தலை மதகிற்கு மேலே வெள்ளாற்று படுகையில் புதியதாக திட்டங்கள் ஏற்படுத்துவதால் பாதிக்கப் படும். எனவே வெள்ளாற்றின் நீர் வரத்தைக் கண்காணித்த பின்னரே திட்டம் மேற்கொண்டு தீவிர ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும். ஆய்வுப் பணிகள் முடிவுற்ற பின்னரே திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். அப்போது மதிப்பீடு தெரியவரும். பின்னர் திட்டம் செயற்படுத்துவது குறித்து அரசு முடிவெடுக்கும்.

30—

## குடமுருட்டி ஆற்றின் குறுக்கே சிறிய பாலம் அமைத்தல்

**வினா 2962—திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு ஊராட்சி ஒன்றியம் மணத்திடல், வளப்பக்குடி ஆகிய கிராமங்களுக்கு இடையில் ஓடும் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய பாலம் அமைக்க மாநில அரசின் ஒப்புதலுக்குப் பரிந்துரை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்படும் பணிக்கு ரூ. 8.00 இலட்சத்திற்கு அம்மாவட்ட ஆட்சியரால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது. நெடுஞ்சாலைத் துறையினரால் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டவுடன் பணிகள் யாவும் விரைந்து செயலாக்கப்படும்.



136535 ... 600 008.

31—

## காடுகளில் மரம் வெட்ட ஏலமிடுவதற்கான நடைமுறைகள்

**வினா 2984—திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகளில் மரம் வெட்டுவதற்காக ஏலமிடுவதில் பின்பற்றப் பெறும் நடைமுறைகள் யாவை ?

(ஆ) எந்த வகையான மரங்களை வெட்ட அரசு அனுமதிக்கிறது ?

விடை—

(அ) காடுகளில் மரம் வெட்டுவதற்காக இப்பொழுது ஏலம் விடப்படுவதில்லை.

(ஆ) (i) தொழில் நிறுவனங்களுக்கு கூழ் மரங்கள், மூங்கில் வழங்குதல்—

திருவாளர்கள் சேஷசாயி, சவுத் இந்தியா விஸ்கோஸ், டான் இந்தியா மற்றும் திருவாளர் தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனங்களுக்கு மூலப் பொருளாக மூங்கில்கள், கூழ் மரங்கள் மற்றும் மிளாறு பட்டைகள் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து டன் கணக்கில் வழங்கப்பட்டு வருகின்றன. Working Plan Prescription படி சுழற்சி முறையில் வெட்டுவதற்காக வனத்துறைத் தலைவரின் பரிந்துரையின் பேரில் அனுமதிக்கப்படுகிறது.

(ii) காப்புக் காடுகளில் உள்ள சவுக்குத் தோட்டங்கள், சமூக நலக் காடு திட்டத்தின்கீழ் கிராம நலத் தோட்டங்கள் விற்பனை—

காப்புக் காடுகளில் உள்ள சவுக்குத் தோட்டங்களும் சமூக நலக் காடு திட்டத்தின் கீழ் ஏரி, குளம் முதலான பகுதிகளில் உண்டாக்கப்படும் கிராம நலத் தோட்டங்களும் மட்டுமே பொது ஏலம் மூலம் விற்கப்படுகின்றன. இக்கிராம நலத் தோட்டங்களும்

[1987 நவம்பர் 10

அருகாமையில் உள்ள கிராம கூட்டுறவுச் சங்கம் பஞ்சாயத்து கிராம நலக் கமிட்டி ஆகியோர் "தேவையில் இல்லை" என தெரிவித்த பின்னரே பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன.

32—

**உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள்.**

**வினா 2985—திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1984-85 ஆம் ஆண்டில் உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை? மாவட்ட வாரியாக

(ஆ) இதில் மொத்த விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையாளர்கள் முறையே எத்தனை பேர்?

**விடை—**

(அ) தொடரப்பட்ட மொத்த வழக்குகள் 1,471; விவரங்கள் கீழ் வருமாறு :—

மாவட்ட வாரியாக—

| | |
|---|---|
| தென்னாற்காடு | 53 |
| தஞ்சாவூர் | 163 |
| புதுக்கோட்டை | 23 |
| திருச்சி | 104 |
| மதுரை | 94 |
| இராமநாதபுரம் | 70 |
| திருநெல்வேலி | 114 |
| கன்னியாகுமரி | 19 |
| செங்கல்பட்டு | 124 |



1987 நவம்பர் 10]

| | |
|---|---|
| வட ஆற்காடு | 257 |
| சேலம் | 269 |
| பெரியார் | 63 |
| கோயம்புத்தூர் | 45 |
| உதகமண்டலம் | 28 |
| சென்னை | 21 |
| தர்மபுரி | 24 |
| மொத்தம் .. | 1,471 |

| | |
|---|---|
| (ஆ) மொத்த விற்பனையாளர்கள் | 26 |
| சில்லறை விற்பனையாளர்கள் | 1,445 |
| மொத்தம் .. | 1,471 |

**அதிக அர்ச்சனைகள் மூலம் வருமானம் கிடைக்கும் கோயில்**

**வினா 3027—திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தக் கோயிலில் அதிகமாக அர்ச்சனை செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

(அ) 1394 ஆம் பசலியில் திருவேற்காட்டில் உள்ள அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் அதிகமாக அர்ச்சனைகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 5,25,161.50 (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தையாயிரத்து நூற்று அறுபத்தொன்றும் ஐம்பது காசுகளும்.)

34—

## செய்தித் துறையின்கீழ் இயங்கும் நூலகங்கள்

வினா 3039—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்தித்துறையின்கீழ் இயங்கும் நூலகங்கள் எத்தனை ?

விடை—

இத்துறையின்கீழ் மாநில செய்தி மையம், சென்னை, செய்தி நிலையம், தஞ்சாவூர், செய்தி நிலையம், மதுரை ஆகிய மூன்று இடங்களில் நூலகங்கள் உள்ளன.

35—

## மருத்துவமனைகளிலிருந்து மருந்துகள் திருடியதற்காக பிடிபட்டோர்.

வினா 3072—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் அரசு மருத்துவ மனைகளிலிருந்து மருந்துகள் திருடியதாக பிடிபட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு யாது ?

விடை—

(அ) 15 பேர்கள்.

(ஆ) ரூ. 4,318.50.



36—

## தஞ்சை மாவட்டத்தில் போடப்பட்ட குடிநீர் குழாய்க் கிணறு மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள்.

வினா 3224—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் குடிநீர் குழாய்க் கிணறு, ஆழ்குழாய்க் கிணறு, எத்தனை போடப்பட்டுள்ளன ?

(ஆ) செயல்படாமல் எத்தனை குழாய்க் கிணறுகள் உள்ளன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 17-1-1986 ஆம் நாளன்று உள்ள விவரம் :

| | மொத்த எண்ணிக்கை. | செயல்படாமலிருப்பவற்றின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. இந்தியா மார்க் கைப்பம்புகள் | 1,221 | 19 |
| 2. வடிமுனை குழாய்கள் (குழாய்க் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்) | 26,090 | 765 |
| 3. விசைப்பம்புகள் | 994 | 86 |

37—

## விரகனூர் மதகு அணை.

வினா 3264—திரு. க. பாரமலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வைகை அணையில் கட்டப்பட்டுள்ள விரகனூர் மதகு அணையில் (வைகை அணையிலிருந்து திறந்து விடப்படுகின்ற தண்ணீரை தவிர) தேங்கும் தண்ணீரைத் தெற்கு வடக்குக் கால்வாய்களில் திறந்து விடுவது சம்பந்தமாக எந்தவித நடைமுறை அனுசரிக்கப்படுகிறது ?

[1987 நவம்பர் 10

விடை—

வைகை ஆற்றில் மதுரை அருகே கட்டப்பட்டுள்ள விரகனூர் மதகு அணையின் மேல்புறம் பிரியும் இரு கால்வாய்களிலும் அக்கால்வாய்களின் கீழ் உள்ள பயிர்களின் தேவைக்கேற்ப தண்ணீர் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

38—.

**திம்மராஜ சமுத்திரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் சாலைகள் சீரமைப்புப் பணி.**

வினா 3275—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அம்பை தாலுக்கா, கல்லிடைக்குறிச்சி பஞ்சாயத்தைச் சேர்ந்த திம்மராஜசமுத்திரம் மற்றும் காட்டுமன்னார்கோயிலில் உள்ள சாலைகள் எப்போது சீரமைக்கப்படும்?

விடை—

திம்மராஜசமுத்திரம் கிராமத்தில் கன்னடியன் பாலம் முதல் ரயில்வே பாதை வரை 1983-84-ம் வருடத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் ரூ. 16,000 மதிப்பீட்டில் மெட்டல் ரோடு போடப்பட்டுள்ளது. மற்றும் 1983-84 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் காட்டுமன்னார்கோயில் சாலையில் மயானப் பாதைக்கு செல்ல ரூ. 9,500-க்கு சாலைப் பராமரிப்பு வேலை செய்யப்பட்டது. மேற்படி கிராமத்தில் எஞ்சியுள்ள ரோடு பராமரிப்புப் பணிகளை எதிர்வரும் நிதியாண்டில் பேரூராட்சி மூலம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1987 நவம்பர் 10]

39—

**சேரன்மாதேவி தொகுதியில் வடிகால்கள் அமைத்தல்.**

வினா 3299—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி நகரப் பஞ்சாயத்து பகுதியில் அப்பொழுது மக்களிடமிருந்து "வடிகால்கள்" அமைக்க கோரிய மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கக் கோரி பொது மக்களிடமிருந்து மனு ஏதும் பெறப்படவில்லை. இப்பேரூராட்சியின் மக்கட்தொகை 22,829 ஆகும். பொதுவாக ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை உள்ள நகரங்களுக்கு மட்டுமே பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

40—

**தமிழக வனங்களில் அதிக அளவில் கூபாபுல் மரங்கள் பயிரிடுதல்.**

வினா 3323—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள வனங்களில் அதிக அளவில் கூபாபுல் மரங்களைப் பயிரிடும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

விடை—

தமிழகத்தில் உள்ள வனங்களில் அதிக அளவில் கூபாபுல் மரங்களை வளர்க்கும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், போதுமான தண்ணீர் வசதி மற்றும் சாதகமான மண் வளம் உள்ள இடங்களில் விறகு காடுகள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் மற்ற வகைகளோடு கூபாபுல் பயிரிடப்படுகிறது.

41—

**ராமகிரி அருள்மிகு கல்யாண நரசிங்கப்பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள்.**

வினா 3359—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம் ராமகிரியில் உள்ள அருள்மிகு கல்யாண நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அந்த நிலங்கள் மூலம் கோயிலுக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

(அ) வேடசந்தூர் வட்டம், ராமகிரி அருள்மிகு கல்யாண நரசிங்கப் பெருமாள் கோயில் பெயரில், எக்கர் 197.78 சென்ட் புஞ்சை நிலம் உள்ளது.

(ஆ) மேற்படி நிலங்கள் மூலம் திருக்கோயிலுக்குக் கிடைக்கப்பெறும் ஆண்டு வருமானம் ரூ. 3,999.74 ஆகும்.

42—

**வேடசந்தூர் தாலுகாவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கான சுடுகாட்டுப்பாதை ஆக்கிரமிப்பு.**

வினா 3363—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வேடசந்தூர் தாலுகா, பாலப்பட்டி கிராமம் விராலிப் பட்டியிலும், கூம்பூர் கிராமம் புதூர் செட்டிப்பட்டியிலும் கவக்காபட்டி கிராமம் முத்துப்பழனியூரிலும் உள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கென சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

43—

**கூடலூர் வட்டத்திலுள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு.**

வினா 3587—திரு. கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு மின் இணைப்பு இன்றி குடிநீர் வழங்காமல் இருக்கும் கிராமங்கள் எத்தனை?

(ஆ) அக்கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ). மாங்கோடு, கோட்டூர் அணைகட்டி நெல்லிமாளையம், பொன்னணி, முக்கூர், பொளம்பட்டி ஆகிய கிராமங்களிலே மின் இணைப்பின்மையால் குடிநீர் வழங்கப்படாமல் இருந்தது. அக்கிராமங்களுக்கு 4—11—1985, 6—11—1985 மற்றும் 7—11—1985 ஆகிய தேதிகளில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு விட்டது.

[1987 நவம்பர் 10

44—

## நீலகிரி மாவட்டத்தில் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தல்.

வினா 11663—திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஆதரவற்ற மற்றும் விதவை மகளிர்களுக்கு இலவசமாக தையல் மிஷின்கள் வழங்க தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

**விடை—**

(அ) ஆதரவற்ற விதவைகள், பொருளாதாரத்தில் நலிவுற்ற மகளிர் மற்றும் உடல் ஊனமுற்ற மகளிர்க்கு அவரவர் தனிப்பட்ட முறையில் அனுப்பும் விண்ணப்பத்தின் பேரில், அவர்களது தகுதிகளின் அடிப்படையில் தனி நபர்களுக்குத் தையல் இயந்திரம் சமூக நலத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

தகுதி :—20 முதல் 40 வயது : ஆண்டு வருமானம்—ரூ. 2,400-க்கு மேற்படாதவர்கள்.

தனியார் நிறுவனங்கள் மூலமாகவோ, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ மொத்தமாகத் தையல் இயந்திரங்கள் மேற்படி மகளிர்க்கு வழங்கப்படுவதில்லை. எனவே, தையல் இயந்திரங்களை வழங்க தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை?

(ஆ) இவ்வினா எழாது.



1987 நவம்பர் 10]

45—

## விளவங்கோடு தாலுக்கா ஆதிதிராவிடர்களுக்குச் சுடுகாடு அமைத்துக் கொடுத்தல்.

வினா 3659—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா, மாங்காடு அருகாமையிலுள்ள குதிரைமூக்கு என்கிற பகுதியில் வாழும் ஆதி திராவிடர்களுக்குச் சுடுகாடு அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

விளவங்கோடு வட்டம், மூஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மாங்காடு குதிரைமூக்கு ஆதிதிராவிடர்களுக்குச் சுடுகாடு அமைப்பதற்குச் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

46—

## மதுரை—மண்டபம் தேசீய நெடுஞ்சாலை.

வினா 3687—திரு. க. பாரமலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை—மண்டபம் தேசீய நெடுஞ்சாலை வைகை நதிக்கு மிக அருகாமையில் செல்லும் இடங்களில் மேடுபடுத்தி அமைக்கப் படுவது குறித்து மைய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதா?

விடை—

வைகை நதியின் கரையை உயர்த்தி வலுப்படுத்தி அமைப்பதற்கான பிரேரணைகளை பொதுப் பணித் துறையினர் தயாரித்து வெள்ளத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சம்பந்தமான தொழில் நுட்ப அறிவுரைக் குழுவின் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதால் தேசீய நெடுஞ்சாலையை உயர்த்தி அமைப்பது பற்றி மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தவில்லை.

[1987 நவம்பர் 10

**வாலாஜாபேட்டை அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்.**

வினா 3925—திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜாபேட்டை அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டி மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

இல்லை.

48—

**மதுரை மாநகராட்சி துப்புரவு பணிக்காக லாரிகள் வாங்கும் திட்டம்.**

வினா 3932—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சி துப்புரவு பணிக்காக லாரிகள் வாங்குகின்ற திட்டம் அரசிடம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை லாரிகள் எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது வாங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை எண். 473, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 29-11-1984-ல் ரூ. 18.80 லட்சம் செலவில் 8 லாரி சேசிஸ் வாங்குவதற்கும் அந்த லாரி சேசிஸ் மீது பாடி கட்டவும் மாநகராட்சிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட லாரி சேசிஸ்களை வாங்க மதுரை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.



1987 நவம்பர் 10]

49—

**தர்மபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்கல்.**

வினா 3954—திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு (IRDP, DAAP) திட்டத்தின் கீழ் எந்த அடிப்படையில் கடன் கொடுக்கப்படுகிறது?

(ஆ) நடப்பு ஆண்டில் (IRDP, DAAP) திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

விடை—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு 1985-86-ம் ஆண்டில் கடன் வழங்க கீழ்க்கண்ட முறையில் முன்னுரிமை வழங்கப்படும் :—

(i) 1984-85-ம் ஆண்டில் கடன் பெற்று, இரண்டாவது கறவை மாடு வாங்கத் தகுதி பெற்றவர்கள்.

(ii) ஒரு வட்டாரத்திற்கு 50 நபர்களுக்கு மிகைபடாமல் புதிய நபர்கள் கொத்து கிராம அடிப்படையில் (Cluster) தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியாளர்களுக்கென இத்துறையின் மூலம் தனி நபர் கடன் எதுவும் வழங்கப்படவில்லை.

(ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டிற்கு தர்மபுரி மாவட்டத்திற்கு ரூ. 117.62 இலட்சம் வரை மானியமாகவும் கடனாகவும் செலவு செய்ய அரசு ஒப்பளித்துள்ளது. இதில் ரூ. 97.759 இலட்சம் மாடுகள் வாங்குவதற்காகவும், தென்னை ஓலை முடையவும், ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

[1987 நவம்பர் 10

50—

ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் ஆழ் துளை கிணறுகள் அமைத்தல்.

வினா 4034—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் பாக்கம், சீர்பாதநல்லூர், திருவரங்கம், வேளாநந்தல், மண்டகபாடி ஆகிய இடங்களில் ஐந்து ஆழ்குழாய் கிணறுகளை மொத்தம் ரூ. 80,000 செலவில் அமைக்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ளது. நடப்பு நிதியாண்டுக்குள் இப்பணி முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

51—

அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தல்.

வினா 4086—திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரத்திலுள்ள அரசு மருத்துவமனையை விரிவு படுத்த அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

தற்போது ஏதும் பரிசீலனையில் இல்லை.



1987 நவம்பர் 10]

52—

தம்மம்பட்டி பேரூராட்சியை நகரசபையாக்கும் திட்டம்.

வினா 4117—திருமதி. த. இராசாம்பாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி பேரூராட்சியை நகரசபை ஆக்க அரசிடம் திட்டமுள்ளதா?

விடை—

திட்டம் ஏதும் இல்லை.

53—

புன்னக்காயலில் இணைப்புப் பாலம் அமைத்தல்.

வினா 4142—திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதியில் மீனவர் கிராமமான புன்னக்காயலில் இணைப்புப்பாலம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) விரைந்து பாலம் கட்டி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் இணைப்புப் பாலத்தை அணுகு சாலையுடன் அமைக்க சுமார் ரூ. 52.00 இலட்சம் தேவைப்படுகிறது. அரசின் நிதிநிலை காரணமாக இதை உடனடியாக எடுத்துச் செய்ய இயலாத நிலை உள்ளது. எனினும் இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமையினைப் பொறுத்து இப்பணியினை செயற்படுத்துவது குறித்து ஆராயப் படும்.

54—

**திருச்செந்தூர் கால்நடை மருத்துவமனைக்கு புதியக் கட்டிடம்.**

வினா 4144—திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் எப்பொழுது பணி துவங்கப்படும்?

விடை—

(அ) உள்ளது.

(ஆ) திருச்செந்தூர் கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ. 1,45,000 மதிப்பீடு தயார் செய்து திருச்செந்தூர் உதவி கோட்டப் பொறியாளருக்கு (நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை) 6—8—1985-ல் அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, ஆணை வெளியிடப்பட்ட பின்னர் பணி துவங்கப்படும்.

55—

**கேந்திர கிராம கால்நடை கிளை நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடம்.**

வினா 4153—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேந்திர கிராம கால்நடை கிளை நிலையங்களுக்கு நடப்பு ஆண்டில் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

56—

**திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயிலுக்குச் சொந்தமான குளங்களை தூர் எடுத்து ஆழப்படுத்தல்.**

வினா 4223—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோவிலுக்குச் சொந்தமான சிங்கனீர்குளம், பிடாரிகுளம், ஐயனார்குளம், பாப்பா குளம் முதலிய குளங்களை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

திருவிடை மருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி கோவிலுக்குச் சொந்தமான சிங்கனீர்குளம், பிடாரிகுளம், ஐயனார்குளம், பாப்பாகுளம் ஆகிய குளங்களை நடப்பு ஆண்டில் தூர் எடுத்து ஆழப்படுத்த திட்டமிடப்பட்டு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

57—

**சென்னை மாநகராட்சிக்கு வாகனங்களை நிறுத்த கட்டணம் வசூல் மூலம் கிடைத்த தொகை.**

வினா 4261—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் வாகனங்களை நிறுத்த கட்டணம் வசூல் செய்ததன் மூலம் வசூலான தொகை எவ்வளவு?

(ஆ) அதே ஆண்டு இந்த திட்டத்திற்காக ஏற்பட்ட செலவு எவ்வளவு?

விடை—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு கிடைத்த வருமானம் ரூ. 4,10,934 ஆகும்.

(ஆ) இத்திட்டத்திற்காக 1984-85-ல் மாநகராட்சிக்கு ஏற்பட்ட செலவு ரூ. 1,78,868 ஆகும்.

58—

### கருங்காலக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக உயர்த்தல்.

வினா 4273—திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கருங்காலக்குடியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை—

(அ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

59—

### இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் கடன் வழங்கல்

வினா 4300—திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Integrated Rural Development Programme கடன் இராமநாதபுரம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்டு பல வங்கிகளில் மனுக்கள் [illegible] இருந்தும் வங்கிகள் கடன்தர மறுப்பதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தில் கடன் முறையாக வங்கிகளால் அளிக்கப்படுகின்றது.

(ஆ) இவ்வினாவிற்கு அடிப்படை ஏதுமில்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

60—

### பேரூர் தொகுதியில் தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பணிகள்.

வினா 4327—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதியில் N.R.E.P. திட்டத்தில் 1984-85 ஆம் ஆண்டு செய்த பணிகள் யாவை?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பேரவையின்முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை.

கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் 1984-85-ம் ஆண்டு முடிக்கப் பட்ட பணிகள் மற்றும் அவற்றின் மதிப்பீடுகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண். | பணிகளின் விவரம். | எண்ணிக்கை. | மதிப்பீடு தொகை. | பணிகளின் தற்போதைய நிலை. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | பேரூர் ஊராட்சி ஒன்றியம் | | | |
| 1. | சமுதாயக் காடுகள் | 12 | 1.80 | முடிக்கப் பட்டது. |
| 2. | ஆதி திராவிடர் குடியிருப்பு வீடுகள் | 35 | 1.75 | ஷை |
| 3. | தடுப்புச் சுவர்கள் (protection walls) | 21 | 5.55 | ஷை |
| 4. | கிராமச் சாலைகள் | 29 | 5.53 | ஷை |
| 5. | சமுதாய நலக்கூடங்கள் | 5 | 1.50 | ஷை |
| 6. | சமையல் அறைகள் | 5 | 0.25 | ஷை |
| 7. | அரிசிக் கிடங்கு | 1 | 0.90 | ஷை |
| 8. | குட்டைகள் (ponds) | 1 | 0.65 | ஷை |
| | | 109 | 17.93 | |





| வரிசை எண். | பணிகளின் விவரம். | எண்ணிக்கை. | மதிப்பீடு தொகை. | பணிகளின் தற்போதைய நிலை. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (2) | மதுக்கரை ஊராட்சி ஒன்றியம் | | | |
| 1. | சமுதாயக் காடுகள் | 13 | 1.35 | முடிக்கப் பட்டது. |
| 2. | சமுதாய நலக் கூடங்கள் | 3 | 1.50 | ஷை |
| 3. | தடுப்பணைகள் (check dams) | 11 | 3.44 | ஷை |
| 4. | சாலைகள் | 1 | 0.93 | ஷை |
| 5. | சிறு பாலங்கள் (culverts) | 6 | 0.60 | ஷை |
| 6. | வடிகால்கள் (drains) | 29 | 2.40 | ஷை |
| 7. | உள் வீதிகள் | 4 | 0.27 | ஷை |
| 8. | வெள்ளத் தடுப்புச் சுவர்கள் | 2 | 0.54 | ஷை |
| 9. | தடுப்பணைகள் செப்பனிடுதல் | 2 | 0.55 | ஷை |
| | மொத்தம் | 71 | 11.58 | |
| | கூட்டு மொத்தம் | 180 | 29.51 | |

[1987 நவம்பர் 10

61—

**மேலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.**

வினா 4369—**திரு. க. வெ. வீரானம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

விடை—

(அ) மேலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதைப் பற்றிய செயற் குறிப்பு எதுவும் தற்பொழுது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

62—

**மேலூர் வாரச் சந்தையை அரசு எடுத்து நடத்தும் திட்டம்.**

வினா 4370—**திரு. க. வெ. வீரானம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் வாரச் சந்தையை அரசே எடுத்து நடத்த நடவடிக்கை எடுக்கப் படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மேலூர் வாரச் சந்தையை அரசு எடுத்து நடத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1987 நவம்பர் 10]

63—

**உசிலம்பட்டியில் கூடுதல் அடி குழாய்கள் ஏற்படுத்தும் திட்டம்.**

வினா 4392—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையினைப் போக்க கூடுதல் அடிகுழாய்கள் ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை குழாய்கள் ஏற்படுத்த உள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம், கூடுதலாக பத்து குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

64—

**தஞ்சை மாவட்டத்தில் கசிவு நீர்க்குட்டை வெட்டும் திட்டம்.**

வினா 4533—**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கசிவு நீர்க்குட்டை வெட்டும் திட்டம் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதி காவேரிப் படுகையிலுள்ள சமவெளிப் பகுதியாகையால் கசிவுநீர் குட்டை வெட்டும் திட்டம் ஏதும் தற்போது செயல்படவில்லை.

65—

**கீழா நிலக்கோட்டை நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்கல்.**

வினா 4597—திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீழா நிலக்கோட்டை அரசு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் : 1985-86 ஆம் கல்வி ஆண்டில் கீழா நிலக்கோட்டை நடுநிலைப்பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

66—

**திருமயத்தில் சித்தமருந்து தயாரிக்கும் பிரிவு ஆரம்பித்தல்.**

வினா 8535—திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் சித்த மருந்து தயாரிக்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட உள்ளதா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு மாவட்ட சித்த மருந்து செய் நிலையம் அமைக்க அரசு ஆணை எண். 94, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி நாள் 24-10-1985-ல் அனுமதி அளித்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயத்தில் இந்நிலையத்தை அமைப்பதற்காக புறம்போக்கு நிலம் ஒன்று மாவட்ட சித்த மருத்துவ அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுதவிர வேறு இடமும் பார்க்கப்பட்டு வருகிறது. தகுதியான இடம் கிடைத்ததும் இவ்வூரிலோ அல்லது தகுதியான இடம் கிடைக்கும் வேறு ஊரிலோ இந்நிலையம் அமைக்கப்படும்.



67—

**சேந்தமங்கலம் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.**

வினா 5248—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் பகுதியிலுள்ள பேளுக்குறிச்சி, பள்ளிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம் பேளுக்குறிச்சி மற்றும் பள்ளிப்பட்டிக் குடியிருப்புகளுக்கென அமைக்கப்படவுள்ள குடிநீர்த் திட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டிற்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

68—

**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சாலைப் பணிகள்.**

வினா 4715—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டுக்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சேந்தமங்கலம் பள்ளம்பாறை வாசலூர்பட்டி சாலைப்பணி மற்றும் சித்தூர் நாடு முதல் முள்ளுக்குறிச்சி வரை சாலைப்பணி எடுத்துக்கொள்ளப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில்?

**விடை—**

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*69—*

**காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் தாட்கோ மூலமாகக் கட்டப்படும் ஆதிதிராவிட மாணவர் பள்ளிக் கட்டிடங்கள்.**

வினா 4728—**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் தாட்கோ மூலமாக எத்தனை ஆதிதிராவிட மாணவர்கள் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட ஒப்படைக்கப்பட்டுள்ளன?

(ஆ) இதுவரை கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் எத்தனை?

**விடை—**

(அ) காட்டுமன்னார்கோயில் வட்டத்தில், தாட்கோ மூலமாக, இரண்டு ஆதிதிராவிடர் நல மாணவர் ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இரண்டில், கக்கன் நகரில் ஒரு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, ஆதிதிராவிடர் நலத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. மற்றொன்று கீழ் புளியம்பட்டியில் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது.

*70—*

**மானாமதுரைத் தொகுதி நாட்டாண்டி ஓடையை சீரமைத்தல்.**

வினா 4736—**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதி, மார்நாடு அருகிலுள்ள நாட்டாண்டி ஓடையை சீரமைத்து அதன் இரு கரைகளையும் பலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

நாட்டாண்டி ஓடையை சீரமைத்து அதன் இரு கரைகளையும் பலப்படுத்தும் திட்டம் தற்போது அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் அவ்வோடையின் குறுக்கே அணை கட்டும் திட்டத்தின் விரிவான ஆய்வு நடத்தி மதிப்பீடு தயாரிக்கும்போது மேற்படி திட்டமும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

*71—*

**பட்டுக்கோட்டை வட்டத்தில் விவசாயத்திற்கு கண்ணனாற்றின் தண்ணீர் கிடைக்கச் செய்யும் திட்டம்.**

வினா 4770—**திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் ஒன்றியத்தில் உள்ள பலோஜி, ஓலையக்குன்னம், கனியாகுறிச்சி, கழிச்சான் கோட்டை, மண்டலக்கோட்டை, காடந்தகுடி, பவாஜிக்கோட்டை பகுதி மக்களின் விவசாயத்திற்கு பயன்பெறும் வகையில் கண்ணனாற்றில் (காட்டாறு) செல்லும் நீர் லிப்ட் இரிகேஷன் முறையில் அவர்களுக்கு கிடைக்கச் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*72—*

**துரிஞ்சல் ஆற்றின் குறுக்கேயுள்ள இரும்புப் பாலம்.**

**வினா 4801—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ)** திருக்கோவிலூர் அரகண்டநல்லூர் இடையே துரிஞ்சல் அவற்றின் குறுக்கே உள்ள இரும்புப் பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் பழுதடைந்த இரும்புப் பாலத்தை மேம்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

73—

**சென்னிமலை பேரூராட்சியை நகராட்சியாக்கல்.**

வினா 4824—**திரு. கா. செ. பழனிச்சாமி மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், சென்னிமலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

74—

**கயத்தாறு வீரபாண்டியக் கட்டபொம்மன் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல்.**

வினா 4859—**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி கயத்தாறு வீரபாண்டியக் கட்ட பொம்மன் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—இல்லை.**



75—

**திண்டுக்கல் தொகுதியில் மல்லிகை செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.**

வினா 4861—**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் பகுதியில் மல்லிகையிலிருந்து "செண்ட்" தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—இல்லை.

76—

**மாவட்ட தலைநகரங்களில் பிணங்களை எரிக்க மின் இயந்திரம் அமைக்கும் திட்டம்.**

வினா 4874—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இறந்தபின் உடலை எரிக்க (Electrical Cremation) மின் இயந்திரம் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—இல்லை.

77—

**தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் பெறும் உதவித் தொகைக்கான வருமான வரம்பு.**

வினா 4894—திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்பு எவ்வளவு?

(ஆ) இதற்கும் பிற்பட்ட மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்புக்கும் வித்தியாசம் உள்ளதா?

[1987 நவம்பர் 10

விடை—

(அ) ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவ, மாணவியர் மைய அரசு உதவித்தொகை பெற வருமான வரம்பு ஆண்டொன் றுக்கு ரூ. 9,000-லிருந்து ரூ. 12,000 வரை ஆகும் மாநில அரசு உதவித் தொகை பெற வருமான வரம்பு ரூ. 6,000 ஆகும்.

(ஆ) ஆம், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவ, மாண வியர் மாநில அரசு உதவித் தொகை பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்பிற்குப் பிற்பட்ட மாணவ, மாணவியர்கள் உதவித்தொகை பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம் புக்கும் வித்தியாசம் உள்ளது. பிற்பட்ட/மிகவும் பிற்பட்ட குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட மாணவ, மாணவியர் உதவித் தொகை பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 ஆகும்.

78—

காப்பான்குளம் பெரிய ஓடையை கட்டும் திட்டம்

வினா 4909—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி நெய்வேலி—உளுந்தூர் பேட்டை இணைப்பு சாலையிலுள்ள காப்பான்குளம் பெரிய ஓடையை கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

79—

தேனீ வளர்ப்புக்கு அரசு அளிக்கும் உதவிகள்.

வினா 4954—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனீ வளர்ப்புக்கு அரசு அளித்துவரும் உதவிகள், நடவடிக்கைகள் யாவை ?



1987 நவம்பர் 10]

விடை—

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் தேனீ வளர்ப்போருக்கு கடனும், மானியமும் அளிக்கப்படுகின்றன.

2. தேனீ பராமரிப்பது, தேன் எடுப்பது, தேனீக் கூட்டங்களைப் பெருக்குவது பற்றி விளக்குவது, தேனீக் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பது, தேனீ வளர்ப்போருக்கு தேனீப்பெட்டிகளை வழங்கி பராமரிப்பது குறித்து விளக்குவது ஆகிய பணிகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

80—

குழாய் கிணறு வாரியம் மூலம் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள்.

வினா 4978—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழாய் கிணறு வாரியத்தின் மூலம் இதுவரை மாநிலத்தில் அமைக்கப்பட்ட குழாய்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) இதன் மூலம் பயன்பெறும் விவசாயிகள் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

(அ) இதுவரை 191 பயனுள்ள குழாய்க் கிணறுகள் துளையிடப்பட்டு வேலைகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. அவற்றுள் 50 குழாய்க் கிணறுகள் முழுவதும் முடிக்கப்பட்டு மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, விவசாயத்திற்கு பயன்பட்டு வருகின்றன.

(ஆ) பயன் பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை 1,552 ஆகும்.

81—

## EXPORT MARKET FOR MUSHROOMS.

*Q*. 4979 The Hon. Thiru Vedasandur V. P. BALASUBRAMANIAN (DEPUTY SPEAKER) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state

(*a*) Whether the export market for Mushrooms have been explored by the Government; and

(*b*) if so, the details thereof ?

விடை—

(அ) மற்றும் (ஆ) உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

82—

## மேலூர் தொகுதியில் கட்டப்பட்டுள்ள கசிவு நீர்க் குட்டைகள்.

வினா 4981—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் மற்றும் கொட் டாம்பட்டியில் 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டில் கட்டிய "கசிவு நீர் குட்டைகள்" எத்தனை ?

(ஆ) மதிப்பீடு எவ்வளவு?

(இ) இதனால் ஏற்பட்ட பயன் என்ன?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : மேலூர் மற்றும் கொட்டாம்பட்டியில் 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் கசிவு நீர் குட்டைகள் ஏதும் கட்டப்படவில்லை. ஏனெனில் இப் பகுதி பெரியார்- வைகை பாசனப் பகுதியாக இருப்பதால் கசிவு நீர்க் குட்டைகள் கட்டுவதற்கு வாய்ப்பு அதிகம் இல்லை.





83—

## கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்களுக்கு வாகன வசதிகள்.

வினா 4990—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் பணி புரியும் உதவி இயக்குநர்களுக்கு வாகன வசதிகள் (ஜீப்) வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) இல்லை. தற்போது, உதவி இயக்குநர்களுக்கு மேற் பார்வை செய்வதற்கு பயணம் செய்ய வாகனம் வழங்க திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

84—

## மேலூர் தொகுதியில் கால்நடை உதவியாளர்களுக்கு வழங்கப் பட்ட சீருடைகள்.

வினா 4999—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்ற தொகுதி மேலூர், கருங்காலக்குடி மற்றும் கொட்டாம்பட்டியில் பணிபுரியும் கால்நடை உதவியாளர் களுக்கு 1982—83, 1983—84 மற்றும் 1984—85 ஆம் ஆண்டில் சீருடைகள் வழங்கப்பட்டதா?

(ஆ) வழங்கப்படவில்லை எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) கொட்டாம்பட்டி மற்றும் கருங்காலக்குடி கால்நடை மருந்தகங்களில் பணிபுரியும் கால்நடை உதவி மருத் துவர்களுக்கு 1982—83 ஆம் ஆண்டில் சீருடைகள் வழங்கப்

பட்டன. ஆனால், மேலூர் கால்நடை மருந்தகத்தில் பணிபுரியும் கால்நடை உதவியாளர்களுக்கு முந்திய ஆண்டிற்கான சீருடை 2—3—1982-இல் தான் வழங்கப்பட்டதால் 1982-83, 1983-84 மற்றும் 1984—85 ஆம் ஆண்டுகளில் மேலூர், கொட்டாம்பட்டி மற்றும் கருங்காலக்குடி ஆகிய கால்நடை மருந்தகங்களில் பணி புரியும் கால்நடை உதவியாளர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது.

85—

**கடையநல்லூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல்.**

வினா—5035—திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

விடை—

இப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டுவது குறித்து எந்தக் கருத்துருவும் பெறப்படவில்லை.

86—

**பாலகுறிச்சியிலுள்ள மேல்நிலைத் தொட்டி மூலம் வழங்கும் குடிநீர்.**

வினா 5054—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் வட்டம் பாலகுறிச்சி ஊராட்சியில் உள்ள மேல்நிலைத் தொட்டி மூலம் வழங்கும் குடிநீர் உப்பு நீராக இருப்பது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





விடை—

(அ) ஆம்.

(ஆ) இதற்கான மாற்றுத் திட்டம் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

87—

**திருச்சி மாவட்டத்திலுள்ள வனத்துறைக்குச் சொந்தமான நிலங்கள்.**

வினா 5062—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டம், ஆண்டி மடம் சட்டமன்றப் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) அவற்றில் என்னென்ன மரங்கள் பயிரிடப்படுகின்றன?

(இ) அந்த வனப்பகுதியின் ஆண்டு வருவாய் எவ்வளவு?

விடை—

(அ) ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், சட்ட மன்றப் பகுதிகளில் அரசுக்குச் சொந்தமானதும், தற்போது தமிழ் நாடு வனத் தோட்டக் கழகத்திற்க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதும் ஆன வனப்பகுதிகளின் பரப்பளவு முறையே 3,869.21 ஹெக்டேர் மற்றும் 3,550.51 ஹெக்டேர் ஆகும்.

(ஆ) அவ்வனப் பகுதிகளில் முந்திரி மரங்கள், தைல மரங்கள் மற்றும் இதர வகை மரங்கள் பயிரிடப்படுகின்றன.

(இ) ஜெயங்கொண்டம் வனப்பகுதியில் ரூ. 11,39,280-ம் ஆண்டிமடம் வனப்பகுதியில் ரூ. 12,47,200-ம் ஆண்டு வருவாய் கிடைக்கிறது.

88—

**ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் வழங்கப்பட்ட சாண எரிவாயு அடுப்புகள்.**

வினா 5069—**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் சாண எரிவாயு (Biogas) அடுப்பு எத்தனை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் காதி கமிஷன் மாடல் கொண்ட சாண எரிவாயு அடுப்புகள் 1982-83 ஆம் ஆண்டில் 19-ம் 1985-86-ம் ஆண்டில் 65-ம் ஆக மொத்தம் 84 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

89—

**ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள கருவாட்டு ஓடைமீதுள்ள பழைய குறுகிய பாலம்.**

வினா—5074—**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி கங்கைகொண்ட சோழபுரம் அருகே உள்ள கருவாட்டு ஓடைமீது உள்ள பழைய குறுகிய பாலத்திற்கு புதிய அகலப்பாலம் கட்டி சிதம்பரம், ஜெயங்கொண்டம், அரியலூர், திருச்சி சாலையை விஸ்தரிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் பாலப்பணியை ரூ. 20.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் இப்பணி செயலாக்கப்படும். சாலையை மேம்படுத்தும் பணி அரசின் நிதி நிலைக்கேற்ப படிப்படியாக எடுத்துச் செய்யப்படும்.



90—

**கருப்பூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டுதல்.**

வினா 5089—**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் கருப்பூரில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டுவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளிக்கு ரூ. 75,000 செலவில் ஒரு வகுப்பறைக் கட்டடம் கட்ட தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவன நிதியிலிருந்தும், ரூ. 80,000 செலவில் கல்நார் கூரை அமைத்து இப்பள்ளியில் பழுதடைந்த கூரைக் கொட்டகையினை சீர் செய்ய அரசு நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கி பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

91—

**மல்லிகுந்தத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி துவங்குதல்.**

வினா—5191—**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் மல்லிகுந்தத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி துவக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் மல்லிகுந்தத்தில் 1985—86 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலைப்பள்ளி துவக்கக் கோரி கருத்துருக்கள் ஏதும் ஆய்வு அலுவலர்களிடமிருந்து பெறப்படவில்லை.

92—

**சேந்தமங்கலம் தொகுதியில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைந்தோர்.**

வினா—5242—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டுவரை சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள கொல்லிமலை, சேந்தமங்கலம், புதுச்சத்திரம், நாமகிரிப்பேட்டை ஒன்றியங்களில் ஐ. ஆர். டி. பி. திட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் எந்தெந்த வகையில் பயனடைந்தார்கள்?

(ஆ) இதற்காக அரசுக்கு ஏற்பட்ட செலவு என்ன?

(இ) இதில் மான்யம் எவ்வளவு?

(ஈ) ஐ. ஆர். டி. பி. திட்டம் செம்மையாகச் செயல்பட்டதா என்பதைக் கண்காணிக்க தனிக்குழு நியமனம் செய்யப்படுமா?

விடை—

(அ) 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள கொல்லிமலை, சேந்தமங்கலம், புதுச்சத்திரம், நாமகிரிப்பேட்டை ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 6,753. அதன் விவரங்கள் வருமாறு:—

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | 1980–81 முதல் 1984 முடிய பயனடைந்தவர்கள் விவரம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கொல்லிமலை:— | | |
| (1) | கறவை மாடு | 217 |
| (2) | உழவு மாடு | 184 |
| (3) | வண்டி மாடு | 24 |



| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | 1980-81 முதல் 1984 முடிய பயனடைந்தவர்கள் விவரம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (4) | ஆடு வளர்ப்பு | 34 |
| (5) | செம்மறி ஆடு வளர்ப்பு | 2 |
| (6) | தொழில் சேவை மற்றும் வர்த்தகப் பிரிவில் | 136 |
| | | 597 |
| . சேந்தமங்கலம் : | | |
| (1) | கறவை மாடு | 924 |
| (2) | உழவு மாடு | 6 |
| (3) | ஆடு வளர்ப்பு | 542 |
| (4) | செம்மறி ஆடு வளர்ப்பு | 35 |
| (5) | எருது | 247 |
| (6) | வண்டியும் மாடும் | 317 |
| (7) | வண்டி | 74 |
| (8) | பன்றி வளர்ப்பு | 1 |
| (9) | கோழி வளர்ப்பு | 4 |
| | | 2,150 |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | 1980-81 முதல் 1984 முடிய பயனடைந்தவர்கள் விவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 3. | புதுச்சத்திரம்: | |
| | (1) கறவை மாடு | 1,457 |
| | (2) உழவு மாடு | 117 |
| | (3) ஆடு வளர்ப்பு | 200 |
| | (4) வண்டி மாடு | 137 |
| | (5) கோழி வளர்ப்பு | 92 |
| | (6) தொழில் சேவை மற்றும் வர்த்தகப் பிரிவில். | 239 |
| | | 2,242 |
| 4. | நாமகிரிப்பேட்டை: | |
| | (1) கறவை மாடு | 708 |
| | (2) ஆடு வளர்ப்பு | 490 |
| | (3) செம்மறி ஆடு வளர்ப்பு | 106 |
| | (4) வண்டி மாடு | 28 |
| | (5) எருது | 78 |
| | (6) வண்டியும் மாடும் | 37 |
| | (7) பன்றி வளர்ப்பு | 12 |
| | (8) தொழில் சேவை மற்றும் வர்த்தகப் பிரிவில். | 305 |
| | | 1,764 |
| | மொத்தம் | 6.753 |



(ஆ) இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைபவர்களுக்கு வங்கிகள் கடனுதவியும் அரசு மான்யமும் வழங்கி வருகிறது.

(இ) இந்தத் திட்டத்திற்கு அரசுக்கு மானிய செலவு ரூ. 89.70 இலட்சம்.

(ஈ) அரசு சில ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்வு செய்து அவற்றில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செம்மையாகச் செயல்பட்டதா என்பதனை கண்காணிக்க தனிக் குழுவினை நியமனம் செய்துள்ளது.

93—

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்.**

வினா 5250—**திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.டி.டி.பி. I.T.D.P. திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்களுக்கு என்ன என்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன?

(ஆ) 1984-85-ல் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் எத்தனை பேர்கள்?

விடை:—

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாகிய 9 மலைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் குடும்பங்களுக்கு பொருளாதார, சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்கு வழி செய்யவும், பழங்குடி மக்களை வறுமை கோட்டிற்கு மேல் கொண்டு வரவும் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களும் 1984-85 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன:—

பொருளாதாரத் திட்டங்கள்.

| திட்டம். | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| **1. தோட்டக்கலை :** | |
| விதைகள், செடிகள், உரம், பூச்சி மருந்து ஆகியவை வழங்குதல், தனியார் பழப்பண்ணை அமைக்க உதவுதல், மாதிரி பழப்பண்ணை அமைத்தல், மாபெரும் பழப்பண்ணைகள் ஏற்படுத்தல் முதலியன. | 3,656 |
| **2. கால்நடை பராமரிப்பு :** | |
| கறவை மாடுகள், ஆடுகள், கோழி, பன்றி முதலியவை 50 சதவீதம் மான்யத்தில். (தென் ஆற்காடு மாவட்ட கல்ராயன்மலைப் பகுதியில் மட்டும் 75 சதவீதம் மான்யத்தில்) வழங்குவது மட்டுமின்றி கால்நடைகளுக்கு தேவையான மருத்துவ வசதியும் அளிக்க வழிவகை செய்யப்படுகிறது. | 1,291 |
| **3. கிராம கைத்தொழில் :** | |
| தேனீ வளர்ப்பு பெட்டிகள் வழங்குதல், தொழில் நிலையங்கள் ஏற்படுத்துதல், கூட்டுறவு இயக்கங்களுக்கு நிதியுதவியளித்தல் முதலியன. | 479 |
| **4. பட்டுப்பூச்சி வளர்த்தல் :** | |
| முசுக்கொட்டை செடிகள் வளர்த்தல், கிணறுகள் தோண்டுதல், பட்டுப்பூச்சி வளர்க்க தேவையான கருவிகள் வழங்குதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைத்தல் ஆகியவை உள்ளடங்கும். | |



| திட்டம். | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| **5. பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் :** | |
| பழங்குடி மக்கள் பல வகையில் சுரண்டப்படுவதைத் தடுத்தல், பழங்குடியினர் அதிக வட்டிக்கு கடன் பெறுதல், விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல் போவதைத் தடுத்தல் ஆகியவைக்காக இத்துறைத் திட்டப் பகுதிகளில் 12 பெரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு பழங்குடியினருக்கு கீழ்க்கண்ட உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன:— | |
| (அ) உற்பத்திக் கடனும், நுகர்பொருள் வாங்க நியாய வட்டியில் கடன் அளித்தல் | |
| (ஆ) விளை பொருட்களுக்கு நல்ல விலைக்கு லாபம் பெறச் செய்தல். | |
| (இ) அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல் | |
| (ஈ) காட்டு சிறு விளைபொருள்களை சுத்தகைக்கு எடுத்து பழங்குடியினர் மேம்பாட்டுக்கு வகை செய்தல். | 31,070 |
| **6. சிறுபாசனம்** | |
| சிறிய அணைக்கட்டுதல், கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல். | 178 ஹெக்டேர் 213 |

[1987 நவம்பர் 10

## பகுதி முன்னேற்ற திட்டங்கள்.

| திட்டத்தின் பெயர். (1) | அடைந்த முன்னேற்றம். (2) |
|---|---|
| காடுகள் வளர்க்கும் திட்டம் மூலம் மரக்கன்றுகள் அளித்தல் | 1,05,000 |
| செடிகள் நட்டல் | 1,506 ஹெக்டேர் |
| மின் வசதியளித்தல் | 2 கிராமங்கள் |
| சாலைகள் அமைத்தல் | 106 கி.மீ. சாலைகள் |
| வீட்டு வசதியளித்தல் | 29 வீடுகள் |
| குடிநீர் வழங்குதல் | 104 குடியிருப்புகள் |
| சமுதாய நலத்திட்ட மூலம் தொலைக்காட்சி பெட்டி மற்றும் வானொலிப் பெட்டி வழங்குதல். | 14 தொலைக்காட்சி பெட்டி<br>45 வானொலிப் பெட்டி |
| கல்வி | 10 உண்டு உறைவிடப்பள்ளி. |
| மண்வளப் பாதுகாப்பு | 299.98 ஹெக்டேர் 233 குடும்பங்கள். |
| சமூக நலம் | 211 பாலர்பள்ளிகள் மற்றும் 4 தையற்பயிற்சி பள்ளிகள் ஆகிய வற்றை பராமரித்தல். |
| மருத்துவம் மற்றும் சுகாதாரம் | ஏற்கனவேயுள்ள மருத்துவ நிலையங்களை தொடர்ந்து நீடிப்பதுடன், புதியதாக 4 ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்குதல், 29 கிளை நிலையங்கள் அமைத்தல். |



1987 நவம்பர் 10]

94--

## தெற்கு இராஜன் வாய்க்காலின் கட்டுப்பாடு அதிகாரிகளின் தலைமையிடம் மாற்றல்.

வினா 5270—**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தஞ்சை மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படும் தெற்கு இராஜன் வாய்க்காலின் கட்டுப்பாடு அதிகாரிகளின் தலைமையிடம் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தில் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி சீர்காழிக்கோ அல்லது கொள்ளிடத்திற்கோ கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழணையின் மூலம் தென்னாற்காடு மற்றும் தஞ்சை மாவட்டத்தில் பயன் பெறும் மொத்த ஆயக்கட்டு 1,20,649 ஏக்கர். இதில் நாலில் மூன்று பங்கு பாசனம் (91,971 ஏக்கர்) தென்னாற்காடு மாவட்டத்திலும் மீதி ஒரு பங்கு (29,578 ஏக்கர்) பாசனம் மட்டும்மே தஞ்சை மாவட்டத்தில் உள்ளதால் கோரிக்கையில் எழுப்பப்பட்டுள்ள தலைமையிடத்தை தொழில் நுட்ப ரீதியாக மாற்ற சாத்தியமில்லை. இது தவிர தெற்கு இராஜன் வாய்க்காலுக்குரிய நீர் பங்கீடு சீர்காழி உட்கோட்ட உதவி செயற்பொறியாளரின் பாசனத் தேவைக்கேற்ப கோரிக்கை மற்றும் நீரிருப்பை பொறுத்து சிதம்பரம் கோட்ட செயற்பொறியாளரது ஆணைப்படி செயலாக்கப்படுகிறது.

[1987 நவம்பர் 10

95—

## பால் எடுத்துச் செல்லும் லாரிகளில் வயலேஸ் கருவிகள் பயன்படுத்துதல்.

வினா 5281—திரு. இரா. தாமரைரக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகத்தை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பால் கொண்டு செல்லும் லாரிகளில் 'வயர்லஸ்' கருவிகளைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) தற்சமயம் தானியங்கி பால் விநியோக மையங்களுக்கு பால் விநியோகம் செய்யும் பால் டாங்கர்களில் மட்டும் வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(ஆ) இரண்டு நிலையான நிலையங்கள் மாஸ்ட் உடன் with masts அம்பத்தூரில் ஒன்றும், நந்தனத்தில் ஒன்றுமாக நிறுவப்பட்டது. இந்த இரு நிலையங்களிலும் 20 வாட்ஸ் திறன் கொண்ட வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவைகள் செய்திகளை 161.5 எம்.எச்.இசட். என்ற அலைவரிசையில் செய்திகள் அனுப்பும் வகையில் உள்ளன. இதன் மூலம் 25 கி.மீ. சுற்றுவட்டாரத்திற்குள் செய்திகளை அனுப்ப இயலும். செய்தி ஒலிபரப்புத்துறை 15 மொபைல் நிலையங்கள் அமைக்க உரிமம் வழங்கியுள்ளது. இந்த மொபைல் நிலையங்கள் 15 வாட் திறன் கொண்ட பொபிலோபோன்கள் ஆகும். இந்த கருவிகள் 15 முதல் 20 கி.மீ. சுற்றுவட்டாரத்திற்குள் செய்தி அனுப்பமுடியும். தற்சமயம் பால் டாங்கர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மேலாளர் களின் வாகனங்களில் இந்த 15 மொபைல் போன்கள் பொருத்தப் பட்டுள்ளன. மேற்கண்ட வயர்லெஸ் செதிகளுடன் பால் விநியோகம் நகரத்திலுள்ள தானியங்கி பால் விநியோக மையங்களில் சீராக நடைபெறும்.



1987 நவம்பர் 10]

96—

## பால் பதனிடும் நிலையங்கள் எண்ணிக்கையை உயர்த்தல்.

வினா 5282—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது உள்ள பால்பதனிடும் நிலையங்கள் எத்தனை?

(ஆ) அந்த எண்ணிக்கையை உயர்த்த அரசால் திட்டமிடப் பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) 14.

(ஆ) ஆம்.

(இ) விவர அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

97—

## தமிழ் நாட்டிலுள்ள மறுவாழ்வு இல்லங்கள்.

வினா 5485—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மறுவாழ்வு இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவைகளுக்கு கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1987 நவம்பர் 10

**விடை—**

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் மொத்தம் 10 மறுவாழ்வு இல்லங்கள் உள்ளன :—

| | | |
|---|---|---|
| 1. பரனூர் | — | செங்கற்பட்டு மாவட்டம். |
| 2. உளுந்தூர்பேட்டை | — | தென் ஆற்காடு மாவட்டம். |
| 3. மல்லவாடி | — | வடாற்காடு மாவட்டம். |
| 4. மனையேரிப்பட்டி | — | தஞ்சாவூர் மாவட்டம். |
| 5. தேவியாக்குறிச்சி | — | சேலம் மாவட்டம். |
| 6. கெல்லியம்பட்டி | — | தர்மபுரி மாவட்டம். |
| 7. பர்கூர் | — | தர்மபுரி மாவட்டம். |
| 8. விண்ணப்பள்ளி | — | பெரியார் மாவட்டம். |
| 9. புதுக்கோட்டை | — | புதுக்கோட்டை மாவட்டம். |
| 10. யா. புதுப்பட்டி | — | மதுரை மாவட்டம். |

(ஆ) மறுவாழ்வு இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**98—**

**உணவுப் பண்டங்கள் மற்றும் சிமெண்டில் கலப்படம் குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

வினா 5486—**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்தல் மற்றும் சிமெண்டில் கலப்படம் செய்தல் போன்ற குற்றங்களுக்காக 1984-85-ம் ஆண்டில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப் பட்டன?

(ஆ) அதில் தண்டிக்கப்பட்ட வழக்குகள் எவ்வளவு?



1987 நவம்பர் 10]

**விடை—**

(அ) மற்றும் (ஆ) 1984-85-ம் ஆண்டில் உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்த குற்றத்திற்காக 1,471 வழக்குகள், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையினரால் பதிவு செய்யப் பட்டன. பதிவு செய்யப்பட்ட 1,471 வழக்குகளில் 832 வழக்குகள் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 408 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர சிமெண்டில் கலப்படம் செய்ததற்காக 13 வழக்குகளும் நெய்யில் கலப்படம் செய்ததற்காக 1 வழக்கும், தேயிலையில் கலப்படம் செய்ததற்காக 1 வழக்கும், சர்க்கரையில் கலப்படம் செய்ததற்காக 1 வழக்கும், அதாவது பதினாறு வழக்குகள் 1984-85-ம் ஆண்டில் சென்னை உணவுப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் பதிவு செய்யப்பட்டது. அவற்றில் 5 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

**99—**

**கபிஸ்தலத்தில் கயிறு முறுக்கும் கிளை நிலையம் துவங்குதல்.**

வினா 5496—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஒன்றியம் கபிஸ்தலம் கிராமத்தில் கயிறு முறுக்கும் கிளை நிலையம் துவங்கும் செயற் குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

(இ) எப்பொழுது பணி துவங்கப்பெறும்?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.

100—

அய்யம்பேட்டை நகரில் மாணவர் விடுதி துவங்குதல்.

வினா 5498—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் தாலுக்கா, அய்யம்பேட்டை நகரில் மாணவர் விடுதி ஒன்று துவங்கிட பரிந்துரை செய்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரிடமிருந்து அறிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

101—

Amount received from the Central Government under Investment subsidy scheme.

Q. 2938—Thiru S. RAJARAMAN: Will the Hon. the Minister for Industries and Agriculture be pleased to state—

(a) the total amount this Government has received from the Central Government during 1982-83, 1983-84 and 1984-85 under Investment subsidy scheme; and

(b) the total number of Industries benefited by the scheme?



விடை—

(அ) மத்திய அரசு மானிய திட்டத்தின் கீழ் 1982-83 முதல் 1984-85 வரை ரூ. 2,032.63 லட்சம் இவ்வரசு பெற்றுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் 3,918 தொழிற் பிரிவுகள் பயன் பெற்றுள்ளன.

102—

கோவில் மாடுகளை ஏலம் விடுவதை தடுக்கும் வேண்டுகோள்.

வினா 3726—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில் மாடுகளை ஏலம் விடக்கூடாது என்ற வேண்டுகோள் அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) திருக்கோயில் மாடுகளை ஏலம் விடக்கூடாது என்ற வேண்டுகோள் ஏதும் அரசிற்கு வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

103—

சத்துணவு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு.

வினா 3741—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு ஊழியர்களுக்கும் நான்காவது ஊதிய உயர்வுக்குழு பரிந்துரையின்படி சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் அரசிற்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்.

104—

**சைதையில் 'தீ' விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள்.**

வினா 3748—திரு. **சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதையில் சமீபத்தில் ஏற்பட்ட 'தீ' விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டன?

விடை—

மேற்குறிப்பிட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடிசைகளைத் திரும்பக் கட்டிக் கொள்வதற்கு அரசு விதிகளின் படி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுவிட்டது. இத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 கிலோ அரிசி, 1 புடவை, 1 வேஷ்டி ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன.

105—

**விளவங்கோடு தாலுக்காவில் மடிச்சல் கால்வாய் வெட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு.**

வினா 3755—திரு. **மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்காவில் மடிச்சல் கால்வாய் வெட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

106—

**தாம்பரத்திலிருந்து மறைமலை நகருக்கு செல்லும் பேருந்துகளை அதிகரித்தல்.**

வினா 3760—திரு. **தமிழ்மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைமலை நகருக்குத் தற்போது தாம்பரத்திலிருந்து விடும் டி. 60, நகரப்பேருந்துகளின் எண்ணிக்கை உயர்த்தப் படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தாம்பரம்-மறைமலைநகர் வழித்தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து ஒன்று 6 நடைகள் வீதம் இயங்கி வந்தது. பொதுமக்களின் கோரிக்கையின்படி மேலும் 8 நடைகள் தாம்பரம்-மறைமலைநகர் வழித்தடத்தில் 1—9—1985 முதல் தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகம் இயக்கி, இப்பகுதிவாழ் மக்களின் தேவையை நிறைவு செய்துள்ளது. ஆகவே, கூடுதல் பேருந்து தேவையில்லை.

107—

**நெல்லிக்குப்பம் தொகுதி திருமாணிக்குழி அருள்மிகு வீரமானபுரீஸ்வரர் கோயில் ராசகோபுரம்.**

வினா 3766—திரு. **துரை அன்பரசன்:** மாண்புமிகு சுற்றுலா, அறநிலையத் மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி 'திருமாணிக்குழி' என்னும் ஊரில் திருஞான சம்மந்தரால் பாடப்பெற்ற வீரமானபுரீஸ்வரர் கோயில் ராசகோபுரத்தை புதுப்பித்திட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருமானிக்குழி அருள்மிகு வீரமனபுரீஸ்வரர் திருக்கோயில் இராசகோபுரத் திருப்பணியை இராச இராச சோழன் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழா நினைவு திருப்பணியின் கீழ் பொதுமக்கள் நன்கொடை மூலம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

108—

## ஆத்தூர் காமராசர் நீர்தேக்கம்.

வினா 3787—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆத்தூர் காமராசர் நீர்தேக்கத்தில் கடைசியாக எப்பொழுது மணல் போக்கி (Desilt) சுத்தம் செய்யப்பட்டது?

(ஆ) தற்போது வாறண்டு இருப்பதால் மணல் நீக்கி சுத்தம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் 1962-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட காமராசர் நீர்தேக்கத்தில் இதுவரை மண்போக்கி சுத்தம் செய்யப்படவில்லை.

(ஆ) தற்போது வறண்டு இருந்தாலும் மணல் நீக்கி சுத்தம் செய்ய தேவையில்லை.

109—

வினா 3788—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்கி வரும் ஆத்தூர் காமராசர் நீர்தேக்கத்தில் உள்ள மதகு (Shutter) ஒன்று திறக்க முடியாமல் செயல்படாமல் இருப்பது உண்மையா?

1987 நவம்பர் 10]

(ஆ) ஆம் எனில், தற்போது நீர் இல்லாத நிலையில் புதிய சட்டர் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) திண்டுக்கல் குடிநீர் திட்ட காமராசர் நீர்த்தேக்கத்தில் உள்ள மதகு (Shutter) திறக்க முடியாமல் இருக்கிறது என்பது சரியல்ல.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

110—

**விவசாயிகளின் மின் கட்டண பாக்கி.**

வினா 3799—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் மின்கட்டண பாக்கிக்காக மின்சார வாரியம் வட்டி வசூலிக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) 31—3—1979 வரை வைக்கப்பட்டுள்ள பாக்கித் தொகையை 1 பிளஸ் 1 முறைப்படி செலுத்தும் விவசாயிகளுக்கு காலங்கடந்த பணம் செலுத்துகை வரியை அரசு தள்ளுபடி செய்துவிட்டது. 1—4—1979 முதல் 31—12—1981 வரை விவசாயிகள் வைத்துள்ள மின்கட்டண பாக்கித் தொகைக்கு மாதத்திற்கு 2 விழுக்காடு வீதம் காலங்கடந்து பணம் செலுத்தியதற்கு மேல்வரி விதிக்கப்படுகிறது. 1—1—1982 முதல் விவசாயிகள் வைக்கும் பாக்கி மின்கட்டண தொகைக்கு 18 விழுக்காடு வீதம் ஆண்டு வட்டி விதிக்கப்படுகிறது.

111—

**தரங்கம்பாடி தாலுகாவில் நிலவரி, விவசாயக்கடன் ரத்து செய்தல்.**

வினா 3801—**திரு. என். விஜயபாலன்:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1983-84 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தரங்கம்பாடி தாலுகா முழுவதிலும் நிலவரி, விவசாயக்கடன் ரத்து செய்யப்படுமா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், தரங்கம்பாடி தாலுகாவில் 1983-84-ம் ஆண்டு (1393-ம் பசலியில்) தரங்கம்பாடி தாலுகாவில் நிலவரி ரூபாய் 3,92,117-ம், அதற்குரிய உள்ளூர் வரி (எல்.சி.), கூடுதல் உள்ளூர் வரி (எல்.சி.எஸ்.) இவைகளும் ரத்து செய்யப்பட்டன. விவசாயக் கடனைப் பொறுத்தவரையில் தள்ளுபடி எதுவும் செய்யப்படவில்லை.

112—

**பூம்புகார் பகுதி மீனவர் துயர் துடைப்பு நிதி அளித்தல்**

வினா 3811—**திரு. என். விஜயபாலன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு 31—12—1984-க்குள் அளிக்கப்பட வேண்டிய மீனவர் துயர் துடைப்பு நிதி ரூ. 20,430 இன்னும் அளிக்கப்படாததற்கு காரணம் என்ன?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அளிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) பூம்புகாரிலுள்ள காவிரிப்பூம்பட்டினம் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குரிய மீனவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மீனவர் நிவாரண தொகை ரூ. 20,430-ம் 22—6—1985-ல் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.



113—

**பொள்ளாச்சி தாலுக்காவை இரண்டாகப் பிரித்தல்**

வினா 3841—**திரு. கா. வே. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி தாலுகாவை இரண்டாகப் பிரித்து நெகமம் தாலுகா அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

114—

**தேவனாம்பட்டினம் கடற்கரையை அழகுபடுத்தல்**

வினா 3854—**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூரில் உள்ள தேவனாம்பட்டினம் கடற்கரையை அழகு படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

கடலூரில் உள்ள தேவனாம்பட்டினம் கடற்கரையை அழகு படுத்தும் திட்டம் எதும் இத்துறையில் இல்லை.

115—

**இ.ஐ.டி. (இந்தியா) லிமிடெட், நெல்லிக்குப்பம்**

வினா 3860—**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. (இந்தியா) லிட்., நிர்வாகம் 26—2—1985-ல் இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி 384 பேர் களை வேலைக்கு எடுத்துக்கொண்டதில் பணி மூப்பு seniority பாராமல் வேண்டியவர்களை மட்டுமே எடுத்துக்கொண்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் துயர் துடைக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்பிரச்சினை குறித்து சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர்-2 விசாரணை நடத்தி வருகிறார்.

116—

**அணைப்பட்டியிலிருந்து திண்டுக்கல்லுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.**

வினா 3878—**திரு. ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி அணைப்பட்டியிலிருந்து திண்டுக்கல்லுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தில், வழியிலுள்ள கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளதா?

விடை—

ஆம்.

117—

**நிலக்கோட்டை ஒன்றிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிதண்ணீர் திட்டம்.**

வினா 3880—**திரு. ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை ஒன்றியம் ... ளையகவுண்டன்பட்டி பஞ்சாயத்து ஜி. கண்ணார்பட்டி அருகில் கிடைக்கும் நல்ல தண்ணீரை கூட்டுக் குடிதண்ணீர் திட்டத்தில் எடுத்துக்கொண்டு மாளையகவுண்டன்பட்டி, முருகசந்தரான்பட்டி, கண்ணார்பட்டி போன்ற ஊர்களுக்கு வழங்கும் திட்டம் ...வில் உள்ளதா?

விடை—

இல்லை.





118—

**கடலூரில் துணை அனல் மின்நிலையம் அமைத்தல்.**

வினா 3909—**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் துணை அனல் மின்நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்பெறும்?

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க ரூ. 600 கோடி மதிப்பீட்டில் மின்வாரியத்தால் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்பு மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்படும். மத்திய அரசு ஒப்புதல் பெற்றபின் திட்டம் மேற்கொள்ளப்படும்.

119—

**திருவெறும்பூரில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்.**

வினா 3945—**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, திருவெறும்பூரில் ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதி கட்ட நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) எந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது?

[1987 நவம்பர் 10

விடை—

(அ) 1984-85 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கப்பட்டது.

(ஆ) ரூ. 16.55 இலட்சம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் கூத்தப்பார் என்ற கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

120—

**நாச்சிக்குப்பம் ஆற்றில் சிங்கிரிபள்ளி அணை கட்டும் திட்டம்.**

வினா 3950—திரு. க. இரா. பின்னராசு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், கிருட்டிணகிரி வட்டம், நாச்சிக் குப்பம் ஆற்றில் சிங்கிரிபள்ளி அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அணை கட்டும் திட்டம் முதன்மை ஆய்வில் உள்ளது.

121—

**நடுப்பாளையம்-மோளப்பாளையம் பாதையில் கட்டப்பட்டுள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம்.**

வினா 3985—திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கீழ்பவானி வாய்க்கால் (கோபி உட்கோட்டம்) நடுப்பாளையம்-மோளப்பாளையம் பாதையில் கட்டப்பட்டுள்ள பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான குறுகிய பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?



1987 நவம்பர் 10]

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

122—

**மேட்டூர் அணையிலிருந்து பவானி கால்வாய்க்கு தண்ணீர் திறந்து விடுதல்.**

வினா 4000—திரு. யு. பி. மாதையன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேட்டூர் அணையிலிருந்து காவேரி ஆற்றில் தஞ்சை மாவட்டத்திற்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடும்போது அணையிலிருந்து பிரியும் பவானி கால்வாயிலும் தண்ணீர் பாசனத் திற்கு திறந்துவிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

123—

**குறைந்த வருமானத்தில் ஓடும் பேருந்துகளை மினி பேருந்துகளாக அறிமுகப்படுத்தும் திட்டம்.**

வினா 4007—டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பால கிருஷ்ணன், திரு. யு. பி. மாதையன், திரு. அ. பெரியசாமி மற்றும் திரு. தி. நா. கோ. அ. மனோகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் மைலேஜ் தரும் 807 வண்டிகளை மினி பஸ்களாக அறிமுகப் படுத்தும் திட்டம் செயல்படவுள்ளதா?

(அ) குறைந்த வருமானத்தில் ஓடும் வழித்தடங்களில் அதிக மைலேஜ் தரும் 807 வண்டிகளை மினி பஸ்களாக அறிமுகப் படுத்தும் திட்டம் செயல்படவுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

[1987 நவம்பர் 10

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

124—

ஈரோடு—பெருந்துறை மற்றும் ஈரோடு—காங்கேயம் சாலைகளை இணைக்க புறவழிப் பாதை அமைத்தல்.

வினா 4009—டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. அ. பெரியசாமி மற்றும் திரு. யு. பி. மாதையன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோடு-பெருந்துறை சாலையையும் ஈரோடு-காங்கேயம் சாலையையும் இணைக்கும் பைபாஸ் (Bye pass) பாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மேற்கூறிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

125—

கடலூர் தென்பெண்ணையாற்றின் குறுக்கேயுள்ள பாலத்தை புதிய பாலமாக அமைக்கும் திட்டம்.

வினா 4016—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தென்பெண்ணையாற்றின் குறுக்கே உள்ள ஒருவழிப் பாதை பாலத்தை, வசதி மிக்க புதிய பாலமாக அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?



1987 நவம்பர் 10]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

126—

வீராணம் சிமெண்ட் குழாய்களை தரைப்பாலங்கள் அமைக்க பயன்படுத்தல்.

வினா 4029—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் சிமெண்ட் குழாய்கள் தேவைப்படுகின்ற சிறு சிறு கால்வாய்கள், ஆறுகள் ஆகியவைகளுக்கு தரைப்பாலங்கள் அமைக்க பயன்படுத்தப்படுமா?

விடை—

இல்லை.

127—

குற்றாலம் நகரியத்தில் புதிய காலனி அமைக்கும் திட்டம்

வினா 4079—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் நகரியத்தில் புதிய காலனி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1987 நவம்பர் 10

128—

### பரம்பிக்குளம்-ஆளியாறு நான்காவது பாசனப் பகுதி விரிவாக்கத் திட்டம்.

வினா 4080—திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நான்காவது பாசனப் பகுதி விரிவாக்கத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கூடுதலாக எந்த எந்தப் பகுதிகள் பாசன வசதி பெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

129—

### கடனா நதி அணையை பெரிதாகக் கட்டுதல்

வினா 4084—திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள கடனா நதி அணையினை பெரியதாகக் கட்டுவது பற்றி அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதுவும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கடனா அணை மண் அணையாகும். ஆதலால் அதனை மேலும் பெரியதாக கட்ட வாய்ப்பு இல்லை.



1987 நவம்பர் 10]

130—

### கோவில்பட்டி நகரில் பாதாளச் சாக்கடை.

வினா 4111—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

131—

### கம்பெனிகள் பதிவுச் சட்டத்தைப் பயன்படுத்தி, அரசுக்குச் சேர வேண்டிய முத்திரைக் கட்டணங்களை வசூலித்தல்.

வினா 4121—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பெனிகள் பதிவுச் சட்டத்தைப் பயன்படுத்தி, பங்கு மூல தனத்திற்கு ஈடாக காட்டப்படும் சொத்துக்களை பரிவர்த்தனை செய்து அரசுக்குச் சேரவேண்டிய முத்திரைக் கட்டணங்களை வசூலிக்க தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

விடை—

இதுபோன்ற கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1987 நவம்பர் 10

132—

**பெரியகுளம் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டிடம்.**

வினா 4130—**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

133—

**கேந்திர கிராம கால்நடை அபிவிருத்தித் திட்டம் அமல் நடத்தப் படும் பகுதிகளில் கன்று மானியம் வழங்கும் திட்டம்.**

வினா 4154—**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கேந்திர கிராம கால்நடை அபிவிருத்தித் திட்டம் அமல் நடத்தப்படும் பகுதிகளில் கன்று மானியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.

134—

**சிறு விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் நீண்டகாலக் கடன்.**

வினா 4251—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் கூட்டுறவு வங்கிகள் மூலம் நீண்ட காலக் கடன் வசதி செய்து தரும் செயத் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.



1987 நவம்பர் 10]

135—

**மதுக்கரை ஒன்றியம் சீரபாளையம் கிராமத்தில் குட்டை கட்டும் திட்டம்.**

வினா 4320—**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை ஒன்றியம் சீரபாளையம் கிராமம் க.ச. எண் 485 486-ல் குட்டை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

136—

**குனியமுத்தூர் பேரூராட்சி பகுதியில் சர்க்கரை ஆலை.**

வினா 4339—**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி குனியமுத்தூர் பேரூராட்சி பகுதியில் சர்க்கரை ஆலை கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதற்கென எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 10

137—

வைகை அணையின் உயரத்தை அதிகரிக்கும் திட்டம்.

வினா 4393—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையின் உயரத்தை அதிகரிக்க அரசிடம் திட்டமேதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு தொகை செலவில் செய்யப்பட உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

138—

காற்றைப் பயன்படுத்தி மின்சக்தி எடுக்கும் திட்டம்

வினா 4427—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டிக்கும் தேனீக்கும் இடையே காற்று பலமாக வீசுவதால் அக்காற்றைப் பயன்படுத்தி மின்சக்தி எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இத்தகைய திட்டம் ஏதும் தற்போது தமிழக அரசின் பரிசீலனையில் இல்லை.

139—

கூடலூர் வட்டம் பொன்னாணியில் பாலம் கட்டுதல்.

வினா 4481—திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் வட்டம் பொன்னாணியில் கட்டப்படும் பாலத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) அப்பணி எப்போது முடிக்கப்படும்.



1987 நவம்பர் 10]

விடை—

(அ) பாலத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.25 லட்சம் ஆகும்.

(ஆ) விரைவில் முடிக்கப்படும்.

140—

விளவங்கோடு தாலுகா, தூத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா 4516—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்கா தூத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுள்ள மருத்துவ மனையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

141—

போக்குவரத்துக் கழகத்திற்கு ஏரியா பர்மிட்.

வினா 4537—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகத்திற்கு ஏரியா பர்மிட் வழங்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் மதுரை மாநகரில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினருக்கு 206 வழித்தடங்களில் 314 பேருந்துகள் ஏரியா பர்மிட் வழங்கப்பட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன.

[1987 நவம்பர் 10

142—

**மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு சொகுசு பேருந்து.**

வினா 4575—**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு சொகுசு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

143—

**வழக்குரைஞர்களுக்காக சேரும் 'பீஸ்' தொகையை உயர்த்தல்.**

வினா 4584—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்ற வழக்குகளில், வழக்குரைஞர்களுக்கான செலவுத்தொகையில் சேரும் 'பீஸ்' தொகையை உயர்த்த வேண்டும் என்று வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**விடை—**

(அ) அம்மாதிரியான கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை.

**(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.**



1987 நவம்பர் 10]

144—

**இலவச வீட்டுமனைப் பட்டா.**

வினா 4656—**திரு. சு. சிவராஜ் :** மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதியில் இதுவரை எத்தனை பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன ?

**விடை—**

ரிஷிவந்தியம் தொகுதியில் 1982-ம் ஆண்டு முதல் 26—12—85 வரை 99 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

145—

**தென்னாற்காடு மாவட்டம் ரிஷிவந்தியம் வேளாண்மைக் கிடங்கு.**

வினா 4657—**திரு. சு. சிவராஜ் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்ஆற்காடு மாவட்டம் ரிஷிவந்தியத்தில் முன்பு செயல்பட்டு வந்த வேளாண்மைக் கிடங்கை மீண்டும் துவங்கும் திட்டம் அரசிடமுள்ளதா ?

**விடை—**

இல்லை.

146—

**சென்னையிலுள்ள தோட்டக்கலை அலுவலகம்.**

வினா 4668—**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது சென்னை நகரில் இருக்கும் தோட்டக்கலை அலுவலகங்களில் தோட்டப் பயிர்களுக்கு வேண்டிய உரம், விதைகள், பழச்செடிகள் ஏதும் உபயோகிப்பவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இது உண்மையல்ல.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

147—

**கொல்லி மலையில் தொலைக்காட்சி நிலையம் அமைத்தல்.**

**வினா 4702—திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் திருச்சி, சேலம் மாவட்டங்களுக்கென தொலைக்காட்சி நிலையம் அமைக்க கொல்லிமலையை அரசு சிபாரிசு செய்து மத்திய அரசுக்கு அனுப்ப உத்தேசித்துள்ளதா?

(ஆ) இந்த நிலையம் 10 கி.வா. திறன்கொண்ட நிலையமாக அமைய அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

148—

**நாமகிரிப்பேட்டை ஒன்றியம் மங்களபுரத்தில் கால்நடை மருத்துவமனை ஆரம்பித்தல்.**

வினா 4704—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு (1985-86) திட்டத்தில் சேர்க்கப்படுமா?



விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

149—

**நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு புதிய போக்குவரத்துக் கழக பஸ்.**

வினா 4708—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் முதல் சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேந்தமங்கலம், பேளுக்குறிச்சி, கே. என். பட்டி, இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, மங்களபுரம் வழியாக புதிய பேருந்து விடும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவாக இயக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

150—

**நாமகிரிப்பேட்டை ஒன்றியம் நாரைக்கிணறு கிராமத்தில் புதிய பாலம்.**

வினா 4712—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள நாரைக்கிணறு பிரிவு தம்மம்பட்டி நெடுஞ்சாலையில் நாரைக்கிணறு கிராமத்தின் அருகே பெரிய ஓடை குறுக்கே நடப்பு ஆண்டில் பாலம் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை லட்ச மதிப்பீட்டில்?

[1987 நவம்பர் 10

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாற்றுத் தலைவர்கள் பட்டியல் . . . . (குறுக்கீடு). நான் படித்துவிடுகிறேன். இது என்னுடைய அலுவல். இதை நான் படித்து விடுகிறேன். . . . (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** பாயிண்ட் ஆப்ஆர்டர் . . . .

**திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் படித்த பிறகுதான் பாயிண்ட் ஆப் ஆர்டர். I may be given precedure நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு). நான் படித்த பிறகு பேசலாம்.

**திரு. கி. மனோகரன் :** நீங்கள் படித்த பிறகு, கெட்டிக்காரத்தனமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த வார்த்தையைச் சொல்ல வேண்டாம்.

**திரு. கி. மனோகரன் :** அலுவல் எடுத்தாகிவிட்டது. ஆகவே இதற்கு இடமில்லை என்று சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, உட்காருங்கள். மாற்றுத் தலைவர்கள் பட்டியல், பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள் விதி (1)-ன் கீழ்,



1987 நவம்பர் 10]

[பேரவைத் தலைவர்]

கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. மா. சின்னராசு
2. திரு. பி. என். இராமச்சந்திரன்
3. திரு. கே. குப்புசாமி
4. திரு. செ. செம்மலை
5. திரு. மா. சுந்தரதாஸ்

## 3. தகவல் கோரல்

### இலங்கைப் பிரச்சினை குறித்து

**திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு உங்களிடமும், அவை முன்னவர் அவர்களிடமும், நமது அவைச் செயலாளர் அவர்களிடமும் இலங்கைப் பிரச்சினை பற்றி, இனப் படுகொலை பற்றி அமைதிப்படை அங்கே . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம அலுவல் ஆய்வுக் குழுவில் பேசியதை இங்கே அவையிலே பேசுவது சரியல்ல. நான் அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏற்கனவே சொன்னேன்.
I have already disallowed the Adjournment Motion.
(கூச்சல்-குழப்பம்) * *

(முற்பகல் 11-10)

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) டாக்டர் கே. சமரசம், (2) திரு. த. பழனி, (3) திரு. வி. சுப்பிரமணியன், (4) திரு. செ. செம்மலை, (5) திரு. எம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[பேரவைத் தலைவர்]

வேணுகோபால், (6) திரு. அ. ரகுமான்கான் ஆகியோரின் பதவிக் காலம் 1987 பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதியன்று முடிவடைந்து விட்டதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 13—11—1987 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 16—11—1987 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 17—11—1987 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படுமாயின், வாக்கெடுப்பு நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 4. தீர்மானம்.

### திரு. உ. சுப்பிரமணியன் அவைக்கு வராமைக்கு அனுமதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து உறுப்பினர்கள் அவைக்கு வாராமைக்கு அனுமதி கோரும் தீர்மானம். திரு. சி. பழனிமுத்து. (கூச்சல்–குழப்பம்)

* * * * * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 20 (1)-வது விதியின் கீழ், திரு. உ. சுப்பிரமணியன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இக்கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

## 5. விதி 111-இன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 111-ஆவது விதியின் கீழ் . . . (கூச்சல்-குழப்பம்)

* * * * * *

** இது ஒன்றும் அவைக் குறிப்பில் ஏறாது. இந்த இரண்டு அரசு அலுவல்கள் தவிர ஒன்றும் அவைக் குறிப்பில் ஏறாது. இதை முடித்தவுடன் அறையிலே பேசலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 111-ஆவது விதியின்கீழ் ஒரு அறிக்கையைப் படிப்பார்கள். (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 111-ன் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

3-4-1987 அன்று 1987-88 ஆம் ஆண்டு மாநில ஆயத்தீர்வை கோரிக்கை எண் 2-ன் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் அளிக்கையில் என்னால் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டது:

"1987-88 ஆம் ஆண்டு நிதியாண்டிற்குத் தேவையான பணத்தை அதாவது 100 கோடி ரூபாயை சராசரியாக கடனாகக் கொடுங்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இதுவரையில் பதில் இல்லை. மதுவிலக்கு அமல்படுத்தப்படுகின்றபோது நஷ்டஈடு தருகிறோம் என்று சொல்லி 1977-78 ஆம் ஆண்டை அடிப்படையாக வைத்து தருகிறோம் என்று மத்திய அரசு சொல்கிறது.

(திரு. அ. மலர்மன்னன் தன் இருக்கையின் மேல் நின்று கொண்டு கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மலர்மன்னன் இது முறையல்ல. ஒவ்வொன்றிற்கும் முறை இருக்கிறது. (கூச்சல்—குழப்பம்) உங்கள் ஆட்களே சரியில்லை. இவ்வளவு முறை மீறி போய்விட்டார்கள். இப்படி வரம்பு மீறலாமா? மாண்புமிகு அமைச்சர்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** 1977-78-ல் பூரண மதுவிலக்கு அமலில் இருந்த காலம். எனவே அதை அடிப்படையாக எடுத்துக்கொள்ள முடியாது. 1981-82—க்குப் பிறகு 31-12-1986 வரையில், இதுவரையில் தமிழ்நாட்டில் சாராயம் விற்பதனால் ஏற்பட்ட சராசரி வருமானம் எவ்வளவு என்று பார்த்தால் 200 கோடி இருக்கும். இப்படி 200 கோடி என்பதற்கு மேலே கூட போய் 240 கோடி, 250 கோடி என்று வருமானம் வந்தது. எனவே ஒரு 100 கோடியாவது தமிழக அரசிற்குக் கொடுக்கிறோம் என்று மத்திய அரசு முன் வந்தால்தான் இப்போது நாம் மதுவிலக்கினை பகுதியாக அமல்படுத்துவதை உற்சாகப்படுத்துவதாக இருக்கும்.

2. மேற்கண்ட எனது உரை, கீழ்க்குறிப்பிட்டவாறு இருத்தல் வேண்டும் :—

"இப்பொருள் பற்றிய உண்மை நிலை என்னவெனில், 1977-78 ஆம் ஆண்டின் நிலவரப்படியான ஆயத்தீர்வை வருவாயை அடிப்படையாகக் கொண்டு, 1978-79 முதல் மாநிலங்களுக்கு ஏற்பட்ட ஆயத்தீர்வை இழப்பினில் 50 சதவிகிதம் ஈடு செய்யலாம் என கடந்த 1986 ஆம் வருடம் மார்ச் திங்கள் மைய அரசு தெரிவித்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவு கூற்றின்படியான மாநில அரசின் நேரிடை நெறிமுறைக் கோட்பாட்டின்படி, போதை





தரும் மருந்து பானங்களை 4 வருடங்களுக்குள்ளாக விலக்க வேண்டும் என்ற நிலைக்கேற்ப கடந்த 30—7—1977 அன்று மாநில முதல்வர்கள் மற்றும் ஏனைய அமைச்சர்கள் கலந்து கொண்ட மைய மதுவிலக்கு குழுவில் எட்டப்பெற்ற ஒரு பொதுவான கருத்திற்கிசைய மைய அரசு மேற்கண்டவாறு தெரிவித்தது. மதுவிலக்கினை அமல்படுத்துவதனால் மாநிலங்களுக்கு ஏற்பட்ட ஆயத்தீர்வை இழப்பினை ஈடு செய்ய, 1977—78 ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டது. 1977—78 இல் ஆயத்தீர்வை வருவாய் குறைவாக இருந்ததால் அவ்வாண்டினைக் கணக்கில் கொள்ளாது, இவ்வரசு 1984-85-ஐ அடிப்படை ஆண்டாக நிர்ணயித்து ஈட்டுத் தொகை கணக்கிடப்பட வேண்டும் என்று மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் இச்சலுகையினைத் துய்க்க குறிப்பிட்ட கால அளவிலான 5 ஆண்டுகளின் அடிப்படை ஆண்டு, முந்தைய பகுதியின் இறுதி ஆண்டாக இருக்கவேண்டும் எனவும், அப்படி செய்தால் ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கான சலுகை அக்கால கட்டத்தில் மதுவிலக்கை புதிதாக அமல்படுத்தும் மாநிலங்களில் ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்ய ஏதுவாக இருக்கும் என கருத்துக் கொண்டு நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார்கள். அதற்கு பதிலாக பிரதமர், முதல்வருக்கு எழுதிய பதில் கடிதத்தில் சம்பந்தப்பட்ட துறைக்கு இந்த விஷயத்தை கவனிக்கும்படி கூறியிருப்பதாக பதில் எழுதினார். மேற்கொண்டு இது சம்பந்தமாக, மைய அரசின் நல அமைச்சகம் இப்பொருள் குறித்து அவ்வரசின் பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவித்துள்ளது."

(கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையல்ல. (குறுக்கீடு) உறுப்பினர்கள் எல்லோரும் அமருங்கள். உறுப்பினர்கள் யாரும் வரம்பு மீறிப் பேசாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் சாம்பிட் ஸ்போக்கன் ஆயிற்றே, வேண்டாம். (குறுக்கீடு) முடித்தவுடன் பேசலாம். என் அறைக்கு வாருங்கள், இங்கே என்னைக் கேட்காதீர்கள், என்னை இங்கே நிற்க வைத்து, இவ்வளவு பேரும் கேட்டால் எப்படி? இது அலுவல்கள் சம்பந்தப்பட்டது. அறைக்கு வாருங்கள். விதியைப் பற்றிச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உங்கள்

கட்சியின் சார்பிலே அலுவல் ஆய்வுக் குழுவிலே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் தான் தள்ளிவிட்டேன் என்று சொன்னேனே, தள்ளியாயிற்று. (கூச்சல்—குழப்பம்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்
வெளிநடப்பு செய்தனர்)

6. அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

இலங்கைப் பிரச்சினை குறித்து—தொடர்ச்சி.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

**திரு. கு. ரமணி :** * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) எல்லோரும் தமிழர்கள்தான். நீங்கள் 4 பேர்கள்தான் தமிழ்நாட்டிற்காக இருக்கிறீர்களா, நாங்கள் எல்லோரும் இல்லையா? இது முறையல்ல. இங்கே 80 சதவிகிதம் ஆப் த பீப்பிள் என்ன ஃபீலிங்கில் இருக்கிறார்கள், தமிழ்நாட்டிலே? அதைப் பேச வேண்டிய அவசியம் இல்லை. இதில் யாரும் சளைத்தவர்கள் அல்லர். எல்லோரும் தமிழர்களுக்காகத்தான் இருக்கிறோம். (குறுக்கீடு) இல்லை, இல்லை, விதிக்கு உட்பட்டு வரவேண்டுமென்பதுதான்; இது விதியில் அல்ல. அவ்வளவுதான். (குறுக்கீடு).

**திரு. கு. ரமணி:** நாங்கள் அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் இங்கே பேச முற்படுவது முறையல்ல. நாம் அந்த விவாதத்தை இங்கே எடுத்துக்கொள்ளவில்லை. (குறுக்கீடு).

**திரு. கு. ரமணி:** அவை முன்னவர் அவர்களிடம் சொன்னோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிய விவகாரத்தை இங்கே பேசுவது முறையல்ல, அதனால்தான் சொன்னேன். நீங்களும், மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் பேசியது போன்று தயவுசெய்து பேசாதீர்கள். (குறுக்கீடு) அதனால்தான் அறைக்கு வாருங்கள் என்று கூறினேன். (குறுக்கீடு) இப்போது நீங்கள் இங்கே பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது, (குறுக்கீடு) முடிந்து விட்டது.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987—88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 1986—87 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை @ மீதும், 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை @ மீதும்

@ 260 ஆத் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 10

என்னுடைய கருத்துக்களைப் புத்தகமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். 1986—87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்களும், அக்கருத்துக்களின் மீதான குறிப்புகளும் அடங்கிய விவர அறிக்கையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு . . . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூன்று பேரும் கட்சிகளின் தலைவர்கள். உங்களுக்குள்ளே ஒருவர் அமர்ந்து, ஒருவர் பேசுவதுதான் முறை. (குறுக்கீடு) விதியைப் பின்பற்றியிருக்க வேண்டும். பின்பற்றவில்லை. விதியைப் பின்பற்ற வேண்டும். புதிதாக வந்துள்ள உறுப்பினர்கள் உங்களைப் பார்த்துத்தான் கற்றுக்கொள்ள வேண்டும். எதுவாக இருந்தாலும், அலுவல் ஆய்வுக் குழுவில் பேசலாம். என்னுடைய அலுவல் சம்பந்தப்பட்டவைகளை இங்கே விவாதிப்பது முறையல்ல. இங்கே விவாதிப்பது சரியல்ல . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துகளும், அந்தக் கருத்தின் மீதான குறிப்புகளும் என்ற விவர அறிக்கையில் மூன்றாவது பக்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்கள், எக்காரணத்தைக் கொண்டும் மின் உற்பத்தியை தனியார் துறைக்கு . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள், இங்கே பேசுவது முறையல்ல. சொன்னால் கேட்கமாட்டேன் என்பதுமாதிரி இருக்கிறது. I am appealing to you. You please resume your seat. I am appealing to you. எதுவாக இருந்தாலும் நாம் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசலாம். அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதித்ததை, அவையில் விவாதிப்பது முறையல்ல. ஒருவரையொருவர் குறை சொல்லக் கூடிய அளவுக்கு.



1987 நவம்பர் 10]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் திரு. கே. ரமணி, எம்.எல்.ஏ., அவர்கள் சொன்ன கருத்துக்கு பதில் அளிக்கின்ற வகையில், மின்சார வாரியம் மின் உற்பத்தியில் தனியார் துறையை ஊக்குவிப்பதுபற்றி அரசு எந்த முடிவும் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறது. இது தவறு ஆகும். தவறுக்கு பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். தமிழில் எனது கருத்துக்களை வெளியிட்டதில் . . . (கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அறிக்கையைப் படிக்கிறார். உங்களுக்கு மட்டும் உரிமை இருப்பதாக எண்ணிக் கொண்டு, நின்றுகொண்டு பேசிக்கொண்டிருப்பது முறையல்ல. அவரும் இந்த அவையின் உறுப்பினர், அவரை பேச அனுமதியுங்கள், அவர் அறிக்கையைப் படிப்பதற்கு அனுமதியுங்கள், அமருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது யாராவது எழுந்தால் என்ன பண்ணுவீர்கள்? நீங்கள் பேசும்போது குறுக்கிட்டிருந்தால் அதை எப்படி எண்ணுவீர்கள். இது முறையல்ல, தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) அவரும் உறுப்பினர்தான்.

(முற்பகல் 11-30)

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் பேசிக் கொண்டே . . .

**Mr. SPEAKER:** You have wasted almost 30 minutes unnecessarily to-day. (குறுக்கீடு). You want me to tell you what you wanted. நீங்கள் அமருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரா 23-ல், பக்கம் 10-ல், தனியார் மின் உற்பத்தி செய்ய முன்வந்தால் இந்த அரசு ஊக்குவிக்கிறது என்பதை விளக்குகிற வகையில் "1985-லிருந்து உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ள பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் எரிவாயு அடிப்படையில் ஒவ்வொன்றும் 30 மெ.வா. கொண்ட . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பு உண்டு. உட்காருங்கள் . . . (குறுக்கீடு).

சில எம்.எல்.ஏ.க்களுக்குத்தான் தெரியும். பாதிக்கப் பட்டவர்களுக்குத்தான் தெரியும். நீங்கள் பாதுகாப்பைத் தேடி இன்னும் வரவில்லை. ஆகவே தெரியவில்லை. தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** ஒவ்வொன்றும் 30 மெ.வா. செயல் திறன்கொண்ட எரிவாயு மின் உற்பத்தி பிரிவுகள் 4-ஐத் தொடங்குவதற்கு தென்னக சக்தி முன்னேற்ற நிறுவனம் என்ற தனியார்கழகம் அனுமதி கோரி அது அரசுக்கு வந்திருக்கிறது . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களை அலவ் பண்ணவில்லை, அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். அவரும் ஒரு உறுப்பினர். அவர் பேசட்டுமே. நீங்கள் அமருங்கள் (குறுக்கீடு) நான் ஏற்கெனவே அனுமதி இல்லை என்று மாண்பு மிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்களுக்குச் சொல்லி விட்டேன். What is applicable to him will apply to you also. நீங்கள் அமருவது நல்லது. அதுதான் முறை. ஒரு அமைச்சர் பேசும்போது நீங்கள் நின்று கொண்டிருப்பது முறையல்ல.

**திரு. கு. ரமணி:** அப்படியென்றால் நாங்கள் பேசுவது? I am an insignificant Member of this House !

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியென்றால் நீங்கள் எத்தனையோ தரம் விவாதத்தில் ஈடுபடுகிறபோது குறுக்கீடுகளை அனுமதித்திருக்கிறீர்களா? You have not yielded. முறையல்ல. ஏற்கெனவே சொல்லிவிட்டேன். ஒரு கட்சித் தலைவருக்கு என்ன பதிலோ அதே பதில்தான் உங்களுக்கும். (குறுக்கீடு) இது முறையல்ல. விதிகளுக்குப் புறம்பாக நீங்கள் நின்று கொண்டேயிருக்கிறீர்கள், பேசிக் கொண்டேயிருக் கிறீர்கள். நீங்கள் முறையாக அழைக்கப்படவில்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு



மின் உற்பத்தி செய்ய தனியார்துறை முன்வருமானால் அரசு அதை ஊக்குவிக்கும் என்று தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் எனது கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் 2 தவறுகள் இருக்கின்றன என்று வருத்தம் தெரிவித்தார்கள். மூன்றாவதாக நான் ஒரு விவரம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

பக்கம் 16-ல், கடைசி பகுதியில் "நலிந்த பிரிவினருக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருப்பதால், மின் வாரியத்திற்கு இதனால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட அரசு நிதி உதவி அளிக்கிறது" என்று சொல்லி விட்டு "எனினும் இந்த நிதி உதவி ஒரு நியாயமான அளவில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்" என்று சில வார்த்தைகள் அச்சடிக்கப்படாமல் இருக்கின்றன என்பதால் அது என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் அதற்குத் தகுந்த விளக்கம் அளிப்பேன் என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* **திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் அதன் தலைவர் திரு. விஜயராகவன் அவர்கள் தலைமையில் சிறந்த முறையில் இயங்கி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடை கிறேன். நம்முடைய சேர்மன் அவர்கள் மின்சார வாரியத்தில் ஒழுக்கத்தைக் கொண்டு வந்து, நன்றாக உழைத்து நல்ல பெயர் எடுத்திருக்கிறார்கள். மின்வாரியத்தின் தலைவருடைய சேவை நல்லபடியாக இருக்கிறது என்பதை அறிய நான் மகிழ்ச்சி யடைகிறேன்.

[திரு. ஆர். ரெங்கசாமி] [1987 நவம்பர் 10

அடுத்து, சென்றமுறை நான் அவையில் பேசும்போது சில "பாயின்ட்களை"த் தெரிவித்திருந்தேன். உதாரணமாக, அக்கவுண்ட்ஸ் பற்றியும், மெயின்டனன்ஸ் பற்றியும் சில பாயின்ட்களைத் தெரிவித்தேன். அதைப் போலவே "கோல்" பற்றியும், மின்சார விநியோகம் பற்றியும் தெரிவித்திருந்தேன். அவைகளெல்லாம் மின்வாரியத்தால் தெரிவிக்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மற்றவர்கள் குறிப்பிட்டதெல்லாம் வந்திருக்கின்றன. நான் தெரிவித்த கருத்துக்களுக்கு ஏன் பதில் சொல்லவில்லை என்பதை அறிய விரும்புகிறேன். அவர்களுக்குச் சௌகர்யமாக இருந்தால் கேள்வி பதிலில் போட்டிருக்கிறார்கள். நான் சொல்லிய பாயின்ட்சுகளுக்குப் பதில் சொல்லவில்லை. அவற்றுக்குப் பதில் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முதலிலே விவசாயிகளுக்கு மின் இணைப்பு துண்டித்ததை மீண்டும் இணைப்பு கொடுத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன், பாராட்டுகிறேன். அதே மாதிரி 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பம்பு செட்களுக்கு இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். அதை 60,000 அளவுக்கு உயர்த்தியதைப் பாராட்டுகிறேன்.

தூத்துக்குடி, எண்ணூர் தெர்மல் பவர் ஸ்டேஷன்களில் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டுகளைக் காட்டிலும், கடந்த ஆண்டு அதிகமாக உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். அதற்கான பரிசையும் பெற்றிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒரு கதை சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளிக்கூடப் பையன் அப்பாவிடம் போனான். அப்பா, அப்பா, இன்றைக்கு ஸ்கூலுக்கு இன்ஸ்பெக்டர் வந்தார், பரிசு கொடுத்தார் என்று சொன்னான். நம்ப பையன் மண்டு ஆயிற்றே, எப்படி பரிசு வாங்கினான் என்ற ஆச்சரியம் அப்பாவுக்கு. எப்படி பரிசு வாங்கினாய் என்று கேட்டார். மாட்டிற்கு எத்தனை கால் என்று கேள்வி கேட்டார், 5 கால் என்று சொன்னேன், பரிசு கொடுத்தார் என்று பையன் சொன்னான். பாக்கி பேர் எல்லாம் 6, 7 கால்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமாதிரி நம்முடைய பரிசும் இருக்கிறது. 5 கால் என்று சொன்னவன் பெற்ற பரிசு



1987 நவம்பர் 10] [திரு. ஆர். ரெங்கசாமி]

போலத்தான் இருக்கிறது. 75 சதவிகிதம்தான் இன்றைக்கு உற்பத்தி வந்திருக்கிறது. மேல் நாடுகளிலே பார்த்தால் 95 சதவிகித அளவுக்கு உற்பத்தி வருகிறது. ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் போய் பார்த்தால் தெரியும். தெர்மல் பவர் ஸ்டேஷன்களில் 85 சதவிகிதம் வரை உற்பத்தியாகிறது. இன்னும் சொல்லப் போனால் 95 சதவிகிதம்கூட உற்பத்தியாகிறது. எனவே நம்முடைய தெர்மல் ஸ்டேஷன்களின் உற்பத்தியையும் அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நமக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய பிளான் போட்டிருக்கிறார்கள். தெர்மல் பவர் ஸ்டேஷன்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் போட்டிருக்கும் திட்டம் போதாது. இன்னும் 10 ஆண்டுகளில் நம்முடைய தேவை அதிகமாகும். அப்போது இது போதாது. நம்முடைய பிளானிங்கில் குறைபாடுகள் இருக்கின்றன. இன்னும் அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யப் பாடுபட வேண்டும்.

அடுத்து, கோல் பற்றி குறை சொல்லுகிறார்கள். நான் சொல்கிறேன், இந்தியாவிலே உள்ள கோல்தான் சிறந்தது. One of the best quality coal in the world மந்திரி அவர்கள் கோல் போர்டுடன் பேசி நல்ல முறையிலே கோல் வாங்கலாம். நம்முடைய நாட்டிலே கோல் நிறைய இருக்கிறது. 100 ஆண்டுகளுக்குத் தேவையான டிபாசிட் இருக்கிறது. எனவே கோல் தரத்திலேயோ, சப்ளையிலேயோ குறைபாடு இருக்க முடியாது. அது குறித்து மத்திய அரசோடு பேசி, நல்ல முடிவெடுக்கலாம். நல்ல குவாலிட்டியும் கிடைக்கும், சீப்பாகவும் கிடைக்கும்.

அடுத்தபடியாக தெப்ட் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பல இடங்களில் ஆக்ஷன் எடுத்திருக்கிறார்கள். சேலம் ஜில்லாவிலே ஒரு ஏ.ஈ. இருக்கிறார். அவர் தனிப்பட்ட முதலாளிகளுக்கு திருட்டுத்தனமாக கரன்ட் சப்ளை செய்கிறார். அங்கேயுள்ள ஓவர்சீயர் அதைக் கண்டுபிடித்தார். கேஸ் புக் பண்ணி ஏ.ஈ.யிடம் சொன்னார். என்ன ஆயிற்று என்றால் ஓவர்சீயருக்கு டிரான்ஸ்பர் ஆகிவிட்டது. தெப்ட் குறித்து ரிப்போர்ட் கொடுத்தவருக்குப் பரிசு தரவில்லை, மாற்றி

[திரு. ஆர். ரெங்கசாமி] [1987 நவம்பர் 10

விட்டார்கள். அங்கே மட்டுமல்ல. இப்படி எல்லா இடங்களிலும் இருக்கிறது. எல்லோரும் தேசிய மனப்பான்மையோடு தெப்ட் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக மின்சார இணைப்பு தருவதிலே தாமத மாகிறது. ஒரு பக்கம் லஞ்சம் கேட்கிறார்கள். 100 ரூபாய் கொடு, 200 ரூபாய் கொடு என்று கேட்கிறார்கள். இதெல்லாம் சேர்மனுக்குப் போகாது. இதற்காக விஜிலன்ஸ் விங் இருக்கிறது. அதுவும் சரியாக ஒர்க் பண்ணவில்லை. ஒரு ரிப்போர்ட் விஜிலன்சுக்குப் போகிறது. அவர்கள் செக் பண்ணு கிறார்கள். அந்தக் கம்ப்ளெயின்டில் உள்ள ஆள் பணம் கொடுத் தால், விஜிலன்ஸ் ரிப்போர்ட் ஓ.கே. ஆகிவிடும். அவர் பணம் கொடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

கோவில்பட்டி நகரத்திலே ஒரு டிரான்ஸ்பார்மர் கருவி இருக்கிறது. இதிலே கரன்ட் அழுத்தம் அடிக்கடி குறைந்து விடுகிறது. ஆகவே அதை மாற்றி அதிக திறனுள்ள 110 கே.வி. டிரான்ஸ்பார்மராக மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது நம்முடைய மின்சார வாரியத்திலே ரூ. 200 கோடி ரூபாய் 'லாஸ்' பண்ணியிருக்கிறார்கள். இந்த 'லாஸ்'க்குக் காரணம் என்ன? ஏன் 'லாஸ்' வருகிறது? அதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டும். டிரான்ஸ் பார்மர் மேலும் லயன் லாஸ் இருந்து கொண்டிருக்கின்றது. அது 'அப்-டு' 20 பர்செண்ட் வருகிறது. இப்போது மேல்நாட்டிலே பார்த்தோமானால் 8.5 பர்செண்ட்தான் வருகிறது. இங்கே ஏன் 20 பர்செண்ட் வருகிறது? கொஞ்சம் கூட வேண்டுமானால் இங்கு இருக்கலாம். We can not compare with the foreign countries அங்கே 8.5 பர்செண்ட் இருக்கும்போது நம் நாட்டில் 20 பர்செண்ட் லாஸ் ஆகிறதே. அதைப் பார்த்து நம் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.



1987 நவம்பர் 10] [திரு. ஆர். ரெங்கசாமி]

இப்போது குஜராத், ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், கேரளா போன்ற பல மின்சார போர்டுகளிலே லாபம் வருகிறது. தொடர்ந்து அவர்கள் லாபம் பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த போர்டிலே மட்டும் லாபம் பண்ணுவானேன், நமக்கு நஷ்டம் வருவானேன்? அதைப் பார்க்கக்கூடாதா? அங்கே போயாவது ஸ்டடி பண்ணி, அங்கே லாபம் எப்படி வருகிறது, இங்கே எப்படி 200 கோடி ரூபாய் லாஸ் ஆகிறது என்பதை அறிய வேண்டும். கொஞ்சம் பணமல்ல. நிறைய பணம். வருடத்திற்கு ரூ. 200 கோடி போகும்போது, அவர்கள் என்ன சிக்கனத்தைக் கையாளுகின்றார்கள் என்பதை நாம் பார்த்து அந்த முறையைக் கையாளவேண்டும் என்று சொல்லிக்கொள் கிறேன். அங்கே விசாரித்து செய்யவேண்டும். நஷ்டம் வரும் போது முன்பெல்லாம் நமது கவர்ன்மென்டானது காம்பென் சேட் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இப்போது விவசாயி களுக்கு நாம் குறைந்த விலையிலே கரண்ட் தருகிறோம். விவசாயி களுக்கு அப்படிக் கொடுத்து வருவதாலே நஷ்டம் ஏற்படலாம். அந்த நஷ்டத்தை ஈடுசெய்யும் அளவுக்கு நம்முடைய கவர்ன் மென்டிலே காம்பன்சேஷன் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது தருவது இல்லை.

நஷ்டம் ஏற்படுகிறது டிப்பார்ட்மென்டிலே என்று சொன்னேன். லாஸ்ட் டைம்-லே கூட பாயிண்ட் அவுட் பண்ணினேன். அதற்குப் பதில் சொல்லவே இல்லை. அதைப் பற்றிச் சொல்லவேண்டும். நஷ்டஈடு ஏன் நிறுத்தப்பட்டது? இந்தக் கடமையாவது அதைப் பற்றிச் சொல்லவேண்டும். நஷ்டஈடு ஏதாவது தருகிறார்களா, எப்படித் தருகிறார்கள் என்பதைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அக்கவுண்ட்டைப் பொறுத்தமட்டில் நான் அப்சர்வ் பண்ணி யதை பாயிண்ட் அவுட் பண்ணுகிறேன். அக்கவுண்ட்ஸ் டேலி ஆகவில்லை. ஏனென்றால் அது ஒரு பெரிய இயக்கம். ரூ. 500 கோடிக்கு வியாபாரம் செய்கின்றார்கள். கணக்குப் பார்ப்பது என்பது கொஞ்சம் கஷ்டம்தான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அங்கே ஸ்டாக் சரியாக இல்லை. ஸ்டோரிலே உள்ள ஸ்டாக்குக்கும் புக்-லே உள்ள ஸ்டாக்குக்கும் சம்பந்தமே இல்லாது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஏன் அது

'டேலி' ஆக மாட்டேன் என்கிறது? அது மாதிரி நம்முடைய பேலன்ஷீட்டிலே ஸ்டாக் அக்கவுண்ட்ஸ் சரியாக இல்லை. ஏன் என்று கேட்டால் லைன் கணக்கு எடுக்க முடியாது என்கின்றார்கள். ஸ்டாக் அக்கவுண்ட்ஸ் வரவில்லை. பேலன் ஷீட்டிலே ஸ்டாக் அக்கவுண்ட்ஸ் வரவில்லை என்றால் அக்கவுண்டே சரி ஆகாது. லைன் இணைப்பு செக் பண்ண வேண்டும். எத்தனை மைல் லைன் இருக்கின்றது என்று கணக்கு வைத்து அதைக் கணக்கிடலாம். ஸ்டாக் புக்ஸ் ஒழுங்காக மெயின்டனன்ஸ் பண்ணவேண்டும், ஸ்டோர்ஸ் ஒழுங்காக மெயின்டனன்ஸ் பண்ணப்படவேண்டும். கேஷ் புக்குக்கும் பேங்க் பேலன்சுக்கும் டேலி ஆகவில்லை. இதை நான் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்றுவரைக்கும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. அக்கவுண்ட்ஸைப் பொறுத்த மட்டில் ஈ.பி., மிகவும் 'வீக்' ஆக இருக்கிறது. அதை ஒழுங்கு பண்ணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை அவர்கள் ரெக்டிபை பண்ணவில்லை.

அடுத்தபடியாக நம்முடைய தொழிலாளர்கள் பென்சன் கோரிக்கையை வைக்கவேயில்லை. அந்தத் தொழிலாளர்கள் கேட்கவில்லை. அப்படிக் கேட்காதபோதும் சேர்மன், விஜய ராகவன் அவர்கள் தொழிலாளர்களிடம் அக்கறை கொண்டவராக இருப்பதால், அவர்கள் பென்சன் கொண்டு வந்தார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

ஆனால் இரண்டு பாயின்ட்ஸ் மட்டும் விட்டுவிட்டார்கள். லீவ் டிராவல் அலவன்ஸ். அதைப் பொறுத்தவரையில் கோரிக்கை இருக்கிறது. சேர்மன் அவர்கள் சொன்னார்கள். கவர்ன்மெண்டுக்கு எழுதியிருக்கிறார்கள் என்றார்கள். இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. No reply from the Government ஆக பாக்கி இடங்களிலே கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸ்க்கு எல்.டி.ஏ. தருகிறார்கள். இங்கே ஏன் தரக்கூடாது? இந்த எல்.டி.ஏ. உரிமையை ஏனைய தொழிலாளர்களுக்குக் கொடுக்கும்போது இங்கே மட்டும் ஏன் தரக்கூடாது? இந்தக் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டு செய்யவேண்டும். இந்த எல்.டி.ஏ. ஒரு லாங் பென்டிங் டிமாண்ட் ஆகும். அதைப் பரிசீலனை செய்து அரசாங்கம் கொடுக்கவேண்டும்.



அதே மாதிரி ஃப்ரீ பவர் சப்ளை. நாங்கள் மின்சாரம் உற்பத்தி பண்ணுகிறோம்; நாங்கள் மின்சாரம் விநியோகம் பண்ணுகிறோம். எங்களுக்கு மின்சாரம் ஃப்ரீயாகக் கிடைக்கவில்லை. மில்லிலே வேலை செய்கிறோம். அங்கே அவர்களுக்கு 'ஃப்ரீ க்ளாத்ஸ்' கொடுக்கிறார்கள். சைக்கிள் பேக்டரியிலே வேலை செய்கிறோம். 'ஒரு செட் சைக்கிள் ஃப்ரீ ஆஃப் காஸ்ட்' அதுபோல பன் கடையில் வேலை செய்பவர்கள் ஃப்ரீயாக பன் பெறுகிறார்கள். ஓட்டல்களில் வேலை செய்பவர்கள் ஃப்ரீயாக டிபன் பெறுகின்றார்கள். இப்படி எல்லா இடங்களிலும் கிடைக்கிறது.

எல்லா இடங்களிலும் அந்தந்த தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருளைத் தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தருகிறார்கள். உதாரணமாக ஓட்டலில் வேலை பார்ப்பவர்களுக்கு டிபன் ஃப்ரீ; சிமெண்ட், சர்க்கரை போன்றவற்றை சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு இலவசமாக சிமெண்டும் சர்க்கரையும் வழங்குகின்றன. அதுபோல மின்சார வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் அவர்கள் உற்பத்தி செய்கிற மின்சாரத்தை இலவசமாக ஏன் தரக்கூடாது? இப்போது என்னூர், பைக்காரா போன்ற இடங்களில் எல்லாம் இலவசமாக மின்சாரம் வழங்குகிறார்கள். அதுபோல எல்லா மின்வாரிய எம்ப்ளாயீசுக்கும் இலவசமாக வழங்க வேண்டும். ஆனால் அதற்கு ஒரு லிமிட் வைத்துக்கொள்ளலாம். 50 யூனிட், 60 யூனிட் என்று லிமிட் வைத்து இலவசமாக மின்சாரத்தை சப்ளை செய்யலாம். மனச்சாட்சியோடு கண்டை உற்பத்தி செய்கிறோம், எங்களுக்கு கொஞ்சம் மின்சாரம் இலவசமாகக் கொடுக்கக்கூடாதா என்கிற எண்ணம் தொழிலாளர்களுக்கு இருக்கும். அதனை மின்வாரியத்தில் தர முன்வரமாட்டார்கள். இதற்கு அரசே ஒரு முடிவெடுத்து ஆவன செய்ய வேண்டும். மேலும் இன்றைக்கு எவ்வளவோ மின்சாரம் 'லைன் லாஸ்' மூலம் வேஸ்ட் ஆகிறது. இப்படிப்பட்ட நிலையில் சிறிதளவு மின்சாரத்தை ஏன் எம்ப்ளாயீசுக்காகத் தரக்கூடாது? நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1987 நவம்பர் 10 [திரு. ஆர். ரெங்கசாமி]

அடுத்து, சென்னை தெர்மல் மின் திட்டம், தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம், காடம்பாறை, சேர்வலாறு போன்ற திட்டங்களை எல்லாம் சீக்கிரம் நல்லமுறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் 'குயிக்' ஆக நிறைவேற்றினால் நமக்கு நிறைய மின்சாரம் கிடைக்கும், மக்களுக்குப் பலன் கிடைக்கும். அதுபோல மின் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. குறைந்த உற்பத்திச் செலவில் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நிறைய மின் பாக்கி வசூலாகாமல் இருக்கிறது. மேட்டூர் அலுமினியம் நிறைய பாக்கி வைத்திருக்கிறது. மின்வாரியம் இது குறித்து கவலைப்படவில்லை. ஒரு செல் போட்டு வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ரொம்ப கடன் பாக்கியிருக்கிறது. விவசாயிகள் ஏதாவது பாக்கி வைத்திருந்தால் உடனே மின்சாரத்தை கட் பண்ணுகிறார்கள். ஆனால் பெரிய தொழிற்சாலைகள் ரொம்ப பாக்கி வைத்திருந்தாலும் மின்சாரத்தை கட் பண்ணவில்லை. அப்படி என்றால் விவசாயிகளுக்கு ஒரு நியாயம், தொழிற்சாலைகளுக்கு ஒரு நியாயமா?

அடுத்து, மீட்டர்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே சொல்லியிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கம்பெனிகள் 80 ரூபாய், 90 ரூபாய்க்கு மீட்டர்களைக் கொடுக்கின்றன. ஆனால் மின்வாரியம் 250 ரூபாய் சார்ஜ் பண்ணுகிறது. இது ரொம்ப அதிகம். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, அனல் மின்சாரம், புனல் மின்சாரம் என்றெல்லாம் உற்பத்தி பண்ணியும் நமக்கு மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. இப்போது காற்றாலை மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்கின்ற திட்டங்கள் இருக்கின்றன. கயத்தாறில் ஒரு திட்டம் தீட்டப்பட்டும் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எல்லா மாவட்டங்களிலும் காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும். நீரிலிருந்தும், அனலிலிருந்தும் இனிமேலும் நாம் மின்சாரம் பெறுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி



1987 நவம்பர் 10] [திரு. ஆர். ரெங்கசாமி]

செய்வதற்கு இனி சாத்தியக்கூறுகள் இல்லை. அதுபோல அனலிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதென்றால் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆனால் காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க யாருடையவும் தேவையில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 சதவீதம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான காற்றாலைகளை அமைக்கலாம். அந்தமாதிரி ஓர் ஏற்பாட்டினைச் செய்தால் ஏற்கெனவே மின் பற்றாக்குறையால் அவதிப்படும் நாம் செல்ப்-சபிசியன்சி அடைய வாய்ப்பிருக்கிறது. ஆகவே காற்றிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கையை விரைவில் மேற்கொண்டு மத்திய அரசிலிருந்து அதற்கான நிதியுதவியையும் பெற ஆவன செய்ய வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

நம்முடைய சேர்மன் அவர்கள் மின்சாரத் துறையில் ஊழலை ஒழித்துக் கட்டியிருக்கிறார்கள். மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுடைய சேவை நமக்கு மிகவும் தேவை. மேலும் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு, கரண்டு உற்பத்தியில் பற்றாக்குறையைப் போக்கி, நல்ல முறையில் மின்சார உற்பத்தியைப் பெருக்கி, நமக்குத் தேவையான அளவுக்கு கரண்டை உற்பத்தி செய்து தரவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எம். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய 1987-88-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, 1986-87-ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை ஆகியவைகளை இந்த அவையில் சமர்ப்பித்திருக்கிற மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதோடு இந்த அறிக்கைகளை வரவேற்று ஒரு சில உணர்வுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மின்சாரம் மனிதனுடைய வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட ஒன்றாக, அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இன்றைக்கு இருந்து வருகிறது. அந்த உணர்வோடு செயல்பட்டு

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1987 நவம்பர் 10]

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரணியல் உதவிக் கோட்டம் ஏற்கனவே தக்கலை கோட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒருசில மாதங்களுக்கு முன்பு இரணியல் உதவிக் கோட்டத்தை குழித்துறை கோட்டத்தோடு இணைத்து இருக்கிறார்கள். அதனால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். இரணியல் உதவிக் கோட்டத்திலிருந்து குழித்துறை கோட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் ஏறத்தாழ 20, 30 கிலோ மீட்டர் செல்ல வேண்டி இருக்கிறது. எனவே அந்த உணர்வைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே இருந்ததுபோல் இரணியல் உதவிக் கோட்டத்தைத் தக்கலைக் கோட்டத்தோடு இணைத்துத் தரவேண்டும் என்கிற உணர்வை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளச்சல் மின்சார சரகத்தை இரண்டாகப் பிரித்து இருக்கிறார்கள். இது மிகப் பாராட்டுதற்குரிய ஒன்று. குளச்சல் ஒன்று, குளச்சல் இரண்டு என்று பிரித்து இருக்கிறார்கள். இரண்டாவதாகப் பிரிக்கப்பட்ட குளச்சல் இரண்டை ரீத்தாபுரம் என்று சொல்லக்கூடிய பகுதியில் இடவசதி இருப்பதால் அங்கே அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் குமரி மாவட்டத்தை எடுத்துக்கொள்கிற நேரத்தில் கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களில் மின் அழுத்தம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால் பள்ளிக்கும், கல்லூரிக்கும் செல்கிற மாணவ, மாணவியர்கள் தேர்வு நேரங்களில் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆட்படுகிறார்கள். இவற்றைக்கருத்தில் கொண்டு தேவையான இடங்களில் மின் அழுத்தத்தை அதிகரித்துக்கொடுப்பதற்கேற்ப ட்ரான்ஸ்ஃபார் மர்களை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

1981-82 ஆம் ஆண்டிலே இருந்து ஏறத்தாழ பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டும் மின் கம்பங்கள் இல்லாத காரணத்தாலும், தேவையான தளவாடச்



[1987 நவம்பர் 10] [திரு. எப். எம். இராசரத்தினம்]

சாமான்கள் இல்லாத காரணத்தாலும் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாத பல பகுதிகள் இன்றைக்கு இருக்கின்றன. செம்பொன்விளை என்று சொல்லக்கூடிய பகுதியிலும் அழகன் பாறை என்று சொல்லக்கூடிய பகுதியிலும் ட்ரான்ஸ் ஃபார்மர் அமைப்பதற்கான அனைத்து நிர்வாகப் பணிகளும் நடைபெற்ற பின்பும் இன்னும் அந்தப் பகுதிகளில் ட்ரான்ஸ் ஃபார்மர்கள் பொருத்தப்படவில்லை. இதனால் அந்தப் பகுதி மக்களும், சுற்றுவட்டாரப் பகுதி மக்களும் பாதிப்புக்கு ஆட்பட்டிருக் கிறார்கள்.

அதேபோல் மேலரீத்தாபுரம், ரீத்தாம்மாள் காலனி, கடிய பட்டினம் பேரூராட்சிக்கு உட்பட்ட தோமையார் காலனி, அந்தோனியார் காலனி, மணவாளக்குறிச்சி பேரூராட்சிமன்றத் திற்கு உட்பட்ட பெரிய விளைவாடி என்று சொல்லக்கூடிய இடம், கல்லுக்கூட்டம் பேரூராட்சிப் பகுதியில் கூட்டுவளைவாரி ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பே மின்சார இணைப்புக்காக மனுப் போட்டும் இன்றைக்கும் அந்தப் பகுதிகளிலே மின் இணைப்பு கொடுக்கப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் மணவிளை என்று சொல்லக்கூடிய பகுதிக்கும், குருந்தங்கோடு என்று சொல்லக் கூடிய பகுதிக்கும் இடையில் ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் நீளத்தில் செக்கடிவிளை என்று சொல்லக்கூடிய பகுதி இருக் கிறது. அங்கே பல கிராமப் பகுதிகள் இருக்கின்றன. அப்படிப் பட்ட பகுதிகளில் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு மின் கம்பங்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. பேரூராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும் தீர்மானங்களைப் போட்டிருக்கின்றன. அப்படித் தீர்மானம் போட்டு பல ஆண்டுகள் ஆகியும் நேரான நெடுஞ்சாலைப் பகுதிகளில் கூட ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு மின் கம்பங்கள் இல்லாத சூழ்நிலை இருக் கிறது. இந்தக் குறையினை நிவர்த்தி செய்து தரவேண்டு மென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் கோவில்களுக்கு மின்னிணைப்புக்

கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் என்னுடைய பகுதியில் செக்காரவிளை பிள்ளையார் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு மின்னிணைப்புக் கொடுக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அதேபோல் செக்கடிவிளை என்று சொல்லக்கூடிய பகுதியில் அம்மன் கோயில் இருக்கிறது. அதற்கும் மின்னிணைப்பு கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தும் பல ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் கோயில்களுக்கெல்லாம் மின்னிணைப்புக் கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தும் பல வேதனை அடைகிறோம். இவற்றை எல்லாம் மனதிலே எண்ணிப் பார்த்து ஆவன செய்யவேண்டும்.

மேலும் பல ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே வீடுகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்காத ஒரு நிலைமை இருக்கிறது. அந்த உணர்வை எண்ணிப்பார்த்து குமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு பகுதிகளுக்கும் குறிப்பாக குளச்சல் பகுதியில் இருக்கக்கூடிய பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உடனடியாக மின்னிணைப்புக் கொடுக்கின்ற பணிகளைச் செய்யவேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு ஒரு சிறப்பான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை இதயபூர்வமாகப் பாராட்டி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

(நண்பகல் 12-00)

* திரு. எ. தெய்வநாயகம்: மரியாதைக்குரிய மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மின் வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும், 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும், நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்று மின்சாரத் தேவையைப் பொறுத்தமட்டிலும் மின்சாரம் மக்களின் தேவைகளில் முக்கியப் பங்கை வகிக்கிறது. மின்சாரத்திலே பல துறைகளிலே நமது தமிழகம் முன்னணியில் இருக்கிறது. தமிழக அரசும் மத்திய அரசும் இணைந்து செயல்



படுகிற காரணத்தால் தமிழகத்தில் பல இடங்களில் மின் உற்பத்தி நிலையங்களைப் பெருக்கி, ஏழை எளிய மக்களுக்கும் மின் உதவி செய்கின்ற வகையில் பல திட்டங்களை நமது முதலமைச்சர் அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படிச் செயலாற்றும்போது நமது கிராமப்புற மக்களுக்கு, கிராமத்திலே இருக்கிற குடிசைவாழ் மக்களுக்கு ஒளி விளக்காகத் திகழ்கின்ற வகையில் மின் துறை இருக்கிறது. இருந்தாலும், ஆங்காங்கு இருக்கிற படித்த இளைஞர்களுக்கு, பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வகையில் தொழிற்சாலைகள் பெருகாமல் இருக்கின்றன. காரணம் சென்னை நகரைச் சுற்றியே மின் உற்பத்தி நிலையங்கள் இருக்கின்றன; தூத்துக்குடியிலே இருக்கின்றன. இப்படிச் சில இடங்களிலே இருந்தாலும் மதுரை போன்ற பல மாவட்டங்களிலே மின் தொழிற்சாலை இல்லாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட குறையைப் போக்குவதற்குத் தமிழக அரசு இன்னும் முனைப்பாகச் செயலாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோக, எங்கள் மதுரையைப் பொறுத்த மட்டிலும், மதுரை மாநகராட்சி பல ஆண்டுகளாக மாநகராட்சியாக இருந்து பெருமையைப் பெற்றிருந்தாலும், அந்த மாநகராட்சியிலே மின் இணைப்புக் கொடுப்பதிலே கால தாமதம் ஏற்படுகிறது. மின் இலாகாவைச் சார்ந்தவர்கள் எங்களுக்குச் சரியாக மின் வசதி செய்து கொடுக்க மறுக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், தமிழக முதல்வர் அவர்கள் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினராக மதுரையிலே பொறுப்பேற்றிருந்த போது, மாநகராட்சியின் மேயராக மதிப்பிற்குரிய முத்து அவர்கள் இருந்த போது, மின் இணைப்புக் கொடுப்பதிலே சலுகை காட்டினார்கள். கட்டணத்தைக் கூட்டவில்லை. இருக்கிற கட்டணமே போதும் என்று கூறி அவர்கள் நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்த உயர்த்தாத கட்டணம் எங்களுக்கு நிலுவையாக இருக்கிறது என்று கோரி அந்தக் கட்டணத்தை இப்போது நீங்கள் கட்ட வேண்டும் என்று தமிழக மின் வாரியம் கோரி இருக்கிறது. 4½ கோடி ரூபாய் பாக்கியாக இருக்கிறது.

[திரு. எ. தெய்வநாயகம்] [1987 நவம்பர் 10

அதற்கு வட்டி பாக்கி 6 கோடியாக இருக்கிறது. அவை இரண்டையும் செலுத்தினால்தான் நாங்கள் முழுமையாக மின்சாரம் வழங்க முடியும் என்று மின் இலாகா கூறுவதாக மாநகராட்சி கூறுகிறது. அந்தக் கால கட்டத்தில் அவ்விரண்டு இலாக்காக்களும் அரசுக்குச் சொந்தமாக இருந்தனவே தவிர வேறு அல்ல. ஆனால் இப்போது இதிலே பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். பொது மக்களின் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு அரசு புதிதாக நல்ல நடவடிக்கை எடுத்து நல்ல ஆணை பிறப்பித்து, அந்தப் பழைய ஆணையைத் திரும்பப் பெற்று புது ஆணையை உடனடியாக மாநகராட்சிக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், மின்சாரம் வழங்கும் பணியை மதுரை மாநகராட்சியே எடுத்துக் கொள்ளும் வகையில் ஆணை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் என்னவென்றால் அதைச் சாக்காக வைத்து அங்கே பல கட்டிடங்களுக்கு வரைபடங்கள் கூட பாஸ் செய்யப்படுவதில்லை. வரை படங்கள் பாஸ் செய்தால்தான் மின்சார இணைப்பு வழங்கப்படும் என்று முட்டுக் கட்டையாக இருக்கிறது. அது மட்டும் அல்ல, மதுரை முனிசிபாலிட்டியாக இருந்த போது இருந்த ஊழியர்கள்தான் இன்றும் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்ஜினியர்கள் சரியாக இல்லை. ஹெல்பர்கள் போதுமான அளவு போடப்படவில்லை. லைன் மேன்கள் எல்லாம் பழைய முறையிலேயே அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மதுரை பெரிய மாநகராட்சியாக வளர்ந்து விட்டது. முன்னால் 32 வார்டுகள் கொண்ட நகரமாக இருந்தது இன்று 100 வார்டுகள் கொண்ட நகரமாக மாறி இருக்கிறது. ஏறி வரும் அந்த மக்கள் தொகைக்கு ஏற்ப மின் வசதிகளைச் செய்து கொடுப்பதற்குத் தேவையான மின் ஊழியர்களையும் நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்து அருள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மதுரை மாநகரம் ஒரு வியாபார ஸ்தலமாக இருந்தாலும் பெரிய தொழிற்சாலைகள் வருவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அதற்கு முக்கியமான காரணமாக மின்சாரம் இல்லை, நீர்வளம் இல்லையென்று சாக்குச் சொல்



1987 நவம்பர் 10] [திரு. எ. தெய்வநாயகம்]

கிறார்கள். அவற்றைப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை நிற்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பல நகரங்களில் இன்றைக்கு மின்சாரம் கொடுப்பதில் முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அந்த முட்டுக் கட்டைகளைத் தீர்ப்பதற்கு மின்வாரியம் ஒரே மாதிரியான நடவடிக்கையை எடுக்கவேண்டும். சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் மின்வாரியத்தின் நேரடிப் பார்வையில் அது இருக்கிறது. அதைப்போன்று தஞ்சை, கரூர் போன்ற நகரங்களிலும் முனிசிபாலிட்டியிலிருந்து மின்வாரியமே நேரடிப் பார்வையில் எடுத்துக் கொள்வதைப் போன்ற நிலைமையை உருவாக்கினால் அனைத்து நகர மக்களுக்கும் நலமாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால் மின்சாரக் கட்டண விகிதங்களில்கூட இன்றைக்கு வித்தியாசம் இருக்கிறது. சென்னை மாநகரத்தில் இருக்கிற மின்சாரக் கட்டணத்தையும், மதுரை மாநகரத்தில் இருக்கிற மின்சாரக் கட்டணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அது கூடுதலாக இருக்கிறது. மாநகராட்சி என்று எடுத்துக்கொண்டால் எங்கள் மாநகராட்சிக்கு உட்பட்டு 8 வார்டுகள் இருக்கின்றன. அங்கேயும் மின்கட்டண வித்தியாசம் இருக்கிறது. அப்படிப்பட்ட வித்தியாசத்தைப் போக்குவதற்கு மின்வாரியம் தகுந்த ஏற்பாட்டைச் செய்து எல்லோருக்கும் ஒரேமாதிரியான கட்டணத்தை விதிக்கும் அளவிற்குச் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய திருவொற்றியூர் நண்பர் எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள மீனவர் குப்பங்களில் பல ஆண்டுகளாக லைட் வசதி இல்லையென்று குறை சொல்கிறார்கள். குடிசைவாழ் மக்களுக்கு விளக்கு ஒளி கொடுப்பதற்கு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தும் இன்னும் அது செயல்படாமல் இருக்கிறது. அந்தக் குறைப்பாட்டைப் போக்குவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பாலசுறு சர்டிபிகேட் என்ற சர்டிபிகேட் வழங்குவதிலே பல திருமல்லுகள் நடக்கின்றன. அந்த சர்டிபிகேட்டை விவசாயப் பெருங்குடி மக்கள் வாங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. மின்சார

[திரு. செ. செம்மலை] [1987 நவம்பர் 10

மின் உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரையில், குறித்த காலத்தில் அது மேற்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படாமல் போவதற்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைப்பதில் ஏற்படுகிற தாமதம்தான் மிக முக்கியமான காரணம். இன்றைக்கு இருக்கிற நிலையில், பைக்காரா திட்டம், பவானி—கட்டளைத் திட்டம், பரளியாறுத் திட்டம், சாத்தனூர் திட்டம், பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் போன்ற பல திட்டங்கள், சுற்றுப்புறச் சூழல் காரணமாகவும், வனப் பாதுகாப்புச் சட்டத்தின் காரணமாகவும், மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைப்பதில் வீணாக ஆண்டுக்கணக்கில் காலதாமதமாகிக் கொண்டு வருகிறது.

பொதுவாக புனல் மின் திட்டங்களைப் பொறுத்தவரையில், இப்போது நாம் திட்டத்தைத் தயாரித்து அனுப்பினாலும், மத்திய அரசு அனுமதி கொடுத்தாலும், அது நிறைவேற்றப்பட்டு, மின் உற்பத்தியை நாம் பெறுவதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனவே இப்படிப்பட்ட திட்டங்கள் காலதாமதமாகிறபோது, நமது பற்றாக்குறையும் கூடிக் கொண்டே போகிறது. இதைவிட இன்னும், இன்டர்—ஸ்டேட் என்ற வகையில் அமராவதித் திட்டம், சண்முகா நதித் திட்டம், நெல்லித்துறைத் திட்டம், பாண்டியாறு—புன்னம்புழா திட்டம், ஒகனேக்கல் திட்டம் போன்ற பல திட்டங்கள் எல்லாம் இன்னும் கிடப்பிலே போட்டுக்கொண்டிருக்கிற அந்த நிலைமை தான் இன்றைக்கும் இருந்து கொண்டு இருக்கிறது. எனவே இந்தத் திட்டங்கள் எல்லாம் முன்கூட்டியே ஆய்வு செய்யப்பட்டு, விரைவிலே உருவாக்கப்படவேண்டும். இந்தத் திட்டங்களுக்கான அனுமதியை தாமதமின்றி அரசிடமிருந்து பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வளவு குறைபாடான காரணங்களையும் மத்திய அரசு வைத்துக்கொண்டு, மைய அரசின் பொறுப்பிலே இருக்கிறவர்கள் இங்கே வந்து, பல்வேறு வகையிலே நம்மையெல்லாம் விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் செய்வதை ஒரு ஆரோக்கியமான அரசியல் என்று கூட நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இருக்கிற குறைபாடுகளை அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.



1987 நவம்பர் 10] [திரு. செ. செம்மலை]

மத்திய அரசைப் பொறுத்தவரையில், நம்முடைய நிலைமையைத் தெரிந்து கொண்டு இருக்கிற அவர்கள், இன்றைக்கு பெரும் தொழில்களுக்கு முதலீடு போடுவதைக் குறைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தொழில்களைத் துவங்குவதற்குத் தேவையான மின் உற்பத்திக்கான திட்டங்களை அனுப்பியபோதிலும், அதற்கான ஒப்புதலை அளிப்பதற்கு, அனுமதியை அளிப்பதற்கு காலதாமதம் செய்கிறார்கள். இயங்கிக் கொண்டு இருக்கிற மின் உற்பத்தி நிலையங்களுக்கு நிலக்கரியைக் கேட்டால், அதிலும் தாமதப்படுத்துகிறார்கள். உங்களால் கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும், நாங்களே வெளிநாட்டிலிருந்து நிலக்கரியை, தரமான நிலக்கரியை தருவித்துக் கொள்கிறோம், அதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டாலும் அவர்கள் அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள்.

எனவே இப்படிப்பட்ட நிலைமையில் தொழில் வளர்வதற்கு தடையை ஏற்படுத்திவிட்டு, அதனால் தனி நபர் வருமானம் உயர்வதற்குத் தடையை ஏற்படுத்திவிட்டு, தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் குறைந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு இருப்பதைப் பார்க்கும்போது, தண்ணீர் இல்லாமல் செடி வளர்ந்துவிடவேண்டும் என்று மத்திய அரசு நினைத்துக் கொண்டு இருக்கிறதே தவிர, தமிழகத்தின் மீது அக்கறை இல்லையோ என்ற ஒரு வருத்தம் நமக்கு ஏற்படுகிறது வருத்தம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லாமல் இருக்க முடியவில்லை. புனல் மின் திட்டங்கள் மற்றும் அனல் மின் திட்டங்களை மட்டும் நாம் சொல்லிப் பயனில்லை. இன்றைக்கு மற்ற வகையிலே இயங்கக்கூடிய, எரி வாயுக்களைக் கொண்டு இயங்கக்கூடிய இயந்திரங்களை அமைப்பதற்கான அனுமதிக்குக் கூட இன்றைக்கு . . . .

* திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது பேசிக் கொண்டிருக்கும் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் இதோ தமிழகத்திலிருந்து அனுமதி கேட்டு அனுப்பிய அத்தனை முன் மொழிவுகளுக்கும் இதுவரை மத்திய அரசு அனுமதி அளிக்காததால்தான் தொழில் வளம் பெருகவில்லை, தனி நபர்

வருமானம் அதிகரிக்கவில்லை என்பது போன்ற கருத்துப்பட பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவரைப் பார்த்துக் கேட்பது எல்லாம தாங்கள் இப்போது குறிப்பிட்டுள்ள அந்த திட்டங்கள் அனைத்தும் முன் மொழிவுகளாக அனுப்பப் பட்டனவா? அப்படி என்று சொன்னால் அந்த 4, 5 திட்டங்கள் எப்போது அனுப்பப்பட்டன என்று தாங்கள் சொல்ல முடியுமா? அப்படி அனுப்பியிருந்தால் ஏன் அவர்களுக்கு நினைவூட்டுக் கடிதம் வைத்து அதற்கான அனுமதியை ல்பறவில்லை? அல்லது . . . . . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு விளக்கம் வேண்டியது இல்லை (குறுக்கீடு) உங்கள கட்சியின் சார்பில் பேசும்போது அதைப் பற்றி சொல்லுங்கள். ஒவ்வொருவரும் இப்படி பேசிக் கொண்டிருந்தால் எப்படி?

**திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுவல் காரணமாக பல அதிகாரிகள், அமைச்சர்கள் அங்கே நேரில் செல்லும்போது அங்குள்ள அதிகாரிகளை அணுகி, அமைச்சர்களை அணுகி அதற்கான அனுமதியைப் பெற்று இருக்கலாம். நான் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கிளாரிபிகேஷன் என்பது ஒரு பிரசங்கமாக இருக்க முடியாது. நீங்கள் பேசும் போது இந்தத் தாட்பிலிருந்து யாராவது இந்த மாதிரி குறுக்கிட்டால் நீங்கள் அனுமதிப்பீர்களா? தவறான தகவலாக இருந்தால் நீங்கள் அதை சுட்டிக்காட்டலாம். கிளாரிபிகேஷன் என்பது ஒரு சிறு விளக்கமாக சொல்ல வேண்டும். அதிலே ஒரு பிரசங்கம் வேண்டாம்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடமிருந்து என்ன பதில் எதிர்பார்க்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டு இப்போது பதில் சொல்லுகிறேன்.





எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அதற்கான பதிலைச் சொல்லுகிறேன். நான் சொன்ன திட்டங்கள் அனைத்தும், புனல் திட்டங்கள் அனைத்தும் 1981 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட திட்டங்கள் ஆகும். நம்முடைய மாநில அரசு திட்டங்களை தயார் செய்து அனுமதிக்காக அனுப்பி, 6, 7 ஆண்டுகள் ஆகியும் அனுமதி அளிக்காமல் இவ்வளவு கால தாமதம் செய்து வருகிறது என்பதைத்தான் நான் சொல்லு கிறேன்.

**திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக பல திட்டங்கள் தமிழகத்தி லிருந்து வரவில்லை என்று. . .

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்கள் இங்கே மின் வாரியம் கொடுத்து இருக்கிற இந்த திட்ட அறிக்கைகளைப் படித்தார்களோ படிக்கவில்லையோ, எனக்கு தெரியவில்லை. அதிலே தெளிவாக கூறப்பட்டு இருக்கிறது, எந்த ஆண்டு அனுப்பப்பட்டது என்றும், எவ்வளவு ஆண்டு காலம் அது தாமதப்படுத்தப்பட்டது என்றும். மாண்புமிகு உறுப்பினர் நினைவூட்டுக் கடிதம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுகிற உறுப்பினர் சொல்லுகிற தகவலில் தப்பு என்றால் நீங்கள் அதற்கு பதில் சொல்லலாம். கால தாமதம் என்று அறிக்கையி லேயே இருக்கிறது. அதை நான் சொல்லக்கூடாது. அதை மாண்புமிகு உறுப்பினரே சொல்லி விட்டார். அவர் பேசுவதிலே என்ன தப்பு என்பதை நீங்கள் பேசும் போது சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் போது இடையில் ஒரு பிரசங்கத்தை அனுமதிக்கலாமா? இது எந்த விதியில் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) அவர் ஒரு செகண்டு பேசவில்லை, 5 நிமிடங்கள் பேசிவிட்டார், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்றால் அதற்கு ஒரு முறை வேண்டாமா? நீங்கள் என்ன கேட்டீர்களோ அதை அவர் புரிந்து கொண்டு அதற்கு பதில் சொல்லுகிறார்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்று, மத்திய அரசுக்கு நம்முடைய அரசு நினைவூட்டியதா என்று அவர் கேட்கிறார். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு விதி நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். கிளாரிபிகேஷன் என்றால், அதற்கு விளக்கம் சொல்லுங்கள் என்று கேட்கலாம். அதை விடுத்து 5 நிமிடங்கள் ஒரு பிரசங்கத்தையே நிகழ்த்திவிட்டார்கள். அதையும் நான் அனுமதித்து விட்டேன். சொல்லுகிற தகவல் தப்பு என்றால் இன்ன தகவல் தப்பு என்று உங்கள் சார்பில் பேசும் போது அதற்கு பதில் சொல்லுங்கள். அதை விட்டு விட்டு ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்போது இடை மறித்து நாங்கள் ஒரு ஸ்பீச்சே கொடுப்போம் என்றால் அது எப்படி நியாயம் என்று தெரியவில்லை. இப்படி செய்தால் எப்படி சபையை நடத்த முடியும்? (குறுக்கீடு) 5, 6 சந்தேகங்களை கேட்டு விட்டார்கள். எப்போது அனுப்பப்பட்டது என்று அறிக்கையில் இருப்பதைப்பற்றி எல்லாம் முழுக்க சந்தேகமாக கேட்டு விட்டார்கள். (குறுக்கீடு) இது சம்பந்தமாக உங்கள் கட்சியிலிருந்து உறுப்பினர் பேசும்போது அவரிடம் கொடுத்து பேசச்சொல்லுங்கள். ஒரு உறுப்பினர் பேசுகிறபோது இங்கே அமர்ந்து இருக்கிற 200 உறுப்பினர்களும் சந்தேகம் கேட்க ஆரம்பித்தால் சபையை எப்படி நடத்துவது?

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு லேடி மெம்பர் சந்தேகம் கேட்கிறார். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சபையில் லேடி மெம்பர், ஜெண்ட்ஸ் மெம்பர் என்ற பாகுபாடு எல்லாம் இல்லை உங்கள் கட்சி உறுப்பினர் பேசிவிட்டார். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் புரிந்து கொண்டு பதில் சொல்லப் போகிறார். அவரே புரிந்து கொண்டேன் என்று சொல்லி, அதற்கு பதில் சொல்லப் போகிறார்.



**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் உறுப்பினர் சொல்லுவதை கேட்காமல் எப்படி பதில் சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவர் சொல்ல வருவதை புரிந்துகொண்டேன் என்று சொல்லி பதில் சொல்லுகிறார்.

**திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் என்னைப்பேச அனுமதித்ததற்கு நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஒரு செய்தியை அவைக்குச் சொல்ல இருக்கிறேன். நாங்கள் ஒரு

(பிற்பகல் 12-20)

குட்டை கட்டும் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசை அணுகியபோது அவர்கள் எங்களிடம் ஒரு முன்மொழிவு கூட வரவில்லை, பல மாநிலங்களிலிருந்து நேரடியாக வந்து வாரம் ஒரு முறை பேசி எங்களிடம் அனுமதி பெற்றுச் செல்கிறார்கள் என்று. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** குட்டை கட்டும் திட்டத்திற்கும் மின்சாரத்திற்கும் சம்பந்தமில்லை.

**திருமதி தா. இராசாம்பாள்:** நீங்கள் முன்மொழிவு அனுப்பி இருந்தால் சொல்லுங்கள். நாங்கள் அதைப் பற்றி பேசி நடவடிக்கை எடுக்கிறோம்.

**திரு. செ. செம்மலை:** நான் சொன்ன அத்தனை திட்டங்களும் எந்த ஆண்டு அனுப்பப்பட்டன என்ற விவரங்கள் மின் வாரியம் நம்மிடம் கொடுத்து இருக்கிற அந்த அறிக்கையிலேயே இருக்கிறது. அவர்கள் அதைப் படிப்பதற்கு சங்கடப்பட்டால், ஆண்டுவாரியாகக் கூடச் சொல்கிறேன்.

பைகாரா திட்டம் 1982-ல், அதுபோன்று பவானி கட்டளைத் திட்டம் 1984-ல், பாலியாறு 1984-ல், சாத்தனூர் 1984-ல் பார்சன் பள்ளத்தாக்குத் திட்டம் 1982-ல். இன்னொரு கேள்வியையும் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் நினைவூட்டியதா என்று. அவர் பத்திரிகையைப் படித்தாரோ, படிக்கவில்லையோ தெரியவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் டில்லி போகும் போதெல்லாம் பிரதம அமைச்சரைப் பார்த்து நினைவூட்டி

யிருக்கிறார்கள். இன்னும் நம்முடைய மின்துறை அமைச்சரவர்கள் மிகக் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார்கள். இப்படி எங்களுக்கு பாரபட்சம் காட்டாதீர்கள். கேட்டிருக்கிற திட்டங்களுக்கு விரைவாக அனுமதியைக் கொடுங்கள். தமிழ்நாட்டின் மீது உங்களுக்கு அக்கறை இருக்குமானால், திட்டங்களுக்கு விரைவாக அனுமதியைக் கொடுங்கள் என்று கொஞ்சம் காரசாரமாகக் கூட கேட்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நம்முடைய உறுப்பினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய மத்திய அரசாங்கம் மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் எரிவாயு சுழற்சி இயந்திரங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்படுகிற திட்டத்திற்குக்கூட அனுமதி வழங்குவதில் காலதாமதம் செய்கிறது. அவர்கள் ஆண்டைக் கேட்கிறார்கள். ஆண்டையும் குறிப்பிட்டுச் சொல்கிறேன். 50 மெகாவாட் திறன் கொண்ட 6 எரிவாயு சுழற்சி இயந்திரங்களை நிறுவுவதற்கு 1981 ஆம் ஆண்டு இந்திய அரசிற்கு நம்முடைய மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. என்ன காரணத்தை அவர்கள் சொல்கிறார்கள், தெரியுமா? எரிசக்திக்காகவும், இயந்திரங்களுக்காகவும் அன்னியச்செலாவணி தேவைப்படும் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்காகச் சொல்கிறேன். இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு, நடத்துவதற்கு தேவைப்படுகிற அன்னியச்செலாவணி ரூ. 21 கோடிதான் ஆண்டிற்கு. ஆனால் இன்றைக்கு மின் உற்பத்தி இல்லாமல், மின் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டிருக்கின்ற, அந்த உற்பத்திக் குறைவினால் ஏற்படுகிற நஷ்டத்தினுடைய அளவையும் பார்க்கிறபோது, இந்த அன்னியச் செலாவணி அதிகமாக இல்லை. எனவேதான் நாம் எல்லாம் கேட்டுக்கொள்வது, உடனடியாக அதற்கான அனுமதியைக் கொடுங்கள் என்று. இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டிய அவசியம் கூட இப்போது இல்லை. திருச்சியிலே இருக்கின்ற 'பெல்' நிறுவனம் நமக்கு தயார் செய்து கொண்டிருக்கிறது. எரிசக்திக்காகக் கூட ஆண்டிற்கு ரூ. 20 கோடிதான். அதுவும்



ஆண்டாண்டு காலத்திற்கு நாம் செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. காரணம் தமிழகத்தினுடைய நல்ல காலம், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் இங்கே பூமியிலே அந்த எண்ணெய் எரிவாயு இருக்கிறது என்று கண்டு பிடித்து, இன்றைக்கு நரிமணம், புவனகிரி, கோவில்களப்பால் ஆகிய இடங்களில் கண்டுபிடித்து இருக்கிறார்கள். எரிவாயு இன்றைக்கு வீணாகிக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே அன்னியச் செலாவணியைப் பொறுத்தவரையில் ஒரு சில குறிப்பிட்ட ஆண்டுகாலத்திற்கு நாம் அனுமதி பெற்று விட்டால், பிறகு நம்முடைய நாட்டிலேயே இயற்கையாக கிடைக்கிற இந்த எண்ணெயை எடுத்துப் பயன்படுத்திக் கொண்டால், அன்னியச் செலாவணியை நாம் குறைத்துக் கொள்ளமுடியும். எனவே நம்முடைய மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் இதற்கான திட்டங்களுக்கு உடனடியாக அனுமதியளிக்கவேண்டுமென்று நான் சொல்கிறேன்.

நான் மாண்புமிகு உறுப்பினர் இராசாம்பாள் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். மின் அனுமதிக்காக எரிவாயு திட்டங்களுக்கு நாம் அனுமதியைக் கேட்டோம். அவர்கள் நமக்குக் கொடுக்கவில்லை. ஆனால் டில்லியிலே அப்படிப்பட்ட திட்டத்திற்கு அனுமதி கொடுத்து, அவர்கள் செயலாக்கத்திலிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திற்கு, நம்மைப்போல போட்ட திட்டத்திற்கு அங்கே அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. நிலக்கரி பற்றி கூட நான் சொன்னேன். அதில் கூட நமக்குக் கொடுப்பதிலே தாமதம். நமக்குத் தரமான நிலக்கரியைக் கொடுக்காமல் தரம் இல்லாத நிலக்கரியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்.டி.பி.சி. ஆல் அமைக்கப்படுகின்ற மின் நிலையங்களுக்கு மட்டும் அவர்கள் தரமான நிலக்கரியைக் கொடுக்கிறார்கள். நமக்கு அந்த நிலக்கரியைக் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள் என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்று இன்னொரு நிலைமை. (குறுக்கீடு)

**திரு. டி. என். முருகானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, எரி வாயு, ஸ்டேட் சப்ஜக்டா, சென்ட்ரல் சப்ஜக்டா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது எந்த விதியிலேயும் வராது. தேவை இல்லாத சந்தேகத்திற்குப் பதில் சொல்ல முடியாது.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த எரிசக்தியைப் பயன்படுத்தி, எண்ணெயைப் பயன்படுத்தி தயாரிக்கின்ற அந்தத் திட்டத்தை பொறுத்தவரையில் நான் ஏற்கனவே சொன்னது போல் நம்முடைய தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல காலம் பிறந்து இருக்கிறது என்றுதான் கூறவேண்டும். அந்த வகையிலே இன்றைக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் மின்சார வாரியத்திற்கு ஒரு கட்டளையாகக்கூட இட்டிருக்கிறார்கள், இந்தத் திட்டம் உடனடியாகத் தீட்டப்பட வேண்டும் என்று. எனவே நம்முடைய மின் வாரியத்தை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையை ஏற்று நம்மிடையே இருக்கின்ற அந்தப் பற்றாக்குறையை போக்குகின்ற வகையில் அதற்கான திட்டத்தை இப்போதே தீட்ட வேண்டும். அதே போல மத்திய அரசாங்கத்திடம் பேசின் பிரிட்ஜிலே 120 மெகாவாட் அளவிற்கு எரிவாயு சுழற்சி இயந்திரங்களை அமைப்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். அதையும் அவர்கள் கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும். காரணம் இது ஒரு தலைநகர். இதிலே மின்சாரம் சீரான முறையில் தரமான முறையில் அமைவதற்கு இது வசதியாக இருக்கும். எனவே, பேசின் பிரிட்ஜினுடைய 120 மெகாவாட்டினுடைய மின் திட்டத்திற்கும் விரைவாக அனுமதி வழங்குவதற்கு மைய அரசு முன்வர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல இந்த மின் உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசாங்கமும் நிதி ஒதுக்கீடு செய்கின்ற போது கொஞ்சம் நம்முடைய மின் வாரியத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீட்டை முன்னுரிமை கொடுத்து வழங்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். எடுத்துக்



காட்டாக 1974-ல் திட்டக் கமிஷன் ஒப்புதல் அளித்திருந்தும் நம்முடைய சேர்வலாறு சுழல் திட்டம் 1977-78-லதான் தொடங்கப்பட்டது. காரணம் நிதிப் பற்றாக்குறை. 1981-82-ல் தான் போதிய நிதியை அதற்கு கொடுத்தார்கள். இப்போது மின்சார வாரியத்தினுடைய கணக்குப்படி 1980-81 முதல் 1984-85 வரை மின் வாரியம் கோரிய 1,040.64 கோடிக்கு எதிராக அரசிடமிருந்து இதுவரை 912.26 கோடிதான் கிடைத்திருக்கிறது.

எனவே மின்சார வாரியத்தினுடைய திட்டங்களுக்கு நம்முடைய அரசாங்கமும் அதிகமான நிதி ஒதுக்கீட்டைக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் மின்சார வாரியத்திற்கு ஒதுக்குகின்ற பணம் நாட்டினுடைய முன்னேற்றத்திற்குப் போடுகின்ற மூலதனத்திற்கு சமம். எனவே அந்த வகையில் அதிக ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தி ஒருபக்கம் இப்படி இருக்கும்போது, இப்போது பயன்படுத்திக்கொண்டு வருகின்ற மின்சாரத்தை நாம் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். இன்றைக்கு வல்லுநருடைய கூற்றுப்படி இப்போது பயன்படுத்திக் கொண்டு வருகின்ற மின்சாரத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் 15 சதவிதம் மின்சாரத்தை நாம் சேமிக்கலாம் என்ற ஒரு கணக்கை சொல்லி இருக்கிறார்கள். இப்படி சேமிக்கின்ற மின்சாரமே ஒரு மின் நிலைய உற்பத்திக்கு சமமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு 3,000 மெகாவாட் உற்பத்தியை நாம் அடைந்திருக்கிறோம் என்று சொன்னால், இதைச் சிக்கனமாக சேமிப்பதன் மூலமாக 450 மெகாவாட் அதாவது எண்ணூர் அனல் மின் நிலையத்தினுடைய உற்பத்திக்கு சமமான அளவிற்கு மின்சாரத்தை நாம் சேமிக்க முடியும். அதைப்போலவே தொழிற்சாலைகளிலே நவீனப்படுத்துவதன் மூலமும், சக்தியுள்ள தரமான இயந்திரங்களைப் போட்டு இயக்குவதன் மூலமும் அந்த சேமிப்பை நாம் பெற முடியும். விவசாய பம்ப் செட்டுகளை பொறுத்தவரையில் இன்றைக்கு பயன்படுத்துகின்ற மின்சாரத்திலே சுமார் 26 சதவிதத்தை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

[திரு. செ. செம்மலை] [1987 நவம்பர் 10

புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் இலவசமாக மின்சாரத்தைக் கொடுத்து வருவதாலே விவசாயிகள் மத்தியிலே அதை சேமிக்கின்ற எண்ணமே இப்போது வரமாட்டேன் என்கிறது. அதையும் நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். எனவே நம்முடைய மின்சார வாரியம் அதற்காக மின்சக்தி பயன் பாட்டு தணிக்கை என்ற ஒரு முறையைச் செயல்படுத்தி வருவதாக அறிக்கையிலே சொன்னாலும், அந்த தமிழ்நாடு எனர்ஜி டெவலப்மெண்ட் ஏஜன்சி இதுவரை அதற்காக என்ன முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. பத்திரிகைகளிலே படித்து இருக்கிறோம்; கருத்தரங்குகளை நடத்திக்கொண்டு வருவதாகத்தான். ஆனால் அதையும் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாய பம்ப் செட்டுகளை பொறுத்த வரையில் நம்முடைய மின்வாரியத்துடைய தலைவரேகூட சொன்னார்கள். கெப்பாசிட்டரை பம்ப் செட்டுகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை சேமிக்க முடியும் என்ற கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல 5 குதிரை சக்தியுள்ள மின் மோட்டார்களுக்கு பதிலாக 3 குதிரை சக்தியுள்ள மின் மோட்டார்களை பயன்படுத்தி, மோனோபிளாக் மோட்டார்களை பயன்படுத்துவதன் மூலமாக நிறைய மின்சாரத்தை சேமிக்க முடியும் என்று சொல்கிறோம். அந்த சேமிப்பிலும் நம்முடைய மின்சார வாரியம் அக்கறை காட்ட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கும், மின் நிலையங்களுக்கும் நீண்ட தூரத்திலேயிருந்து நிலக்கரி வருவதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம். காரணம் அப்படி வருகின்றபோது போக்குவரத்திற்கான அந்த செலவையும் கூட்டி நிலக்கரிக்கு விலையை அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி நிலக்கரிக்கு அதிக விலை கொடுப்பதன் மூலமாக உற்பத்திச் செலவு அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது.



1987 நவம்பர் 10] [திரு. செ. செம்மலை]

(பிற்பகல் 12-30)

ஆனால் இன்றைக்கு மைய அரசு, சிமெண்ட், ஸ்டீல் ஆகிய பொருட்களுக்கு இந்தியா முழுவதும் ஒரே சீரான விலை இருக்கும்படியான கொள்கையை வைத்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அதே போன்று நிலக்கரிக்கும் அவர்கள் அந்த முறையைக் கொண்டுவரவேண்டும். அதற்காக நம்முடைய அரசாங்கம் மைய அரசுடன் தொடர்பு கொண்டு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அப்படிப் பட்ட ஒரு நிலைமையை உருவாக்கினால் நமக்குக் கொடுக்கப் படுகின்ற நிலக்கரியினுடைய விலை குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதன்மூலம் உற்பத்தி செய்கிற செலவும் நமக்குக் குறையும்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பலமுறை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்—"உங்களாலும் நாங்கள் கேட்கிற நிலக்கரியைக் கொடுக்கமுடியவில்லை, எனவே வெளி நாட்டிலிருந்து, குறிப்பாக ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி கொடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை மீண்டும் வற்புறுத்தி, தரமான நிலக்கரியை வெளிநாட்டிலிருந்து பெற்று, உற்பத்திச் செலவை குறைத்து நல்ல சூழ்நிலையை உருவாக்க அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், எங்கள் மாவட்டத்தில் இருக்கிற மேட்டூர் மின் நிலையத்திற்கு 4 யூனிட்டுகள் அமைப்பதற்கு ஒரு யூனிட்டிற்கு மத்தியப் பிரதேசத்திலே இருக்கிற தால்ச்சர் மைன் கட்டிலிருந்து நிலக்கரி கொடுப்பதாக மத்திய சர்க்கார் முன்னாலே சொன்னார்கள். ஆனால் அவர்கள் அங்கிருந்து கொடுக்க முடியவில்லை. பிறகு, ஒரிஸ்ஸாவிலே இருக்கிற லஜீகுரா என்ற இடத்திலுள்ள கலிங்கா மைன்ஸிலேருந்து கொடுப்பதாகச் சொன்னார்கள். அதிலே ஒரு பிரச்சினை. அங்கே மைன் கட்டே ஆரம்பிக்கப்படவில்லை என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமைக்குப் பிறகு, என்னூருக்கு சப்ளை செய்து கொண்டிருக்கிற, சிங்கரேணி மைன் கட்டிலிருந்து நிலக்கரியை டைவர்ட் செய்து இருக்கிறார்களே தவிர, மேட்டூருக்கென்று இதுவரை இல்லை. மாண்புமிகு

உறுப்பினர்கள் சொன்னார்கள், "உற்பத்தியைத் துவக்கி விட்டோம். ஆனால் நிலக்கரி தட்டுப்பாட்டின் காரணமாக இன்றைக்கு நாம் கஷ்டத்திலே இருந்து கொண்டிருக்கிறோம்" என்று.

எனவே, அந்த வகையிலே மின்சாரத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் மைய அரசாங்கம், நிலக்கரியை ஒதுக்கீடு செய்வதிலே நம் மீது கவனம் செலுத்தவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, மின்சார வாரியத்தினுடைய பணிகளைப் பாராட்டி, இந்தத் துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற மின் துறை அமைச்சர் அவர்கள் நான் சொன்ன அந்தக் கருத்துக்களை எல்லாம் கவனத்திலே கொள்ள வேண்டும்—இதற்கு அடிப்படைக் காரணமே, மைய அரசின் கையிலேதான் இருக்கிறது—அதையெல்லாம் வாதாடி, போராடி அங்கிருந்து பெற்று நம்முடைய தொழில் வளத்தையும், மின்சார உற்பத்தியையும் பெருக்குவதற்கான வழிமுறைகளை அவர்கள் ஆராயவேண்டும், அதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி வார்த்தையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தைப் பற்றி எத்தனையோ விதமான விமர்சனங்கள் உண்டு. இப்போது கூட, இந்தச் சபையிலே எனக்கு முன்னாலே தோழர் திரு. செம்மலை அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது இந்தத் தரப்பிலிருந்து குறுக்கீடுகள் வந்ததைப் பார்த்தால், ஒரு சமயம் அண்ணா தி.மு.க. எதிர்க்கட்சியாகவும், காங்கிரஸ் ஆளுங்கட்சியாகவும் இருந்து இங்கே விவாதம் நடக்கிறதோ என்ற ஒரு உணர்வுதான் எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால் உண்மை என்னவென்றால், அமைச்சர் தன்னுடைய கருத்துரையிலே கடைசியாகச் சொல்லிக் காட்டியிருப்பது போல, மின் வாரியம் பல பிரச்சினைகளை உள்ளடக்கிய ஒரு சிக்கலான அமைப்பு என்பதுதான் மிகப் பொருத்தமான ஒரு கருத்தாக இருக்கமுடியும்.



அதிலேயே அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "மின் வாரியம் தனது செயல்திறனை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ள போதிலும், மின் வாரியப் பணிகளுக்கான பல பொருட்களை வழங்கும் மைய அரசு, மாநில அரசுத்துறைகளை மற்றும் நிறுவனங்கள் வழங்கும் முழு ஒத்துழைப்பின் மூலமாகத் தான் மின் வாரியம் தனது இலக்கை அடையமுடியும்" என்ற உண்மையையும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதிலே மைய அரசு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு மாத்திரம் அல்ல, மாநில அரசினுடைய மற்ற துறைகள் வழங்கக்கூடிய ஒத்துழைப்பையும் பொறுத்துத்தான் அதனுடைய வெற்றி இருக்கிறது என்று சொல்லும்போது மாநில அரசு சார்பாக யாரும் குறுக்கிடாமல் இருந்ததை நான் பாராட்டத்தான் வேண்டும்.

உண்மையிலேயே இருக்கக்கூடிய வசதி வாய்ப்புகளை எல்லாம் வைத்து நம்முடைய மின் வாரியம் ஒரு பாராட்டத் தக்க பணியை ஆற்றியிருக்கிறது என்பதைச் சொல்வது பொருத்தமாக அமையும் என்று நான் கருதுகிறேன். மின் வாரியத்தினுடைய செலவு அதிகரித்துக் கொண்டு போகிறது. அதற்கான முதலீடும் அதிகரித்திருக்கிறது என்று சொல்லும் போது ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. மற்ற துறைகளிலே முதலீடு என்பது அந்தத் துறை உற்பத்தி செய்யக்கூடிய பொருளைப் பொறுத்துத்தான் கணக்கிடப்படமுடியும்.

ஆனால் மின்சார வாரியத்திலே நாம் முதலீடு செய்யும் போது, மின்சாரத்தினாலே எத்தனை துறைகள் பயன்பெறுகின்றனவோ அத்தனை துறைகளிலும் உற்பத்திச் செய்யக்கூடிய பொருள்களினுடைய வருவாயையும் நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது மின்சார வாரியத்திலே வரக்கூடிய வருமானத்தை மாத்திரம் கணக்கிடாமல், மின்சாரம் வழங்குவதனாலே நன்மை பெறக்கூடிய மற்ற துறைகளிலிருந்து வரக்கூடிய வருமானத்தையும் ஒரு பகுதிக்காகவாவது கணக்கிட்டுப் பார்த்தால்தான் இதில் எவ்வளவு முதலீடு செய்தாலும் கூட நாட்டினுடைய மொத்த முன்னேற்றத்திற்கு ஏற்ற ஒரு

முதலீடு என்ற உண்மையை நாம் பெற முடியும். இதிலே மின்சார வாரியம் வசூலிக்க வேண்டிய தொகையில் காட்டியிருக்கக்கூடிய ஒரு அவசர உணர்ச்சியை நான் பாராட்டு கிறேன். கிட்டத்தட்ட பொதுமக்களிடத்திலே 37 கோடி ரூபாய் வசூலிக்க வேண்டியிருந்த நிலுவையை 2.88 கோடியாக அவர்கள் குறைத்து இருக்கிறார்கள். ஆக, பொது மக்களிடத்திலே வசூலிக்கவேண்டியது பெருமளவுக்கு வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மால்கோ என்ற ஒரு நிறுவனம் மாத்திரம் 20 கோடி ரூபாய் தரவேண்டும். அதிலே வசூலிப்பதிலே ஏன் அந்த அவசர உணர்ச்சி காட்டப்படவில்லை என்ற ஒரு கேள்வி எழுகிறது. அதற்கு அமைச்சரும் பதில் அளிப்பார் என்று நான் கருது கிறேன்.

அதைப்போல, மதுரை மாநகராட்சி 8.57 கோடி தர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு தனி நகராட்சி இவ்வளவு தொகையை தரவேண்டிய அளவுக்கு நிலைமை எப்படி ஆயிற்று என்பதையும் நாம் ஆராய வேண்டும். பொது மக்களிடத்திலே நீண்ட நிலுவையை வசூலிப்பதிலே காட்டிய அவசர உணர்ச்சியையும், தீவிர உணர்ச்சியையும், மற்ற தனியார் நிறுவனங்களிலுள்ள பாக்கியை வசூலிப்பதில் காட்டப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறையில் மின்சார உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டுமென்ற ஒரு கொள்கையை அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தினார்கள். ஏனென்றால் குறிப்பிலே ஒரு தெளி வில்லாத நிலை இருந்ததை அவர் ஆரம்பத்திலேயே தெளி வுறுத்தியதை நான் வரவேற்கிறேன்.

குறிப்பாக, நாம் தொழிற்பேட்டைகளை அமைக்கிறோம். அந்தத் தொழிற்பேட்டைகளில் இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்களெல்லாம் ஒன்று சேர்ந்து தொழிற்பேட்டை களிலேயே ஒரு மின்சார உற்பத்தி ஸ்தாபனத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று முன்வந்தால் அல்லது பல்வேறு பெரிய தொழிற்சாலைகள், ஆலைகள் இடம்பெற்றிருக்கக்கூடிய, பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய பெரிய தொழில் அதிபர்கள் சேர்ந்து தாங்களே மின்சாரத்தை உற்பத்திச் செய்துகொள்ள முன்



வந்தால் அவர்களுக்கு எல்லாவிதமான ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும். நமக்குத் தேவைப்படக்கூடிய மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலை இருக்கும்போது, அதற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும்போது அதற்குரிய அனுமதிக்கு விண்ணப்பித்தாலும்கூட அது உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமல் காலதாமதம் ஏற்படுத்தப்படும்போது இப்படி தனியார் துறையிலும் இந்த அனுமதியை நாம் வழங்குவோமானால் நிச்சயமாக மொத்த தமிழகத்திற்கும் நன்மை ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

இதிலே குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கக்கூடிய, நாம் உணரக்கூடிய குறை, நிலக்கரியினாலே உண்டாக்கப்படக்கூடிய மின்சாரம். இன்று அதனுடைய உற்பத்தித்திறன் குறைந்து வருகிறது. ஏன் என்பதற்கு விளக்கம் தரும்போது, பீகார் மாநிலத்திலிருந்து நமக்கு அளிக்கப்படக்கூடிய நிலக்கரி கிட்டத்தட்ட 50 சதவீதம் சாம்பலாகப் பயன்படுகிறதே தவிர மின் உற்பத்திக்கு தேவைப்பட்ட கலோரியை கொடுக்கக்கூடிய நிலக்கரியாக இல்லாமல், ஒவ்வொரு ஆண்டும் தரங்கெட்ட நிலக்கரி நமக்கு அளிக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட வியாபாரிகள் இப்படிப்பட்ட பொருள்களை அளிப்பார்களானால் அவர்களுக்கு இருக்கக்கூடிய உடன்பாடு நீக்கி, யார் உயரிய பொருள்களைக் கொடுப்பார்களோ அவர்களிடத்தில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப் படும். ஆனால் அரசுகளுக்கு இடையிலே நடக்கக்கூடிய இப்படிப் பட்ட பரிவர்த்தனையில் இவ்வளவு தரங்கெட்ட சாக்கை தொடர்ந்து தமிழகம் வாங்கித்தான் தீரவேண்டுமா என்பதுபற்றி தீர யோசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் அறிந்தவரையில் ஒரு சமயம் தூத்துக்குடி அனல் மின் நிலையத்துக்கு நிலக்கரி, ஆஸ்திரேலியாவிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டதில், ஒரேயொரு முறை பரிட்சார்த்தமாய் செய்து பார்த்தபோது. ஒரு கோடி ரூபாய் தனியாக இலாபமாகக் கிடைத்தது என்ற புள்ளிவிவரம் இங்கே சொல்லப்பட்டது. அப்படியானால் ஆண்டுதோறும் தரங்கெட்ட கரியை வாங்கி மின் உற்பத்தியையும் குறைவாகச் செய்து நாம்

திறந்து கொண்டிருப்பதைவிட, மத்திய அரசில், நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர்களுடைய பரிந்துரையையும் பெற்று அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று உடனடியாக அனுமதி பெற்று, அந்நிய நாடுகளில் எங்கெல்லாம் நிலக்கரி கிடைக்கிறதோ அங்கிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்கிற முயற்சியில் தீவிரமாக அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, வடசென்னை அனல் மின் திட்டத்திற்காக ஏசியன் டெவலப்மெண்ட் பேங்கிலிருந்து ரூ. 155 கோடி பெறுமானமுள்ள உதவி கிடைத்திருக்கிறது என்று இங்கே குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட உதவிகளை வேறு அகில உலக வங்கிகளிலிருந்தும் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டால் என்ன என்று அரசு யோசிக்க வேண்டும். நான் அறிந்த வரையில் "அரபு டெவலப்மெண்ட் பேங்க்" இப்படிப்பட்ட கடன்களைக் கொடுக்கிறது. அதைப் போலவே இஸ்லாமிய டெவலெப்மென்ட் பேங்க்-ம் இப்படிப்பட்ட கடனை மிகத் தாராளமான முறையில் மிகக் குறைந்த வட்டிக்கு வழங்கி வருகிறது. குஜராத் மாநிலம் அப்படிப்பட்ட கடனைப் பெற்று பயனடைந்திருக்கிறது. அண்மையில் கூட பின்தங்கிய ஒரு பகுதியில் ரெயில்வே லைன் போடுவதற்காக ரூ. 50 கோடியை அரபு டெவலப்மென்ட் வங்கி கடனாகத் தந்து உதவி இருக்கின்றது. ஏற்கெனவே ஒரிசா மாநிலத்தில் கோரக்பூர் பகுதியில் ரெயில்வே லைன் போடுவதற்காக ரூ. 64 கோடியை மிகக்குறைந்த வட்டிக்கு, மிகச் சிறந்த சலுகைக்கு அவர்கள் பெற்றிருக்கிறார்கள். எனவே நாமும் அப்படிப்பட்ட ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். மின் வழங்கும் துறையினர் இப்படிப்பட்ட முயற்சியைச் செய்வார்களானால் நிச்சயமாக அப்படிப்பட்ட உதவி நமக்கும் கிடைக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-40)

கடைசியாக நான் ஒன்றை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். தமிழகத்தினுடைய தலைநகரான நமது சென்னையில் மின்



வழங்குதுறை அவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொல்ல முடியாது. நாடெல்லாம் மின்சாரம் வழங்கப்படுகிறது என்று சொல்லப்பட்டாலும்கூட பல்வேறு பகுதிகளில் பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன. எங்காவது ஒரு இடி இடிக்குமானால் சென்னை நகரம் முழுவதுமே இருள் சூழ்ந்து விடுகிற நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் எப்போதோ ஒரு காலத்தில் போடப்பட்ட கேபிள்கள் என்று சொல்லப்படுகிறது. எல்லா இடங்களிலும் பழுதுபட்டிருக்கிற ஒரு நிலையில் நாம் வழங்குகிற மின்சாரம் சரியாகப் பயனீட்டாளர்களுக்குக் கிடைக்காதது மாத்திரமல்ல, இடையில் மெத்தவும் சேதாரப்படக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே ஒரு காம்ப்ரெஹன்சிவ் பிளானாகப் போட்டு சென்னை நகரில் முழுக்க முழுக்க புதிய கேபிள்களைக் கொண்டு மின்சாரம் வழங்கும் வகையில் ஒரு விரிவான திட்டத்தைப் போட்டு அமல் நடத்தினால் நகர மக்களுக்கு நன்மை ஏற்படுவது மட்டுமல்லாமல் நாமும் பெரிய இழப்பைத் தவிர்க்க முடியும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வளவு நெருக்கடிகளுக்கிடையேயும் இந்த நிறுவனம் இன்று திறமையாகச் செயல்பட்டு மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகப் பாராட்டுக்குரிய வகையில் பணியாற்றியிருப்பதற்காக அதனுடைய தலைமை அலுவலர் அவர்களுக்கும், அந்த நிறுவனத்திற்கும் நான் மனதார என் பாராட்டுதல்களைத் தெரிவித்து என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. கி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற 1987—88 ஆம் ஆண்டுக்கான மின் வாரிய நிதிநிலை அறிக்கையின்மீதும், 1986—87 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாட்டினுடைய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும் சாதனமாக மின்வாரியம் இருக்கிற காரணத்தால், தமிழகத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்க வேண்டு

[திரு. கி. அன்பழகன்] [1987 நவம்பர் 10

மென்றும், அதைப் போலவே வேளாண்மை மற்றும் தொழில் துறையும் சிறந்த முறையில் அமைய வேண்டும் என்றும் இன்றைக்கு மிகவும் சிறப்பான திட்டங்களைத் தீட்டி மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் மின்துறையிலும் சிறந்த சாதனை படைத்து வருகிறது இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்புத் தந்தமைக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொண்டு, பற்றாக்குறை மாநிலமான தமிழகத்தில், மின் உற்பத்தியைப் பொறுத்த வரையில் தன்னிறைவு பெறுகிற மாநிலமாக உருவாக்கிக் காட்டுகிற பணியில் இன்றைக்குத் தமிழக மின்வாரியமும், மின்துறையும் மிகச் சிறப்பான முறையில் செய்து வருவதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மின் வளர்ச்சிக்காக எந்த அளவுக்குச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாக 1987—88 ஆம் ஆண்டிலே மட்டும் மின் உற்பத்திச் செலவுக்காக ஒதுக்கியுள்ள தொகை 408 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிய மின் திட்டங்களுக்கான திட்டங்களைத் தீட்டாமல், புதிய திட்டங்களுக்கு அனுமதி பெறாமல், புதிய மின் திட்டங்களைச் செயற்படுத்தாமல் அன்றைக்கு இருந்த அரசு செயல்பட்டதால், அவர்கள் செய்த அந்தத் தவற்றின் பின்விளைவுகளை இன்றைக்கும் நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். அன்றைய அரசு தொலை நோக்கோடு புதிய மின் திட்டங்களைத் தீட்டி, செயல்பட்டு, மின் உற்பத்தியை அதிகமாக்கித் தந்திருந்தால் இன்றைக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. ஆனால் இந்த அரசும், மின் துறையும் அந்தச் சூழ்நிலையை மாற்றி, மிகச் சிறந்த நிர்வாகத்தை அமைத்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.



1987 நவம்பர் 10] [திரு. கி. அன்பழகன்]

கடந்த 10 ஆண்டுகளில் புரட்சித் தலைவர் அரசியல் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் துறையான மின் துறை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றாக ஒருசில புள்ளி விவரங்களை எடுத்துக் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

1977-லேயிருந்து 1987 ஆம் ஆண்டுவரை தமிழகத்திலே மின் வாரியத்தில் கூடுதலாக 1,120 மெகாவாட் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1976-77-ல் மின் பயனீட்டளவு 8,023 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது 1986-87-ல் 16,862 மில்லியன் யூனிட்டுகளாக, இரு மடங்காகப் பெருகியுள்ள சாதனையை மின் துறை செய்திருக்கிறது. அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி 1976-77-ல் 2,176 மில்லியன் யூனிட் என இருந்தது 1986-87-ல் 6,129 மில்லியன் யூனிட்டுகளாக, மூன்று மடங்காக உயர்ந்து, உற்பத்தி பெருக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

1976-77-லே தமிழ்நாடு மின் வாரியத்தில் அனல் மின் நிலையங்களின் சராசரி மின் சுமை 46 விழுக்காடாக இருந்தது. 1986-87 ஆம் ஆண்டில் என்றைக்கும் நிகழ்த்த முடியாத சாதனையாக 64.61 விழுக்காட்டினை எட்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இங்கே, மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கிறவர்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லும்போது, சிலருக்குக் கோபம் வரும். ஆனால் எங்களுடைய நிலைமையை இங்கே எடுத்துச் சொல்வதிலே தவறக்கூடாது என்பதால் சற்று விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திற்கு வருகின்ற மத்திய அரசின் பொறுப்பிலே உள்ளவர்கள், தமிழகத்திலே இன்றைக்கு அனல் மின் உற்பத்தி தரத்திலே தாழ்ந்திருக்கிறது என்று குற்றச்சாட்டு சொல்லுகிறார்கள். ஆனால் நம்முடைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அகில இந்தியாவிலே அனல் மின் உற்பத்தி விழுக்காடு 51 ஆக இருந்தாலும், தமிழகத்தினுடைய அனல் மின் உற்பத்தி விழுக்காடு 52 ஆக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இன்றைக்கு

[திரு. கி. அன்பழகன்] [1987 நவம்பர் 10

எண்ணூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஆகியவை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. என்பதற்கு அத்தாட்சியாக, மத்திய அரசினுடைய பரிசை மின் உற்பத்திச் செயல் திறனுக்காக இரண்டு முறை பெற்றிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே எவ்வளவு தடங்கல்கள் இருந்தாலும் அனல் மின் நிலையங்கள் மிகச் சிறப்பாக இயங்கும் அளவுக்கு இன்றைக்கு மின்சார வாரியம் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் அதிக அளவுக்கு மின் கம்பித் தொடர் இருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். 1976—77 ஆம் ஆண்டிலே 2.85 இலட்சம் கிலோ மீட்டர் அளவு இருந்த மின் கம்பித் தொடர், இன்றைக்கு, 1986—87-ல் 3.72 இலட்சம் கிலோ மீட்டர் அளவுக்கு அதிகரித்திருக்கிறது. எந்த அளவுக்குத் தமிழகம் இந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

1976—77-லே மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 32.23 லட்சமாக இருந்தது. இன்றைக்கு அது இரண்டு மடங்காகப் பெருகி, 67 இலட்சமாக அதிகரித்துள்ளதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகம் முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும், ஆதி திராவிட குடியிருப்புகளுக்கும் மின் வசதி அளித்த பெருமை இந்தியத் திருநாட்டிலேயே தமிழகத்திற்குத்தான் இருக்கிறது. அந்த சரித்திர சாதனையைப் படைத்திருப்பது புரட்சித் தலைவர் அரசு என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன். வேளாண்மை விசையேற்றங்களுக்கும் இன்றைக்கு தமிழக அரசு எப்படி சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றது என்பதற்கு இன்னொரு சான்று, இந்தியத் திருநாட்டிலே அதிக அளவுக்கு பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தந்திருக்கின்ற பெருமையை நம் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதாகும். ஏறத்தாழ பதினொன்றரை லட்சம் பம்ப் செட்டுகளுக்கும் அதிகமாக தமிழகத்திலே மின் இணைப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.



1987 நவம்பர் 10] [திரு. கி. அன்பழகன்]

அதோடு மட்டுமல்லாமல், இந்த நடப்பாண்டில்கூட இன்னும் 40 ஆயிரம் விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தருகின்ற சாதனையை இன்றைக்கு திட்டமிட்டு தமிழகம் செயல்படுத்துகிறது என்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் 40 ஆயிரம் குடிசைகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கவேண்டும் என்ற அறிவிப்பை இங்கே அறிவித்திருக்கிறார்கள்.

இங்கே அனைவரும் எடுத்துச் சொன்னதுபோலவே மின்சாரத் துறை இன்றைக்கு பல பிரச்சினைகளை உள்ளடக்கிய, சிக்கல்களைக் கொண்டுள்ள அமைப்பாக இருக்கின்ற காரணத்தினால், வாரியம் தன்னுடைய செயல் திறனைச் சிறப்பாக அமைக்கின்ற வகையில் இன்றைக்குப் பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது. இருந்தாலும் மத்திய அரசினுடைய நடவடிக்கையாலும் ஒத்துழைப்பாலும்தான் அது நிறைவேறும். இன்றைக்கு சிறப்பான நிலையை அடைகின்ற அளவுக்கு வழிவகைகள் அமைய இருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசு அதற்கு முழு அளவுக்கு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று இங்கே வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். தாம் குறைந்த நிலக்கரியும், இயந்திரங்கள் பழுது அடைந்தால் பழுது பார்த்து அனுப்புவதிலும், நிலக்கரி வருவதிலும் காலதாமதங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் காரணமாகவும் தமிழகத்தினுடைய அனல் மின் திட்டங்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே தூத்துக்குடி அனல் மின் நிலையம் பலமுறை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கின்றது.

எண்ணூரிலே அனல் மின் நிலையம்கூட சென்ற ஆண்டு பாதிக்கப்பட்டபோது, மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கின்ற பெல் நிறுவனம் காலந்தாழ்த்தி இயந்திரங்களை பழுதுபார்த்து அனுப்பியதன் காரணமாக நம் விழுக்காடு குறைகின்ற அளவுக்கு சூழ்நிலைகள் ஏற்பட்டது என்பதை இங்கு

எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணமே குறைகளை சொல்கின்றபோது, அந்த குறைகளைத் திருத்திக் கொண்டு அந்த காலதாமதம் ஏற்படுவதைக் குறைத்து விரைவு படுத்தினால் நிச்சயமாக இந்த திட்டங்கள் செயல்படுவதற்கும் அதனால் மக்களுக்குரிய நல்ல பலன்களை ஏற்படுத்தித் தருவதற்கும் அது வழிவகையாக அமையும் ஆகவே மைய அரசைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட செயல்களைத் தாமதப்படுத்தாத அளவுக்கு அவர்களும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும் திட்டங்களுக்கு மிக விரைவாக அனுமதியை தரவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, இந்த திட்டங்களுக்கு நீண்டநெடுங்காலமாக அனுமதி தராமல் தாமதம் ஆகியிருக்கின்றதால், அவைகளை விரைவுபடுத்த வழிவகை செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில் கேஸ் டர்பைன் அமைக்கவேண்டும் என்ற திட்டங்களை பல ஆண்டுகளாக தமிழக அரசு தமிழக மின் துறை மின் சார்பாக மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கின்றது. அந்த 'கேஸ் டர்பைன்' தருவார்களானால், மின் தடை ஏற்படுகின்றபோது, அந்த தடை இல்லாமல் மின் உற்பத்தி செய்து அளிக்கின்ற வகையில் சிறப்பான முறையில் நடைபெறுகின்ற அளவுக்கு அமையும். கேஸ் டர்பைன் இருக்குமானால் அந்த திட்டம் சிறப்பாக செயல்படும். தமிழக மின் வாரியத்திலே ஏற்படுகின்ற இந்த சூழ்நிலைகளை மத்திய அரசு உணர்ந்து செயல்படவேண்டும். மத்திய அரசு மராட்டிய மாநிலத்திலே கூட அனுமதி வழங்கியிருக்கின்றது. தமிழகத்தினைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே இருக்கின்ற திட்டங்களுக்கு குறிப்பாக அனல் மின் நிலையங்களுக்கு, 'கேஸ் டர்பைன்' அமைக்கின்ற அந்த அனுமதியை மத்திய அரசு வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு மத்திய அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசினுடைய அனல் மின் உற்பத்தியிலேயிருந்து அளிக்கப்படுகின்ற அந்த பெரும்பேர் அனல் மின் உற்பத்தியைப் பிரித்தளிக்கும் போது மத்திய அரசு கொள்கையால் இன்றைக்கு தமிழகத்திற்குப் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டாக வேண்டும். மாநிலங்களுடைய மின் பற்றாக்குறையை கணக்கெடுப்பிலே பார்த்து, அந்த பெரும் பேர் அனல் மின் நிலையத்தில் அல்லது மத்திய அரசினுடைய மின் உற்பத்தி அளவுகளிலிருந்து மின்சாரத்தை வழங்குவார்களானால் பற்றாக்குறை மாநிலங்கள் பயனைப் பெறமுடியும். மாநிலத்தினுடைய சென்ற ஆண்டினுடைய மின் உற்பத்தியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு செயல்படுத்துகின்றபோது, இன்றைக்கு மின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குரிய நிதியினை செலவு செய்யத் தயாராக இருந்தும், மின் ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் தமிழகத்தினுடைய இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை.

ஆனால் அதே நேரத்தில் மற்ற மாநிலங்களில் மின் திட்டங்களுடைய ஆதாரங்கள் அதிகமாக இருந்தும் அவற்றிற்கு நிதி ஒதுக்கி செயல்படுத்த முடியாத பல சூழ்நிலைகளில் மற்ற மாநிலங்கள் இருக்கின்றன. ஆகவே மாநிலங்களை இந்த அளவிலே ஒப்பிட்டுப் பார்ப்பதைவிட மின் பற்றாக்குறை மாநிலம் என்ற அளவிலே கணக்கிலே எடுத்துக்கொண்டு, மத்திய அரசினுடைய பொறுப்பிலேயிருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரத்தை வழங்கவேண்டும். அந்த வகையிலே நெய்வேலியில் உற்பத்தி செய்கின்ற அனல் மின் உற்பத்தி முழுமையும் தமிழகத்திற்குத் தரவேண்டும் என்று இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கி. அன்பழகன்] [1987 நவம்பர் 10

அதுபோல இன்றைக்கு மத்திய அரசு தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டிய பல பிரச்சினைகள் இருக்கின்றன. சோழத் துப்புழா திட்டம் தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் இடையிலே பேசித் தீர்க்க வேண்டிய ஒன்று. பாண்டியாறு புன்னம்புழா திட்டம் கேரளா, தமிழ்நாடு ஆகியவற்றுக்கிடையே பேசித் தீர்க்க வேண்டிய ஒன்று. மேல் அமராவதி திட்டம் காவிரி ஒகனேக்கல் பிரச்சினை சம்பந்தப்பட்டது. அதுபோல சண்முகா நதி புனல் மின் திட்டமும் கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குரிய திட்டமாகும். இப்படி மாநிலங்களுக்கிடையே இருக்கிற பிரச்சினைகளில் மத்திய அரசு தலையிட்டு விரைவில் தீர்த்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தைப் பொறுத்தவரையில் குடிசைகளுக்கு மற்றும் விவசாயிகளுக்கான பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் தமிழகம் சரித்திர சாதனை படைத்திருக்கிறது. அந்தவகையில் மின்வாரியம் தமிழ்நாட்டிலுள்ள தெருவிளக்குகளுக்கு மின்னிணைப்பு தருவதிலும் சற்று சலுகையை அளிக்க முன்வரவேண்டும். பல ஊராட்சிமன்றங்களின் சார்பாக புதிய தெரு விளக்கு அமைப்பதற்கான கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. பல ஊராட்சி மன்றங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே அதற்குரிய பணத்தைச் செலுத்தி விட்டு காத்துக்கொண்டிருக்கின்றன. பணம் செலுத்தியும் இன்னும் தெரு விளக்கு இணைப்பு கொடுக்கப்படாமல் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி கேட்டால் போதிய மின் கம்பங்கள் இருப்பில் இல்லையென்று காரணம் சொல்லப்படுகிறது. பணத்தைச் செலுத்திவிட்டுக் காத்துக்கொண்டிருக்கும் ஊராட்சி மன்றங்களைப் பொறுத்த மட்டிலுமாவது, சலுகை அடிப்படை



1987 நவம்பர் 10] [திரு. கி. அன்பழகன்]

யிலாவது அரசு உடனடியாக மின் இணைப்பினை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிட மக்களுக்காக அரசின் சார்பாக இலவசமாக வீடுகள் கட்டப்படுகின்றன. குடிசைகளுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கும்போது அரசின் சார்பாக இலவசமாக கட்டித் தரப்படுகின்ற வீடுகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேலூர் மின் திட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அதில் ஒன்றைத் திருப்பத்தூரில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருந்துக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்த மின் திட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட நிலையிலும் வேலூரிலேயே செயல்பட்டுக் கொண்டிருப்பதால் ஒரு திட்டத்தை திருப்பத்தூரில் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்களும், கிராமங்களில் வாழ்கின்ற மக்களும் மின்சாரத்தினுடைய முழுப் பயனையும் அடையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இன்றைக்கு கிராமங்களில் பல இடங்களில் டிரான்ஸ்பார்மர்கள் எரிந்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. அப்படி எரிந்துவிட்டால் உடனடியாக அவற்றை பழுது பார்க்காத சூழ்நிலை இருக்கிறது. இதனால் பல இடங்களில் மாதக் கணக்கில் மின்சாரம் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒவ்வொரு விவசாயப்

பெருங்குடி மக்களும் ஒவ்வொரு விதத்தில் இழப்புக்கு ஆளாகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு கோட்டப் பொறியாளரும் கூடுதலாக டிரான்ஸ்பார்மர் வைத்துக்கொள்வதற்கான அனுமதியைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின் துறையைப் பொறுத்தவரையில் எல்லா அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன. இன்றைக்கு வேலூர் மின் திட்டத்தை இரண்டாகப் பிரித்த பிறகும் கூட திருப்பத்தூரில் ஒன்றை இயங்க வைக்கவில்லை என்று காரணம் கேட்டால் திருப்பத்தூரில் போதிய கட்டட வசதியில்லை என்று பதில் சொல்கிறார்கள். இன்றைக்கு தமிழகம் முழுவதும் கட்டட வாடகை என்கிற பெயரில் மின்வாரியத்தால் பல லட்சம் ரூபாய் மாதந்தோறும் கொடுக்கப்படுகிறது. ஆகவே மின் வாரியம் தனியாக அக்கறை எடுத்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் அலுவலகத்திற்குரிய நிரந்தர கட்டடங்களை கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்வாரிய ஊழியர்களைப் பொறுத்தவரையில் ஹெல்பர்கள், இளநிலை உதவியாளர்கள் போன்றவர்கள் எல்லாம் கிராமப்புறங்களில் பணியாற்றுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் கிராமங்களில் வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் அவர்கள் கிராமப்பகுதியிலேயே தங்கியிருந்து நல்ல முறையில் செயலாற்ற வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

கடைசியாக ஒரே பிரச்சினையைச் சொல்லி முடித்து விடுகிறேன். எங்களுடைய வடஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 'பாலாறு படுகை விதி' என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின் காரணமாக புதிதாக மின்இணைப்பு பெறுவதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. பாலாற்றை ஒட்டி இருக்கிற பகுதிகளில் புதிதாக மின்இணைப்பு பெற வேண்டுமென்றால் பாலாறு படுகை விதியின்கீழ் சான்றிதழ்



பெற வேண்டும். சான்றிதழ் வேண்டுமென்று கேட்டால் வருவாய்த்துறை அதிகாரிகள் கொடுக்க மறுக்கிறார்கள். அதனால் பெரிதும் பாதிக்கப்படுவது எங்கள் மாவட்ட விவசாயிகள்தான். புதிய மின்இணைப்புப் பெற முடியாமல் விவசாயிகள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்த விதியைத் தளர்த்தி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல வழிவகைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் நம்முடைய மின்சாரத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றி, தமிழ்நாட்டில் எந்தவிதமான மின்சாரப் பற்றாக்குறையும், மின்சார வெட்டும் வராது கட்டிக்காத்து வருவதால் மின்சார வாரியத்தின் பணிகளைப் பாராட்டி, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது ஜனதா கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, சக சட்டமன்ற உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் இந்த மின்சார வாரியத்தினுடைய பல்வேறு திட்டங்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லும்போது பல ஆண்டு காலமாக மத்திய அரசு பல திட்டங்களுக்கு அனுமதி தராமல் கிடப்பில் போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்போது மத்தியிலே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த சக சட்டமன்ற உறுப்பினர் திருமதி இராஜாம்பாள் அவர்கள் மறுத்தார்கள். நான் அதைப் பார்க்கும்போது தமிழ்நாட்டிலே ஆளுகின்ற கட்சியும் மத்தியிலே ஆளுகின்ற கட்சியும் ** பார்க்கும்போது, சென்ற மூன்று மாதங்களாக இந்த . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** அது ஒரு கருத்துப் பரிமாற்றம்தான்; நீங்கள் குறிப்பிடுகிறமாதிரி இல்லை. ஆகவே,

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) கருத்துப் பரிமாற்றம் என்று வேண்டுமானால் குறிப்பிடலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : கருத்துப் பரிமாற்றம் என்று மாற்றிக் கொள்கிறேன். இரண்டு கட்சிகளுக்குமிடையே ஏற்பட்ட கருத்துப் பரிமாற்றத்தைப் பார்க்கும்போது சென்ற மூன்று மாதங்களாக ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டு சொல்வது உண்மையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : நீங்கள் உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள். எது எதற்கோ முடிச்சுப்போட வேண்டும், எதை எதையோ ஒப்பிட்டுப் பேசவேண்டும் என்று எண்ண வேண்டாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : எது எப்படி இருந்தாலும், கருத்துப் பரிமாற்றத்தின் மூலமாக தமிழ்நாட்டிற்குப் பல நன்மைகள் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மின்சார இலாகாவைப் பற்றி குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மின்சார இலாகா சரியாகச் செயல்பட்டால் தான் உலகம் இயங்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பொறுப்பான வாரியம் இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அனல் மின் திட்டங்களுக்குத் தேவையான தரமான நிலக்கரி கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 1975-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிலக்கரியின் தரத்திற்கும் இப்போது வழங்கப்படுகிற நிலக்கரியின் தரத்திற்கும் மிகுந்த வேறுபாடு இருப்பதாகச் சொல்கிறார்கள். குறிப்பாக தூத்துக்குடியில் இந்த நிலை கண்கூடாகத் தெரிகிறது. அதனால் தூத்துக்குடி அனல் மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று தரக்குறைவான நிலக்கரியின் காரணமாக 1979-ம் ஆண்டு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் இருந்த மின் உற்பத்திக்கும் இப்போது இருக்கின்ற மின்சார





உற்பத்திக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது : உற்பத்தி அதிகரிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்லாமல், நிலக்கரியில் கற்கள், களிமண், சாம்பல் அதிகமாக இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு அனல் மின் நிலையமும் ஒவ்வொரு நிலக்கரி சுரங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட அந்த அனல் மின் நிலையம் குறிப்பிட்ட அந்த நிலக்கரி சுரங்கத்தைத் தான் நம்பி இருக்கவேண்டியிருக்கிறது. இந்தக் கொள்கையை மத்திய சர்க்கார் அறிவித்திருக்கிறது என்று கருதுகிறேன். இன்றைக்கு மேட்டூர் அனல் மின் நிலையம் சிங்கரேணி நிலக்கரி சுரங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது; அங்கிருந்து நிலக்கரி கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் தற்போது எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை எல்லாம் பார்க்கும் போது நீங்கள் ஏன் மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து இந்தச் சபையிலே ஒரு தீர்மானத்தைப் போடக்கூடாது? இப்படிப்பட்ட நிலக்கரி சப்ளையினால் இந்த மாநிலம் பாதிக்கப்படுகிறது. இந்த மாநிலம் பாதிக்கப்படுகிறது என்று சொல்லுகின்றபோது இங்கே இருக்கிற, மத்தியிலே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களும் சேர்ந்து ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினால் என்ன? ஒரு அனல் மின் நிலையம் ஒரு நிலக்கரி சுரங்கத்தோடு இணைக்கப்பட்டு, அங்கிருந்து நிலக்கரி வரவில்லை என்றால் மின் உற்பத்தி எப்படி வரும்? தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வழங்கப்படும் நிலக்கரி மிகவும் தரக்குறைவாக இருக்கிறது. நாங்கள் அங்கே சென்றபோது பார்த்தோம். நிலக்கரியோடு கலந்துவந்த கற்களைத் தனியாகப் போட்டு தூத்துக்குடியில் ஒரு கல் மலையாக வைக்கப்பட்டிருக்கிறது. அதை ஏதோ ஒரு அளவுக்குக் கொடுத்தால்தான் திரும்ப ரீஃபண்ட் தருவார்களாம். எப்படி அந்தப் பணம் வரும் என்பது தெரியவில்லை. இந்த மாதிரி நிலைமை எல்லாம் இருந்தால் எப்படி அனல் மின் நிலையம் செயல்பட முடியும்? எனவே இதை ஒரு தீர்மானமாகப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். நாங்கள் விரும்புகிற

[திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 10

இடத்தில் வாங்கிக்கொள்வதற்கான ஏற்பாடு இருக்கவேண்டும் என்றும், அதற்கான அனுமதி தரவேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானத்தைப் போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

41 ஆயிரம் மின்னிணைப்பு கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். அதேபோல் குடிசைகளைப் பொறுத்தவரையில் ஏழு இலட்சத்து நாற்பத்தொட்டாயிரம் மின்னிணைப்புகள் கொடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். ஆனால் தமிழ்நாட்டில் மின்னிணைப்பு கொடுக்கப்பட வேண்டிய குடிசைகள் இலட்சக்கணக்கில் இருக்கின்றன. ஆனால் நீங்கள் இந்த ஆண்டு கொடுத்திருப்பது 35 ஆயிரம் குடிசைகளுக்குத்தான். 7 இலட்சத்திற்கு மேற்பட்ட குடிசைகளுக்கு மின்னிணைப்பு கொடுத்ததாகச் சொன்னாலும்கூட இந்த ஆண்டு குடிசைகளுக்குக் கொடுக்கப்பட்ட இணைப்பு 35 ஆயிரம் குடிசைகளுக்குத்தான் அப்படித்தான் இதிலே போட்டிருக்கிறீர்கள். அரசாங்கம் கொடுக்கிற சலுகைகள் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் இதை அதிகப்படுத்தி, இருக்கின்ற அனைத்து குடிசைகளுக்கும் நல்ல முறையில் மின்னிணைப்பு கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அனைத்து கிராமங்களுக்கும் மின்னிணைப்பு கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் அரசாங்கத்தினுடைய கொள்கை காரணமாக ஒரு வருடத்திற்கு ஒரு பல்புதான் ஊராட்சி மன்றத்தின் சாலையில் போடவேண்டுமென்று இருக்கிறது. அதனால் கிராமங்கள் இன்னும் இருளிலேதான் மூழ்கிக் கிடக்கின்றன. ஒரு பல்பு போட்டால் ஒரு வருடம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் என்ன செய்வது? அப்படியே இருளிலே மூழ்கிக் கிடக்கவேண்டும். ஊராட்சி ஒன்றியம் எப்படிப் பணம் கொடுக்க முடியும்? அப்படிக் கொடுப்பதற்கு ஊராட்சி மன்றத்திற்கு அனுமதி இல்லை. ஊராட்சி ஒன்றியம் ஒரு பல்பு கொடுத்தால் அது ஒரு வருஷம் எரிந்தாகவேண்டும். காரண்டி உள்ள பல்பாக வாங்கவேண்டுமென்றெல்லாம் சொல்லி இருக்கிறீர்கள். எங்கே போய் காரண்டியைப் பார்த்துக்கொண்டு இருப்பது? பல்ப் போட்ட மறுநாளே ஃப்யூஸ் போய்விடுகிறது. எனவே, கிராமங்



1987 நவம்பர் 10] [திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்]

களுக்கு மின்னிணைப்பு கொடுத்தும்கூட அவை இருளிலேதான் மூழ்கிக் கிடக்கின்றன. இதையும் இந்த அரசு கவனிக்க வேண்டும். ஒரு வருடத்திற்கு ஒரு பல்பு என்பதனைத் திருத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 23,000 பம்ப் செட்களுக்குத் திரும்ப இணைப்பு கொடுக்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமெரிக்காவிலிருந்து உத்தரவு போட்டார்கள், 9—10—1987-ல் என்று நினைக்கிறேன். உத்தரவிட்டு ஒரு மாதம் ஆகிவிட்டது. எதற்கும் இன்னும் இணைப்பு கொடுத்ததாகத் தெரியவில்லை. 23,000 பம்ப் செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கப்படவில்லை. காரணம் என்னவென்றால் 10 கோடி ரூபாய் அதற்கு ஆகும் என்று சொல்கிறார்கள். ஏன் என்று கேட்டால் மின்னிணைப்பு துண்டிக்கிறபோது அந்தப் போல்களை எல்லாம் கூட தூக்கிக் கொண்டு போய்விட்டனர் மின்சார வாரியத்தினர். ஏன் அப்படிச் செய்யவேண்டும்? வீடுகளுக்கான மின்னிணைப்பைத் துண்டிக்கிற போது துண்டித்துவிட்டு, பின்னர் அவர்கள் பணத்தைக் கட்டியவுடன் மின்னிணைப்பு கொடுப்பதுபோல் செய்யவேண்டியது தானே, எதற்காக போல்களை எல்லாம் எடுத்துச் செல்ல வேண்டும். போல்களை எல்லாம் அகற்றுவதால்தானே 10 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு ஏற்படும் என்று சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் அரசாங்கத்தின் பணம்தானே— அதாவது வாரியத்தின் பணம் தானே வேஸ்டாகிறது? மேலும் முதல்வர் அவர்கள் போட்ட உத்தரவையும் உடனடியாகச் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. எனவே சீக்கிரமாக 23,000 பம்ப் செட்களுக்கும் மின்சார இணைப்பு கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் முதல்வர் அவர்கள் இட்ட ஆணை நிறைவேற்றப்பட்டு வருகிறது. எங்கே நிறைவேற்றப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதுவும் நிறைவேற்றப்படும். மின்னிணைப்பு துண்டிப்பானாலும் மின்னிணைப்பு கொடுக்கப்பட்ட கம்பங்கள் அகற்றப்பட்டிருந்தாலும் எதுவாக இருந்தாலும்

தண்ணீர் எங்கே கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறதோ அப்படிப் பட்ட எல்லா இடங்களுக்கும் இதுவரையில் மின்னிணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மின்னிணைப்பைத் துண்டித்தாலும் ஏன் நீங்கள் போலை அகற்றிக்கொண்டு செல்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. மக்கள் எப்படியாவது பணத்தைக் கட்டத் தான் போகிறார்கள். அப்படி பணம் கட்டி திரும்ப ரீகனெக்ஷன் வாங்கத்தான் போகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் ஏன் போலை எல்லாம் தூக்கிக்கொண்டு போகிறீர்கள்? போல் இருக்கின்ற இடங்களை எல்லாம் ஏன் காலி பண்ணுகிறீர்கள்? போல் இருக்கட்டுமே, இதைத்தான் நான் சொல்ல விரும்பு கிறேன். அமைச்சர் அவர்கள் கேட்டார்கள், எங்கெங்கு அப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டு மென்று. என்னிடம் லிஸ்ட் இருக்கிறது, அதைத் தருகிறேன். அதையும் அவர்கள் பார்த்துச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பம்ப் செட்டுகளுக்கான உத்தரவை வாங்கும்போது 5 ஹார்ஸ் பவருக்கான உத்தரவை வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஓட்டிக்கொண்டிருப்பது 3 ஹார்ஸ் பவர் என்ஜின்தான். அதற்கான அனுமதி இருக்கிறது. அப்படி சில பேர் வாங்கி யிருக்கிறார்கள், ஆனால் அவர்களிடமிருந்து 5 ஹார்ஸ் பவருக் கான பணம்தான் வசூலிக்கப்படுகிறது, அதைத் திரும்ப 3 ஹார்ஸ் பவருக்குக் கொண்டுவரவேண்டுமென்றால் அதற்குப் பல ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இதைச் சொல்லவே வெட்கமாக இருக் கிறது. எத்தனை ஹார்ஸ் பவர் உள்ள என்ஜினை உபயோகப் படுத்துகிறார்களோ அதற்கு மட்டும் கட்டணம் செலுத்துகின்ற வகையில் வசதி செய்யவேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் 2 மாதங்களுக்கு ஒரு தடவை வாங்கவேண்டுமென்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைப் பொறுத்த வரையில் 2 கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி



யிருக்கிறார்கள். அதாவது பணியாளர்களுக்கான செலவில் 2 கோடி ரூபாய் இலாபம் என்று சொல்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் சாதாரணமாக 10 ரூபாய், 15 ரூபாய் கூட கட்ட முடியாமல் ஏழைகள் திண்டாடுகிறார்கள். தவணை முடிகிறபோது எங்கேயாவது கைமாற்று வாங்கித்தான் கட்டுகிறார்கள். அப்படி இருக்கும்போது நீங்கள் 2 மாதம் சேர்த்து வசூலிக்கிறீர்கள் என்றால் எப்படி அது சரியாக இருக்கும்? ஏழைகள் தங்களுடைய மின்னிணைப்பை இழந்து திண்டாடிக்கொண்டு அலைய வேண்டிய நிலைமைதான் ஏற்படும். இப்போது 2 கோடி ரூபாய் இலாபம் என்று சொல் கிறீர்கள். ஆனால் கட்ட முடியாமல் போய் மின்னிணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டபின் அபராதம் விதிக்க வேண்டி வரும். அபராதம் விதிப்பதிலேயே பல கோடி ரூபாய் வந்து விடும் போல் இருக்கிறது. கட்டவில்லை என்றால் துண்டித்து விடுகிறார்கள். துண்டித்து விட்டு பின்பு இணைப்பு கொடுப் பதிலே, அபராதம் பல கோடி வந்து விடும். அதனால் ஒரு மாதத்திற்கு ஒரு முறைதான் மின் கட்டணம் வாங்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அதைப்போல மின்சார வாரியம் தனக்கு வர வேண்டிய கட்டண பாக்கியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மால்கோ நிறுவனம் மட்டும் 20 கோடி ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். எனக்கு இது வேடிக்கையாக இருக்கிறது. 15 ரூபாய் கட்ட வேண்டி இருந்தால், அந்தக் குறிப்பிட்ட தேதி போய்விட்டால் பிடுங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். மறு நாளைக்கு போனால் அபராதம் சேர்த்துக் கட்டினால்தான் மின் இணைப்புக் கொடுக்கிறார்கள். அபராதத்திற்கு ஒரு கணக்கு இருக்கிறது. ஆனால் பெரிய கம்பெனி, 20 கோடி ரூபாய் செலுத்த வேண்டியிருக்கிறது என்றால் அதன் மின்சாரத்தைப் பிடுங்கி விட வேண்டியதுதானே? என்னமோ கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள் . . . .

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 10

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவையின் தற்காலிகத் தலைவர் அவர்களே, அவைகள் கோர்ட்டின் தடை உத்தரவினால்தான் வசூலிக்கப்பட முடியாமல் இருக்கிறதே தவிர, ஏதோ பெரிய முதலாளிகளின்பால் இந்த அரசு அல்லது வாரியம் காட்டுகின்ற சலுகையினால் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, சலுகை தான். அதன் அடிப்படை என்பது தான். 20 கோடி ரூபாய் எப்படி பாக்கி வந்தது? ஒரு மாதம் தரவில்லை என்பதால் அடுத்த மாதம் சேர்ந்து வசூலிக்க வேண்டியது தானே, ஒரு மாதத்திற்கு, 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று இருக்கலாம், எப்படி நீங்கள் 20 கோடி ரூபாய் வரையில் வசூல் செய்யாமல் விட்டிருக்கிறீர்கள்? கோர்ட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எப்போதிலே இருந்து என்று எனக்குத் தெரியாது. ஆனால் 20 கோடி ரூபாய் வரையில் ஏன் விட்டார்கள்? இதனால் சாதாரண ஏழைகளுக்கு ஒன்று, வசதி படைத்தவர்களுக்கு ஒன்று என்று ஏன் இந்த அரசாங்கம் ஒரு முறையை உண்டாக்கி இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அதேபோல மின்னிணைப்பு கொடுப்பதிலே தாமதம். ஒரு மின்னிணைப்பு வாங்க வேண்டும் என்றால் பல மாதம் அலைய வேண்டி இருக்கிறது. பல பிரச்சினையை உண்டாக்குகிறார்கள். கடைசியிலே ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பம் வாங்க வேண்டும் என்று. சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போதும் ஊரிலே இருக்க முடிகிறதா? பல இடங்களுக்குப் போய் விடுகிறார்கள். அவர்களிடம் கையெழுத்து வாங்க வேண்டும் என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? இது சட்டமா சம்பிரதாயமா அல்லது வழக்கமா என்று தெரியவில்லை. இதனால் மின்னிணைப்பு வழங்குவதில் காலதாமதம் அதிகம் ஆகிறது. இதையெல்லாம் மின்சார வாரியம் பார்த்து, சுலபமான வழி வகைகளைப் போட்டு மின்னிணைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 நவம்பர் 10] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அடுத்து, பாண்டிலே கையெழுத்துப் போட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு 2 பேர் சாட்சி கையெழுத்துப் போட்டு அந்த மூன்றுக்கும் கீழே எம்.எல்.ஏ. கையெழுத்துப் போட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதெல்லாம் கால தாமதத்தை அதிகப்படுத்துகிறது. கடைசியாக இதையெல்லாம் சொல்லிவிட்டு மின் கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொல்வது எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் வருடா வருடம் 200 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை இருந்து வருகிறது. இந்த வருடம் மட்டும் என்று இல்லை. 1982-83-லே கூட 210 கோடி ரூபாய் பற்றாக்குறை இருந்தது. இதை சேவை மனப்பான்மையோடு பார்க்க வேண்டுமே தவிர வணிக முறையிலே அணுகக் கூடாது என்று சொல்லுகிறேன்

அது போக இன்னொன்று. அரசாங்கம் ஏழைகளுக்கு, நலிந்த பிரிவினர்களுக்கு, விவசாயிகளுக்குச் சலுகை கொடுத்ததன் காரணமாக 246 கோடி ரூபாய் இழப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 246 கோடி ரூபாயை அரசாங்கத்திடமிருந்து மின் வாரியம் வாங்கும்போது 46 கோடி ரூபாய் அதிகமாகவே கிடைக்கும். அதனாலே இந்த மின் கட்டணத்தை உயர்வு செய்யும் நோக்கத்தை இந்த அரசும் மின் துறை அமைச்சரும் கைவிட வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**திரு. ந. பழனி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய, மின் வாரியத் துறையினுடைய இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையையும், ஆண்டு அறிக்கையையும் சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு அளித்திருக்கிறார்கள். அதன் மீது நடைபெறுகிற விவாதத்திலே பங்கு கொள்கிற வாய்ப்பினை அளித்ததற்காக, வணக்கத்திற்குரிய தமிழகத்தின் முதல்வர் அண்ணன் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

[திரு. த. பழனி] [1987 நவம்பர் 10

பன்னெடுங்காலமாக விவசாயத் துறையிலேயும், தொழில் துறை யிலேயும் மற்றும் இருக்கிற பல்வேறு துறைகளிலேயும் ஒரு மறு மலர்ச்சியை இந்த மின்சாரத் துறை உருவாக்கி இருக்கிறது என்றால் அந்தப் பெருமை மாண்புமிகு அமைச்சர் அவர்களை யும், வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களையும் சாரும். அவர்களுக்கு எனது தொகுதியின் கிராம மக்களின் சார்பாக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புறங் களுக்கு ஒளிமயமான திட்டத்தை ஏற்படுத்தி, ஏறக்குறைய 7.49 லட்சம் விவசாயிகளுக்கு, கிராமப்புறங்களிலே குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு, இலவச மின்சாரத் திட்டத்தை அளித்திருக்கிற ஆட்சியாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறது ருக்கிற புரட்சித் தலைவர் அவர்களேயே சாரும். இந்தத் என்றால் அது இன்றைக்கு தமிழகத்தை வலம் வந்து கொண்டி திட்டத்தை ஆய்ந்து அளித்திருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் ஏறக்குறைய 11 லட்சத்திற்கும் அதிகமான பம்ப் செட்டுகளை வைத்திருக்கிற விவசாயிகளின் வாழ்வில் வளம் சேர்த்து நன்மை தருகிற திட்டமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நல்ல திட்டத்தை வழங்கி இருக்கிறது. ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்ற திட்டத்தின் அடிப்படையில் விவசாயிகள் நல்ல பலனைப் பெற்றிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக, ஏழை எளிய விவசாயிகளின் வாழ்க்கையில் வளம் சேர்க்கும் திட்டமாக, ஒளி சேர்க்கும் திட்டமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் இந்தத் திட்டத்தை அரசு வழங்கியிருக்கிறது ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவும் வகையில் மின்னிணைப்பு மட்டும் வழங்கி விட்டால் போதாது. மின்கம்பங்கள் இல்லாத காரணத்தால், 7, 8 ஆண்டுக் காலமாக மின்சாரம் பெறுவதற்கு காத்துக் கொண்டிருக்கிற நிலைமை, அனுமதி அளித்தும், சான் றிதழ் பெற்றிருந்தும் மின்சாரம் கிடைக்காத நிலைமை ஆகிய வற்றை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு போக்கிட வேண்டும். விவசாயிகள் வாழ்வு வளம் பெறுவதற்கு அந்த வகை யில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நிச்சயம் நடவடிக்கை



1987 நவம்பர் 10] [திரு. த. பழனி]

எடுக்கும் என்று நான் நம்புகிறேன். ஏழை எளிய விவசாயிகள் பெற்றிருக்கிற பலனை முழுமையாக அனுபவிப்பதற்குண்டான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கிற ட்ரான்ஸ்பார்மர்களை சரிவர மெயின்டெனன்ஸ் பண்ணுவதற்குப் போதுமான ஆட்கள் இல்லை. இந்தக் குறையைப் போக்க வேண்டும். சிறிய கிராமங் கள், பெரிய கிராமங்கள் என்ற அடிப்படையில் கிராமத்திற்கு 10 அல்லது 12 ட்ரான்ஸ்பார்மர்கள் இருக்கும். அவற்றை மெயின் டெய்ன் செய்வதற்கு ஹெல்பர், வயர்மென் போன்ற அலுவலர் களைப் போதுமான அளவிற்கு நியமிக்க வேண்டும். அடுத்து ட்ரான்ஸ்பார்மர்கள் ஃபெயில்யூர் ஆகிறபோது அவற்றை மாற்றி பிக்ஸ் பண்ணுவதற்கு கோட்டப் பொறியாளர்களுக்கு வாய்ப்பில் லாமல் இருக்கிறது. மாற்று ட்ரான்ஸ்பார்மர்கள் கோடவுன்களில் இல்லாத காரணத்தால், மின்னிணைப்பைப் பெற்றிருந்தும் கூட விவசாயிகள் ட்ரான்ஸ்பார்மர் ஃபெயில்யூர் ஆகிறபோது பாதிக்கப் படுகிறார்கள். இந்த பாதிப்பு 10 நாட்கள், 15 நாட்கள் என்று தொடரும்போது பயிர்கள் சாவியாகிற நிலைமை ஏற்படுகிறது. அந்த போகத்தின் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. கடந்த காலத் தில் இருந்ததைவிட இன்றைக்கு தமிழக மின்வாரியம் மிகச் சிறப் பான பெயரைப் பெற்று நல்ல விதத்தில் செயலாற்றி வருகிறது.

கடந்த காலத்தில் விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கு எப்போது மின்சாரம் வருமென்று இரவும் பகலும் காத்திருந்தார்கள். எப் போது மின்சாரம் வருமென்பது அவர்களுக்குத் தெரியாது. மின் சாரத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மொத்தம் ஒரு நாளைக்கு 14 மணி நேரம் மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வடாற்காடு, தென் னாற்காடு, சென்னை போன்ற பகுதிகள் வறட்சி காரணமாக மிகவும் வறண்டு இருக்கின்றன. இன்றைக்கு சிறிது மழை பெய் திருந்தாலும் ஏரியில் தண்ணீர் இல்லாத காரணத்தால் கிணற்றில் இருக்கிற ஊற்றை வைத்து விவசாயிகள் பயிரிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மின்சாரம் வழங் கும்போது 14 மணி நேரம் என்று இருப்பதை, எப்படி திருச்சி,

[திரு. த. பழனி] [1987 நவம்பர் 10

குளித்தலை போன்ற பகுதிகளுக்கு 20 மணி நேரம் கொடுக்கிறார்களோ அதைப்போல தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்ட விவசாயிகளுக்கும் 20 மணி நேரம் மின்சாரம் கொடுக்க வேண்டும். ஆற்றுப் படுகையில் இருக்கிற இந்தப் பகுதியில் தண்ணீர் இருந்தும்கூட போதிய மின்சாரம் இல்லாத காரணத்தால் முழுமையான விளைச்சலைப் பெற்று பயன்பெற முடியாத நிலையிருக்கிறது. எனவே 20 மணி நேர மின்சாரத்தை எங்களுக்கு அளிக்குமாறு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே போன்று தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பகுதிகளுக்கும் அளிக்க வேண்டும் என்று இங்கே இருக்கிற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-20)

இன்றைக்குக் கடுமையான வறட்சியை எதிர் நோக்கியிருக்கிற தமிழகத்தில், மின்சாரத் தேவையை எதிர்நோக்கியிருக்கிற விவசாயிகளுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கு உண்டான உத்தரவை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று மின்சாரத்தைப் பெற்றிருக்கிற விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை மிகவும் ஆழமாகத் தோண்டியிருக்கிற காரணத்தால், 20 மீட்டர், 25 மீட்டர் ஆழத்திற்கு மிகவும் ஆழமாக கிணறுகளைத் தோண்டியிருக்கிற காரணத்தால், அவர்கள் வைத்திருக்கிற 5 எச்.பி. அல்லது 10 எச்.பி. பம்ப் செட்டுகளை வைத்து, அடிவாரத்திலே இருக்கிற தண்ணீரை மேலே கொண்டு வர முடியவில்லை. எனவே அந்த பம்ப் செட்டுகள் பெற்றிருக்கிற 5 எச்.பி. அல்லது 10 எச்.பி. என்று இருக்கிற அந்த ஹார்ஸ் பவரை அல்லது அந்த சக்தியை மேலும் கூட்ட வேண்டியதாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட ஆழமான கிணறுகளைத் தோண்டி விவசாயம் செய்யக்கூடிய அந்த விவசாயிகளுக்கு, தண்ணீரை மேலே இழுத்துக் கொண்டு வருவதற்கான கூடுதல் மின் சக்தியை அல்லது கூடுதல் மின்னிணைப்பை உடனடியாக அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்று கேட்டால், விவசாயத்தை நம்பியிருக்கிற அந்த விவசாயிகள், கிணற்றை ஆழமாகத்



1987 நவம்பர் 10] [திரு. த. பழனி]

தோண்டிவிட்டு, அதன் மூலமாக வருகின்ற அந்தத் தண்ணீரை வைத்து விவசாயம் செய்ய வேண்டும் என்ற ஆதங்கத்தின் காரணமாக, கிணற்றுக்கு அவர்கள் அதிகமான முதல் போட்டாலும், அந்த ஹார்ஸ் பவரைக் கூட்டி, 2 பம்ப் செட், 3 பம்ப் செட் என்று போட்டு, அந்தத் தண்ணீரை மேலே கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கேயிருக்கிற அந்தத் தண்ணீரை பஸ்ட் டைப் பம்ப், செகண்ட் டைப் பம்ப் அல்லது தேர்ட் டைப் பம்ப் என்று போட்டாலும், கொண்டு வர முடியவில்லை என்கின்றபோது, அதனுடைய ஹார்ஸ் பவரைக் கூட்டுகின்ற அந்த அனுமதியை கோட்டப் பொறியாளர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தந்து, அவர்களுடைய விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று, இங்கேயிருக்கிற பல்வேறு புனல் திட்டங்கள் இன்றைக்குக் கடுமையான வறட்சியின் காரணமாகப் பாதிப்படைந்திருந்தாலும்கூட, கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகளுக்குத் தேவையான மின்சாரத்தை இந்தத் துறை மிகச் சிறப்பாக, இந்த ஆண்டு வழங்கியிருக்கிறது. அதற்காக இந்தத் துறைக்கு, இந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று வறட்சியின் காரணமாகப் பெற்றிருக்கிற அதே பயனை அனல் மின்சார நிலையங்களும் பெற்றாக வேண்டும். அனல் மின்சார நிலையங்களின் மூலமாக வரவேண்டிய அந்த மின்சாரத்தை, தமிழகம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிற இந்த நிலைமையிலே நாம் பெற்றாக வேண்டும் என்று சொல்லிய பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கையை, நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏழை எளிய விவசாயிகளுடைய வாழ்விலே வளம் சேர்த்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறையில் நிதி நிலைமை மிகவும் நெருக்கடியாக இருக்கிற நிலைமையிலேகூட, விவசாயிகள் புரட்சித் தலைவர் அளித்த அந்த மானியத்தையும் கடன் தள்ளுபடியையும் எதிர்நோக்கி, ஏறக்குறைய முழுமையாகக் கட்டியிருக்கிறார்கள். ஒன்றிரண்டு அல்லது 4 சதவீதம் அல்லது 5 சதவீதம் பேர்களைத் தவிர 90 சதவீதம் பேர்கள் இன்றைக்கு அதை நிறைவு செய்திருக்கிறார்கள். எனவே ஏழ்மையிலும்

[திரு. த. பழனி] [1987 நவம்பர் 10

நேர்மையாக இருக்கிற அந்த விவசாயிகளுடைய வாழ்வு வளம் பெறுவதற்குண்டான வாய்ப்பாக இன்றைக்கு புரட்சித் தலைவர் அரசு அறிவித்திருக்கிற அந்தச் சலுகைகளை எல்லாம் மனதாரப் பாராட்டுகிறேன். இன்றைக்கு மின் கட்டணத்தில் பாக்கி வைத்திருக்கிற விவசாயிகள், இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருக்கிற விவசாயிகள் வாழ்விலே வளம் சேர்க்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு கால நீட்டிப்புத் தந்து, 2—2—1988-க்குள் விவசாயிகள் கட்டிவிட்டால், அவர்களுக்கு மின்னிணைப்பு தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்

அதேபோன்று, விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைக்குப் பெற்றிருக்கிற மிகச் சிறப்பான பயன்களை எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, புரட்சித் தலைவர் அவர்கள் அளித்திருக்கிற அந்தச் சாதனையை, அவர்கள் அளித்திருக்கிற அந்த உதவியைப் பார்க்கிறபோது, இந்தத் தமிழகத்தினுடைய விவசாயிகள் பெருமைப்படுகிறார்கள்.

கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளியவர்களுக்குத் தேவையான மின் விளக்குகள், தெரு விளக்குகள், அவர்களுக்கு இல்லையே என்ற குறை இருந்து வருகிறது. பஞ்சாயத்து சார்பாக மின்னிணைப்பு கோரி, தெரு விளக்குகளுக்கு அனுமதி கோரி, மின் கம்பங்களுக்கு அனுமதி கோரி, பல்லாண்டுக் காலமாக அவர்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. எனவே மின்சார வாரியத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். கிராமங்களிலே இருக்கிற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு தேர்தல்கள் நடந்திருக்கின்றன. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகள் நடத்துகின்ற அந்தக் கூட்டங்களுக்கு அங்கேயிருக்கின்ற அரசு அதிகாரிகள், மின்சாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வருவதில்லை. அவர்களுக்கு அழைப்பு விடுத்தாலும்கூட மின்சாரத் துறையைச் சேர்ந்த பொறியாளர்கள் வர மறுக்கிறார்கள். என்ன காரணமோ தெரியவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் பெருமக்களார் அவர்கள் பதில் சொல்கிறபோது, இதற்கு ஒரு சாதகமான பதிலை சொல்ல வேண்டும். அங்கே நடக்கின்ற ஒன்றியக் கூட்டங்களில், மின்சாரத் துறையைச் சேர்ந்த பொறியாளர்களோ அல்லது



1987 நவம்பர் 10] [திரு. த. பழனி]

வல்லுநர்களோ வந்து கலந்து கொள்ள வேண்டும். அப்போது தான், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்கள் மற்றவர்கள் கேட்கிற அல்லது கூறுகிற குறைகளை அவர்கள் கேட்டு, அதை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர முடியும்.

அப்போதுதான் இந்தத் துறையிலே ஏற்படக்கூடிய சிறு சிறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். மின் விளக்கு எரியவில்லை என்று சொன்னால், தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொன்னால், ஊராட்சி மன்றத் தலைவரைத் திட்டுகிறார்கள். தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொன்னால், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்து, அங்கே உள்ள அலுவலர்களையும் தலைவர்களையும் பார்த்து கேள்விகளைக் கேட்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் வந்து அந்த ஊராட்சி ஒன்றிய அலுவல் கூட்டத்தில் அமர்கிறபோது தெரு விளக்குகள் எரியவில்லை என்ற கோபம்தான் அங்கே இருக்கிற ஊராட்சி மன்றத் தலைவர் இடத்திலும், பொது மக்களிடத்திலும் மிகப்பெரிய ஒரு பிரச்சினையாக, அந்த மின்சாரத் துறையைப் பற்றி ஒரு கேள்வியாக வந்து கொண்டு இருக்கிறது. அதைப் போக்குவதற்கு உண்டான வாய்ப்பினை அந்தத் துறையினுடைய அதிகாரிகள் அந்தக் கூட்டத்திற்கு வந்தால்தான், என்ன பிரச்சினை அங்கே நடக்கிறது, ஏன் இவ்வளவு மின் குழல் விளக்குகள் எரியவில்லை, ஏன் அங்கே கம்பம் தரப்படவில்லை. ஏன் அங்கே கம்பி இழுக்கப்படவில்லை என்ற சூழ்நிலைகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். அங்கே அந்தக் கூட்டத்தில் கேட்டால் மின் கம்பம் இல்லை என்று சொல்லுகிறார்கள், மின் கம்பி இல்லை என்று சொல்லுகிறார்கள், குழல் விளக்குகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் போக்குவதற்கு என்ன பாடுபட்டாயினும் கிராமப்புறத்தில் இருக்கிற அந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று இருள் அடைந்து இருக்கிற கிராமத்திற்கு ஒளி ஏற்றியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், இருள் சூழ்ந்து இருக்கிற குடில்களுக்கு ஒளி ஏற்றியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்——தெருக்களுக்கும், வீடுகளுக்கும் விளக்குகளைப் போடுவதற்கு உண்டான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிராமப்புறத்தில் இருக்கிற ஏழை எளிய விவசாயிகள் நல்ல பயனைப் பெறுவதற்கு அங்கே இருக்கிற விவசாயிகளுடைய வாழ்வு வளம் பெறுவதற்கான பல்வேறு திட்டங்களை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக ராணிப்பேட்டையில் இருக்கிற சிப்காட் பகுதியில் பல்வேறு தொழில் அகங்கள் இருக்கின்றன. தொழில் அகங்களை எல்லாம் இன்றைக்கு நாம் ஒன்று சேர்த்து வைத்து இருக்கிறோம். அந்தத் தொழில் அகங்கள் வளர்வதற்கு, தொழிற்சாலைகள் வளர்வதற்கு பல ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான திட்டங்கள் இன்றைக்கு மத்திய, மாநில அரசுகளால் உருவாகிக் கொண்டு இருக்கிறது. அப்படி உருவாகிறபோது அந்தத் தொழில் அகங்கள் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக லே ஆப் செய்யக்கூடிய வாய்ப்பு இன்றைக்கு 40 சதவீதம் இருக்கிறது. 40 சதவீதம் லே ஆப் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்த வேலை நாட்கள் குறைந்து இருக்கின்றன. மனித சக்திகள் பயன்படாமல் இருந்திருக்கின்றன. மனித சக்திகள் அங்கே நிராதரவாக, நிலை குலைந்து போகக்கூடிய அளவுக்கு தொழில் அகங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

அப்படிப்பட்ட இடங்களில் தனியார் மின்சாரம் தயாரிக்கிற ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். அல்லது சிப்காட் போன்ற பகுதிகளில், தொழில் முதலீட்டுக் கழகங்களை வைத்தோ அல்லது பல்வேறு நிறுவனங்களை வைத்தோ மின்சாரத்தைத் தயாரித்து அங்கே இருக்கிற தொழில் அகங்கள், தொழில் வளாகங்கள் ஒன்று சேர்ந்து இருக்கிற பல்வேறு நூற்றுக்கணக்கான தொழிற் கூடங்களை காப்பாற்றுகின்ற ஒரு சூழ்நிலையை இந்த வாரியம் உருவாக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், தொழில் துறையில், தனியார் மின்சாரம் தயாரிப்பதை இந்த அரசு வரவேற்கிறது என்று. அதற்காக புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட அந்தத் தனியார்கள் மிகப்பெரும் முதலாளிகளாக இருந்து தயாரிக்கின்ற அந்த தொழில் கூடங்கள் அங்கே சிறப்பாக இருக்கும். அங்கே இருக்கின்ற 'என்பீல்ட்' நிறுவனம், அங்கே இருக்கின்ற பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம், அதேபோல் அதைச் சுற்றியிருக்கிற பல்வேறு துணை நிறுவனங்கள் அனைத்தும் அரசு நிறுவனங்கள் அல்லது கூட்டு நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்கள் போன்று பல்வேறு நிறுவனங்களை ஒன்று சேர்த்து இருக்கிற நிறுவனங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட அந்த நிறுவனங்களை ஒன்று சேர்க்கிற முயற்சிகளை சிப்காட் போன்று இருக்கிற, தொழில் முதலீட்டுக் கழகங்கள் போன்று இருக்கிற, பல்வேறு முதலீட்டுக் கழகங்கள் போன்று இருக்கிற, அதுவும் அரசும், அரசைச் சார்ந்து இருக்கிற நிறுவனங்களாக இருக்கிற காரணத்தால் அந்த நிறுவனங்கள் தனியாக மின்சாரத்தை தயாரித்து பயன்படுத்தக்கூடிய வாய்ப்பினை இது போன்று இருக்கிற சிப்காட் பகுதிகளுக்கு உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் எங்கள் பகுதி, வளத்திற்கு வளம் சேர்க்கிற பகுதியாக இருந்தாலும் குடிநீருக்குப் பிரச்சினையாக இருக்கிற பல்வேறு பகுதிகள் பாலாற்றை நம்பி இருக்கிற பகுதிகளாக இருக்கின்றன. அந்த பாலாற்றில் குடிநீர் இருக்கிற காரணத்தால் அங்குள்ள 12 நகராட்சிகளும், அங்குள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களும் அந்தப் பகுதியில் இருந்துதான் குடிநீரை எடுத்துச் செல்லக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. 20 கிலோ மீட்டர் ஆனாலும் சரி, 50 கிலோ மீட்டர் ஆனாலும் சரி பாலாற்றில் இருந்துதான் குடிநீரை எடுத்துச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தப் பகுதிகளுக்கு மின் இணைப்பை வழங்கியிருக்கிறார்கள். மின் இணைப்பு வழங்குகிறபோது கிராமப்புறத்திற்கு எப்போதும் 16 மணி நேரம்தான் மின்சாரம் வருகிறது. அந்த 16 மணி நேரம்தான் குடிநீருக்கும் ஒதுக்குகிறார்கள். சில நகராட்சிகளுக்கு மட்டும் 24 மணி நேரம் குடிநீர் வழங்குகிற வகையில் 24 மணி நேரமும் மின்சார இணைப்பை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதேபோல், இருக்கிற அனைத்து குடிநீர்த் திட்டங்களுக்கும், கூட்டு குடிநீர்த் திட்டங்களுக்கும், நகரியங்கள் வழங்குகிற திட்டங்களுக்கும் தனியாக மின் கம்பி போட்டு மின்சாரத்தை அவர்களுக்கு 24 மணி நேரமும் கொடுத்து குடிநீர் வழங்குகிறபோதுதான் அவர்களுக்குத் தேவையான தண்ணீரை அவர்கள் பெறுவதற்கு உண்டான வாய்ப்பாக அது அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர்

[திரு. த. பழனி] [1987 நவம்பர் 10

அவர்களும் மின்சார வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் குடிநீர்த் திட்டங்களுக்கு வழங்கி இருக்கிற அந்த மின் இணைப்பைத் தனியாக ஒரு லைன் போட்டு தனியாக ஒரு பீடர் போட்டு 24 மணி நேரமும் அவர்களுக்கு மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

(பிற்பகல் 1-30)

அதேபோல் ஆற்காட்டில் இருக்கிற அந்த மின் இணைப்பு, ஏறக்குறைய 5 ஆண்டு காலத்திற்கு முன்னால் இருந்து வேலூர் எலக்ட்ரிசிட்டி சிஸ்டம் என்று வைத்து இருந்த காரணத்தால் ராணிப்பேட்டை, வாலாஜா, வேலூர், ஆற்காடு, விஷாரம் போன்று இருக்கிற பகுதிகள் அனைத்திலும் அவர்கள் போட்டு இருக்கிற அந்த மின் இணைப்புகள் அனைத்தும் பழுது பட்ட கம்பியாக, மாற்ற முடியாத கம்பியாக இருக்கிறது. சற்றுமுன் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய திரு. அப்துல் சமத் அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு என்று சொன்னார்கள். அங்கே கிராமப்புறத்திலே இருப்பவர்கள் மின் இணைப்புக் கம்பிகளை மாற்றினால்தான் முழுமையாக அந்த மின் இணைப்பைப் பெறக் கூடிய வாய்ப்பாக அமையும் வேலூர் எலக்ட்ரிசிடி சிஸ்டத்திலே இருக்கிற பல்வேறு வகையில் மின்சாரத்தைப் பெற்றிருக்கிறவர்கள் விவசாயிகள், ஆகிய எல்லோரும் இன்னும் முழுமைப்படுத்தப்படவில்லை. அவர்கள் பெற்றிருக்கிற சான்றிதழ்கள் பிரகாரம்கூட அவர்கள் மின்சாரம் வைத்திருக்கிறார்களா, இல்லையா அல்லது 3 எச்.பி. ஓட்டுகிறார்களா என்று பார்ப்பதற்குக் கூட அங்கே கணக்குகள் அலுவலகத்தில் இல்லாமல் இருக்கிறது.

'டெம்ப்ட் ஆஃப் எனர்ஜி' என்று பிடித்துவிட்டார்கள். அந்த மின்சார அலுவலகத்திற்குச் சென்று கேட்டால், அதை ஏ.ஓ. அலுவலகத்திற்குப் போய்க் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஏ.ஓ. அலுவலகத்தில் கேட்டால் 3 எச்.பி. என்றிருக்கிறது. ஆனால் விவசாயி 3½ எச்.பி. மின்சாரத்தைப் பெற்றிருக்கிறேன் என்று சொல்கிறார். அதற்கு அனுமதிச்



1987 நவம்பர் 10]

சீட்டும், கட்டிய கட்டணச் சீட்டும் அவர்களிடத்திலே இருக்கிறது. அலுவலகத்திலே சரியான குறிப்புகள் இல்லாமல் இருக்கின்றன. இதன் காரணமாக அங்கே கிராமப்புறத்திலே இருக்கிற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. த. பழனி: மின் வாரியம் மிகப் பெரிய நிறுவனம். அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. பல்வேறு கோரிக்கைகள் இருந்தாலும்கூட, பல்வேறு அதிகாரிகள் அவர்களிடத்திலே இருந்தாலும்கூட, பல்வேறு நிலைகளிலே இருக்கிற பல்வேறு புள்ளிவிவரங்களிலே, இதுபோன்று ஏழை விவசாயிகளுக்கு, படிப்பறிவு இல்லாத விவசாயிகளுக்கு, தேவையான கணக்குகள் அங்கே வரைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பல்வேறு நிலைகளின் காரணமாக பொது மக்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு, பல்வேறு வகைகளில், கிராமப்புறத்திலிருக்கிற என்.ஆர்.ஈ.பி., ஆர். எல். ஈ. ஜி. பி. போன்ற திட்டங்களின்கீழ் கட்டித் தரப்படுகிற வீடுகளுக்கு, புரட்சித் தலைவர் அவர்கள் மின் வசதி செய்து தரப்படவேண்டுமென்று உத்தரவு அளித்தும்கூட, அவர்கள் அங்கே செங்கல்லால் கட்டியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு, அந்த வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கமுடியாது என்று சொல்லி மறுக்கிறார்கள்.

மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள் அவர்கள் பேச்சின் போது, பதில் விளக்கத்தின்போது உறுதி செய்து தரவேண்டும். அப்படி செய்யப்படுகின்றபோதுதான் அங்கே இருக்கிற இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் இந்த ஆட்சிக்கு பெருமை சேர்ப்பார்கள். ஆதிதிராவிட மக்களுக்கு, புரட்சித் தலைவர் அவர்கள் மீது உயிர் வைத்திருக்கிற அந்த மக்களுக்கு, புரட்சித் தலைவர் அவர்கள் விளக்கு அளித்திருக்கிறார்கள். அந்த விளக்கை, விளக்கமாக இந்த மன்றத்தின் வாயிலாக கொடுக்கவேண்டுமென்ற உறுதியினை. அவர்கள் பேச்சின் மூலமாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டு, விடைபெற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88-ஆம் ஆண்டிற்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களை நான் கூற இருக்கிறேன்.

குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் மத்திய அரசிலே பல்வேறு கோப்புகள் தேங்கியிருப்பதால் குறை இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்ல விரும்புவது என்னவென்றால், நம்முடைய மாநிலத்திலே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே நம்முடைய தமிழகத்தின் சார்பில் குறிப்பாக தமிழக அரசின் சார்பில் நிதியைக் கூட்டவேண்டுமென்று கேட்டதற்கிணங்க, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து, பாராளுமன்றத்திலே கேட்டதற்கிணங்க, இந்த ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்திலே மின் துறையைப் பொறுத்தவரையில், ரூ. 2,151 கோடியை, தேசிய நிதியைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்திற்கு அதிகமான நிதியை ஒதுக்கி, இந்த மாநிலத்தின் பற்றாக்குறையை நிவர்த்திக்க வேண்டுமென்ற வகையில்தான் இன்றைக்கு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு நமக்கு என்றும் ஏற்படாத வறட்சி. அதிலும் குறிப்பாக தென் மேற்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, இந்த புனல் மின்சார உற்பத்தி குறைவாக இருந்தாலும், அனல் மின் உற்பத்தியின் காரணமாக இன்றைக்கு ஓரளவு பற்றாக்குறை சரிப்படுத்தப்பட்டது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள், தனியாரிடத்திலே அதை ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டு தேசிய



மயமாக்கப்படவேண்டும். ஒன்று, மின் உற்பத்தியை தேசியமயமாக்க வேண்டும். இரண்டு, பாய்கின்ற நதிகளை தேசியமயமாக்கவேண்டும். இரண்டும் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் தேசியமயமாக்கப்பட்டால்தான் நல்லது. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின் உற்பத்தி எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை நாம் உணர்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தனியாருக்குக் கொடுப்பதில், அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய பகுதியில் நமக்கு இன்றைக்கு என்றைக்கும் இல்லாத அளவிற்கு எரிவாயு கிடைக்கின்றது. அதிலும் காவேரி பேசின் என்று சொல்லப்படுகின்ற தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து பாண்டிச்சேரி. . . .

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியை தனியார் தனியாகவும் அல்லது மின் வாரியமும் சேர்ந்து உற்பத்தி செய்ய முன்வரவேண்டும். அதற்கு அரசு உறுதுணையாக இருக்கும் ஆதரவு தரும் என்பது தமிழக அரசின் கொள்கை மாத்திரம் அல்ல; பாரதப் பிரதமருடைய தேசீயக் கொள்கை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. ந. சிவஞானம்: அதை நான் ஒப்புக்கொள்கிறேன். . . .

* திருமதி டி. யசோதா: சென்ற முறை மின் வாரியத்தின் மேலே நடைபெற்ற விவாதத்தில் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. ரமணி அவர்கள் கேட்ட கேள்விக்கு—மின் உற்பத்தியை தனியாரிடத்தில் விட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கு பதிலாக அப்படி ஒரு அபிப்பிராயம் இல்லை என்று அமைச்சர் பதில் அச்சிட்டு தந்தது. தற்போது தனியாருக்குக் கொடுக்கும் அபிப்பிராயம் எதன் அடிப்படையில் ஏற்பட்டது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல்வர் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே இந்த கொள்கையை திருத்தி, புதியதாக வெளியிடவேண்டும் என்று சொல்லி ஓராண்டாகிறது.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி என்பது பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினாலே தான் நான் மீண்டும் சொல்கிறேன். இந்த அனல் மின் உற்பத்திக்கு மைய அரசிடத்தில் ஏதாவது கோப்புகள் தேங்கியிருந்தால்—நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், அவர்களுக்கு உட்பட்டிருக்கின்ற எந்த இடத்தில் இருந்தாலும் அதை விரைவுபடுத்த வேண்டுமென்று எல்லா அரசுகளுக்கும் தெள்ளத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள்—அதே போன்று தமிழக அரசின் சார்பில் ஏதாவது கோப்புகள் இருந்தால் மைய அரசு அதை நிச்சயமாக விரைவுபடுத்தும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று ஒகேனக்கல் பற்றி நான் சொல்லியாக வேண்டும். இந்த மன்றத்திலே நாம் பலமுறை அதைப்பற்றிச் சொல்லி இருக்கிறோம். ஆகவே புனல் மின்சார உற்பத்திக்கு ஒகேனக்கல் நல்ல முறையிலே இருக்கிறது. அதை நிச்சயமாக செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் பொருளாதார வாழ்வில் பீடு நடை போடுவதற்கு ஏற்ற இடமாக எரிவாயு கமிஷனால் கண்டு பிடிக்கப்பட்ட நல்ல இடமாக காவேரி பேசின் அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் நமக்கு சாதகமான சூழ்நிலை இருக்கிறது. அதிலும் நரிமணமாக இருந்தாலும் கோயில்களப்பாலாக இருந்தாலும் ஏராளமான எண்ணெய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே போன்று ஏராளமாக எரிவாயு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரை கேட்டுக்கொள்வதெல்லாம் மின் உற்பத்திக்கு ஏற்ற சிறிய திட்டத்தை ஏற்படுத்தப் போவதாக நான் அறிகிறேன். இருக்கின்ற திருவாரூரிலே ஏற்படுத்த வேண்டும். இப்போது சிறிய திட்டத்தை ஏற்படுத்தப் போவதாக நான் அறிகிறேன். அந்த திட்டத்தை, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெரிய அளவிலே ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு எரிவாயுவைக் கொண்டே மின் உற்பத்தி செய்கின்ற அளவிற்கு எரிவாயு பூமிக் கடியிலே கிடைக்கின்றது. அதை எரிவாயு கமிஷன் மூலமாக நம்முடைய தமிழக அரசும், மத்திய அரசும் ஒன்றுக்கொன்று



இணைந்து செயல்படுத்த வேண்டும். குறிப்பாக ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திலே இது இல்லாவிட்டாலும் இந்த திட்டத் தைப் பற்றி மத்திய அரசிடத்திலே எடுத்துச் சொல்லி, எரிவாயு கமிஷன் மூலமாகவும், தமிழக அரசின் மின் வாரியத்தின் மூல மாகவும் பெரிய அளவிலே மின்சார உற்பத்தியைச் செய்வதற் கான வாய்ப்புகளைப் புதிய டெக்னாலஜி மூலமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழக அரசு பல வழிகளிலே நலிவுற்ற மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தொழிலுக்கு, வேளாண்மைக்கு பல்வேறு வசதிகளை, சலுகைகளை வழங்கிக் கொண்டு வருகிறது, பாராட்டுகின்றேன். ஆனால், உற்பத்தி எவ்வளவு செய்யப்படுகிறதோ அதற்கு ஏற்றாற்போல் வினியோ கமும் இருக்க வேண்டும். வினியோகம் என்று சொல்கிறபோது அலுமினியம் கண்டக்டர் மூலமாக வினியோகம் செய்யப்படு கின்றபோது நம்முடைய தமிழகத்திலே மின்சார இழப்பு ஏறத்தாழ 23 சதவீதம் என்று சொல்கிறார்கள். ஆனால் அண்டை மாநிலத்திலே பல்வேறு புள்ளிவிவரங்களை கணக்கி டும்போது அதனுடைய இழப்பு ஏறத்தாழ 15 சதவீதம் என்று சொல்கிறார்கள். இங்கே அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் இருக்கிறார்கள். இந்த மின் இழப்பை இந்த மின்சார கம்பி மூலமாக ஏற்படுகின்ற இழப்பை—சரிக்கட்டுவதற்காக உடனடி யாக புதிய தொழில் நுட்பத்தின் மூலமாக ஏற்பாடுசெய்து அதைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மின்சாரத் துறையிலே கம்ப்யூட்டர் முறையைக் கொண்டு வருவதாலும், மின்சாரத்தை மிகச் சிக்கனமாக பயன்படுத்துவ தாலும் இழப்பு இருக்காது என்று சொல்கிறார்கள். அத்தகைய முறையிலே அரசு பரிசிலனை செய்து அதற்கான ஏற்பாடுகளை நிச்சயமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று இன்றைக்கு மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவிலே ஏராளமான விளம்பரங்களினால், கடைகளில் மின்சாரம் அதிக மாக உபயோகப்படுத்தப்படுகிறது.

[திரு. ந. சிவஞானம்] [1987 நவம்பர் 10

(பிற்பகல் 1-40)

குறிப்பாக, இன்றைக்கு 10, 12 மணி வரை கடைகளிலே எல்லாம் லைட்டுகள் எரிகின்றன. அதிலும் விசேஷ காலம் என்றால் விடிய, விடிய லைட்டுகள் எரிகின்றன. மேலை நாடுகளிலே நாம் பார்க்கின்றபோது, 6 மணிக்கு மேலே எந்த வியாபாரத்திற்கும் அரசாங்கம் மின்சாரம் கொடுப்பதே கிடையாது. ஆகவே, மின்சார விநியோகத்தில் புதிய மாற்றத்தைக் கொண்டு வந்து, 6 மணிக்கு மேல் எந்தக் கடைகளுக்கும் மின்சாரம் கொடுக்காமல், அதை தொழிலுக்கும், விவசாயத்திற்கும் உற்பத்திக்கும் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும். ஆகவே, மேலை நாடுகளிலே இருப்பதைப் போல, 6 மணிக்கு மேல் எந்தக் கடையையும் திறக்காமல் இருக்கவும், அதிலும் காலையிலிருந்து மின்சாரத்தைக் கொடுக்காமல் இருக்கவும், வேளாண்மைக்கும், தொழிலுக்கும் அந்த மின்சாரத்தைக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தால் மிக நன்றாக இருக்கும் என்ற ஆலோசனையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்களுக்கு இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக, இன்றைக்கு நாம் எல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறோம், கீழே இருக்கிற தண்ணீரை மேலே கொண்டு வந்து கொடுப்பதற்கு மின்சாரம்தான் நல்ல சாதனமாக உள்ளது. ஆகவே வேளாண்மைக்கு மின் இணைப்புகள் அதிகமாகக் கொடுக்கப்படவேண்டும். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, காவிரியிலே தண்ணீர் வராவிட்டாலும், கீழே இருக்கின்ற தண்ணீரை மேலே எடுத்து மின்சாரத்தின் மூலம், பில்டர் பாயின்டாக இருந்தாலும், ஆழ்குழாய்களாக இருந்தாலும் கொடுக்கிறோம்.

அதை இப்போது அதிகமாக, எந்தக் கிணறாக இருந்தாலும், அதற்கு காலக் கெடு இல்லாமல் எல்லாவற்றிற்கும், உணவு உற்பத்தியைக் கொடுப்பதற்கு முதலிடத்தைத் தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுத்து, மின் இணைப்புகளைத் தந்து உதவவேண்டும். பில்டர் பாயின்டுகள் ஏறத்தாழ 10 ஆயிரம் இருக்கின்றன. அதே போன்று போர்வெல் போடப்பட்டு ஏராளமான ஆயில் இஞ்ஜின்கள் வைத்து விவசாயிகளுக்கு பெரும் கடனாயிருக்கின்றது.



1987 நவம்பர் 10] [திரு. ந. சிவஞானம்]

ஆகவே, அவர்களுக்கு காலக்கெடு இல்லாமல் விண்ணப்பம் போட்டவுடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, உடனடியாக பம்புசெட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும்.

அதேபோல், இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன், வறட்சிக் காலத்திலே, விவசாயிகள் மின்சாரக் கட்டணத் தொகையைக் கட்டுவதற்கு காலதாமதம் ஆகிறது. அதற்காக உடனடியாக மின் இணைப்பைத் துண்டித்துவிட்டார்கள். ஆனால் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், துண்டிக்கப்பட்ட மின் இணைப்பைக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் பல இடங்களில் அது நடைபெறவில்லை. ஆகவே, அரசாங்கம் அதை மறுபரிசிலனை செய்யவேண்டும். வறட்சியின் காரணமாக இன்றைக்கு கீழே இருக்கின்ற தண்ணீரை மேலே எடுத்து, மக்களுக்கு குடிநீருக்காகவும், விவசாயத்திற்காகவும் பயன்படுத்துகிறார்கள். அந்த நேரத்தில் விவசாயிகளின் தாங்க முடியாத கடன் சுமை காரணமாக அவர்கள் கட்டணத்தைக் கட்டாவிட்டாலும் அரசாங்கம் மறுபரிசிலனை செய்து சொல்லும் கருத்திற்கேற்ப அதிகாரிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தொழிலாளர்களுக்கு எல்லாம் இன்றைக்கு பல்வேறு நன்மைகள் கொடுக்கப்படவேண்டும். அதிலும் குறிப்பாக மின்சாரத் துறையிலே இருக்கின்ற, கீழே இருக்கின்ற, கிராமத்திலே இருக்கின்ற லைன்மென்களைப் பார்த்தால், அவர்களுக்கு வீடு இல்லை. அவர்கள் 5, 6 மைலுக்கு அப்பால் இருந்து வரவேண்டியிருக்கிறது. இன்றைக்கு எப்படி செக்ஷன் ஆபீசர், துணைக் கோட்டப் பொறியாளர், சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர், இவர்களுக்கு எல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அதைப் போல, அடித்தளத்திலே இருக்கின்ற களப் பணியாளர்களுக்கும், மின்சாரத் துறை மூலமாக வீடு கட்டிக் கொடுத்து உடனுக்குடன் ரிப்பேர் வேலைகளைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1987 நவம்பர் 10

அதேபோன்று, மின்சாரத் துறையிலே பல காண்டிராக்ட்காரர்கள் தொழிலாளர்களை நீக்கியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அரசாங்கம் நல்ல தொழிலாளர்களை, நீக்கிய தொழிலாளர்களில் நன்றாக வேலை செய்தவர்களை, அதிலும் குறிப்பாக, நாட்டிற்குச் சேவை செய்தவர்களை மீண்டும் மறுபரிசீலனைச் செய்து சேர்த்துக்கொண்டு நல்ல முறையில் பணியாற்றச்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிலே பல்புகள் எரிவதில்லை. அதை ஊராட்சி மன்றம் மூலமாக வாங்கிப் போடவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து, மின்சாரத் துறையே அந்தப் பொறுப்பினை எடுத்துக்கொண்டு, பராமரிக்கவேண்டும்.

ஆங்காங்கே ஊராட்சி மன்றத்தின் தலைவருக்கும், களப் பணியாளர்களுக்கும் பல்வேறு கஷ்டங்கள், சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, காரியங்கள் சரியாகச் செய்யப்படுவதில்லை. ஊரிலே லைட் எரிவதில்லை. ஆகவே, அதற்கு மின்சாரத் துறையே பொறுப்பேற்றுக் கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் நன்றாக இருக்கும்.

குறிப்பாக, மின் பற்றாக்குறை இருக்கிற இந்த மாநிலத்தில், மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு நெய்வேலியாக இருந்தாலும், எண்ணூராக இருந்தாலும் அங்கேயெல்லாம் இருப்பதைப் போல நாகப்பட்டணத்திலே, பெரிய அளவிலே— மீண்டும் வலியுறுத்தி அரசாங்கத்திற்குச் சொல்கிறேன்—மின் உற்பத்தியை எரிவாயு மூலமாகச் செய்வதற்கு பெருமுயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு கஷ்டம். இப்போது வறட்சியிலே சில இடங்களிலே தண்ணீர் கீழே இறங்கி விடுகிறது. தண்ணீர் இருப்பது இல்லை. ஆனால் பக்கத்திலே சில இடங்களில் கிணறு வெட்டினால் தண்ணீர் இருக்கிறது. 'ஆன் த லைன் சர்வீஸ்' என்று சொல்லப்படுகின்ற இணைப்பு கொடுக்கப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இல்லாவிட்டாலும்கூட வேறு இடங்களில் கிணறு வெட்டும்போது



1987 நவம்பர் 10] [திரு. ந. சிவஞானம்]

தண்ணீர் இருந்தால் அந்த இணைப்பை மாற்றிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாக முயல வேண்டும். அது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதையும், அதனால் அதிகப்படியான செலவு நம்முடைய மின்சாரத் துறைக்கு ஏற்பட்டாலும், அதை நிச்சயமாக செய்வதற்கு அரசாங்கம் முற்பட வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதிகப்படியான மின் இணைப்புகள் கொடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. மின் பற்றாக்குறை அதிகமாக இருந்தாலும் நிச்சயமாக விவசாயத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இருக்கின்ற இணைப்புகள் அனைத்துக்கும் மின்சாரம் கொடுப்பதற்கான ஒரு கொள்கையை இந்த அரசு கொள்ள வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நமது அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற பதில், ரெக்கார்ட் பிரகாரம் சரியான பதில் ஆகாது. இந்த ரெக்கார்டுக்கு இந்தத் திருத்தம் தேவையிருக்குமானால், நான் இந்தக் கேள்வியை முன்பே கேட்ட காலத்தில் . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே அதற்கான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாரியம் கொடுத்த பதிலில் தவறாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் என்னுடைய கருத்து என்ற பெயரால் புத்தக வெளியீட்டில் 23-வது பாராவில் தனியார்கள் கொடுத்த திட்டத்தை இந்த அரசு ஆதரிக்கும் என்று எழுதி இருக்கிறோம். முரண்பாடு இருக்கிறது. அது தவறாக வந்ததற்குப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று என் பேச்சின் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கரெக்ட் பண்ணுவதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் ரெக்கார்ட் அச்சடித்து எல்லோருக்கும் கொடுக்கும்போது இதிலே இப்படி வந்திருக்கக் கூடாது. இதிலே இப்படி வருவது என்பது சரியல்ல; அதை நீங்கள் கரெக்ட் செய்ய வேண்டும்; அதைத்தான் நான் சொன்னேனே தவிர, நீங்கள் சொன்னதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த கொள்கை அன்றைக்கு சொன்னதற்கு நேர்மாறானது, அவ்வளவு தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 11-11-1987 காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

78. 1964 ஆம் ஆண்டு சமய நிலையங்கள் மேலாண்மை மற்றும் சொத்துக்களை பேணிக் காத்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 9—7—1987 ஆம் நாளிட்ட 276 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

79. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (இரயில் பயணப்படி) விதிகளை வகுப்பது குறித்து பொதுத் (சட்டமன்றப் பிரிவு) துறையின் 3—4—1987 ஆம் நாளிட்ட 546 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



80. "மாயவரம்" ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் வட்டம் ஆகியவற்றினை "மயிலாடுதுறை" ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும வட்டம் என மாற்றுவது குறித்து 20—8—1981 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 282-த.நா-87 ஆம் எண் அறிவிக்கை. [1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1950) 9 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்—தொடர்ச்சி.

81. 1984-85 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

7. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

8. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை).

[1987 நவம்பர் 10

## இணைப்பு.

(181 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

அவையின் முன் வைக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 1986-87 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென முன்மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, 1948 ஆம் ஆண்டு, மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61 ஆம் பிரிவிற்கிணங்க தமிழ்நாடு மின் வாரியம் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. வாரியத்தின் செயல்முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் மின்வாரியமும் கருத்தில் கொள்ளும்.

3. 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1985-86 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் அவையில் கடந்த 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 மற்றும் 20 ஆம் நாட்களில் நடைபெற்றது. அவ்விவாதத்தின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை தனியே சுற்றனுப்பப்பட்டுள்ளது.

4. செயல்பாட்டிலும் இலக்குகளை முழுமையாக அடைவதிலும் மின்வாரியம் மிகத் திறமையாகச் செயல்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் இந்த விவாதத்தை தொடங்குகிறேன். இது குறித்த விவரங்களை விளக்குவதற்கு முன்னால், தொடர்ந்து மூன்றாண்டுகளாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் வரலாறு காணாத வறட்சியின் விளைவுகளை தணிப்பதற்காக மின்வாரியம் எடுத்திருக்கும், எடுக்க இருக்கும் நடவடிக்கைகளை இந்த அவைக்கு தெரிவிக்க விழைகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஆண்டு இலக்கான 40,000 விவசாய விசையேற்றங்களுக்குக் கூடுதலாக 20,000 விவசாய விசையேற்றங்களுக்கு இந்த நிதி ஆண்டில் மின் இணைப்பு வழங்குமாறு மின்வாரியம் பணிக்கப்பட்டுள்ளது. திட்ட நிதிக்கும் மேலாக இதற்கான நிதி உதவி வங்கிகளிடமிருந்தும் ஊரக மின் இணைப்பு கழகத்திடமிருந்தும் பெறப்படும்.



1987 நவம்பர் 10]

5. மாநிலத்தில் நிலவும் வறட்சியை முன்னிட்டு, விவசாய விசையேற்றங்களுக்கான மின் கட்டணத்தை வசூலிப்பதை ஒத்திவைப்பது குறித்தும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட விவசாய விசையேற்றங்களுக்கு மீண்டும் மின் இணைப்பு வழங்குவது குறித்தும் அரசு தீவிரமாக ஆராய்ந்து, மின் கட்டணம் கட்டாமைக்காக 28—2—1988 வரை விவசாய விசையேற்றங்களுக்குரிய மின் இணைப்பை துண்டிக்கவோ ரத்து செய்யவோ கூடாது என உத்தரவிட்டுள்ளது. எங்கெல்லாம் விவசாயத்திற்காக நீரை விசையேற்றும் வாய்ப்பு உள்ளதோ அங்கெல்லாம் மின் கட்டணம் கட்டாமைக்காக ஏற்கெனவே துண்டிக்கப்பட்ட, ரத்து செய்யப்பட்ட மின் இணைப்பை மீண்டும் அளிக்கவும் மின்வாரியத்திற்கு அரசு ஆணையிட்டுள்ளது. பழைய நிலுவை உட்பட 31—1—1988 அன்று நிலுவையிலுள்ள மின் கட்டணம் முழுமையும் 1988 பிப்ரவரிக்கான கட்டணத்துடன் 1988 பிப்ரவரியில் கட்டப்பட வேண்டுமெனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

6. இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாக புனல் மின் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. 1987-88 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட 4,384 மில்லியன் யூனிட்டுகள் புனல் மின் உற்பத்திக்குப் பதிலாக திருத்திய மதிப்பீட்டின்படி 1,370 மில்லியன் யூனிட்டுகள் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். இதனால் ஏற்படும் 3,014 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்திக் குறைவு வரலாறு காணாததாகும். புனல் மின் உற்பத்தியில் ஏற்படும் குறைவு மாநிலத்தின் மின் தேவையை மட்டுமின்றி மின்வாரியத்தின் நிதிநிலைமையையும் பெரிதும் பாதிக்கும். மின் வாரியத்தின் நிதி நிலைமையில் ஏற்படும் விளைவுகள் குறித்து பின்னால் விளக்கும்போது இதுபற்றி விவரிக்கிறேன்.

7. புனல் மின் உற்பத்தி குறைந்தபோதிலும் ஒட்டுமொத்த மின் வழங்கல் நிலைமை மோசமடையவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மைய அரசின் மின் நிலையங்களிடமிருந்து கூடுதல் உதவி பெறப்பட்டதாலும், நமது அனல் மின் நிலையங்களின் உற்பத்தி அதிகரித்ததாலும் இது சாத்தியமாயிற்று.

[1987 நவம்பர் 10

மின் உற்பத்தி ஒப்பீட்டு அளவு கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது:—

| ஆதாரம் | ஏப்ரல் முதல் மார்ச் வரை மி. யூனிட்டுகளில் 1985–86 | 1986–87 (உள்ளபடி) | 1987–88 (திருத்திய மதிப்பீடு) |
|---|---|---|---|
| புனல் மின் சக்தி | 2,944 | 3,319 | 4,329 |
| அனல் மின் சக்தி பெறப்பட்டது | 5 696 | 6,129 | 7,513 |
| நெய்வேலி I<br>நெய்வேலி II | 2,888 | 3,942 | 4,329 |
| கல்பாக்கம் | 1,486 | 1,443 | 2,055 |
| இராமகுண்டம் | 350 | 395 | 490 |
| இறக்குமதி | 131 | 108 | .. |
| பெருமொத்தம் | 13,495 | 15,336 | 15,757 |
| ஏற்றுமதி | 218 | 483 | .. |
| | 13,277 | 14,853 | 15,757 |

8. 1987 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் நாள் மேட்டூர் நீங்கலாக மற்ற எல்லா நீர்த்தேக்கங்களின் நீரளவு 808 மில்லியன் யூனிட்டுகளையும் மேட்டூர் நீரளவு 68 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு இதே நாளில் மேட்டூர் நீங்கலாக மற்ற எல்லா நீர்த்தேக்கங்களின் நீரளவு 1,289 மில்லியன் யூனிட்டுகளாகவும் மேட்டூர் நீரளவு 26 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருந்தது. கடந்த 10 ஆண்டுக் கால சராசரி நீர் வரவான 2,759 மில்லியன் யூனிட்டுகளுக்குப் பதிலாக ஏப்ரல் 1987 முதல் அக்டோபர் 1987 வரை நீர்வரவு 1,292 மில்லியன் யூனிட்டுகளாகும். 1100 உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கான தற்போதுள்ள 40 சதவிகிதம் தேவை மற்றும் மின் வெட்டை அதிகரிக்காமலேயே 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறுதி வரை தற்போதுள்ள மின் நிலைமையைத் தொடர முடியும் என நம்பப்படுகிறது. தற்போது



1987 நவம்பர் 10]

ஊரகப் பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 14 மணி நேரம் (பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும்) மின்சாரம் வழங்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலுள்ள திருச்சி, முசிறி, குளித்தலை, லால்குடி வட்டங்களிலும் நாளொன்றுக்கு 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது. வரும் மாதங்களிலும் ஊரகப் பகுதிகளுக்கு இந்த அளவு மின்சாரம் வழங்க இயலும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

9. மின் வாரியத்தின் தொடர் முயற்சியின் விளைவாக அனல் மின் உற்பத்தி நிலையங்களின் செயல்பாடு குறிப்பாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் செயல்பாடு பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் 50.5 சதவிகிதம் ஆக இருந்த தூத்துக்குடியின் நிலையச் செயல்திறன் 1984-85 ஆம் ஆண்டு 62 சதவிகிதம் ஆகவும், 1985-86 ஆம் ஆண்டு 65-5 சதவிகிதம் ஆகவும், 1986-87 ஆம் ஆண்டு 75 சதவிகிதம் ஆகவும் உயர்ந்திருக்கிறது. நமது நாட்டில் 210 மெகாவாட் திறன் கொண்ட 69 மின் நிலையங்கள் உள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் அவற்றின் சராசரி செயல்திறன் 69.6 சதவிகிதம்தான். ஆனால் அதே ஆண்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் செயல் திறன் 76.1 சதவிகிதம் நிலையச் செயல்திறன் இதனால் தெளிவாகிறது.

1986 ஆம் ஆண்டிற்கான மைய அரசின் சிறப்பு மிக்க உற்பத்தித்திறன் விருதையும் அந்த நிலையம் வென்றிருக்கிறது. விருதுத் தொகையான ரூ. 10 இலட்சம் நிலையப் பணியாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

10. எண்ணூர் அனல் மின் நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு தன் வரலாற்றிலேயே அதிகபட்ச செயல்திறனான 53-2 சதவிகிதத்தை அடைந்தது. எனினும் ஒரு 110 மெகாவாட் பிரிவில் 1986-87 ஆம் ஆண்டில், 'பெல்' நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட வருடாந்திர சுத்திகரிப்பிற்குப் பின் ஏற்பட்ட சில குறைபாடுகளைச் சரி செய்ய 6½ மாதமாகியது. இதனால் செயல்திறன் 43.4 சதவிகிதம் ஆகக் குறைந்தது. இந்த உற்பத்திக் குறைவு ஏற்படாதிருந்தால் 1986-87 ஆம் ஆண்டில் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் செயல் திறன் 55 சதவிகிதத்தை எட்டியிருக்கும்.

[1987 நவம்பர் 10

எண்ணூர் அனல் மின் நிலையம் 1986 ஆம் ஆண்டிற்கான மைய அரசின் சிறப்பு மிக்க உற்பத்தித்திறன் விருதைப் பெற்றது. விருதுத் தொகை ரூ. 5.4 இலட்சம் நிலையப் பணியாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் அனல் மின் நிலையச் செயல்திறனில் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது என்பதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

11. இத்தருணத்தில் தேவையான அளவு தரமான நிலக்கரியைப் பெறுவதில் மின் வாரியத்திற்கு ஏற்படும் பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விழைகிறேன். அனல் மின் நிலையங்கள் முழு உற்பத்தித் திறனுடன் செயல்பட தரமான நிலக்கரி உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டியது ஒரு அத்தியாவசியமான தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தமிழகத்திற்குக் கிடைக்கும் நிலக்கரியின் தரம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது. நமக்குக் கிடைக்கும் நிலக்கரியில் இருக்கும் சிறிய கற்கள், களிமண் மற்றும் சாம்பல் காரணமாக அதன் அனல் திறன் வெகுவாகக் குறைகிறது. இது கவலை அளிக்கிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஒரு கிலோகிராமுக்கு 5.200 லிருந்து 6.300 கி. கலோரி எரியும் தன்மையுள்ள பெங்கால்/பீஹாரிலிருந்து பெறப்படும் 'பி' மற்றும் 'சி' ரக நிலக்கரியைப் பயன்படுத்தும் வண்ணம் அமைக்கப்பட்ட கொதிகலன்கள் உள்ளன. 1979 ஆம் ஆண்டு தூத்துக்குடி அனல் மின் நிலையம் துவங்கப்பட்டபோது வங்காளம் மற்றும் பீகாரிலிருந்து பெறப்பட்ட நிலக்கரியின் எரியும் தன்மை ஒரு கிலோகிராமுக்கு 5,750 கி. கலோரியாக இருந்தது. அது 1986-87 ஆம் ஆண்டு 3,060 கி. கலோரியாக குறைந்துள்ளது. அதே காலத்தில் அங்கிருந்து பெறப்படும் நிலக்கரியில் சாம்பல் அளவு 21.07 சதவிகிதத்திலிருந்து 42.02 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. எண்ணூர் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் பெறப்பட்ட நிலக்கரியின் எரியும் தன்மை 1970-71 ஆம் ஆண்டு ஒரு கிலோ கிராமுக்கு 4,961



1987 நவம்பர் 10]

கி. கலோரியாக இருந்தது. அது 1986-87 ஆம் ஆண்டு 3,857 கி. கலோரியாகக் குறைந்துள்ளது. நிலக்கரியில் சாம்பல் அளவு 29.25 சதவிகிதத்திலிருந்து 43.2 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. நிலக்கரியின் தரம் குறைந்ததன் காரணமாக அனல் மின் நிலையங்களின் உற்பத்தித் திறன் குறைந்தது மட்டுமின்றி, தேவையான நிலக்கரியின் அளவு அதிகரிப்பதால் மின்வாரியத்தின் எரிபொருள் செலவு மிக அதிகரித்துள்ளது. இந்த அனல் மின் நிலையங்களுடன் ஏற்கெனவே இணைக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி பெறப்படாததன் காரணமாக இந் நிலை ஏற்பட்டுள்ளது.

12. மேட்டூரில் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கும் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் மிகக் கடுமையானவை. இந்நிலையம் அதன் நிலக்கரி தேவைக்கென ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சிங்க ரேணி சுரங்கங்களைச் சார்ந்த சென்னூர் என்னும் ஒரு புதிய சுரங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இச் சுரங்கம் இன்னும் முழுமையாக உருவாக்கப்படவில்லை. எனவே சிங்கரேணி சுரங்கங்களிலிருந்து எண்ணூர் அனல் மின் நிலையத்திற்காக அனுப்பப்படும் நிலக்கரியை மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு அனுப்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் எண் ணூர் அனல் மின் நிலையத்தின் தேவைக்கான நிலக்கரி ரயில் மூலமாகவும் கடல் வழியாகவும் அதிக அளவு சரக்கு கட்டணம் செலுத்தி தொலைதூரச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி பெறப்படு கிறது. 1986-87 ஆம் ஆண்டின் இறுதியில் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு செயல்படத் துவங்கியது. இரண்டாம் பிரிவு 1987-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் செயல்பட இருக்கிறது. இருந்தபோதிலும் இந்நிலையத்திற்கான நிலக்கரி இணைப்பு முடிவாக்கப்படவில்லை.

13. புதிய அனல் மின் நிலையங்கள் துவக்கப்படுவதற்கு இணையாக புதிய நிலக்கரி சுரங்கங்கள் உருவாக்குவது, சரக்கு போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பது, நிலக்கரி தரத்தை அதிகரிப்பது, அனல் மின் நிலையங்களுக்கும் நிலக்கரி சுரங்கங் களுக்கும் இருக்கும் தூரம் போக்குவரத்து வசதிகளைப்

[1987 நவம்பர் 10

பொறுத்து அனல் மின் நிலையங்களுக்குச் சுரங்க இணைப்பு வழங்குவது போன்ற நடவடிக்கைகள்தான் தற்போதைய நிலக்கரி பற்றாக்குறை பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். இந்தத் தீர்வுகளுக்காக மைய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

14. மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட 1986-87 ஆம் ஆண்டிற்கான கூடுதல் இலக்கான 240 மெகாவாட் உற்பத்திக்கு மாறாக, மேட்டூர் அனல் மின் நிலைய முதல் பிரிவில் 210 மெகாவாட்டும், காடம்பாறை முதல் பிரிவில் 100 மெகாவாட்டும், கீழ்மேட்டூர் புனல் மின் நிலைய முதல் பிரிவில் 15 மெகாவாட்டுமாக மொத்தம் 325 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி செய்துள்ளோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

15. விவசாய விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதிலும், 1986-87 ஆம் ஆண்டிற்கான இலக்கான, 40,000-க்கு மேலாக 41,993 விவசாய விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 31—3—1987-ல் தமிழகத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கும் விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 11,16,177 ஆக உயர்கிறது. இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கை மின் விசையேற்றங்களைப் பயன்படுத்தும் மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து இருந்து வருகிறது.

ஊரகப் பகுதிகளில் வாழும் நலிந்த பிரிவினரும் மின் பயன் பெறவேண்டுமென்பதற்காக 1979 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" திட்டத்தின்கீழ் 1986-87 ஆம் ஆண்டு 38,701 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 31—3—1987-ல் இத்திட்டத்தின்கீழ் மின் பயன் பெறும் குடிசைகளின் எண்ணிக்கை 7,48,316 ஆக உயர்ந்துள்ளது.

16. 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டிலுள்ள 15,731 கிராமங்கள் எல்லாவற்றிற்கும் 31—3—1987-ல் மின் வசதி வழங்கப்பட்டிருக்கும் செய்தியைப் பெருமிதத்துடன் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 நவம்பர் 10]

17. தற்போதைய மின் தேவை மின் உற்பத்தியைவிட அதிகமாக இருப்பதால், மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க வேண்டியதின் அவசியத்தையும் மாநிலத்தின் மின் பற்றாக்குறையை முழுமையாக நீக்குவதில் அரசுக்கு இருக்கும் பொறுப்பையும் அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. இப் பின்னணியில்தான் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85) மின்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்ட தொகை ரூ. 953.93 கோடிக்குப் பதிலாக ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1985-90) இதற்கான ஒதுக்கீடு ரூ. 2156.43 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டக் காலத்தில் தற்போது இருக்கும் மின் நிலையங்கள் மூலமாகவும் புதிய நிலையங்கள் மூலமாகவும் 1416 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்திக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதல் இரண்டு ஆண்டிலேயே 345 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி அடையப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு (1987-88) மேட்டூர் அனல் மின் நிலைய 210 மெகாவாட் இரண்டாம் பிரிவிலிருந்து 210 மெகாவாட்டும், காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் இரண்டு புதிய 100 மெகாவாட் பிரிவுகளிலிருந்து 200 மெகாவாட்டும், கீழ்மேட்டூர் புனல் மின் திட்டத்தின் ஐந்து புதிய 15 மெகாவாட் பிரிவுகளிலிருந்து 75 மெகாவாட்டும், குந்தா ஐந்தாம் திட்ட கூடுதல் 20 மெகாவாட் பிரிவிலிருந்து 20 மெகாவாட்டுமாக மொத்தம் 505 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்திக்கு வகை செய்யப்பட்டுள்ளது. எஞ்சியிருக்கும் 566 மெகாவாட் மின் உற்பத்தி ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட இலக்கான, 1416 மெகாவாட்டை [illegible] அடைய முடியுமென அரசும் மின் வாரியமும் எதிர்பார்க்கின்றன.

18. மேலும் இப்பகுதியில் துவக்கப்பட இருக்கும் மைய அரசு மின் நிலையங்களிலிருந்து கூடுதல் 460 மெ.வா. மின்சாரம் தமிழ்நாட்டின் பங்காகக் கிடைக்க இருக்கிறது. நெய்வேலி இரண்டாம் அனல் மின் நிலையத்தின் 210 மெ.வா. செயல்திறன் கொண்ட மூன்று பிரிவுகளிலிருந்து 235 மெகாவாட்டும், கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் 235 மெகாவாட் செயல்திறன் கொண்ட இரண்டாம் பிரிவிலிருந்து 115 மெகாவாட்டும் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள 500 மெகாவாட் செயல்திறன் கொண்ட இராமகுண்டம்

[1987 நவம்பர் 10

பெரும்பேரனல் மின் நிலையத்தின் முதல் பிரிவிலிருந்து 110 மெகா வாட்டும் ஆக மொத்தம் 469 மெ.வா. தமிழ்நாட்டிற்கு கிடைக்க இருக்கிறது. இதில் நெய்வேலியில் 210 மெ.வா. செயல்திறன் கொண்ட முதல் இரண்டு பிரிவுகளும், கல்பாக்கத்தில் 235 மெ.வா. செயல்திறன் கொண்ட இரண்டாம் பிரிவும் செயல்படத் துவங்கி விட்டன. நெய்வேலியில் 210 மெ.வா. செயல்திறன் கொண்ட மற்ற இரண்டு பிரிவுகளும் இராமகுண்டத்தில் 500 மெ.வா. செயல்திறன் கொண்ட பிரிவும் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் செயல்படத்துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நெய்வேலி முதல் அனல் மின் நிலையம் மற்றும் கல்பாக்கம் 235 மெ.வா. செயல்திறன் கொண்ட முதல் பிரிவு இவற்றிலிருந்து பெறும் பயன் உள்ளிட்டு, மைய அரசு மின் நிலையங்களிலிருந்து, ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில், தமிழ்நாடு பெறும் பங்கு 1427 மெ.வா. ஆக இருக்கும்.

19. வடசென்னை அனல் மின் திட்டம் (630 மெ.வா) நிலை I-ம், தூத்துக்குடி அனல் மின் திட்டம்—விரிவாக்கம்—நிலை III-ம் (420 மெ.வா.), ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்துவதற்காகப் பணி துவக்கப்பட்டிருக்கும் பெரிய அனல் மின்திட்டங்களாகும். வடசென்னை அனல் மின்திட்ட முதல் இரண்டு பிரிவுகளுக்கான மின் உற்பத்தி இயந்திரங்களை வாங்குவதற்கென ஆசிய முன்னேற்ற வங்கி 150 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ஏறத்தாழ ரூ. 185 கோடி.) கடனாக வழங்கியுள்ளது.

மூன்றாம் பிரிவுக்குத் தேவையான மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கும் ஆசிய முன்னேற்ற வங்கியிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கான முயற்சிகளை மைய அரசும் மாநில அரசும் எடுத்து வருகின்றன. வடசென்னை அனல் மின்நிலையத்தின் முதல் பிரிவு மார்ச் 1991-ல் செயல்படத் துவங்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருக்கிறது. எனினும் இத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் பணிக்கு சிலர் சென்னை உயர்நீதி மன்ற தடை ஆணை பெற்றிருப்பதால் இத்திட்ட செயலாக்கம் காமதப்படுகின்றது.



1987 நவம்பர் 10]

20. வடசென்னை, அனல் மின் நிலையத்தின் முழுச் செயல் முறை, மூன்று நிலைகளில், 2630 மெ.வா.-க்கு விரிவாக்குவது பற்றி மின்வாரியம் ஆராய்ந்து வருகிறது. இந்நிலையம், தேவையான நிலக்கரியை எளிதில் பெறுவதற்காக, இந்நிலையத்திற்கு அருகாமையிலேயே ஒரு சார்பு துறைமுகம் அமைப்பது குறித்த சாத்தியக் கூறுகளை மைய அரசு ஆராய்ந்து வருகிறது. அவ்வாறு ஒரு சார்ப்பு துறைமுகம் அமைக்கப்படுமானால் அது எண்ணூர் அனல் மின் நிலையத்தின் நிலக்கரி பற்றாக்குறையைக் குறைப்பதற்கும சிங்கரேணி நிலக்கரியை ரயில் மூலமாக மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு எளிதில் அனுப்புவதற்கும் வழி வகுக்கும்.

21. தூத்துக்குடி விரிவாக்கத் திட்டத்தின்கீழ் 210 மெ.வா. செயல்திறன் கொண்ட இரண்டு பிரிவுகள் அமைக்கும் பணி ஏற்கெனவே துவக்கப்பட்டு விட்டது. கொதிகலன் மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்கள் தயாரிக்கும் பணி 'பெல்' நிறுவனத்திடம் விடப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் துவங்கப்பட்டிருக்கும் முதல் பிரிவு 1989–90 ஆம் ஆண்டு இறுதியிலும் இரண்டாம் பிரிவு 1990–91 ஆம் ஆண்டிலும் செயல்படத் துவங்கும்.

22. தஞ்சாவூர் மாவட்டத்தில் கோவில்களப்பால் என்னுமிடத்தில் இயற்கை எரிவாயு கிடைக்கிறது என்று எண்ணை மற்றும் இயற்கை எரிவாயுக் குழு கண்டறிந்திருக்கிறது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அக்குழு அங்கு தோண்டியிருக்கும் இரண்டு கிணறுகள் மூலமாக நாளொன்றுக்கு 40,000 மீ எரிவாயு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. அது 15 ஆண்டுகளுக்கு வழங்கப்படுமென அக்குழு உறுதி அளித்துள்ளது. இதைப் பயன்படுத்தும்வண்ணம் கோவில்கள்பாலில் ரூ. 478 கோடி செலவில் 5 மெ.வா. எரிவாயு மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்குவதற்குத் தேவையான நிதி மறு ஒதுக்கீட்டிற்கும் திட்டக்குழு அனுமதி வழங்கியுள்ளது. எரிவாயு மின் உற்பத்தி இயந்திரங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மின்வாரியம் எடுத்து வரு

கிறது. 1988-89 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்நிலையம் செயல்படுவதற்கான நடவடிக்கைகளையும் மின்வாரியம் எடுத்து வருகிறது. தென் ஆற்காடு மாவட்டம் புவனகிரியில் கிடைக்கத் துவங்கி இருக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி அங்கு ஒரு எரிவாயு மின் உற்பத்தி நிலையம் நிறுவுவது பற்றிய சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

23. உச்சக் கட்டத்திறன் பற்றாக்குறையைச் சமாளிக்கவும் ஜூலை திங்கள் 1985-லிருந்து உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ள பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்திற்கு ஒரு மாற்றாகவும், ஒவ்வொன்றும் 30 மெ.வா. செயல்திறன் கொண்ட எரிவாயு மின் உற்பத்திப் பிரிவுகள் நான்கினை பேசின்பிரிட்ஜ் நிலையத்தில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது. இதற்கு அக்டோபர் 1985-லேயே மைய மின்சாரக் கழகம் அனுமதி வழங்கியுள்ளபோதிலும் பெட்ரோலிய அமைச்சரகம் எரிஎண்ணை ஒதுக்கீடு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தின் காரணமாக திட்டக் குழுவின் முதலீட்டு முடிவை மின்வாரியம் இன்னும் பெற இயலவில்லை. இந்த எரிஎண்ணை ஒதுக்கீட்டிற்கு அந்நிய செலாவணி தேவைப்படுவதால் பெட்ரோலிய அமைச்சரகம் இதற்கு அனுமதி வழங்க முன்வரவில்லை. தென்னக சக்தி முன்னேற்றக் கழகம் என்ற தனியார் துறை நிறுவனம் இத்திட்டத்தை செயலாக்க முன்வந்திருக்கிறது. இக்கருத்துருவை மின்வாரியம் பரிந்துரை செய்திருக்கிறது. தற்போது அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

24. மைய மாநில மின் நிலையங்களின் உற்பத்தித் திறன் பெருமளவில் அதிகரிக்கப்பட்டிருப்பினும் எட்டாம் மற்றும் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்ட காலங்களில் மாநிலத்தில் மின் பற்றாக்குறை தொடரும். இப்பற்றாக்குறை எட்டாம் ஐந்தாண்டு திட்ட கால இறுதியில் 2003 மெ.வா.களாகவும் 4629 மில்லியன் யூனிட்டுகளாகவும், ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டக்கால இறுதியில் 4912 மெ.வா.களாகவும் 20,071 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருக்குமென கணக்கிடப்பட்டிருக்கிறது. கூடுதல் உற்பத்தித் திறனை உருவாக்க கூடுதல் முதலீடு தேவையாகிறது.



அனல், புனல் மற்றும் அணுமின் திட்டங்கள் நிறுவப்பட்டு பயன்தர நீண்டகாலம் ஆகிறது. எனவே எட்டாவது, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான மின்திட்டப் பணிகள் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே துவக்கப்படவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு கடலூரில் தியாகவல்லி, குடிக்காடு கிராமங்களில் ஒவ்வொன்றும் 210 மெ.வா. செயல்திறன் கொண்ட மூன்று பிரிவுகள் கொண்ட ஒரு புதிய அனல் மின்நிலையத்தை ரூ. 759 கோடி செலவில் நிறுவ மின்வாரியம் உத்தேசித்துள்ளது. இதற்கான விரிவான ஆய்வறிக்கை 1987 ஆம் ஆண்டு பிப்ரவரியில் மைய மின்சார கழகத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. பைக்காரா இறுதி கட்டம் (150 மெ.வா.), பவானி கட்டளை முதல் நிலை (90 மெ.வா.), சாத்தனூர் அணை மின் நிலையம் (15 மெ.வா.) ஆகியவை மைய மின்சார கழகத்தின் இசைவினை எதிர்நோக்கியுள்ள திட்டங்களாகும். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கூடங்குளத்தில் இரண்டாம் அணு மின்நிலையத்தை நிறுவவேண்டுமென மாநில அரசு மைய அரசை வற்புறுத்தி வருகிறது. இது குறித்து மைய அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை.

25. தற்போது செயல்படும் மற்றும் நிறுவப்பட இருக்கும் அனல் மின் நிலையங்களின் தேவைக்கேற்ற நிலக்கரி பெறுவதில் உள்ள பிரச்சினைகளையும், அனல் மின் உற்பத்தியை பெருக்குவதில் உள்ள இடர்ப்பாடுகளையும் நோக்குங்கால் மாநிலத்தில் மின் உற்பத்தியை பெருக்குவதற்கு நெய்வேலியில் அதிக அளவில் கிடைக்கும் 'லிக்னைட்'டை முழுமையாகப் பயன்படுத்துவது விவேகமாகும் என்பது தெளிவு. நெய்வேலியில் அமைந்துள்ள லிக்னைட்டின் அளவு 3,369 மில்லியன் டன்கள் எனவும் அது வருங்காலத்திலும் 1,900 மில்லியன் டன்களுக்கு குறையாது எனவும் கணக்கிடப்பட்டிருக்கிறது. தற்போது நெய்வேலி லிக்னைட் கழகம் இதைப் பயன்படுத்த முனைந்திருக்கிறது. அது ஏற்கனவே இரண்டு நிலக்கரி சுரங்கங்களையும் இரண்டு அனல் மின் நிலையங்களையும் நிறுவி இருக்கிறது. மூன்றாம் சுரங்கத்தையும் மூன்றாம் அனல் மின் நிலையத்தையும் உருவாக்குவது பற்றி பரிசீலித்து வருகிறது. நெய்வேலி முதல் அனல் மின்நிலையத்தின் முழு உற்பத்தியும் தமிழகத்திற்கு

வழங்கப்படுகிறது என்றாலும் இரண்டாம் அனல் மின் நிலையம்
மற்றும் நிறுவப்பட இருக்கும் அனல் மின் நிலையம் ஆகியவற்றில்
உற்பத்தியாகும் மின்சாரம் தமிழ்நாட்டிற்கும் மற்ற தென்மாநிலங்
களுக்கும் மைய அரசின் பங்கீட்டுத் திட்டப்படி பகிர்ந்தளிக்கப்
படும். நெய்வேலி இரண்டாம் அனல் மின்நிலையத்தின் முதல்
நிலை உற்பத்தி முழுமையும் தமிழ்நாட்டிற்கு பெறுவதற்கான
நமது முயற்சி இன்னும் வெற்றி பெறவில்லை. மைய அரசின்
பங்கீட்டு திட்டப்படி தமிழ்நாட்டின் பங்கு 28 சதவிகிதம்
மட்டுமே. எனினும் லிக்னைட்டை அடிப்படையாகக் கொண்ட
ஒரு அனல் மின் நிலையம் மாநில அரசின் கீழ் நிறுவப்படுமே
யானால் அதன் உற்பத்தி முழுவதையும் மாநிலமே எடுத்துக்
கொள்ளலாம். எனவே நெய்வேலியில் கிடைக்கும் லிக்னைட்டை
பயன்படுத்தும்வண்ணம், நெய்வேலி லிக்னைட் கழகத்திட
மிருந்து லிக்னைட் பெற்று நெய்வேலியில் மாநில அரசின் கீழ்
ஒரு அனல் மின் நிலையம் நிறுவுவதென உத்தேசிக்கப்பட்
டுள்ளது. இதுபற்றிய மைய அரசின் கருத்தை எதிர்நோக்கி
இருக்கிறோம்.

26. தமிழ்நாடு சக்தி முன்னேற்ற மையமும், முறைசாரா
சக்தி ஆதாரங்கள் துறையும் இணைந்து தூத்துக்குடி அருகில்
ஒவ்வொன்றும் 55 கி.வா. செயல்திறன் உள்ள 10 காற்றாலைகள்
கொண்ட ஒரு பண்ணையை நிறுவியிருப்பது பற்றி மாண்புமிகு
உறுப்பினர்கள் அறிவார்கள். மேலும் 6 காற்றாலைகள் (55 கி.வா)
நிறுவப்பட்டு இப்பண்ணை விரிவாக்கப்பட்டிருக்கிறது. மேலும்
4 காற்றாலைகளை (அதே செயல்திறன்) நிறுவும் பணி நடந்து
வருகிறது. வ.உ. சிதம்பரனார் மாவட்டம் கயத்தாறு அருகே
தெற்கு இலந்தைக்குளத்தில் 90 கி.வா. செயல்திறன் உள்ள 15
காற்றாலைகள் கொண்ட ஒரு பண்ணை நிறுவப்படுகிறது.
1987-88 ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்படத் அது
கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட்டையிலும், துவங்கும்.
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் புளியங்குளத்திலும் ஒவ்வொன்றும்
90 கி.வா. திறன் கொண்ட இரண்டு காற்றாலைகள் "டானிடா"
திட்டத்தின்கீழ் நிறுவப்படுகின்றன



மைய அரசின் முறைசாரா சக்தி ஆதாரங்கள் துறை காற்று
சக்தியை சிறந்த முறையில் பயன்படுத்தியதற்காக 1986-87 ஆம்
ஆண்டிற்கான பாராட்டுப்பத்திரத்தை (முதலிடம்) தமிழ்
நாட்டிற்கு வழங்கியிருக்கிறது என்பதை இந்த அவைக்கு
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

27. உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரத்தை வெளிக்
கொணர்ந்து நுகர்வோர்க்கு பகிர்ந்திட, எடுத்துச் செல்லுதல்
மற்றும் விநியோகிக்கும் பணிகள் வளர்ச்சிக்கேற்ப பெருமளவில்
வலுப்படுத்தப்பட்டு விரிவாக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்
கீழ் 1986-87 ஆம் ஆண்டு 17 கூடுதல் உயர் அழுத்த மற்றும் உயர்
அழுத்த துணை மின் நிலையங்களும், 3341 கி.மீ. நீளத்திற்கு
கூடுதல் உயர் அழுத்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பித்
தொடர்களும் பயனுள்ள வகையில் அமைக்கப்பட்டன.
1987-88 ஆம் ஆண்டு 41 கூடுதல் உயர் மின் அழுத்த மற்றும் உயர்
மின் அழுத்த துணை மின் நிலையங்களும் 1890 கி.மீ. நீளத்திற்கு
கூடுதல் உயர் அழுத்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பித்
தொடர்கள் நிறுவுவதென திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில்
அக்டோபர் 1987-ல் 11 துணை மின் நிலையங்களும் 210 கி.மீ.
நீளத்திற்கு மின் கம்பித் தொடர்களும் நிறுவப்பட்டுவிட்டன.
நெய்வேலி மற்றும் இராமகுண்டத்திலுள்ள மைய அரசு மின்
நிலையங்களிலிருந்து எளிதில் மின்சாரத்தைப் பெறுவதற்கு
ஏதுவாக பெரம்பலூரில் 400 கி.வா. செயல்திறன் கொண்ட
ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. 400 கி.வா.
செயல்திறன் கொண்ட இரண்டு துணை மின் நிலையங்கள் ஒன்று
சேலத்திலும் மற்றொன்று உடுமலைப்பேட்டையிலும் நிறுவப்படு
கின்றன. சேலத்தில் நிறுவப்படும் நிலையம் 1987-88 ஆம்
ஆண்டிலேயே செயல்படத் துவங்கும்.

28. ஊரக மின்இணைப்புத் திட்டத்தின்கீழ் 1987-88-ம்
ஆண்டின் இலக்கு 40,000 விவசாய விசையேற்றங்களுக்கு
மின் இணைப்பு வழங்குவதாக இருந்தாலும் அக்டோபர் 1987
முடிய 23,272 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்
டிருக்கிறது. 31—3—1987 கணக்கின்படி மின் இணைப்பு
வழங்கப்பட வேண்டிய 253 குக்கிராமங்களில் 52 குக்கிராமங்

[1987 நவம்பர் 10

கருக்கு இந்த ஆண்டு மின் இணைப்பு வழங்கப்படும். 1987-88 ஆம் ஆண்டிற்கான இலக்கின்படி 40,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இதுவரை 19,163 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

29. 1986-87 ஆம் ஆண்டிற்கான தனது வரவு-செலவுத் திட்டத்தில் மின் வாரியம் முதலீட்டுச் செலவுகளுக்கென ரூ. 285.86 கோடி செலவிட உத்தேசித்தது. இதில் மின் உற்பத்திக்கென ரூ. 259.41 கோடியும், அனுப்புகை—பகிர்வுக்கென ரூ. 107 கோடியும் ஊரகமின் இணைப்புகளுக்கென ரூ. 17.45 கோடியும், ஆய்வு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கென ரூ. 2 கோடியும் ஒதுக்கப் பட்டது. 1986-87 ஆம் ஆண்டுக்கான திருத்திய திட்டத்தில் ரூ. 357.55 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டது இதில் உற்பத்திக் கென ரூ. 231.70 கோடியும் ஊரக மின் இணைப்புகளுக்கென ரூ. 17.45 கோடியும், ஆய்வு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கென ரூ. 1.40 கோடியும் ஒதுக்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டுக்கான உண்மைச் செலவு ரூ. 358.62 கோடியாகும். இதில் உற்பத்திக்கு ரூ. 233.57 கோடியும், அனுப்புகை பகிர்வுக்கு ரூ. 106.85 கோடியும் ஊரக மின் இணைப்புகளுக்காக ரூ. 17.31 கோடியும் ஆய்வு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காக ரூ. 0.89 கோடியும் செலவிடப் பட்டது. ஊரக மின் இணைப்புகளுக்காக திட்டத்தில் ஒதுக்கப் பட்ட ரூ. 27 கோடிக்கு மாறாக திட்டத்தில் ஒதுக்கப்படாத ரூ. 25.57 கோடி செலவிடப்பட்டது. அனல்மின் நிலையங்களை மைய அரசு திட்டத்தின் கீழ் சீரமைத்து நவீனப்படுத்தும் பணிக்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 9.80 கோடிக்கு மாறாகவும் திருத்திய திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 9.14 கோடிக்கு மாறாகவும் ரூ. 9.47 கோடி செலவிடப்பட்டது.

30. 1987-88-ஆம் ஆண்டுக்கான, மாநில அரசின் திட்ட ஒதுக்கீடு ரூ. 408.69 கோடியாகும். இதில் உற்பத்திக்கு ரூ. 267.89 கோடியும், அனுப்புகை மற்றும் பகிர்வுக்கு ரூ. 120 கோடியும் ஊரக மின் இணைப்புகளுக்காக ரூ. 18.80 கோடியும் ரூ. 2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆய்வுக்காக ஊரக மின் இணைப்புகளுக்காக திட்டத்திற்கு அப்பாற்பட்ட இது தவிர ஒதுக்கீடு ரூ. 36 கோடியாகும். மைய அரசு திட்டத்தின் கீழ் நவீனப்படுத்தும் பணிக்கான ஒதுக்கீடு ரூ. 5.94 கோடியாகும். இதற்காக மாநில அரசிடமிருந்து ரூ. 391 கோடி உதவி தேவைப் படுமென கணக்கிடப் பட்டது. எனினும் தென்கிழக்கு பருவ



1987 நவம்பர் 10]

மழை பொய்த்ததன் காரணமாகவும், அதன் விளைவாக புனல் மின் உற்பத்தி குறைந்ததன் காரணமாகவும், எரிபொருள் வாங்குவதற்கான செலவு அதிகரித்ததன் காரணமாகவும் மைய மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கான செலவு அதிகரித்ததனாலும் தற்போது அரசிடமிருந்து தேவைப்படும் நிதி ரூ. 553.22 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. நிதி ஆதார இடைவெளியை சமாளிப்பதற்காக கூடுதல் நிதி உதவி பெறப் படாவிட்டால் 1987-88 ஆம் ஆண்டின் முக்கிய திட்டங்களின் செயல்பாடு பெரிதும் பாதிக்கப்படும்.

31. கடந்த ஐந்து ஆண்டுகளில் மின் வாரியத்தின் நிதிநிலை செயல்பாடு கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது :—

| | 1982—83 | 1983—84 | 1984-85 | 1985—86 | 1986—87 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | உள்ளபடி செலவுகள். (ரு. இலட்சத்தில்) | | | | ஆரம்ப நிலை கணக்குகள். (ரு. இலட்சத் தில்) |
| வருவாய் (மானியம் நீங்கலாக) | 327.56 | 371.85 | 558.42 | 611.04 | 692.65 |
| வருவாய் செலவு | 422.66 | 467.57 | 554.71 | 641.40 | 711.38 |
| வட்டி, தேய்மானம், சேமநிதி மற்றும் பொது சேமநிதி | 119.85 | 117.72 | 141.58 | 152.49 | 182.77 |
| பற்றாக்குறை | 210.95 | 213.44 | 137.87 | 182.86 | 201.50 |

வருவாய்க்கும், வருவாய் செலவுக்கும் உள்ள மிகப் பெரிய இடைவெளிக்கான காரணங்கள், நிலக்கரி, எண்ணை போன்ற எரிபொருட்கள் விலையேற்றம், சரக்கு கட்டணம் மற்றும் அது தொடர்பான கட்டண உயர்வு, மைய அரசு மின் நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலையேற்றம், அதிகப்படியான பயனீட்டாளர்களுக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்கல் போன்றவையாகும்.

[1987 நவம்பர் 10

உதாரணமாக நெய்வேலி முதல் அனல் மின் நிலையத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலை 1979-80-ல் ஒரு யூனிட்டுக்கு 21.69 பைசாவிலிருந்து 1986-87-ல் 42.50 பைசாவாகி 1987-88-ல் 45.75 பைசாவாக உயர்ந்துள்ளது. நெய்வேலி இரண்டாம் அனல் மின்நிலையத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலை 1986-87-ல் யூனிட்டுக்கு 51 பைசாவிலிருந்து 1987-88-ல் 52 பைசாவாக உயர்ந்திருக்கிறது. கல்பாக்கத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலை 1983-84-ல் முதல் பிரிவு துவங்கப்பட்ட போது யூனிட்டுக்கு 37.94 பைசாவாக இருந்தது. 1—4—1987-ல் 45.37 பைசாவாக உயர்ந்துள்ளது.

சிங்கரேணி சுரங்கங்களிலிருந்து எண்ணூர் அனல் மின் நிலையத்துக்கு அனுப்பப்படும் நிலக்கரியின் விலை 1979-80-ல் டன் ஒன்றுக்கு ரூ. 148.64 ஆக இருந்தது. 1986-87-ல் அது ரூ. 507.46 ஆக உயர்ந்திருக்கிறது. எண்ணூர் அனல் மின் நிலையத்தில் பெறப்படும் எரிஎண்ணையின் விலை கிலோ லிட்டருக்கு ரூ. 1.370.77-லிருந்து ரூ. 3,076.70 ஆக உயர்ந்துள்ளது.

இந்த விலையேற்றத்தினால் மின்வாரியம் 1979-80 ஆம் ஆண்டைவிட 1986-87 ஆம் ஆண்டு ரூ. 192 கோடி அதிகம் செலவிட வேண்டியிருந்தது என கணக்கிடப்பட்டிருக்கிறது.

சிறிய விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதாலும், மற்ற விவசாயிகளுக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்குவதாலும், ஒரு குடிசை ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதாலும் மின்வாரியத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 246.32 கோடி இழப்பு ஏற்படுகிறது.

நலிந்த பிரிவினருக்கு சலுகைவிலையில் மின்சாரம் வழங்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருப்பதால் மின்வாரியத்திற்கு இதனால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட அரசு நிதி உதவி அளிக்கிறது. எனினும் இந்த நிதி உதவி ஒரு நியாயமான அளவில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.



1987 நவம்பர் 10]

32. வருவாய்க்கும் செலவுக்குமிடையே உள்ள மிகப் பெரிய இடைவெளியைக் குறைப்பதற்கு மின்கட்டணத்தை உயர்த்துவதைத்தவிர வேறு வழியில்லை. 1—1—1987-ல், விவசாயிகள், வீடுகள், கல்விக்கூடங்கள் தவிர ஏனைய அனைத்துப் பயனீட்டாளருக்கும் வழங்கப்படும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டதன் காரணமாக ஓராண்டில் ரூ. 68.73 கோடி கூடுதல் வருவாய்க்கு வகை செய்யப்பட்டது. உற்பத்திச்செலவு அதிகரிக்கும் பின்னணியில் மேலும் மின்கட்டண உயர்வு தவிர்க்க இயலாதது.

33. விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு வழங்குவதற்கும் ஏனைய ஊரக மின் வசதித் திட்டங்களுக்கும் ஊரக மின் வசதிக் கழகம் முதலீட்டுச் செலவிற்காக அதிக அளவில் நிதி உதவி வழங்கி வருகிறது. மார்ச் 31, 1987-ல் ரூ. 239.18 கோடி கடனாக, 711 திட்டங்களுக்காக, ஊரக மின் வசதி கழகத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதில் ரூ. 108.05 கோடி ஊரக மின் வசதி கழகத்திடமிருந்தும் ரூ. 59.27 கோடி வங்கிகளிடமிருந்தும் பெறப்பட்டிருக்கிறது. 1987-88 ஆம் ஆண்டில் வங்கிகளிடமிருந்தும் ஊரக மின் வசதி கழகத்திடமிருந்தும் ரூ. 41.70 கோடி விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு வழங்குவதற்காகவே பெறப்பட இருக்கிறது. மேலும் வறட்சி நிவாரணப் பணியாக ஊரக மின்வசதி கழகம் வங்கிகளோடு இணைந்து 20,000 விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு வழங்க மின்வாரியத்திற்கு நிதி உதவி வழங்க முன்வந்திருக்கிறது.

34. மின்வாரிய நிர்வாகத்தைச் சீர்படுத்தவும் செயல்திறனை அதிகரிக்கவும் மின்வாரியம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவற்றைப்பற்றி நான் சுருக்கமாகக் கூறுகிறேன்.

35. தற்போது மின்வாரிய பயனீட்டாளர்கள் அனைவருக்கும் மின்கட்டணம் குறித்த விவரங்கள் மாதம் ஒருமுறை குறிப்பெடுக்கப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. விவசாய விசையேற்றப் பயனீட்டாளர்களுக்குமட்டும் ஆறு மாதத்திற்கு ஒரு முறை மின்கட்டணக் குறிப்பு எடுக்கப்படுகிறது. மின்கட்டணக் குறிப்பு, வசூலில் ஏற்படும் செலவைக் குறைக்க அக்டோபர் 1987 முதல் இருமாதத்திற்கொருமுறை மின்கட்டணக் குறிப்பு மற்றும் வசூல்

[1987 நவம்பர் 10

மேற்கொள்ளப்படுகிறது. இதில் விவசாயப்பயனீட்டாளர்களைத் தவிர குறைந்த அழுத்தப் பயனீட்டாளர்கள் அனைவரும் அடங்குவர். இத்திட்டத்தின்படி குறைந்த அழுத்த பயனீட்டாளர்களின் மின்பயனீட்டு மீட்டர் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் அளவிடப்படும். மின் கட்டண குறிப்பு இரண்டு மாதத்திற்கு ஒரு முறைதான் கொடுக்கப்படும், மின்கட்டணமும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறைதான் வசூலிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் மின்வாரியத்தின் செலவில் சேமிப்பு இந்த ஆண்டு ரூ. 2 கோடி என எதிர்பார்க்கப்படுகிறது. இது பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும்.

36. பயனீட்டாளர்களிடமிருந்து மின்கட்டண நிலுவையை வசூலிக்க மின்வாரியம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மார்ச் 1987-ல் மொத்த மின்கட்டண நிலுவை ரூ. 49.88 கோடியாகும். இதில் ரூ. 21.90 கோடி, நீதிமன்ற வழக்குகளினால் வசூலிக்க முடியாமல் இருக்கிறது. இதில் மால்கோ நிறுவனம் செலுத்த வேண்டிய மின்கட்டண நிலுவை மட்டுமே ரூ. 20.04 கோடி. மதுரை மாநகராட்சி ரூ. 8.57 கோடி செலுத்த வேண்டியுள்ளது. மாநகராட்சி இத்தொகையை தவணை முறையில் செலுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. விவசாயிகள் செலுத்த வேண்டிய ரூ. 2.88 கோடி உள்ளிட்ட ரூ. 3.58 கோடியையும் தவணை முறையில் செலுத்த அரசு அனுமதித்துள்ளது. அரசு துறைகள் செலுத்த வேண்டிய நிலுவை ரூ. 0.91 கோடி. மற்ற மாநிலங்கள் செலுத்த வேண்டிய நிலுவை ரூ. 2.30 கோடியில், கேரளா செலுத்த வேண்டிய ரூ. 1.04 கோடி பெறப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள ரூ. 12.62 கோடியில், கணக்கிடப்பட்டு மார்ச் 1987 வசூலில் வராத தொகையும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தொகையும் அடங்கும்.

1980 நவம்பரில் ரூ. 37.59 கோடியாக இருந்த விவசாய பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய நிலுவை மார்ச் 1987-ல் ரூ. 2.88 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 10]

37. தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின்நிலையங்களில் எரி எண்ணைச் செலவு மிகவும் குறைக்கப்பட்டதன் விளைவாக நிதி சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது. 1983-84-ல் எண்ணூரில் ஒரு யூனிட் மின் உற்பத்திக்கு செலவிடப்பட்ட எரிஎண்ணையின் அளவு 21 மி.லி. ஆகவும் தூத்துக்குடியில் 57 மி.லி. ஆகவும் இருந்தது அது 1986-87-ல் முறையே 5.42 மி.லி. ஆகவும் 6.76 மி.லி ஆகவும் குறைந்திருக்கிறது.

38. மின்இழப்பை குறைப்பதற்காக மின்வாரியம் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. முன்னேற்றத்துக்கான திட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் உதவுவதற்காக ஒரு புதிய கம்ப்யூட்டர் நிறுவப்பட்டிருக்கிறது. மின் திருட்டைக் கண்டு பிடிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 1986-87-ல் 701 மின் திருட்டுகளும், 16,803 முறைகேடுகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இதன் மூலம் கிடைத்த கூடுதல் வருவாய் ரூ. 8.92 கோடியாகும். 1987-88-ல் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 233 மின் திருட்டுகளும், 8,200 முறைகேடுகளும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஏற்படும் கூடுதல் வருவாய் ரூ. 2.96 கோடியாகும்.

39. எந்த அமைப்பின் வெற்றியும், பல்வேறு முன்னேற்ற திட்டங்களுக்குப் பணியாளர் அளிக்கும் ஒத்துழைப்பை பொறுத்தே அமையும் என இந்த அரசு உறுதியாக நம்புகிறது. மின்வாரியத்தில் நிர்வாகத்திற்கும் பணியாளர்களுக்கும் உள்ள உறவு மிகச் சிறப்பாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பணியாளர்களின் நலனை முன்னேற்றும் வகையில் பல சலுகைகளையும் நன்மைகளையும் மின்வாரியம் பணியாளர்களுக்கு அளித்துள்ளது.

40. 1986-87 ஆம் ஆண்டிற்கென ஊதியத்தில் 8.33 சதவீதம் போனசாகவும் ரூ. 400 கருணைக் கொடையாகவும் தகுதி பெற்ற அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

41. சேர்வலாறு புனல் மின் திட்டம் துவக்கத்தை முன்னிட்டு ஒரு மாத ஊதியம் மற்றும் அகவிலைப்படி, அத்திட்டத்தில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

42. மேட்டூர் அனல் மின்நிலைய முதல் பிரிவு துவக்கத்தை முன்னிட்டு மேட்டூர் திட்டத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் ஒரு மாத ஊதியம் மற்றும் அகவிலைப்படியை ஊக்கத் தொகையாக வழங்குவதற்கு மின்வாரியம் அனுமதி அளித்துள்ளது.

43. ஒப்பந்தப் பணியாளரது நன்மைக்கென எண்ணூர் அனல் மின்நிலையத்தில், மின்வாரியம், ஒரு தொழில் கூட்டுறவுப் பணி சங்கத்தினை, 1—7—1986 முதல் அமைத்துள்ளது.

44. மின்வாரியத்தில் ஏற்பட்டிருக்கும் அதிகப் பணிக்காக 1986-87-ல் 224 பொறியாளர்களையும், 1987-88-ல் 30—9—1987 முடிய 178 பொறியாளர்களையும் புதிதாக பணியில் அமர்த்தியுள்ளது. இயக்கம், பகிர்வு போன்ற பணிகளுக்காக பணியாளர்கள் உட்பட பல்வேறு பிரிவுகளுக்காக 5,892 பேர் 1986-87-ல் புதிதாக பணியிலமர்த்தப்பட்டனர். 1987-88-ல் 30—9—1987 வரை 1,523 பேர் புதிதாக பணியிலமர்த்தப்பட்டிருக்கிறார்கள்

45. மின்வாரிய செயல்திறனை அதிகரிப்பதற்காக நிர்வாக அமைப்பை சீர்படுத்துதல், தற்போதைய அமைப்பை மாற்றியமைத்தல், குறிப்பிட்ட பணியை சிறப்புறச் செய்யும் தகுதியை வளர்த்தல், பணிப் பகிர்வு போன்ற முயற்சிகளில் தொடர்ந்து மின்வாரியம் ஈடுபட்டிருக்கிறது. இரு மாதத்திற்கொரு முறை மின் கட்டணம் செலுத்தும் திட்டம், கோட்டம் வரை அதிகாரப் பகிர்வு, வேலூர் மின் அமைப்பை இரண்டாகப் பிரித்தல் போன்றவை இது போன்ற சில நடவடிக்கைகளே. திட்டப் பணிக்கென ஒரு தலைமைப் பொறியாளர் பதவி ஏற்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிக்கான இயக்குநர் பதவியை தலைமைப் பொறியாளர் நிலைக்கு உயர்த்துதல், சுற்றுப்புற பராமரிப்பதற்காக பிரிவை உருவாக்குதல் இவை அனைத்துமே குறிப்பிட்ட பணி சிறப்புற செய்யப்பட வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே. இத்தருணத்தில் மைய அரசு, யுனிடோ/ஐ.எல்.ஓ. திட்டத்தின்கீழ் உள்நாட்டு கன்சல்டன்ட் முறையை வளர்ப்பதற்காகத் தேர்வு செய்த நாட்டிலுள்ள மூன்று வாரியங்களில் தமிழ்நாடு மின்சார வாரியமும் இடம் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



46. சென்னை மாநகரத்தில் மின்சாரப் பகிர்வு முறையை நவீனப்படுத்தவும் முன்னேற்றவும் மின்வாரியம் ஒரு 'கன்சல்டன்ட்' ஐ நியமித்திருக்கிறது. மின் கட்டண முறையை ஆராயவும் எங்கு மின் கட்டணத்தை மாற்றியமைக்கலாம் என்பதை அறியவும் ஒரு 'கன்சல்டன்ட்' நியமிக்கப்பட்டிருக்கிறார். மின்வாரியத்திலுள்ள மின் அனுப்புகை மையத்தை நவீனப்படுத்துவது பற்றி ஆராய ஒரு 'கன்சல்டன்ட்' நியமிக்கப்பட்டிருக்கிறார். 1987 டிசம்பர் இறுதிக்குள் இந்த 'கன்சல்டன்ட்'களின் அறிக்கைகள் பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் மின்வாரியம் இப்பரிந்துரைகளை 1988-89இலோ அதற்குப் பின்னரோ அமல்படுத்த இயலும்.

47. பயனீட்டாளர்களின் சிரமத்தைத் தவிர்க்கும் பொருட்டு மின்சார வழங்கலுக்கான விதிமுறைகளை எளிதாக்குவது பற்றி ஆராயவும் மாற்றியமைக்கவும் ஒரு 'கன்சல்டன்டை மின்வாரியம் நியமித்திருக்கிறது.

48. மின்வாரியம் பல பிரச்சினைகளை உள்ளடக்கிய ஒரு சிக்கலான அமைப்பு. மின்வாரியம் தனது செயல்திறனை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளபோதிலும் மின்வாரியப் பணிக்கான பல பொருட்களை வழங்கும் மைய அரசு, மாநில அரசுத் துறைகள் மற்ற நிறுவனங்கள் வழங்கும் முழு ஒத்துழைப்பின் மூலமாகத்தான் மின்வாரியம் தனது இலக்கை அடைய முடியும். மின்வாரிய செயல்திறனை அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்ற மாநில மின்வாரியங்களைப் போலவே தரம் குறைந்த நிலக்கரியாலும், இயந்திரங்களாலும் எரிபொருள் மற்றும் இயந்திர விலை உயர்வாலும், சரக்கு கட்டண உயர்வாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரச்சினைகளிலிருந்து, மின்வாரியத்தை விடுவிக்க, மைய அரசையும் மற்ற நிறுவனங்களையும் அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்த இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை நான் வரவேற்கிறேன்.

இணைப்பு I

தமிழ் நாட்டில் திட்ட வாரியான மின் வளர்ச்சி.

| தொடர் எண்ணும் விளக்கமும். | திட்டத் திற்கு முன்பு. | 1 ஆம் திட்டம். | 2 ஆம் திட்டம். | 3 ஆம் திட்டம். | ஆண்டுத் திட்டம். | 4 ஆம் திட்டம். | 5 ஆம் திட்டம். | ஆண்டுத் திட்டம். | 6 ஆம் திட்டம். | (தற்காலிக மானது) ஆண்டுத் திட்டம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 31–3–1951 | 1951–56. | 1956–61. | 1961–66. | 1966–69. | 1969–74. | 1974–78. | 1978–80. | 1980–85. | 1986–87 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | (ரூபாய் கோடியில்). | | | | (ரூபாய் கோடியில்.) | | | | | |
| (அ] மின் உற்பத்தி— | | | | | | | | | | |
| 1. நிறுவுத் திறன் (மெ. வாட்) மின் வாரியம். | 156 | 256 | 571 | 1,070 | 1,070 | 1,654 | 1,824 | 2,119 | 2,509 | 2,794 |
| நெய்வேலி (பங்கு) .. | .. | .. | .. | 300 | 400 | 600 | 600 | 600 | 600 | 711 |
| கல்பாக்கம் (பங்கு) .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 235 | 350 |
| ராமகுண்டம் (பங்கு) .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 132 |
| மொத்தம் .. | | | | | | | | | | 3,987 |
| 2. உச்சத் தேவை (மெ.வாட்.) | 110 | 172 | 381 | 717 | 997 | 1,287 | 1,641 | 1,710 | 2,154 | 2,245 |
| 3. மொத்த மின் உற்பத்தி மற்றும் கொள்முதல் (மி.யூ.). | 630 | 1,053 | 2,243 | 4,041 | 5,260 | 6,948 | 9,453 | 10,414 | 13,731 | 15,336 |
| (ஆ) மின் அனுப்புகை மற்றும் பங்கீடு— | | | | | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்கள்(கி.மீ.) | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 48,336 | 68,737 | 72,689 | 77,126 | 87,250 | 91,918 |
| 2. குறைவு அழுத்த மின் கம்பித் தொடர்கள்(கி.மீ). | 5,728 | [illegible],055 | 35,352 | 73,198 | 1,04,977 | 1,97,017 | 2.22,659 | 2,49,226 | 2,78,515 | 3,00,335 |
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை. | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 174 | 192 | 230 | 281 |
| 4. உயர் அழுத்தத் துணைமின் நிலையங்களின் எண்ணிக்கை. | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 150 | 164 | 209 | 194 |
| 5. மின் பங்கீட்டுத் துணைமின் நிலையங்களின் எண்ணிக்கை. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 22,842 | 37,453 | 43,666 | 48,595 | 63,667 | 68,826 |
| 6. பயனீட்டாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.5 | 4.3 | 7.7 | 13.6 | 18.22 | 27.07 | 34.00 | 39.97 | 58.27 | 64.86 |
| 7. நபர் வாரியான பயன்பாடு (யூனிட்டுகள்). | 12 | 21 | 60 | 92 | 11 | 127 | 157 | 183 | 195 | 239 |

42 எ 194—32

இணைப்பு

தமிழ் நாட்டில் திட்ட



10.37 114.99 173.37 வளர்ச்சி.

| தொடர் எண்ணும் விளக்கமும். | திட்டத் திற்கு முன்பு. 31–3–1951. | 1 ஆம் திட்டம். 1951–56. | 2 ஆம் திட்டம். 1956–61. | 3 ஆம் திட்டம். 1961–66. | ஆண்டுத் திட்டம். 1966–69. | 4 ஆம் திட்டம். 1969—74. | 5 ஆம் திட்டம். 1974–78. | ஆண்டுத் திட்டம். 1978–80. | 6 ஆம் திட்டம். 1980–85. | (தற்காலிக மானது) ஆண்டுத் திட்டம். 1986–87. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | (ரூபாய் கோடியில்.) | | | | | | | (ரூபாய் கோடியில்.) |
| (இ) கிராம மின்வசதி— | | | | | | | | | | |
| 1. மின் இணைப்பு செய்யப் பட்ட நகரங்கள், கிராமங் கள் சிற்றூர்களின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 31,727 | 61,072 | 63,339 | 63,428 | 63,648 | 63,755 |
| 2. அரிஜன காலனிகள் : மின் இணைப்பு வழங்கப் பட்டவை. | .. | .. | 939 | 3,548 | 7,282 | 23,768 | 24,797 | 25,653 | 26,137 | 26,255 |
| 3. மின் இணைப்பு வழங்கப் பட்ட வேளாண்மை பம்பு செட்டுகளின் எண்ணிக்கை. | 14,373 | 33,440 | 1,17,695 | 2,56,594 | 4,10,119 | 6,81,205 | 8,05,616 | 8,87,227 | 10,33,556 | 11,16,177 |
| 4. மின் இணைப்பு வழங்கப் பட்ட குடிசைகளின் எண் ணிக்கை (இலட்சத்தில்.). | .. | .. | .. | .. | .. | .. | .. | 1.67 | 6.36 | 7.49 |
| (ஈ) மூலதனச் செலவு, வருவாய் (கோடியில்)— | | | | | | | | | | |
| 1. கால இறுதியில் மூலதனச் செலவு. | 23.82 | 54.01 | 133.21 | 253.28 | 356.07 | 552.20 | 799.09 | 1,042.90 | 1,881.81 | 2,678.35* |
| 2. மொத்த வருவாய் .. | 3.18 | 5.94 | 15.82 | 34.67 | 50.22 | 114.28 | 223.14 | 284.19 | 705.00 | 692.65 |

* உதவித் தொகை இல்லாமல்.

## இணைப்பு II.

**ஆண்டுத் திட்டங்கள் 1986–87 மற்றும் 1987 –88.**

நிதி இலக்குகளும் சாதனைகளும்.

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | மதிப்பீட்டுச் செலவு. | 7-ஆவது ஐந்தாண்டுத் திட்ட முதலீடு. | 1985–86ல் செலவு. | 1986–87ல் செலவு. | 31–3– முடிய செலவு. (தற்காலிகம்) | முதலீடு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| அ. ஆய்வுப் பணிகள் .. | .. | 10.0 | 1.11 | 0.89 | .. | 2.00 |
| ஆ. உற்பத்தித் திட்டங்கள் .. | .. | .. | .. | .. | .. | .. |
| (1) முடிக்கப்பட்ட திட்டங்கள் | .. | .. | .. | .. | .. | |
| (2) நடைபெறும் திட்டங்கள் .. | .. | 0.50 | 0.27 | .. | .. | |
| புனல் மின் திட்டங்கள். | | | | | | |
| 1. சேர்வலாறு .. | 42.80 | 2.75 | 4.03 | 2.09 | 41.83 | |
| 2. காடம்பாறை நீரேற்றுத் திட்டம். .. | 163.50 | 35.77 | 25.58 | 15.97 | 160.24 | |
| 3. கீழ் மேட்டூர் .. | 163.85 | 43.23 | 23.00 | 15.07 | 141.91 | |
| 4. குந்தா மின் நிலையம் கூடுதல் யூனிட் .. | 11.12 | 5.04 | 2.01 | 5.33 | 8.99 | |
| 5. பார்சன் பள்ளத்தாக்கு .. | 13.73 | 13.63 | .. | .. | .. | |
| 6. பைக்காரா அணை (சிறு புனல் மின் திட்டம்) .. | 4.31 | 2.05 | 0.16 | 0.19 | 0.4 | |
| 7. கீழ் பவானி (சிறு புனல் மின் திட்டம்) .. | 14.09 | 7.74 | 0.16 | 0.43 | [illegible] | |
| 8. வைகை [illegible] (சிறு புனல் மின் திட்டம்) .. | 9.35 | 4.87 | 0.13 | 0 37 | | |
| அனல் மின் திட்டம். | | | | | | |
| 9. மேட்டூர் அனல் மின் திட்டம் முதல் நிலை .. | 384.32 | 214.35 | 126.01 | 76.00 | 312.77 | 10.37 |
| 10. மேட்டூர் அனல் மின் திட்டம் இரண்டாம் நிலை.. | 351.76 | 240.00 | 20.01 | 65.00 | 95.10 | 114.99 |
| பகுதி மொத்தம்—(ஆ) .. | .. | 570.33 | 201.09 | 180.45 | .. | 173.37 |
| (இ) ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பயனளிக்க இருக்கும் புதிய திட்டங்கள்— | | | | | | |
| புனல் மின் திட்டங்கள்— | | | | | | |
| 1 அத்திக்கடவு (சிறு மின்) .. | 4 80 | 2 30 | .. | 0.01 | 0.01 | .. |
| 2. பூனாச்சி (சிறு மின்) .. | 0.85 | 0.85 | .. | .. | .. | .. |
| 3. விளாம்பட்டி (சிறு மின்) .. | 0.48 | 0.48 | .. | .. | .. | .. |
| 4. மரவகண்டி (சிறு மின்) .. | 0.77 | 0.77 | .. | .. | .. | .. |
| 5. சந்தி நல்லாமேல் கொடுமுண்டு வழிமாற்றுத் திட்டம் .. | 0.81 | .. | 0.01 | 0.10 | 0.11 | 0.70 |
| அனல் மின் திட்டங்கள். | | | | | | |
| 6. வட சென்னை அனல் மின் நிலையம் நிலை I .. | 720.92 | .. | 1.44 | 5.60 | 7.04 | 35.00 |
| 7. தூத்துக்குடி அனல் மின் நிலையம் நிலை III .. | 400.73 | 642.54 (ஓமொ.) | 11.71 | 35.01 | 46.72 | 36.00 |
| 8. எரி வாயு மின் உற்பத்தி திட்டங்கள் .. | 56.48 | .. | .. | .. | .. | 0.10 |
| பகுதி மொத்தம் (இ) .. | .. | 647.19 | 13.16 | 40.72 | .. | 71.80 |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (2) | 7-ஆவது ஐந்தாண்டுத் திட்ட முதலீடு. (3) | 1985–86ல் செலவு. (4) | 1986–87ல் செலவு. (தற்காலிகம்). (5) | 31–3– முடிய செலவு. (6) | முதலீடு. (7) |
|---|---|---|---|---|---|---|
| ஈ மற்ற புதிய திட்டங்கள்— | | | | | | |
| 1. பவானி கட்டளை நிலை I .. .. .. | 92.49 | .. | .. | .. | .. | .. |
| 2. சாத்தனூர் .. .. .. .. .. | 15.20 | .. | .. | .. | .. | .. |
| 3. கீழ் பவானி வலது கரைக் கால்வாய் .. .. | 10.70 | .. | .. | .. | .. | .. |
| 4. தலியாறு .. .. .. .. .. | 0.64 | .. | .. | .. | .. | .. |
| 5. பைக்கரா இறுதி நிலை .. .. .. .. | 70.16 | .. | .. | .. | .. | .. |
| 6. பரளையாறு .. .. .. .. .. | 17.70 | .. | .. | .. | .. | .. |
| 7. கோமுகா நதி .. .. .. .. | 15.32 | .. | .. | .. | .. | .. |
| 8. சிறுவாணி .. .. .. .. .. | 3.5 | .. | .. | .. | .. | .. |
| 9. பரண்டியாறு புன்னம்புழா .. .. .. | 110.00 | .. | .. | .. | .. | .. |
| 10. சோழத்திபுழா .. .. .. .. .. | 23.46 | .. | .. | .. | .. | .. |
| 11. ஒக்கனேக்கல் .. .. .. .. .. | 153.88 | .. | .. | .. | .. | .. |
| 12. மேல் அமராவதி .. .. .. .. .. | 19.33 | .. | .. | .. | .. | .. |
| 13. ஷண்முகா நதி .. .. .. .. .. | 20.51 | .. | .. | .. | .. | .. |
| 14. [illegible] தோரை .. .. .. .. | 23.70 | .. | .. | .. | .. | .. |
| பகுதி மொத்தம்—(ஈ) .. | | | | | | 2.00 |



| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| உ. மின் நிலையங்களை நவீனப்படுத்துதல்— | | | | | | |
| அ புனல் மின் திட்டம்— | | | | | | |
| 1. பைக்காரா, மேட்டூர் அணை, பாபநாசம் மின் நிலையங்களில் ஜெனரேட்டர்களை நவீனப் படுத்துதல் .. .. .. .. .. | 4.75 | 4.75 | | கைவிடப்பட்டது. | | |
| ஆ அனல் மின்நிலையம்— | | | | | | |
| 2. எண்ணூர் அனல்மின் நிலைய மேம்பாட்டுத் திட்டம் முதல் நிலை .. .. .. .. | 12.67 | 4.80 | 1.46 | 4.65 | 38.83 | 2.96 |
| 3. எண்ணூர் அனல் மின்நிலைய மேம்பாட்டுத் திட்டம் இரண்டாம் நிலை .. .. .. | 56.14 | 30.35 | 4.31 | 6.35 | 10.66 | 16.95 |
| 4. தூத்துக்குடி அனல் மின் திட்ட மேம்பாட்டுப் பணிகள் .. .. .. .. .. | 2.25 | 0.90 | 0.22 | 1.40 | 1.62 | 0.81 |
| பகுதி மொத்தம் (உ) .. | .. | 40.80 | 5.99 | 12.40 | .. | 20.72 |
| மொத்த உற்பத்தி .. .. | .. | 1,258.82 | 220.51 | 235.57 | .. | 267.89 |
| இ. மின் அனுப்புகை மற்றும் பகிர்வுத் திட்டங்கள் | .. | 6.50 | 70.48 | 105.85 | .. | 120.00 |
| ஈ. ஊரக மின் வசதி .. .. .. .. | .. | 81.18 | 15.27 | 17.31 | .. | 18.00 |
| உ. மைய அரசு உதவி பெறும் அனல் மின்நிலைய நவீனப்படுத்தும் திட்டங்கள். | | | | | | |
| பெரு மொத்தம் அ முதல் உ வரை .. | .. | 2,000.00 | 637.37 | 358.62 | .. | 447.33 |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | மதிப்பீட்டுச் செலவு. | 7-வது ஐந்தாண்டுத் திட்ட முதலீடு. | 1985–86ல் செலவு. | 1986–87ல் செலவு. | 31–3– முடிய செலவு. (தற்காலிகம்). | முதலீடு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. எண்ணூர் அனல்மின் நிலைய மேம்பாட்டுத் திட்ட நிலை I .. .. .. .. | 37.09 | 6.57 | 5.22 | 3.38 | 8.60 | 1.08 |
| 2. எண்ணூர் அனல் மின்நிலைய மேம்பாட்டுத் திட்ட நிலை II. .. .. .. .. | 17.11 | 8.19 | 0.51 | 4.59 | 5.10 | 10.80 |
| 3. தூத்துக்குடி அனல்மின் நிலைய மேம்பாட்டுத் திட்டங்கள் .. .. .. .. .. | 6.47 | 6.67 | 2.95 | 1.50 | 4.46 | 1.06 |
| பகுதி மொத்தம் .. .. | .. | 21.43 | 8.68 | 9.47 | .. | 5.94 |
| ஆ. திட்டத்தில் சேராத திருத்திய மதிப்பீடு .. | .. | 135.00 | 19.77 | 25.27 | .. | 36.00 |
| பெரு மொத்தம் .. .. | .. | 2,156.43 | 335.82 | 393.36 | .. | 450.63 |



## இணைப்பு III.

31—3—1987 நிலவரப்படி ஊரக மின் வசதியின் முன்னேற்றம்.

| தொடர் எண்ணும் மற்றும் இனம். | தற்போதுள்ளவை. | மின் இணைப்பு செய்யப்பட்டவை. 31–3–86ல் உள்ளவாறு. | 1986–87ல் உள்ளவாறு. | மொத்தம் 31–3–1987ல் உள்ளவாறு. | சதவீதம். | 31– நிலவரப்படி இணைப்பு கொடுக்கப்பட வேண்டியவை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. நகரங்கள் .. .. .. .. | 439 | 439 | .. | 439 | 100 | .. |
| 2. கிராமங்கள் .. .. .. .. | 15,731+4* | 15,715 | 16 | 15,731 | 100 | .. |
| ·. குக்கிராமங்கள் .. .. .. | 47,838 | 47,515 | 70 | 47,585 | 99.47 | 253 |
| ·. நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் | 64,008+4* | 63,669 | 86 | 63,755 | 99.6 | 253 |
| ·. ஆதி திராவிடர் குடியிருப்புகள் .. | கிடைக்கப்பெறவில்லை. | 26,211 | 44 | 26,255 | .. | .. |
| 6. விவசாய விசையேற்றங்கள் .. .. | .. | 1,074,184 | 41,993 | 1,116,177 | | .. |
| ·. மின் இணைப்பு செய்யப்பட்ட குடிசைகள் | .. | 710,115 | 38,701 | 748,816 [illegible] | | .. |

*குடியிருப்பு இல்லாத கிராமங்கள்.

V211,31 N87
N87-44-1 F2
13535
சென்னை-600 008